# மு/மல்லாவி மத்திய கல்லூரி

## 1961-2011

# பொன் விழா மலர்




# Mu/Mallavi Central College

## Golden Jublee-2011


ழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகி றோம்
நீதிராசா
ஸ்ரோர்ஸ்
Neethirasa Stores
மொத்த சில்லறை வியாபாரம்
தரமான பொருட்களை மலிவாகப்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்
Puredale
KM
கொழும்பு
மல்லாவி

ச்சி.
303

# மு/மல்லாவி மத்திய கல்லூரி

# பொன் விழா சிறப்பு மலர்

# 1961-2011

மு/மல்லாவி
மத்திய கல்லூரி

கல்வியே செல்வம்

யோகபுரம்

வெளியீடு:

**பொன்விழா மலர்க் குழு**

**மு/மல்லாவி மத்திய கல்லூரி**

## நூல் விபரக் கொத்து

| | | |
|---|---|---|
| பதிப்புரிமை | : | மு/மல்லாவி மத்திய கல்லூரிச் சமூகத்திற்கே |
| ால் | : | பொன்விழா மலர் |
| இதழாசிரியர் | : | திருமதி.றுஜீனா இலட்சுமணநாதன் |
| ஆலோசனை | : | திரு.து.ஜேசுதானந்தர் (அதிபர்)<br>திரு.சி.குணபாலன் (உதவி அரசாங்க அதிபர்)<br>திருமதி.பு.பாலசுப்பிரமணியம் (பிரதி அதிபர்) |
| மலர்க்குழு | : | திரு.சி.சிவகுமார், திரு.சி.டிகுகுமார், திரு.இ.காண்டீபன்,<br>திரு.தி.சாந்தகுமார், திரு.த.விதுரன், திரு.க.கஜேந்திரன்,<br>திருமதி.பா.சிவலிங்கம், திரு.ந.புலேந்திரகுமார், |
| வெளியீடு | : | மு/மல்லாவி மத்திய கல்லூரி, யோகபுரம் |
| பதிப்பு | : | 2011 |
| பிரதிகள் | : | 500 |
| அட்டைப்படம் | : | திரு.ந.புலேந்திரகுமார் |
| பக்க வடிவமைப்பு | : | திரு.க.கஜேந்திரன் |
| கிரபிக்ஸ் | : | தனுஸ் டிஜிற்றல் ஆர்க் அன்ட் வீடியோ, இணுவில். |
| அச்சுப்பதிப்பு | : | புவனேஸ்வரி அச்சகம், மல்லாவி. |

## மலர்த் துளிகள்


தமிழ்த்தாய் வாழ்த்து 01
பாடசாலைக் கீதம் 02
வாழ்த்துப்பா 03
எம் இனிய கல்லூரி 04
ஆசியுரை 05
ஆசிச்செய்தி 06
ஆளுநரின் வாழ்த்துச் செய்தி 07
கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து 08
மாகாணக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி 09
கல்விச் சேவையில் பொன்விழாவை எட்டிநிற்கு ம.ம.வி 10
தன்னரும் பணியில் அகவை ஐம்பதை எட்டிய ம.ம.வி 11
வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி 12
ஆசிச் செய்தி 13
வாழ்த்துச் செய்தி 14
**Valuble wish from Mr.Nagalingam Ethirveerasingam 15**
கல்விக்கு ஒளியேற்றிய தாய் 16
வாழ்த்துச் செய்தி 17
வாழ்த்துச் செய்தி 18
கோட்டக் கல்வி அதிகாரியின் வாழ்த்துச் செய்தி 19
பொன்விழாக் காணும் மல்லாவி மத்திய கல்லூரி 20
அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி 21
குன்றின் தீபமென 22
''மல்லாவி மத்திய கல்லூரிக்காக நாங்கள்'' அமைப்பின் வாழ்த்துச் செய்தி 23
பொன்விழாக் காணும் என்னருந்தாய் 24
மலராசிரியரின் சிந்தனைத்துளிகள் 25
அதிபர் அறிக்கை 26
கல்லூரியின் வரலாறு 30
ஆலமரம் போல்' என்றும்... 37
வாழ்த்துரை 38
மல்லாவி மத்திய கல்லூரியின் 50ஆவது ஆண்டு நிறைவையொட்டிய வாழ்த்துரை 39
வரலாற்றுச் சுவடுகள் 40
மனிதநேயம் பரப்பி மாண்புடன் மிளிர்க 43
பொன்விழா வாழ்த்துச் செய்தி 46
Message from former Principal G.S.PARMESWARAN 47
மீண்டும் தொடங்கும் மிடுக்கு 48
வாழ்த்துச் செய்தி 49
என் மனத்திரையிலிருந்து 50
எண்ணத்தில் உதித்த சிலதுளிகள் 51
வேரூன்றி ஆண்டுகள் ஐம்பது 52
மல்லாவி மத்திய கல்லூரி அன்னையே நீ வாழி 53
என்றும் வாழ்க என் தாயே 54
என் தாயே நீ வாழ்க 57
தொலையா நினைவுகள் 58
வாழ்த்துரையும் வரலாறும் 60
மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழா 61
நிழல் அல்ல நிஜம் 62
என் சிந்தனையில் இருந்து சில துளிகள் 64
பொன்விழாக் காணும் இப் பொன்னான நாளில் 64
அகவையில் தடம்பதிக்கும் என்னை வளர்த்த என் கல்லூரித்தாய் 65
மல்லாவியின் மணிவிளக்கே 66
எனது வாழ்வின் படிக்கற்களுக்கு இன்று பொன்விழா 67
கல்விப் பாதையில் உங்களோடும் சில வரிகள் 68
வாழ்த்துச் செய்தி 69
மல்லாவி மத்திய கல்லூரிக்கு இன்று பொன்விழா 70
பொன்விழாக் காணும் மல்லாவி மத்திய கல்லூரி 71
மத்திய கல்லூரியே வாழி 72
மத்திய கல்லூரியும் விளையாட்டுத்துறையும் 73
அழியாப் புகழ் படைத்த கம்பன் பற்றிய கதைகள் 76
பள்ளி வாழ்க்கை 80

சனத்தொகை 82
பல்கலைக்கழகம் சென்றோர் 87
எமக்குத் தெரியாத சூரியனின் பக்கம் 88
என் கல்லூரித் தாயின் மடியில் கைக்குழந்தை நான் 89
திரையிசைப் பாடல்களில் சமூகக் கருத்துகள் 90
அகர வரியிலே 92
கல்லூரிப் பயணம் 93
Science and Technology 94
Source of Knowledge 95
நம்பியிரு தாயே 95
குடி குடியைக் கெடுக்கும் 96
நித்தியத் தாயே நீ வாழி 99
எனது சிறிய நாடு 100
மணல் வீடுகள் 101
பச்சை வீட்டு விளைவு 103
ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளுக்குமான உறவு 105
துள்ளித் திரிந்திடும் பள்ளி நாட்கள் 107
தன்னியக்க ரெல்லர் பொறி / தன்னியக்க வங்கிச் சேவை 108
மரணம்...... வரம்....... 110
Mallavi Central College 112
வாழ்க எம் கல்லூரித்தாய் 113
பாடசாலையும் சமூகமும் 114
காலநிலை மாற்றம் 116
செம்மொழியாம் தமிழ்மொழி 131
இசுறுவின் இளமைக்கால 132
கல்லூரி அன்னை 133
பொன்விழாக் காணும் மல்லாவி மத்திய கல்லூரி 134
பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் வகிபங்கு 136
உலகின் புகழ்பெற்ற நூல்களும் ஆசிரியர்களும் 138
ஊனம் என்பது குறைபாடல்ல 140
குத்தகைக் கணக்கீடு 141
கோளமயமாதல் 145
நேரத்தின் மகிமை 146
Stress at workplace 148
வங்கியியல் 150
மல்லாவித் தாய்க்கு இன்று அகவை ஐம்பது 156
மாணவர் பிரச்சினைகளும் தீர்வுகளும் 157
Teaching a Foreign Language 159
Smoking 161
இலையுதிர்காலம் 162
பாடசாலைகளில் கல்வி முகாமைத்துவச் செயன்முறை 164
நன்றியுரை 165

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்குக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பம்உற
எத்திசையும் புகழ் மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல் உயிரும் பல உலகும் படைத்து அளித்துடைக்கினும் ஓர்
எல்லை அறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்திரத்து எழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன்
சீர் இளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துமே!

-மனோன்மணீயம் பெ.சுந்தரம்பிள்ளை-

# பாடசாலைக் கீதம்

மல்லாவி உறை மத்திய கல்லூரி
மாண்புடனே என்றும் - வாழ்க
மாணவச் செல்வங்கள் வாழ்க
மகிழ்வுடன் கல்வியில் தேர்க

(மல்லாவி...)

நீர்வளம் நிலவளம் அனைத்துமே பொலிந்து
நிகரில்லாச்செல்வங்கள் மலிந்து
நேமியில் பலரும் புகழ் மல்லாவியில்
நிமிர்ந்திடும் மத்திய கல்லூரி

(மல்லாவி...)

உள்ளத்தில், பண்பும் உடலுறு பலமும்
ஓங்கிடச்செய்திடும் கழகம்
ஒழுக்கமும் நேர்மையும் உயர்ந்திட நாளும்
உன்னத பணியினை ஆற்றும்

(மல்லாவி...)

செந்தமிழ் ஆங்கிலம் சிறப்புறு கணிதம்
செயன்முறை விஞ்ஞானக் கலைகள்
சுற்றாடற் கல்வி வர்த்தகம் மனையியல்
தொல்புகழ் விவசாயக் கல்வி

(மல்லாவி...)

இசையுடன் நடனம் எழிலுறு சித்திரம்
ஆகிய பயில் நெறி அனைத்தும்
ஊட்டியே வளர்க்கும் ஆசான்கள் வாழ்க
உலப்பிலா அதிபரும் வாழ்க.

(மல்லாவி...)

# மு/மல்லாவி மத்திய கல்லூரி

# யோகபுரம்.

## மகுட வாக்கியம்

"கல்வியே செல்வம்"

## தரிசனம் (VISION)

"சவால்களுக்கு முகம் கொடுக்கும்
சாதனைமிகு மாணவர்களை உருவாக்கும்
பணியின் பங்காளிகளாவோம்."

## குறிக்கோள் (MISSION)

"பெருமைமிகு புகழும் பண்பாடும்
கொண்ட மு/மல்லாவி மத்திய கல்லூரியின்
அங்கத்தவர்களாகிய நாம் தேசத்தின்
குறிக்கோளிற்காய் தேர்ச்சிமிகு மாணவர்களாக
உருவாகி நாட்டின் எதிர்காலத்தை வளமாக்க
வழிசமைப்போம்."

# ஸ்தாபகர்




## முதல் அதிபர்




## முதல் ஆசிரியர்



# எமது முதல்வர்




திரு. து. யேசுதானந்தர்

# பிரதி அதிபர்



திருமதி. பு. பாலசுப்பிரமணியம்

பகுதித்தலைவர் ( 6—11 )



திரு. தி. சாந்தகுமார்


பகுதித்தலைவர் (A.L)



திரு. கு. கண்ணதாசன்







# வாழ்த்துப் பா

பல்வளம் சிறந்த மல்லாவிப் பதியில்
தடம் பதித்ததோர் கல்லூரி
நல்ல மாணவரை நாட்கள் போற்றிட
நயந்தளித்திடும் கல்லூரி
கல்வியும் தமிழர் பாரம்பரியமும்
காத்தறிவூட்டிடும் கல்லூரி
பல்லாண்டு வாழ்க வாழ்க - எம்
மல்லாவி மத்திய கல்லூரி
வன்னி வள நாடு வான்புகழ் எய்திட
வளர்ந்தோங்கி நிற்கும் கல்லூரி
கன்றை நினைத்து பாலூட்டும் பசுவெனக்
கல்வி தந்திடுமோர் கல்லூரி
ஒழுக்கமும் நேர்மையும் உயர்ந்த நற்
பண்பையும் ஊட்டி வளர்த்திடும் கல்லூரி
நன்றே வளர்ந்து பல்லாண்டுகள் வாழ்க எம்
மல்லாவி மத்திய கல்லூரி
செல்லமுத்தாச்சியின் புளியின் கீழ் உருவாகிய
செந்நெறிக்கல்லூரி
முல்லை மாநிலத்தின் முத்தமிழ் வளர்க்கும்
முன்னோடியாம் எங்கள் கல்லூரி
வல்ல எம் வன்னியார் ஆண்ட நம் நாட்டிலே
வளர்ந்தோங்கி நிற்கும் கல்லூரி
எல்லோரும் வாழ்த்த பல்லாண்டு வாழ்க எம்
மல்லாவி மத்திய கல்லூரி
பொன்விழாக்கண்டிடும் எங்களின் கல்லூரி
புகழுடன் என்றும் வாழ்கவே!
அன்புடனே கல்வி அறிவை ஊட்டிடும்
ஆலயமாய் என்றும் வாழ்கவே!
அன்று தொட்டு இன்று வரை சேவையாற்றிடும்
ஆசிரியர் குழாம் வாழ்கவே!
குன்றென வளர்ந்து குவலயம் போற்ற
பல்லாண்டு வாழ்க வாழ்கவே!

திரு.நடராசா தவனேசன்,
பழைய மாணவன்,
மல்லாவி மத்திய கல்லூரி.

# எம் இனிய கல்லூரி

**-பல்லவி-**

அழகான காலைப் பொழுதாகும்
அன்பான பள்ளி எமதாகும்
எம் நெஞ்சம் இசைக்கின்றதே
இவ்வினிய பாடல் தனை
நம் கைகள் இணைகின்றதே
புது வெற்றிப்பாதை தனில்

**-சரணம்-**

தேன் போலவே கல்வி தனை
இணை விதான செயற்பாடுகளை
எமக்களிக்கும் கல்லூரித் தாய் நீதானே
அன்பான அதிபருடன்
அரவணைக்கும் ஆசான்களை
எமக்களித்த கல்லூரித் தாய் நீதானே
எமை வளர்க்கும் உனக்கு
நான் பெருமை சேர்ப்பேன்
எம் சமூகம் போற்றும்
நற்பிரஜை ஆவேன்
எந்நாளும் என்நா
உன் புகழ் பாடிடும்
எங்கள் மல்லாவி மத்திய கல்லூரி (-அழகான)

நெல் விளை பூமி மல்லாவி
வளங்கொழிர் நகரின் மத்தியிலே
வீற்றிருக்கும் எம் கல்லூரி
முல்லை மண்ணின் முத்தாகும்
அழகிய பல பொய்கை கொண்டே
அமைந்திட்ட எங்கள் ஊரினிலே
மத்தியில் மிடுக்குடன் மிளிர்கின்ற
எழிலே எங்கள் கல்லூரி
பொன்விழாக் காணுதே….. எம் கல்லூரி…

பாடல் வரி, இசை :- ஆசிரியர் திரு.சி.வின்சன்

பாடியவர்கள் :- மாணவர்கள் கீர்த்திகா,அகிலாயினி,பபிதா,ஜனாத்தகன், ஆசிரியர் திரு.சி.வின்சன்



# ஆசியுரை

இலங்கைத் திருநாட்டிலே கல்வி நலம் செழிக்கச் செய்யும் பிரதேசங்களில் மல்லாவியும் முக்கிய இடம் வகிக்கின்றது. அதற்குத் தனது காத்திரமான பங்களிப்பை மல்லாவி மத்திய கல்□ரி வழங்குகின்றது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அவ்வாறான ஒரு கல்லூரி இன்று பொன்விழா காண்கின்றது என்பது எல்லோருக்கும் மகிழ்ச்சியான ஒருவிடயமே. பல்துறைசார் நிபுணர்களையும் பண்பாளர்களையும் உருவாக்கிய பெருமை இக்கல்லூரியையே சாரும்.

''அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்''

எனும் பாரதியாரின் வரிகளுக்கு ஏற்றவகையில் மல்லாவி மத்திய கல்லூரி சிறப்பாகத் திகழ்கின்றது. அக் கல்லூரியின் வளர்ச்சியில் பங்குகொள்ளுகின்ற அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன். இக்கல்லூரி ஐம்பது ஆண்டுகளல்ல இன்னும் பல நூற்றாண்டுகள் தம்பணியினைத் தொடர வேண்டும். அதற்கு இறைவனின் ஆசிகள் என்றென்றும் கிடைக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து இந்நாள் சிறப்புறவும், விழாமலர் மலர்ந்து மணம் கமழவும், என் ஆசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

**ஸ்ரீ. இ. முருகானந்தக்குருக்கள்,**
**பாலசுப்பிரமணியர் தேவஸ்தானம்,**
**மல்லாவி.**

# ஆசியுரை

[illegible]

[illegible]

[illegible]

[illegible]



# ஆசிச்செய்தி

**"கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும் தேடுங்கள் கிடைக்கும்"**

முல்லாவி மத்திய கல்லூரி தனது ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நிலையில் துணுக்காய் பிரதேசம் மகிழ்ச்சியில் திளைக்கின்றது.

ஒரு புள்ளியில் இருந்து ஆரம்பமான இந்தப் பாடசாலை இன்று வடக்கு கிழக்கை மட்டுமல்ல, தெற்கையும் கூட வியக்க வைத்துவிட்டதென்றால் இதனுடைய வளர்ச்சி ஒரு விந்தை என்றே சொல்லவேண்டும். இங்கும், வெளியிலும் ஆங்காங்கே காலூன்றியுள்ள பழைய மாணவர்களின் சரித்திரத்தை ஆராய்ந்தாலே போதும் இந்த கல்விச்சாலையின் சாதனைகள்.

ஊர் இழந்த பின்பும், உறவிழந்த பின்பும், உயிர் பல நசிந்து ஊனமாய்ப் போன பின்பும், கண்களில் திசையிழந்த பின்பும், திரும்பி வரும் போது தம் திறமையை இழக்கவில்லை கல்லூரி மாணவர்கள், தம் ஆர்வத்தை இழக்கவில்லை கல்லூரி ஆசிரியர்கள்.

ஆம், இங்கே இப்போதும் வீரம் இருக்கின்றது அறிவும் அதைவிடப் பெரிய அறமும் இருக்கின்றது. தானம் இருக்கின்றது, தன்னை மறந்து பிறருக்காய்க் கரையும் நல்ல தியாகம் இருக்கின்றது.

ஒவ்வொரு மாணவரினதும், ஆசிரியர்களினதும் இத்தகைய வீரப் பண்புகளையம் ஒரு ஒற்றைக் கம்பத்தில் ஒட்டிச்சென்றால் அதன் உயரம் எங்கு செல்லுமோ அந்த உயர்ச்சிதான் இந்தப் பொன்விழாவில் இப்பாடசாலையின் உயர்ச்சியாகவும் இருக்கும்.

***இறையாசி வேண்டி வாழ்த்துகிறேன்:***

மாணவச் செல்வங்களே, நீங்கள் உங்கள் கண்களில் தூரம் பூட்டி, கால்களில் வேகமும் பூட்டி ஒருமுறை ஓடிப்பாருங்கள் காற்றுக்கூட உங்களை முந்திக்கொள்ள முடியாது.

நன்றி

**கிறிஸ்துவில் உண்மையுள்ள,**

**பங்குத்தந்தை,**

**M.L.தயாகரன்.**

# ஆசிச்செய்தி



# ஆளுநரின் வாழ்த்துச் செய்தி

No: 3Ɩ2

Office: 0212220660
Fax: 0212220661
Web-site: www.np.gov.lk
My No: G/NPC/A4/HG/MSG

ජී.ඒ. චන්ද්‍රසිරි
ஜி.ஏ. சந்திரசிறி
**GA Chandrasiri**

උතුරු පළාත් ආණ්ඩුකාරවර
வட மாகாண ஆளுநர்
**Governor, Northern Province**

ஆளுநர் செயலகம்
**Governor's Secretariat**

No: 34, Forest Office Lane,
Chundukkuli, Jaffna, Sri Lanka.

Date: 17.11.2011

**MESSAGE FROM THE HON. GOVERNOR, NORTHERN PROVINCE**

It is my privilege as the Governor of the Northern Province, I take pride in sending this message to be published in the Magazine felicitating "Golden Jubilee" celebration of Mu/Mallavi Central College.

I understand that Mu/Mallavi Central College is playing pivotal role in field of Education in the Western part of Mullaithivu district and produced enormous numbers of disciplined learned citizens from the economically vulnerable families and contributed to the development of the area.

This College has lost most of its valuable resources in the recent past and has miraculously recovered from the lost to provide the better Education facilities to the poor children.

I am confident the College will continue to produce competent, accomplished younger generation to do their best to the Country in future.

I congratulate the Principal, Staff and Students and also the Parents and well wishers for all their efforts and wish them the best of everything where Education is concerned.

May you have a prosperous future.

**GA Chandrasiri,**
**Governor,**
**Northern Province.**

GA Chandrasiri
Governor
Northern Province

Telephone: 0112883371
Fax: 0112885436
e-mail: hongovcol@gmail.com

Sub Office:
9/1, Lily Avenue, Jayanthipura,
Battaramulla.




# கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து...

மல்லாவி மத்திய கல்லூரி 1961ம் ஆண்டு சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் நோக்கில் மு/மல்லாவி அ.த.க பாடசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பெற்ற இக் கல்லூரியானது கல்விச் சேவையை 50 ஆண்டுகளாக வழங்கி வருவது பாராட்டிற்குரிய ஒன்றாகும். போதியளவு பௌதீக வளங்கள் இப்பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த போதிலும், புதிய கல்வித் திட்டத்திற்கு அமைவாக இக்கட்டிடங்கள் பொருத்தமானதாக இல்லாதிருப்பதனை உணர்ந்து மேலதிக பௌதீக வளங்கள் இப்பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்கல்லூரி துணுக்காய் கல்வி வலயத்தில் அதிகளவு மாணவர்களைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிக் கொண்டிருப்பது ஒரு சாதனைக்குரிய விடயமாகும்.

இக் கல்லூரி ''இசுறு'' பாடசாலை அபிவிருத்தி திட்டத்தில் இணைக்கப்பட்டு வளங்கள் பெற்றதுடன் ''ஆயிரம் பாடசாலை'' அபிவிருத்தி திட்டத்திலுள்ளும் முன்மொழியப்பட்டுள்ளது. போர் அனர்த்தத்தின் போது இடப்பெயர்விற்கு உள்ளாகி 2010 ஆம் ஆண்டு மீள அதிபர், ஆசிரியர், கல்லூரிச் சமூகத்தினரின் அயராத பணியினால் மீண்டும் எழுந்து நிற்கின்றது.

ஐம்பது ஆண்டுகள் கல்வித் தொண்டாற்றிய இக்கல்லூரியானது தொடர்ந்தும் மாணவர்களை தற்கால உலகிற்கு ஏற்ற வகையில் அறிவுரை வழங்கி, ஆற்றலை ஊட்டுவதற்கு அதிபரும், ஆசிரியர்களும் முனைப்புடன் செயற்பட வேண்டும் என்பதே எனது பேரவா. மேலும் பொன்விழா ஆண்டைத் தொடர்ந்தும் மாணவர்கள் நல்ல சாதனைகளை நிகழ்த்த வேண்டும் என்பதுடன் அதனை ஒட்டி வெளியிடப்படும் ''பொன்விழா மலர்'' பிரதேசத்தின் கல்விப் பங்களிப்பை கூறுவதுடன் மாணவர்களிற்கு பயன்தரக்கூடிய நல்ல ஆக்கங்களையும் தாங்கி வரவேண்டும் என எதிர்பார்த்து விழா சிறப்புறவும், மலர் வெளியீடு சிறப்புற அமையவும் அக மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**இளங்கோவன்,**<br>
**செயலாளர்,**<br>
**கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு,**<br>
**வடமாகாணம்.**



# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி


மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත
PROVINCIAL DEPARTMENT OF EDUCATION, NORTHERN PROVINCE

மருதனார்மடம், சுன்னாகம்
මරුතනාර්මඩම්, චුන්නාකම්
Maruthanarmadam, Chunnakam

☎-021 3215545
✉: apdeedne@...


எனது இலக்கம் / මගේ අංකය / My No: NP/20/SO/C/25
உமது இலக்கம் / ඔබේ අංකය / Your No:
Date: 09.12.2011

## ஆசிச் செய்தி.

முல்லைத்தீவு மாவட்ட மக்களின் கலங்கரை விளக்கமாகத திகழும் மு/மல்லாவி மத்திய கல்லூரி பொன்விழா எடுப்பதையிட்டும், அதற்கான மலர் வெளியீட்டுக்கான ஆசிச்செய்தி வழங்கும் பேறுபெற்றமையையிட்டும் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகின்றேன்.

மக்களின் இருகண்களான தமிழையும் சைவத்தையும் வளர்த்து இன்று இசுறு பாடசாலையாகத் திகழும் மல்லாவி மத்திய கல்லூரி, பாடவிதான செயற்பாடுகளிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் மிக உன்னதமான இடத்தைப் பெற்று தேசியமட்டம் வரை சென்று தன்புகழ் நாட்டியுள்ளமை அப்பாடசாலையின் அதிபர் ஆசிரியர்களின் ஒத்துழைப்பையும் விடாமுயற்சியையும் எடுத்துக்காட்டுகின்றது.

பாடசாலை அன்னைக்கு பொன்விழா எடுத்து மகிழும் விழாக்குழுவினருக்கும், உறுதுணையாக விளங்கும் அதிபர் ஆசிரியர்களுக்கும் என்றும் குன்றா வல்லமை நல்கவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து என் நல்லாசிகளை வழங்குகின்றேன்.

வாழ்க பல்லாண்டு

ப.விக்னேஸ்வரன்,
மாகாணக்கல்விப்பணிப்பாளர்,
வடமாகாணம்.

மாகாணக்கல்வித்திணைக்களம்,
மருதனார்மடம்



# கல்விச் சேவையில் கலங்கரை விளக்காய், பொன்விழாவை எட்டி நிற்கும் மல்லாவி மத்திய கல்லூரி

ஒரு சமுதாயத்தின் ஆணிவேராக அமைவது பாடசாலைகள் என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் மல்லாவிப் பிரதேசத்தில் சிறு பாடசாலையாக அடிப்படைக் கட்டுமானங்களின்றி ஆரம்பிக்கப்பட்டு ஆரம்பப்பிரிவுகளுடன் தளராது சேவையாற்றி, இன்று அனைத்து வளங்களுடனும் அனைத்துப் பிரிவுகளுடனும் துணுக்காய் பிரதேசத்தில் ஒரு கல்லூரியாக விளங்கும் இக்கல்லூரி ஐம்பது ஆண்டுக் கல்விப் பணியை நிறைவுசெய்து பொன் விழாவைக் கொண்டாடுவதையிட்டு முல்லைத்தீவு மாவட்டச் செயலர் என்றவகையில் பெருமகிழ்வடையும் அதேவேளை ஆசி வழங்குவதையிட்டும் பெருமை அடைகின்றேன்.

ஆண்டுதோறும் கலை, வர்த்தக, விஞ்ஞான கணிதப் பிரிவுகளில் கணிசமான மாணவர்களைப் பல்கலைக்கழகம் அனுப்பிவைக்கும் பாடசாலைகள் வரிசையில் இக்கல்லூரியும் குறிப்பிட்டுக் கூறக்கூடியதாகும். கற்பித்தற் பாடவிதான செயற்பாடுகள் மட்டுமன்றி, மாணவர்களை அனைத்துத் துறைகளிலும் மேம்பாடுடையவர்களாக உருவாக்கும் இலட்சியப் போக்குடன் கலை, விளையாட்டுப் போன்ற இணைபாடவிதானச் செயற்பாடுகளிற்கும் அதிமுக்கியத்துவம் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கதே.

மனித விழுமியப் பண்புகளை அழியவிடாது பேணிப் பாதுகாக்கும் உன்னத நோக்குடன் நல்லொழுக்கம், நட்புடைமை, விருந்தோம்பல் முதலான பண்புகளை பிள்ளைகளிற்கு ஊட்டுகின்ற பாடசாலை என்றுகூட மத்திய கல்லூரியினைக் குறிப்பிட முடியும். அந்த வகையில் பாடசாலையின் வளர்ச்சிக்கும் பாடசாலையில் கற்றற் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்களின் வளர்ச்சிக்கும் அயராது செயலாற்றும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தவர்களுக்கு இப்பொன்விழா மலர் மூலம் எனது நன்றியறிதலையும், பாராட்டினையும் தெரிவிப்பதோடு மேன்மேலும் பாடசாலை உயர்வடைய ஆசியினையும் வழங்குகின்றேன்.

**நா.வேதநாயகன்,**

**மாவட்டச் செயலாளர்,**

**முல்லைத்தீவு.**



# தன்னரும் பணியில் அகவை ஐம்பதை எட்டிய மல்லாவி மத்திய கல்லூரி

கல்வித்துறையில் அரை நூற்றாண்டு அரும்பணியாற்றிவரும் மல்லாவி மத்திய கல்லூரி முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் அமைந்திருக்கின்றது. இயற்கை வளங்களைக் கொண்ட அதிகம் விவசாயத்தில் ஈடுபடுகின்ற மக்கள் வாழ்கின்ற கிராமத்தில் 1961இல் சிறிய பாட்சாலையாக ஆரம்பிக்கப்பட்டு இன்று 1AB பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டிருப்பது கல்விசேவையில் கிடைத்த வெற்றி என்றே கூறமுடியும்.

துணுக்காய் கல்விவலயத்திலுள்ள ஒரேயொரு கல்லூரி என்ற பெருமையை தனதாக்கிக் கொண்டதோடு இடவசதி, அழகான விளையாட்டு மைதானம் போன்றவற்றைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். உயர்தரத்தில் அனைத்துப் பிரிவுகளையும் கொண்டிருப்பதோடு வருடம் தோறும் அனைத்துப் பிரிவுகளிலும் கணிசமான மாணவர்களை உயர்கல்விக்காகப் பல்கலைக்கழகங்களிற்கு அனுப்பியும் வருவது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டாலும், மதபேதமற்ற கலவன் பாடசாலையாகவே நெடுங்காலமாக இயங்கி வருவதைக் காணமுடியும். பன்முகப்பட்ட துறைகளிலும் வருடந்தோறும் பல சாதனைகளைப் படைத்து வருவது யாவரும் அறிந்ததொன்று. இணைபாட விதானச் செயற்பாடுகளிலும், குறிப்பாக கலை, விளையாட்டு போன்றவற்றிலும் தேசியம் வரை சென்றிருப்பதற்கு பிள்ளைகளை வழிநடத்திய ஆசிரியர்களின் முனைப்பான செயற்பாடே காரணம் எனலாம்.

துணுக்காய் கல்விவலயத்தில் அதிகளவான மாணவர்கள் கல்விகற்றுப் பயனடைகின்ற மத்திய கல்லூரி பொன் விழாக்காண்பதையிட்டு நான் பெரிதும் மனநிறைவடைகிறேன். இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக அயராது உழைக்கின்ற பாடசாலைச் சமூகத்தினரான அதிபர், ஆசிரியர்கள், அபிவிருத்திச்சங்கத்தினர், பழைய மாணவ சங்கத்தினர், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவருக்கும் பாராட்டினைத் தெரிவிப்பதோடு தொடர்ந்தும் பன்நெடுங் காலம் பணிதொடர மாவட்டச் செயலாளர் என்ற வகையில் எனது வாழ்த்தினையும் ஆசியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அ.பத்திநாதன்,**

**முன்னாள் அரச அதிபர் / மாவட்டச் செயலர்,**

**முல்லைத்தீவு.**



# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கல்விக்கென்றே பிறந்து அப்பணிதனில் சிறந்த கல்லூரிக்கு இன்று அகவை ஐம்பது என்ற பாக்கியத்தைப் பெற்றுவிட்ட மல்லாவி மத்திய கல்லூரி எமது துணுக்காய் வலயத்தின் உயர்வான, நிலையான வளமாகவும், பொக்கிஷமாகவும் காணப்படுகின்றதென்றால் அது பெருமைக்குரியதே!

நீண்டகால வரலாற்றையும், பெருமைக்குரிய சாதனைகளையும், சிறப்புக்களையும் கொண்ட இக் கல்லூரியி மல்லாவி பிரதேசத்தில் கல்விப் பாரம்பரியத்திற்கு வளமும், வலுவும் சேர்த்து வருகின்றது. தகைமைசார் சான்றோர்களைச் சமூகத்திற்குத் தந்திருக்கின்றது, தருகின்றது, இனிவரும் காலங்களிலும் தரும் சாதனை மிக்க கல்லூரியாக மிளர்கின்றது.

நாட்டின் அசாதாரண சூழ்நிலையிலும் அயராது, தளராது தன் உயரிய பணிகளைச் செம்மையாக ஆற்றிய இக்கல்லூரி மீளக்குடியமர்த்தப்பட்ட பின், முன்னர் இருந்ததை விட மிடுக்குடன் தம் பணிகளைத் தொடர்ந்து வருகின்றது. இந் நிலையில் இக்கல்லூரியின் பொன்விழா நிகழ்வானது பெருமைக்குரிய ஒன்றாகும்.

தரம் 6 முதல் 13 வரையான வகுப்புக்களைத் தன்னகத்தே கொண்டு, கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகப் பிரிவுகளையும் போதித்து வருகின்ற முல்லை மாவட்டத்தில் காணப்படுகின்ற மத்திய கல்லூரிகளில் குறிப்பிடத்தக்க முக்கிய ஒரு கல்லூரியாக இருந்து கோட்ட, வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் நடத்தப்படுகின்ற கலை, கல்வி, விளையாட்டு போன்ற போட்டிகளில் இக் கல்லூரி பங்குபற்றி பற்பல சாதனைகளைப் படைத்து வ்ருவதானது எமது வலயத்திற்குப் பெருமையான ஒன்றாகவே காணப்படுகின்றது.

பொன்விழாக் காணும் கல்லூரியின் வளர்ச்சியானது அதியுயர் அடைவுகளைப் பெற்று பன் மடங்கு பல்கிப்பெருகி ஆண்டாண்டு தோறும் பல சாதனைகளைப் படைத்து வருகின்றது. இச்சாதனைகள் மேன் மேலும் வளர்ச்சி கண்டு இலங்கையின் சாதனைக் கூடமாக மல்லாவி மத்திய கல்லூரி திகழும், திகழவேண்டும் என்ற நம்பிக்கையோடு பொன்விழா சிறப்புறவும், பொன்விழா மலர் தன்மையுடன் நறுமணம் வீசி கல்லூரிப் புகழைப் பரப்ப வேண்டும் எனவும் வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

திருமதி. மாலினி வெனிற்றன்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
துணுக்காய்.

# ஆசிச்செய்தி




மல்லாவி மத்திய கல்லூரியின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு குறித்து இக்கல்லூரி சமூகத்தை வாழ்த்துகின்றேன். ஒரு பாடசாலையின் ஐம்பது ஆண்டுகால நடைமுறையைச் சற்றுப் பின்நோக்கிப் பார்த்தால், ஆரம்பம் முதல் இன்று வரையான படிமுறை வளர்ச்சியில் இப் பாடசாலையின் வெளியீடாக வாழ்ந்துவரும் ஊரிலுள்ள, இலங்கையிலுள்ள, வெளிநாடுகளிலுள்ள பழைய மாணவர்களின் வாழ்க்கை நடைமுறைகளினூடாக அவதானித்துப் பாடசாலைச் செயற்பாடுகளை அளவிட்டுக்கொள்ள முடியும். இக் கல்லூரியின் பௌதீக வளம் படிப்படியாக அதிகரித்தே வருகின்றது. மாணவர்களது கல்விப் பெறுபேறுகள், இணைபாடவிதானப் பெறுபேறுகள், முல்லை மாவட்டத்தில் அவ்வப்போது முதல்நிலைகளில் காணப்படுவதை அறிந்துள்ளோம். இப்பெறுபேற்று உயர்ச்சிக்கு வித்திட்டவர்கள் ஆசிரியர்கள். வளர்ப்பவர்கள் ஆசிரியர்கள். வழிகாட்டுபவர் பாடசாலை அதிபர். கண்காணிப்பவர்கள் சமூகத்தினர். இந்த நிலையில் இக் கல்லூரி இலங்கைத் திருநாட்டின் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களது ''இசுறு'' பாடசாலை, ''அபிவிருத்திப்'' பாடசாலை ஆகிய இரு செயற்றிட்டங்களிலும் உள்வாங்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன். இச் செயற்றிட்டங்களின் அபிவிருத்திப் பணிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும். இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அயற் கிராமங்களிலுள்ள ஊட்டப் பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியும், வளர்ச்சியும் நிச்சயமாக உதவும். பொன்விழாக் காணுகின்ற இவ் வேளையில் இப் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி வருகின்ற திரு.து.ஜேசுதாஸந்தர் மேன்மை தங்கிய ஜனாதிபதியின் சிறந்த அதிபருக்கான ''பிரதீபா பிரபா'' விருதினைப் பெற்றுள்ளமை பாராட்டப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும்.

கடந்த கால அனர்த்தங்களின் போது இடம்பெயர்ந்து வந்த அதிகமான மக்களை உள்வாங்கி நலன்புரி நிலையமாகச் செயற்பட்டது. இக்காலத்தில் இக் கல்லூரியின் மாணவர் எண்ணிக்கை அதிகரித்தது. கஷ்டமான சூழலிலும் இக் காலப்பகுதியில் சிறப்பான கல்வி வழங்கப்பட்டதனூடாகப் பல மாணவர்கள் பல்கலைக்கழகங்களிற்கு தெரிவாகியிருந்தனர். இவர்கள் இப்போது நல்ல தொழில் நிலையிலுள்ளனர். எனவே இக் கல்லூரியின் பழையமாணவர் சங்கம் தொடர்ந்தும் கல்லூரி வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

மீள் குடியேற்றத்தின் பின் மிகவேகமாக இக் கல்லூரி வளர்ச்சி கண்டு வருவதை அவதானித்துள்ளேன். இவ் வளர்ச்சிக்குப் பிரதேச மக்கள் ஊக்கமளிக்க வேண்டும். வளர்ச்சிக்கீடான வளங்களைத் தனியே அரசினால் மட்டும் பெற்றுத்தர இயலாது. இக் கல்லூரியின் நலன்விரும்பிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழையமாணவர் சங்கம் போன்றவர்களும் உதவ வேண்டும். பொன்விழா கண்ட இக்கல்லூரி நூற்றாண்டு விழாவை நோக்கி வீறுநடை போடவேண்டும் என வாழ்த்தி பொன்விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகளைச் செய்து வருகின்ற பாடசாலைச் சமூகத்தைப் பாராட்டுகின்றேன்.

ஐம்பது ஆண்டுகாலம் பாடசாலை நடத்துவது என்பதே பாரிய ஒரு விடயம். கடந்த காலத்தில் இங்கு பணியாற்றிய ஆசிரியர்களையும் அதிபர்களையும் கூட இச் சந்தர்ப்பத்தில் நாம் பாராட்ட வேண்டும். ஏனெனில் அவர்களது அர்ப்பணிப்பான சேவையே இன்றைய நிலைக்குக் காரணம். இன்றைய ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையூடாக நூற்றாண்டு விழாவிற்கு இட்டுச் செல்ல வேண்டும். ஒவ்வொருவரும் தமது பாடசாலை வாழ்க்கைப் பருவத்தை நினைத்துத் தாம் கற்ற பாடசாலைக்கு எப்பொழுதும் உதவி புரிய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

**த.யோகநாதன்,**
**முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம்**
**முள்ளுக்காய்.**



# வாழ்த்துச் செய்தி

முல்லை மாவட்டத்திலுள்ள தலை சிறந்த கல்லூரிகளில் மல்லாவி மத்திய கல்லூரியும் ஒன்று. அது ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து இன்று பொன்விழாக் காண்பதனையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். இக்கல்லூரியில் கல்விபயின்று பட்டதாரிகளாய், கல்விமான்களாய் உலகெங்கும் பரந்து வாழும் பல நூற்றுக்கணக்கானோர் இதனுடைய புகழுக்குச் சாட்சியாவர். ஐம்பது ஆண்டுகளில் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் என பல்துறைப்பட்ட நிலைகளில் கடமைபுரியும் ஆயிரக்கணக்கான மனிதர்களை வலுவூட்டி இந்தத் தேசத்துக்கு வளம் சேர்த்திருக்கின்றது.

மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழா மலர் தேசத்தின் வரலாறு, பாடசாலை வரலாறு, புத்தாக்கங்கள், மாணவர்படைப்பாக்கங்கள் எனப் பல்துறை ஆக்கங்களைத் தாங்கிவருகிறது. இது ஒரு வரலாறு பேசும் நூலாகச் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

மல்லாவி மத்திய கல்லூரி இன்று புதுயுகத்தில் காலடி எடுத்து வைக்கின்றது. சிறந்த தலைமைத்துவம், சிறந்த ஆசிரியர்கள், நல்லொழுக்க மாணவர்கள் என ஒரு கட்டுக்கோப்பான அமைப்பாக நிமிர்ந்து நிற்கிறது. புதுமை காணும் விருப்பமும் சாதனை படைக்கும் எண்ணமும் நிறைந்த ஒரு குழாமாக பாடசாலைச் சமூகம் இருப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். இக் கல்லூரியினை வளர்ச்சியடையச் செய்யக்கூடிய வகையில் பழையமாணவர் சங்கமும், பாடசாலை அபிவிருத்திச்சபையும் ஒத்துழைப்பை வழங்கி வருவது இதனுடைய சாதனைகளை மேலும் மெருகூட்டுவதற்குக் காரணமாகின்றது. பொன்விழாவில் சாதனைபடைத்துப் பூரித்துப்போன கல்லூரி மணிவிழாவில் மேலும் தனது சேவைகளை விரிவாக்கி சர்வதேச தரத்தில் தனது சேவைகளை வழங்கும் என எதிர்பார்க்கின்றேன். இதனுடைய சேவைகள் மேலும் வளர, எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

நன்றி

திரு. சி. குணபாலன்,
பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
துணுக்காய்.




# Valuble wish from Mr.Nagalingam Ethirveerasingam

I wish Mallavi Central College, its Principal, Teachers and students all the best in continuing to make Mallavi Central a grand seat of learning. I thank the Principals, teachers and students who have brought Mallavi Central to the present high level. Considering the displacements and the sufferings, Mallavi education community has done wonderful work to provide the much needed education to our children.

I first came to Mallavi in 1998 and again on 1999 with 10 other educators to conduct seminar on teaching. The school had suffered much during the embargo of the 1990s. In 2009 with the support of Governor Chandrasiri we conducted a Student-Athlete education athletic camp for two weeks. The hospitality the principals, teachers and students in all three occasions was warm and they made all three sessions successful.

My wish is for Mallavi Central to prosper under the 1000 schools project and with Governor Chandrasiri's support become a powerhouse of learning and sports performance.

**Mr.Nagalingam Ethirveerasingam. Ph.D.,**
**Consultant in Education and Sports,**
**Olympian, 1952 and 1956 Olympic Games,**
**Asian Games Gold Medalist, Tokyo, 1958.**



# கல்விக்கு ஒளியேற்றிய தாய்

இப்பிரதேசத்தின் கல்வியை வளர்த்த மு/.மல்லாவி மத்திய கல்லூரி 2011ஆம் ஆண்டில் பொன் விழாவைக் கொண்டாடுவதானது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது.

1961 ஆம் ஆண்டு உதயமான எம்கல்லூரி பல சாதனைகளைப் புரிந்து பல துறைகளிலும் தனது மாணவச் செல்வங்களை வளர்த்துள்ளது என்றால் மிகையாகாது.

இப்பிரதேசத்தில் அனைவருக்கும் மல்லாவி மத்திய கல்லூரி பல வழிகாட்டல்களைச் செய்துள்ளது. எனது ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர்தரக் கல்விவரை இக்கல்லூரியில் கற்றேன். தமிழில் ஏற்படும் வழுக்களை காணுமளவிற்கு எமக்குத் தமிழ் கற்பித்த அதிபர் அமரர் திரு.செ.மயில்வாகனம் அவர்களை நினைவுகூறமுடியும்.

ஒரு மாணவனின் நடத்தை தொடர்பாக அவதானிக்கும்போது, கற்ற பாடசாலையின் வழிகாட்டல் முன்னிலையில் காணப்படும். அந்தவகையில் இக்கல்லூரியில் கல்வி கற்ற மாணவர்கள் சிறந்த ஆளுமையும் நற்பண்பும் உடையவராகக் காணப்படுகின்றனர்.

துணுக்காய் கோட்டத்திலுள்ள இக்கல்லூரி முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டுமல்ல, அகில இலங்கையிலும் முன்னிலையில் திகழ்கிறது. அந்த வகையில் இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக ஆரம்பத்தில் இருந்து உழைத்த பெரியோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் கல்லூரிச் சமூகம் சார்பில் பாராட்டுகிறேன். பொன்விழா மலர் வெளியிடுவதற்காக முன்வந்த மலர்க்குழுவினரையும் பாராட்டுவதோடு, இம்மலர் சிறப்புற வெளிவர எனது ஆசிகளையும் கூறுகிறேன்.

நன்றி

**திரு. ஆ. சுந்தரமூர்த்தி,**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்,**
**துணுக்காய்.**



# வாழ்த்துச் செய்தி

வன்னிமண்ணில் வளமான கல்விக்கு வித்திட்ட மு/மல்லாவி மத்திய கல்லூரி தனது பணியை நகர் மத்தியில் நிலைத்து நின்று ஆற்றிய பணியின் அடிச்சுவடுகளாக மருத்துவர்கள், பொறியியலாளர்கள, ஆசிரியர்கள் ஏனைய பல பதவிகளிலும் இன்றும் காணப்படுகின்றனர். இப்பாடசாலைக்கு நீண்ட வரலாறு உண்டு என்பதை நான் அறிவேன். 1989 காலப் பகுதியில் இப்பிரதேசத்திற்கு ஆசிரியர்களாக வந்தபோது மு/மல்லாவி மத்திய கல்லூரி கொத்தணிப் பாடசாலையாக விளங்கியது. இக்காலமே இப்பாடசாலையுடன் எனது தொடர்பும் ஆரம்பமாகியது. அன்றைய அதிபர் திரு.த.சிவபாலு அவர்களும் அதன்பின்னர் கொத்தணி அதிபராக வந்த திரு.சி.சிவராசா அவர்களுடனும் நெருக்கமான உறவு கொண்டவர் என்ற வகையிலும் இதன் சிறப்புகளை நான் நன்கு அறிவேன்.

கால ஓட்டத்தில் எமது பிரதேசம் சந்தித்த அவலங்களால் தனது அடையாளங்களையே மறைக்கப்படும் அளவிற்கு இழப்புக்களைச் சந்தித்தாலும் இன்று துணுக்காய் கல்வி வலயத்தில் ஒரு முன்னணிப் பாடசாலை என்ற அடையாளத்துடன் மிளிரும் இப்பாடசாலை அண்மைக் காலத்தில் இடைநிலைப் பாடசாலைகளுள் வலுவூட்டல் செயற்திட்டத்தில் உள்வாங்கப்பட்டு இன்று 6-13 வரையான வகுப்புக்களைக் கொண்ட அபிவிருத்திப் பாடசாலையாகவும் 'இசுறு' செயற்திட்டத்தில் அபிவிருத்தி காணப்படும் பாடசாலையாகவும் திகழும் இவ்வேளையில் தனது அடையாளங்களை ஆவணப்படுத்தும் ஒரு சந்தர்ப்பத்தை இப்பொன்விழா நிகழ்வும், வெளியிட இருக்கின்ற பொன்விழா மலரும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

பௌதீக வளங்களை நிறைவாகவே பெற்றுக்கொண்டுவரும் இக்கல்லூரி இன்றைய காலத்தின் தேவையை உணர்ந்து வாழ்க்கைக்கு ஏற்ற கல்வியைத் தொடர் காலங்களிலும் வழங்கும் ஒரு நிறுவனமாக தழைத்து, நிலைத்து நிற்க வாழ்த்தி நல்லாசிகளையும் வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

நன்றி

**திரு.சி.ஜெயபாலன்,**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்),**
**வலயக் கல்விப் பணிமனை,**
**துணுக்காய்.**



# வாழ்த்துச் செய்தி

நீண்ட வரலாற்றைக் கொண்ட எமது பிரதேசத்தின் பல பாடசாலைகளின் வரலாற்றையும் அதன் வளர்ச்சிகளில் பங்காற்றியவர்களின் விபரங்களையும் இன்று எம்மால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இத்தகைய வரலாற்றைத் .தெரிந்தவர்களும் இன்று எம்முடன் இல்லை. இந்த வகையில் மு/மல்லாவி மத்திய கல்லூரி பொன் விழாவைக் கொண்டாடுவதுடன் அதன் வரலாற்றையும் ஆவணப்படுத்தக்கூடிய நூல் ஒன்றையும் வெளியிடுவதையிட்டு மிகவும் மகிழ்வடைகின்றேன்.

1985 ஆம் ஆண்டு தொடக்கம் 1989 வரை இப்பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அச்சந்தர்ப்பத்தை இவ்வேளையில் நினைவுகூருதல் மிகவும் பொருத்தமானது எனக் கருதுகிறேன். அக்காலத்தில் அதிபராக இருந்த திரு.த.சிவபாலு அவர்கள் காடாக இருந்த பரந்த நிலப்பரப்பை சீர்திருத்தி, சிறந்த மைதானத்தையும் விவசாய செய்கைக்கு ஏற்ற நிலமாகவும் மாற்றியமைத்தார். இதற்கு அன்று வவுனிக்குளம் பொறியியலாளராக இருந்த ஏ.ரீ பொன்னுத்துரை அவர்களின் பங்களிப்பும் இருந்தது. அதிபரின் காலத்தில் க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு பாடசாலை 1AB பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது.

தொடர்ச்சியாக இப்பாடசாலை வளர்ச்சி அடைந்துவருவது மகிழ்ச்சிக்குரியது. இப்பாடசாலை தரமான சமூகத்திற்கு தரமான கல்வியை வழங்க வேண்டுமென வாழ்த்தி எனது நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கு. விஜயபாலா**
**பிரதிக்கல்விப்பணிப்பாளர் (முகாமைத்துவம்),**
**வலயக்கல்விப் பணிமனை,**
**துணுக்காய்.**



# கோட்டக் கல்வி அதிகாரியின் வாழ்த்துச் செய்தி

## "கல்வியே கண்"

வளம் கொழிக்கும் வன்னித் திருநாட்டின் துணுக்காய் கல்வி வலயத்தின் கல்விக்கென்றே பிறந்து அப்பணிதனில் சிறந்த கல்லூரிக்கு இன்று அகவை ஐம்பது என்ற பாக்கியத்தைப் பெற்றுவிட்ட மல்லாவி மத்திய கல்லூரி எமது வலயத்தின் பொக்கி'ம் என்றால் அது மிகையாகாது.

உலகில் வாழ்கின்ற அத்தனை மனிதரையும் மனிதப் பண்புகளோடு வாழவைப்பது அல்லது உயரவைப்பது பாடசாலை என்றே கூறவேண்டும். நாட்டின் பல துறைகளில் பல்வேறு திணைக்களங்களில் பணியாற்றுகின்ற அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் என்று கூறப்படுகின்ற அனைவரையும் பாடசாலையே உருவாக்குகின்றது என்பது அனைவரும் அறிந்த உண்மையே. அந்த வகையில் இக்கல்லூரியும் பல அறிவாளர்களை உருவாக்கியுள்ளது, உருவாக்கி வருகின்றது, இனியும் உருவாக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

அகவை ஐம்பதில் வன்னியின் விருட்சமாக தனது நிழலை அகல விரித்துக்கொண்டு, ஆழமாகத் தடம்பதித்து நிற்கின்ற மல்லாவி மத்திய கல்லூரி பொன்விழா காண்பதில் பெருமையடைகின்றது. இயல்பான சூழலை இழந்த குறுகிய காலத்திலும் விழா எடுத்து கல்லூரியின் வளர்ச்சிக்கு வித்திட்டு செயற்படும் அனைத்து உள்ளங்களையும் மனமார வாழ்த்துகின்றேன்.

**திரு. க. செல்வரட்ணம்,**
**கோட்டக் கல்வி அதிகாரி,**
**துணுக்காய்.**



# பொன்விழாக் காணும் மல்லாவி மத்திய கல்லூரி

மல்லாவிப் பதியின்கண் சிறந்து விளங்கும் மல்லாவி மத்திய கல்லூரி, எமது மயில்வாகனம் தமிழ் வித்தியாலயத்தின் தாய்ப் பாடசாலை ஆகும். எமது பாடசாலையின் சின்னஞ் சிறார்களின் அனைத்துத் தேவைகளையும் இவ்வருட ஆரம்பம் முதல் எமக்கு வழங்கிவரும் இனிய கல்லூரி இன்றுபோல் என்றும் புதுப்பொலிவுடன் வளர்ந்து சாதனை படைக்க எனது இதயம் நிறைந்த நல்லாசிகளை உவகையுடன் தருகின்றேன்.

எமது பாடசாலையில் தரம் 1 முதல் தரம் 5 வரை தமது ஆரம்பக்கல்வியை ஆசையுடன் பயின்று தமிழ்த்தினப்போட்டி, ஆங்கில தினப்போட்டி, சித்திரப்போட்டி, வாய்ப்பாடு மனனம், திருக்குறள் மனனம், கோலப்போட்டி, விரைவு கணிதப்போட்டி, இல்லமெய்வன்மைப்போட்டி ஆகிய இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் திறமை காட்டி, புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்றும், நூற்றுக்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்றும் மல்லாவி மத்திய கல்லூரியாம் தாய்ப் பாடசாலையிற் சேர்ந்து தம் இடைநிலைக் கல்வியை ஆர்வமாய்த் தொடரக் காத்திருக்கும் எம்மாணவர்களின் எதிர்கால வளர்ச்சிக்குக் களம் அமைக்கும் வளமான கல்லூரியே வாழ்க.

அறிவும், அன்பும், பண்பும் நிறைந்த முத்தான அதிபர், சத்தான ஆசிரியர்கள், கல்லூரியின் மாணவச் செல்வங்கள் எல்லா நலமும் பெற்று கல்லூரியின் உயர்வுக்கு உறுதுணையாய் மிளிர, எம் வித்தியாலய சமூகம் சார்பில் உளமார வாழ்த்துகின்றேன்.

வாழ்க! வளர்க!

**கீதா பாலசிங்கம்,**
**அதிபர்,**
**மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம்.**



# அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

இருபதாம் நூற்றாண்டில், 1961ஆம் ஆண்டில் மல்லாவிக் கிராமத்தில், மல்லாவி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்னும் பெயரில் ஓர் அறிவாலயம் சிறு தொகை மாணவர்களுடன் புளியமர நிழலில் சிறுகொட்டிலிற் தொடங்கியது. இப்பாடசாலை படிப்படியாக வளர்ச்சிபெற்று மு/. மல்லாவி மகா வித்தியாலயம் என உயர்ந்தது. இன்று மல்லாவி மத்திய கல்லூரி எனத் தரம் உயர்த்தப்பட்டு, தரம் 6 தொடக்கம் 13 வரை வகுப்புக்களைக் கொண்டுள்ளது. உயர்தரத்தில் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் என்னும் நான்கு துறைகளுடன் மிளிர்கின்றது.

2008இல் இடப்பெயர்வின்போது பல இடர்களை அடைந்தபோதும் மீளக்குடியமர்ந்த இப்பகுதி மாணவர்களுக்கு அறிவூட்டப் பின்நிற்கவில்லை. 2011ஆம் ஆண்டில் ''இசுறு''த் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு, பெரு ஆலமரம்போல் கிளை பரப்பி நிற்கின்றது. 2011 அதன் பொன்விழா ஆண்டென்பதால் ''பொன்விழா மலர்'' வெளியிடப்படுவது விசேட அம்சமாகும். இம்மலர் சிறப்பாக அமையவும், இக்கல்லூரி மென்மேலும் வளர்ச்சிபெற்று எம்மாணவர்களை கல்வியில் உயர்ந்தவர்களாக்கவும், ஒழுக்கமான பிரஜைகளாக்கவும் என்மனங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.


செ. அரவிந்தன் (PHI),

பா. அபி. விரு. சங்க செயலாளர்,

மல்லாவி மத்திய கல்லூரி.



# குன்றின் தீபமென...

கல்வி ஒவ்வொரு மனிதனுக்கும் கண் போன்றது. அதை ஆமோதிப்பது போலவே ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்'' என ஆன்றோரும் மொழிந்துள்ளனர். அந்தக் கல்வியை அதாவது மனித நாகரிகத்திற்கு வித்திட்ட மொழிக்கல்வியை முறையே தருவது கல்விக்கூடம். மனித சிந்தனையைத் தூண்டி, துலங்கச் செய்வது கல்விக்கூடம். ஒவ்வொரு குழந்தையினதும் ஆழ்மன உணர்வுகளைத் தோண்டி எடுத்து அனுபவங்களாக்கி அதிலிருந்து ஆயிரம் பாடங்களைப் பெற்றுக்கொள்ள வைப்பது கல்விக்கூடம். ஆயகலைகள் அறுபத்து நான்கிலும் தேற வைப்பது கல்விக்கூடம்.

அந்த வகையில் இந்த வன்னி மண்ணில் வளம் சேர்க்க முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் கோட்டத்தில் முதற் பாடசாலையாக உருவெடுத்த இந்த மல்லாவி மத்திய கல்லூரி குடியேற்றத்திட்டத்தின் கீழ் இம் மண்ணில் புதிய குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட, இங்கு வாழ் குழந்தைகளின் கல்வி நோக்கி 1961ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று பொன்னாடை போர்த்தப்பட்டு பொன்விழா காணுகின்றது. தன்னை ஒரு தரமான கல்லூரியாக இனங்காட்டி கல்விச்சமூகத்தில் தன்பெயரைப் பொறித்து நிற்கின்றது. நிழல் பரப்பும் ஆலமரம் முன்நிற்க அது போல் தன் புகழ் பரப்பி பொன்னாடை போர்த்தி நிற்கின்றது.

ஆமாம், அது உருவாக்கிய பரம்பரை கட்டியம் கூற, கைகோர்த்து வாழ்த்துப்பாட, மெய் உழைப்பு ஈர்ந்து மெருகூட்ட காலத்திற்கு காலம் வரும் அதிபர், ஆசிரியர்கள் கைகளில் தவழ்ந்து விளையாடி உயரிய வளங்கள் பெற்று குன்றின் தீபமென ஒளி வீசுகின்றது. மாணவச் செல்வங்களை அள்ளி அணைத்து, அறிந்து, உதவிகள் செய்து வாழ்வின் ஒளியாகின்றது. வாழ்விற்கு வழியாகின்றது. இவ் ஒளி இனி குறையப்போவதில்லை. மென்மேலும் பிரகாசித்து உலகெங்கும் வியாபிக்க, சின்ன உள்ளங்களின் சித்திரக்கூடமாகச் சிறக்க, வியத்தகு சாதனைகளில் வீறுநடை போட அந்தத் தாயால் வளர்க்கப்பட்ட நாங்களும் வாழ்த்தி ஆசி கூறுகின்றோம்.

*நிலையான எம் செல்வம் கல்வி-எந்த*
*நிலைவரினும் அது அழிவதில்லை.*

**நா. துளசிதாஸ்**
**செயலாளர்,**
**பழையமாணவர் சங்கம்.**

# ‘மல்லாவி மத்திய கல்லூரிக்காக நாங்கள்’ அமைப்பின் வாழ்த்துச் செய்தி

மல்லாவி மத்திய கல்லூரியில் பயின்று, பல்வேறு தளங்களில் நின்று, எமது கல்லூரிக்காக அணி திரண்டிருக்கும் நாங்கள் கல்லூரியின் பொன்விழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

மேன்மேலும் எமது கல்லூரி வளர்ந்து பல்வேறு சாதனைகளைச் செய்து சமூகத்திற்கு உழைக்கும் நற்பிரஜைகளை உருவாக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதோடு அனைத்து சந்தர்ப்பங்களிலும் கல்லூரியுடன் இணைந்து செயற்பட இச்சந்தர்ப்பத்தில் உறுதி கொள்கின்றோம்.

**‘மல்லாவி மத்தியகல்லூரிக்காக நாங்கள்’அமைப்பினர்.**

**(WE FOR MCC).**



# பொன் விழாக்காணும் என்னருந்தாய்

1959 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட வவுனிக்குளத்திட்டத்தில் எனது தந்தையாருக்கும் காணி வழங்கப்பட்டது. அதன் பயனாக எனது பெற்றோரும் இப் பிரதேசத்தில் வசித்து வரவேண்டியிருந்ததால் இவ்வாண்டில் பிறந்த என்னையும் காலக்கிரமத்தில் தங்களோடு சொந்த ஊரான பருத்தித்துறையில் இருந்து இங்கு அழைத்து வந்து வாழ்ந்து வந்தார்கள்.

1964 ஆண்டுகளில் எனது ஆரம்பக் கல்வியினை இன்றைய திருநகர் என அழைக்கப்படும் எமது கிராம பாடசாலையான 4ம் படிவம் அ.த.க.பாடசாலையில் ஆரம்பித்தேன். வகுப்பு 5 வரை கல்வி கற்ற நான் வகுப்பு ஆறு இல்லாத நிலையில் மல்லாவி அ.த.க.பாடசாலை என்று அழைக்கப்பட்ட இன்றைய மத்திய கல்லூரியில் சேர்க்கப்பட்டு கல்வி கற்று வந்தேன். அப்பொழுது அதிபராக பெருமகன் மயில்வாகனனார் கடமையில் இருந்தார். நாட்களின், மாதங்களின், வருடங்களின் பயணிப்பில் 1974 இல் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் வாய்ப்பை பெற்றேன்.

அதுவும் அதே பாடசாலையில் அவ்வாண்டு தான் க.பொ.த.சாதாரணப் பரீட்சை நிலையமும் ஆரம்பிக்கப்பட்டது. சிறு பாலகனாக ஐந்தாம் ஆண்டில் சேர்க்கப்பட்ட யான் க.பொ.த.சாதாரண தரம் வரையில் இவ்வன்னையின் மடியிலேயே தவழ்ந்தேன்.

இப்பாடசாலை வரலாற்றில் இக்காலப்பகுதி கற்றவர்களாலும் மற்றவர்களாலும் போற்றப்படுகின்ற தன்னலமற்ற சேவையாளனும், உயர் பண்பாளனும் இரவு பகல் பாராது பாடசாலை வளர்ச்சிக்கும் சமூக தொண்டாற்றிக் கொண்டிருந்த ஒரு நல்ல மாமனிதனை இக்கல்லூரியும் இப்பிரதேச வாழ் மக்களும் பெற்றிருந்ததை அப்போது சிறு வயதினையுடைய எனக்கு அறிய முடியாவிட்டாலும் காலப்போக்கில் என்னால் எண்ணித்தெளிய முடிந்தது.

ஆறாம் ஆண்டிலிருந்து எனக்கு அவர்மீது ஓர் பிரியமிருந்தது. கண்டிப்புடன் கூடிய கண்ணியமான அறிவுரைகள் அவர் மீது எனக்கிருந்த அன்பையும் மதிப்பையும் மேலும் பன்மடங்காக்கியது. ஏனோ தெரியவில்லை. எட்டாம் 9ம் ஆண்டுகளில் தாம் எல்லாப் பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுக்கும் மேலதிக நேர வகுப்புக்களுக்கு நானும் சென்று கற்றாலும் என்னை அழைத்து தினமும் தனது வசிப்பிடத்தில் பாடம் கற்றுத் தந்தார்.

இல்லாளுடனும், பிள்ளைகளுடனும் வசித்து வந்த மயில்வாகனனாரிடம் வந்து போகாத உயர் அதிகாரிகளே இல்லையெனலாம். இன்முகத்துடன் வரவேற்று பசிதீர்த்து அனுப்பிவைக்கும் தன்மை அவருக்கான தனிப்பண்பு. இவ்வாறு பாடம் கற்கச் செல்வதால் அவர்கள் பிள்ளைகளும், என்னை ஓர் சகோதரனாக ஏற்றிருந்தனர். இறுதிக்காலங்களில் அவருக்கு ஓர் பிள்ளையாகவே வாழ்ந்தேன். அவரது ஆசீர்வாதம் அறிவுரை எல்லாமாகவே முதன் முறையிலேயே க.பொ.த.சாதாரணதரப்பரீட்சையில் சித்தியும் பெற்றேன். பாடசாலையில் நடக்கும் மாணவர் தேர்ச்சிச்சங்கம் மற்றும் விழாக்களில் மேடைக் கூச்சமின்றி பேசினேன், பாடினேன்.

இப்போதும் கூட அன்றைய பாடசாலைக் கீதத்தின் ஒரு சிலவரிகள் எனக்கு ஞாபகமிருக்கிறது.

> "வாழியவே எங்கள் பாடசாலை - அன்னை
> மல்லாவி அரசினர் பாடசாலை
> சூழுகவே பாலர் உள்ளத்திலே - ஞானச்
> சோதி நிறைத்திடும் பாடசாலை"

தற்போது ஓர் வரலாற்று ஆவணமாக தன்னால் இயன்றளவு இப்பாடசாலை வரலாற்றை நிவேதித்துள்ளார். சகோதரி ருஜினா அவர்களின் தேடுதலுக்கு அக்காலத்தில் எம்மால் ஓர் விழாவில் நிகழ்த்தப்பட்ட வில்லுப்பாட்டுப்பிரதி இன்றிருக்கு மானால் அப்பிரதி இன்னும் சான்றாகும்.

> "வவுனிக்குள ஐங்கரனே -தொந்தி
> வயிற்றனே வணங்கினோம் நாம் உனை நம்பி"

என்று ஆரம்பித்த அந்த வில்லிசை ஆரம்ப வரிகள் இன்றும் ஞாபகமிருக்கிறது. 1975 இல் மத்திய கல்லூரி அன்னை என்னை உயர்கல்விக்காக நெல்லியடி மத்திய கல்லூரிக்கு வாழ்த்தி விடை கொடுத்தாள்.

என்னையும் ஏனையோரையும் மண்ணகத்தில் மாண்புடன் வாழவைத்த மல்லாவி மத்திய கல்லூரி அன்னை இன்று தன் ஐம்பது அகவை காணும் பொன்விழாவிலேயே பூரிப்பாய் மகிழ்ந்திருக்கிறாள். அவள் பிள்ளை நானும் அந்த மகிழ்வில் சுகித்து நிற்கிறேன்.

*"வாழியவே எங்கள் பாடசாலை - அன்னை*
*மல்லாவி அரசினர் பாடசாலை"*

**முருகேசு - கிருஷ்ண நவரத்தினராசா,**
**பிரதேசசபை செயலாளர்,**
**துணுக்காய்.**



# மலராசிரியரின் சிந்தனைத்துளிகள்

பொன்விழாக் காணும் மல்லாவி மத்திய கல்லூரித் தாயின் பாதம் பணிந்து, அறிவொளியூட்டிய அதிபர், ஆசிரியர்களை மனதில் நிறுத்தி, கல்லூரிப் பொன் விழாப் பயணத்தில் இணைந்து கொள்வதில் உள மகிழ்வடைகின்றேன்.

இடப்பெயர்வு அழிவுகளுக்குள்ளிருந்தும், யுத்த அவலங்களுக்குள்ளிருந்தும் மீண்டெழுந்து வரலாற்றுச்சிறப்போடு பொன்விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழா நினைவாக மலர் ஒன்றை வரலாற்று ஆவணமாக வெளியிடுவதையிட்டு மலராசிரியர் என்ற வகையில் பெருமகிழ்வடைகின்றேன். கல்லூரியின் வரலாற்றில் சிறப்பு மலர் ஒன்று வெளிவருவது இதுவே முதல் தடவையாகும். இப்பொன்விழா மலர் சிறப்புற அமைந்து அனைவரின் கரங்களிலும் தவழ்ந்து அனைத்து மனங்களையும் மஞ்சங் கொள்ள வைக்க வேண்டுமென்பதே எனது விருப்பமாகும். இதற்கு முன்பு 2005 செப்ரெம்பரில் ''வரலாற்றுப்பாதையில்'' என்னும் கல்லூரி வரலாறு அடங்கிய சிறிய நூலொன்றை வெளியிட்டிருந்தேன். அதில் சில தவறுகள் ஏற்பட்டிருந்தன. தவறுக்காக மனம் வருந்துகின்றேன்.

கல்லூரியின் பொன்விழாவைக் கொண்டாட வேண்டுமென்ற எண்ணம் தோன்றி பல வருடங்கள் ஆனாலும் யுத்தம், இடப்பெயர்வு என்பவற்றால் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட இழப்புக்கள், சொத்து இழப்புக்களால் மனமுடைந்திருந்தோம். மீண்டும் கல்லூரி ஆரம்பித்த போது மழுங்கிப்போன என் எண்ணம் கூர்மையடைந்தது. 2010இல் அதிபரிடம் பொன்விழா ஆண்டு பற்றித் தெரியப்படுத்தினேன். கல்லூரி மீள ஆரம்பிக்கப்பட்டதால் பல நெருக்கடிகளைச் சந்தித்திருந்தது. பாடசாலைச் சொத்துக்கள் முழுமையாக அழிவடைந்ததால் மாணவர்களின் கற்றலுக்கான அடிப்படைத் தேவைகளைத் தேடிப்பெற்றுக்கொள்ள வேண்டியநிலையில் அதிபரும், ஆசிரியர்களும் இருந்தனர். இந்த நிலையில் பொன்விழா என்பது ஆடம்பரமான நிகழ்வாகவே கருதப்பட்டது.

பொன்விழா பற்றிய செய்தியை அடிக்கடி கல்லூரி சமூகத்தினருக்கு ஞாபகப்படுத்திக்கொண்டே இருந்தேன். அத்தோடு, பாடசாலை பற்றிய தகவல்களைச் சேகரிக்கத் தொடங்கினேன். பாடசாலைக்கு படிப்படியாக வளங்கள் கிடைத்தன. அதிபர், ஆசிரியர்களுக்கு இருந்த நெருக்கடிகள் ஓரளவு குறைந்தது. பொன்விழாச் செயற்பாட்டிற்காக அதிபர், அசிரியர்கள் அசுர முயற்சி எடுத்தனர். பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம் என்பவற்றை ஒன்றுகூட்டிக் கலந்துரையாடினர். விழாக்குழுவினர் தீவிர செயற்பாட்டில் இறங்கினர்.

ஆரம்ப கால அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆக்கங்களுடனும், கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஆக்கங்கள், அதிபர் அறிக்கை, ஆசியுரைகள், வாழ்த்துரைகள், புகைப்படங்கள் என்பவற்றோடு இம் மலர் வெளியிடப்படுகின்றது.

கல்லூரியின் ஆவணங்கள் முற்றாக அழிவடைந்த நிலையில் சிரமத்தின் மத்தியில் சேகரித்த தகவல்களைக் கொண்டு மூன்று பகுதிகளாக வரலாறு எழுதப்பட்டிருக்கின்றது. இம் மலர் வெளிவருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து எம்மை வழிப்படுத்திய துணுக்காய் பிரதேச செயலர் திரு சி. குணபாலன் அவர்களுக்கு நன்றியுணர்வோடு தலைசாய்க்கின்றேன். மலருக்குரிய தரமான ஆக்கங்களை வழங்கியிருந்த அன்பு உள்ளங்களுக்கும், ஆசிச்செய்திகளை தந்துதவிய மதகுருமார்களுக்கும், வாழ்த்துச் செய்திகளை தந்துதவிய ஏந்தல்களுக்கும், மனமுவந்து விளம்பரங்களை வழங்கியுதவிய பெருந்தகைகளுக்கும் மலராசிரியர் என்ற வகையில் நன்றி கூறுகின்றேன். பொன்விழா சிறப்புமலர், அழகுற அமைவதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பை வழங்கிய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்களுக்கும், விளம்பரங்களை வடிவமைத்துத் தந்த கல்லூரி ஆசிரியர்கள் திரு ந.புலேந்திரகுமார், த.விதுரன் பழைய மாணவர்கள் திரு தி.ஜெயந்தன், நா.துளசிதாஸ் ஆகியோருக்கும் பக்க வடிவமைப்பைச் செய்த ஆசிரியர் க.கஜேந்திரன் அவர்களுக்கும், உரிய காலத்தில் மலரை ஆக்கி வழங்கிய நிறுவனத்தினருக்கும் கல்லூரிச் சமூகம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# அதிபர் அறிக்கை

மு/மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழா அறிக்கையை இறையாசி வேண்டி, அதிபர் என்ற வகையில் உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

வன்னிப்பெரு நிலப்பரப்பில் முல்லை மாவட்டத்தின் மேற்குப்பகுதியில் துணுக்காய் கல்விவலயத்திலுள்ள 57 பாடசாலைகளில், முதல்தர 1AB பாடசாலையாக மு/மல்லாவி மத்திய கல்லூரி அமைந்துள்ளது. இக்கல்லூரியானது முதல் அதிபர் திரு.மு.ஆறுமுகம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டு, இவ்வருடம் ஐம்பதாவது வருட நிறைவுடன் பொன்விழாக்காணும் காலத்தில் இக் கல்லூரியில் கல்வி கற்று, ஆசிரியராகப் பணியாற்றி, இன்று அதிபராக பணி செய்யக்கிடைத்த வாய்ப்பிற்கு இறைவனுக்கு நன்றி கூறித் தொடர்கின்றேன்.

எமது கல்லூரி ஆரம்பத்தில் ஒரு சிறிய பாடசாலையாக இருந்து பல தடைகளையும், சவால்களையும், பல வகையான வளப்பற்றாக்குறைகளையும் சந்தித்து, பலரது முயற்சியின் வெளிப்பாடாக படிப்படியாக வளர்ந்து இன்றுவரை சாதித்துள்ள சாதனைகளின் வெற்றியின் பின் இன்று கல்லூரி மிளிர்ந்து நிற்கின்றது.

ஒவ்வொரு வளர்ச்சிப்படிகளிலும் பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் எடுத்த பெரும் முயற்சிகள், பயன்படுத்திய முகாமைத்துவ நுட்பங்கள், மிகச்சிறப்பாக அமைந்துள்ளன என்பது வெளிப்படையானது. எனக்கு முன் இங்கு பணியாற்றிய அதிபர்கள் தங்களது முழு முயற்சியையும், உடல் உழைப்பையும் வழங்கி அரும்பாடுபட்டுள்ளார்கள் என்பதை வெளிப்படையாகக் கூறுவதில் பெரு மகிழ்வடைகின்றேன். ஓவ்வொரு அதிபருடைய காலங்களையும், அவர்கள் ஆற்றிய அளப்பரிய சேவைகளையும் தனிப்பட்ட ரீதியில் விபரித்துக் கூறமுடியாத நிலையிலும் அதிபர் அமரர் செ.மயில்வாகனம் அவர்களுடைய காலத்தில் மாணவராகவும், அதிபர் த.சிவபாலு அவர்களின் காலத்தில் பழைய மாணவர் சங்க செயலாளராகவும், அதிபர் திரு.சி.சிவராஜா அவர்களின் காலத்தில் கல்லூரியில் ஆசிரியராகவும், அதிபர் திரு.சு.கலாதரன், திருமதி கோகிலவாணி தேவராஜா, திரு.கு.சத்தியபாலன் ஆகியோருடைய காலத்தில் மு/கரிப்பட்டமுறிப்பு அ.த.க பாடசாலை, மு/பாலிநகர் மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் அதிபராகவும் இருந்துள்ளேன். இக் காலப்பகுதியில் இவ் அதிபர்களோடு நெருங்கிப்பழகும் வாய்ப்பும் அவர்களின் அணுகு முறைகளும் அவர்களுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்கள், வாய்ப்புக்கள், பலங்கள், பலவீனங்கள் யாவற்றையும் அறிந்துள்ளேன். இவற்றை எனது காலத்தின் அனுபவங்களாக்கியது. எனது முகாமைத்துவத்துக்கு உதவியாக அமைந்துள்ளது.

மேலும், இக் கல்லூரியில் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் பலர் பல சாதனைகளைப் படைத்து மாணவர்களை உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்று, மாணவர் மத்தியில் நினைவைவிட்டு நீங்காத இடங்களைப் பிடித்து, வரலாற்றில் கால் பதித்துச் சென்றுள்ளனர். அவர்கள் வழிகாட்டலில் உருவான பலர் இன்று வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும், திணைக்களத் தலைவர்களாகவும், மேலும் பலர் அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை பெற்று தமக்கென ஒரு இடத்தைப் பிடித்து சேவையாற்றுகின்றார்கள். அத்துடன் எல்லா நாடுகளிலும் எல்லாத் துறைகளிலும் சிறப்பாகப் பணி செய்து பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார்கள். பல நாடுகளில் இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்காக ஒன்று கூடல்களை நடாத்துவதோடு பழைய மாணவர் சங்கக் கிளைகளை நிறுவி, இடப்பெயர்விற்கு முன் 2005 , 2006 காலப்பகுதியில் லண்டன் பழைய மாணவர் சங்க கிளையினர் பெருமளவு நிதியினை வழங்கி ஒன்றுகூடல்களை நடாத்தி கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுள்ளார்கள். அவர்களை நான் மனமாரப் பாராட்டுகின்றேன்.

2008 ஆம் ஆண்டு யூன் மாதம் தொடக்கம் கல்லூரியானது அனைத்துச் சொத்துக்களையும் இழந்து, இடம் பெயர்ந்து கிளி/ஸ்கந்தபுரம் இல: 1அ.த.க பாடசாலையிலும், பின்னர் கிளி/இராமநாபுரம் ம.வி இலும், அதன் பின்னர் மு/பாரதி வித்தியாலயம் றெட்பானாவிலும் இடம்பெயர்ந்த நிலையில் தனித்தும், சேர்த்தும், காலை நேர மாலை நேர பாடசாலைகளாகவும் இயங்கிய போது தங்களது உடைமைகளை இழந்து, உயிர் ஆபத்துக்களை பார்க்காது மாணவர்களின் கல்விக்காகத் தங்களை அர்ப்பணித்துச் சேவையாற்றிய பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் எல்லோரினதும் அர்ப்பணித்த சேவையைப் பாராட்டுகிறேன்.

இக்காலப்பகுதியில் பல இடப்பெயர்வுகள் நடைபெற்ற போது, கல்லூரியில் கல்வி கற்ற மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள், அவர்களின் உடன் பிறப்புக்கள், உறவுகள், பழைய மாணவர் சங்க உப செயலாளரான அமரர் பொன் றஞ்சன் அதிபர் அவர்கள், எமது கல்லூரியின் ஆசிரியர்கள், பணியாளர்களின் உடன்பிறப்புக்கள் பெற்றோர்கள், உறவினர்கள் போன்றோரை இழந்துள்ளனர். இக்காலப்பகுதியில் ஏற்பட்ட இழப்புக்கள் மறக்க முடியாத வடுக்களாக மனத்திரையில் பதித்துள்ளன. 2008, 2009 ஆகிய இடப்பெயர்வுக் காலப் பகுதியானது கல்லூரியின் வரலாற்றில் இருள் அடைந்த, உறங்கிக் கிடந்த மறக்க முடியாத காலங்களாகும்.

இடப்பெயர்வின் பின் மீள் குடியேற்றம் தொடங்கி 2009.11.27 திகதி மீண்டும் சொந்த இடத்தில் கல்லூரி கால் பதித்தது. இவ் வேளையில் யுத்தத்தால் சேதமடைந்திருந்த கட்டிடங்கள், இரண்டு மாடி கட்டிட வகுப்பறைகள், நூலகம் ஆகியவை 1.8 மில்லியன் ரூபாவில் திருத்தம் செய்யப்பட்டது. யுத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மன மகிழ்விற்காக Bank of life அமைப்பினால் மகிழ்ச்சி இல்லம் சிறப்பாக அமைக்கப்பட்டது. தற்போதைய வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.த.மேகநாதன் அவர்களின் ஆதரவும், ஆலோசனைகளும் நிறைவாகக் கிடைத்தன. 2010 ஆம் ஆண்டு ஐந்து பெரிய மண்டபங்கள் சுவர் மூலம் வகுப்பறைகளாகப் பிரித்து அடைக்கப்பட்டன.

வன்னிப் பெருநிலப்பரப்பின் கலாசார விழாவை எமது கல்லூரியில் நடாத்துவதற்கு மாகாணக்கல்வித் திணைகளத்திடம் முடிவெடுத்து, மைதானத்தில் சேதமடைந்திருந்த இந்திரவதனி கலையரங்கு ஒரு மில்லியன் ரூபாவில் புனரமைக்கப்பட்டு, கலாசாரவிழா சிறப்பாக நடைபெற்றது.

இவ் விழாவில் கௌரவ ஆளுநர் அவர்களால் பாடசாலைக்கு வழங்கப்பட்ட மூன்று இலட்சம் ரூபாவில் அலுவலகம், நவீன முகாமைத்துவத்திற்கு ஏற்றதாகப் புனரமைக்கப்பட்டது.

எமது கல்லூரியின் நூலகஉதவியாளர் திருமதி றுஜீனா இலட்சுமணநாதன் (பழைய மாணவி) அவர்கள் நீண்டகாலமாக சிறப்பாகச் சேவையாற்றி நூலக வளர்ச்சிக்காய் அரும்பாடுபட்டுள்ளார். இவர் முகாமைத்துவ உதவியாளராக துணுக்காய்க் கல்வி வலயம் சென்றபின் நூல்கப் பொறுப்பாசிரியராக திருமதி. ராஜி துரேஸ்ராம் அவர்கள் சிறப்பாக செயற்பட்டு வருகின்றார்.

வடமாகாண சிறந்த விளையாட்டு வீர, வீராங்கனைகளிற்கான 15 நாள்கள் வதிவிடப் பயிற்சி முகாம் எமது கல்லூரி மைதானத்தில் கலாநிதி நா.எதிர்வீரசிங்கம் அவர்களின் ஆலோசனையின் பேரில் கௌரவ ஆளுநர் அவர்களினால் 3.8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டது. இந் நிதியை உடற்கல்விப் பிரிவு மாகாணக்கல்வித் திணைக்களம் அனைத்து விளையாட்டு உபகரணங்கள், கணினிகள் தங்குமிட வசதிக்குரிய பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு சிறப்பாக பயிற்சி நடைபெற்றது. இப் பயிற்சி முகாமிற்கு இலங்கையின் சிறந்த ஓட்ட வீராங்கனையும் சர்வதேச ரீதியில் வெற்றி பெற்றவருமான திருமதி சுசந்திகா அவர்களும் வருகை தந்து பயிற்சி வழங்கியது சிறப்பான விடயமாகும். இவ் உபகரணங்கள் பயன்படுத்திய பின்னர், கல்லூரிக்கு வழங்கப்பட்டதுடன் உள்ளக விளையாட்டு அரங்கும் அமைக்கப்பட்டு, மாணவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இப்பயிற்சி முகாம் நடைபெறுவதற்கு மிக அவசியமாகத் தேவைப்பட்ட மின்சார வசதியை மல்லாவி நகரில் இருந்து கல்லூரி வரையான பகுதிக்கு கல்லூரியின் பழைய மாணவரான மின் பொறியியலாளர் திரு. அமலேந்திரன் அவர்களின் கடும்முயற்சியால் மூன்று நாட்களில் எமக்குக் கிடைக்கச் செய்தமை பாராட்டிற்குரியது.

இடப்பெயர்வின் பின்னர் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு நோட்டறிக்கழகம், "மல்லாவி மத்திய கல்லூரிக்காக நாங்கள்" என்ற எமது பழைய மாணவர்களின் அமைப்பினர், மல்லாவிப் பங்குத்தந்தை அருட்திரு தயாகரன் அடிகளார், கியூடெக் நிறுவனத்தினர் ஆகியவர்களின் உதவி கிடைத்து வருவது இப்பிள்ளைகளுக்கு பெரும் ஆறுதலை அளித்து வருகின்றது.

கௌரவ ஆளுநர் அவர்களும், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச அவர்களும், பாடசாலை மாணவர்களுக்கான சப்பாத்து, கற்றல் உபகரணங்களை வழங்கி வருவது பேருதவியாக

அமைந்து வருகின்றது. மேலும், "மல்லாவி மத்திய கல்லூரிக்காக நாங்கள்" என்ற அமைப்பினர் மிகப்பெறுமதியான புத்தகங்களையும் வழங்கி, நூலக அபிவிருத்திக்கு உதவியுள்ளனர்.

எமது கல்லூரி மைதானத்தில் வடமாகாண விளையாட்டுத் துறையினரால் கூடைப் பந்து மைதானம் 1.5 மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சி கட்டிடங்கள் திணைக்களம் ஊடாக அமைக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு, விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகளிற்கு உரிய முறையில் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள் நடைபெறுவதற்குரிய விசேட கல்விக்கூடம் 2.8 மில்லியன் ரூபாவில் மாகாணக்கல்வித் திணைக்களத்தால் அமைத்துத் தரப்பட்டுள்ளமை இம்மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

எமது கல்லூரி இசுறு பாடசாலையாக முன்மொழியப்பட்டு அதிபர், ஆசிரியர்களுக்கு அதற்குரிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆரம்பக்கல்வி 1 - 5 தனியாகப் பிரிக்கப்பட்டு வேறாக இயங்குகின்றது. அத்துடன் 1000 பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உள்வாங்கப்பட்டு, ஒப்பந்தம் செய்யப்பட்டு எதிர்காலத்தில் இத்திட்டத்தின் கீழ் எமது கல்லூரி இடைநிலைப் பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட இருப்பது இப்பிரதேச மாணவர்களின் கல்விக்கு அரும்பெருங்கொடையாகும்.

கல்லூரி வளாகத்தில் இருந்த பதுங்கு குழிகள் மற்றும், செடிகள் அகற்றப்பட்டு துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம், வளாகச் சுற்றுவேலி என்பவை ஒரு மில்லியன் பெறுமதியில் மனித வலுமூலம் UNOPS நிறுவனத்தினால் செய்யப்பட்டது.

UNICEF நிறுவனத்தினால் சுகாதார வசதிகளுக்காக குழாய்நீர் விநியோகம், நீர்ப்பம்பி, நீர்ப்பம்பி அறை, கிணறு திருத்தம், மலசலகூடத் திருத்தம் என்பவை 0.5 மில்லியன் ரூபா செலவில் செய்யப்பட்டதுடன் மாணவர்கள், ஆசிரியர்களுக்கான மாணவர்கள், ஆசிரியர்களுக்கான தளபாடங்கள், மற்றும் மிதிவெடிகள் விழிப்புணர்வு செயற்பாடு, அனர்த்தப் பாதுகாப்பு, மகிழ்வூட்டற் செயற்பாடுகள் என்பவற்றுக்காக தம் நிதியீட்டங்களை வழங்கித் தொடர்ந்து உதவி வருவது இடப்பெயர்வால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு புத்துணர்வையும் மனமகிழ்வையும் ஏற்படுத்துவதாக உள்ளது.

இவ்வருடம் ஆங்கில மொழிமூலம் தரம் 6 வகுப்புகளிற்கு விஞ்ஞானம், கணிதம், ஆகிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, ஆங்கில மொழிமூல கணித ஆசிரியர் நியமிக்கப்பட்டு, பாடங்கள் நடைபெறுகின்றன.

இடம்பெயர்வின் பின்னர் கல்லூரியானது அனைத்து செயற்பாடுகளிலும் தளர்வில்லாது முன்னேறிச் செல்வதற்கு தொடர்ந்து துணைநிற்கின்ற அனைத்து ஆளணியினரையும் பாராட்டுவதோடு, வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தந்து, பல வசதிக் குறைபாகளுக்கு மத்தியில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களையும், பணியாளர்களையும் க.பொ.த உயர்தரம், க.பொ.த. சாதாரண தரம், தரம் 9 ஆகிய வகுப்புக்களிற்கு இரவுநேர வகுப்புக்கள், மேலதிக வகுப்புக்கள் மூலம் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதோடு, இணைபாடவிதானச் செயற்பாடுகளிற்கு நிறைவாக வழிப்படுத்தி, பல வெற்றிகளைப் பெற்று தந்த ஆசிரியர்களின் செயற்பாடுகளும் மிக உயர்வானதாகும்.

மேலும், ஆசிரியர்களது அயராத உழைப்பினால் வெற்றிகளைப்பெற்ற மாணவர்களை நாம் பாராட்டுகின்றோம். தமிழ் மொழிக் கலைத்திறன் போட்டியில் இலக்கியத் திறனாய்வில் மாகாண மட்டத்தில் முதலாம் இடம் பெற்று, தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தை செல்வன் ஜெ.ஜனாத்தகன் பெற்றுள்ளார். 2010 உ/த பரீட்சையில் கலைப்பிரிவில் 3A சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் செல்வி இ.தேவனா முதல் நிலையையும், வர்த்தகப் பிரிவில் செல்வன் சி.சிந்துஜன் முதலாம் நிலையையும், 2010 க.பொ.த சாதாரண பரீட்சையில் செல்வி சு.மதுசியா 8A, B செல்வி இ.பிரசன்னா 7A,2B சித்தியும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

2010 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் உயர்ந்த பெறுபேற்றினைப் பெற்று 16 மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றுள்ளனர். பலர் கல்வியியற் கல்லூரி வாய்ப்பினையும் பெற்றுள்ளார்கள்.

மேலும், இவ்வருட விளையாட்டுப் போட்டிகளில் மாகாணத்தில் ஐந்து மாணவர்கள் வெற்றிபெற்றுள்ளனர். செல்வி டிலக்சனா அவர்கள் மூன்று வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று சாதனை

படைத்துள்ளார். ஆங்கில தினப் போட்டியில் குழு இசையில் இரண்டு பிரிவினர் மாகாண மட்டம் வரை வெற்றி பெற்றுச் சென்றுள்ளனர். விஞ்ஞானப்பிரிவில் இரண்டு மாணவர்களும், கணிதப் பிரிவில் 4 மாணவர்களும் வெற்றி பெற்று மாகாண மட்டம் வரை சென்றுள்ளனர்.

2011 ஆம் ஆண்டு ஆசிரியர் தின விளையாட்டு போட்டியில் எமது கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் திரு. செ.செல்வச்சந்திரன் அவர்கள் 1தங்கம், 2வெள்ளி, 1 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று சாதனைபடைத்துள்ளார். இவ்வாண்டு ஆசிரியர் தினத்தில் துணுக்காய்க் கல்வி வலயத்தில் 301-1000 மாணவர்கள் தொகையடிப்படையில் சிறந்த அதிபர் 'பிரதீபா – பிரபா' விருதை அலரி மாளிகைக்கு சென்று பெற்றுக்கொள்வதற்கு, கல்லூரி வளர்ச்சிக்காக உழைத்த அனைவரையும் பாராட்டுகிறேன்.

தொடர்ந்து எமது கல்லூரியின் தேவைகளை நிறைவுசெய்வதற்காக உதவி வரும் UNICEF, NECORD, UNOPS, ஆகிய பொது நிறுவனங்களுக்கும் வடக்கு மாகாண ஆளுநர், மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக்கல்வி அலுவலகம், முல்லைத்தீவுக் கச்சேரி, துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு, பிரதேச சபை துணுக்காய், மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், "மல்லாவி மத்திய கல்லூரிக்காக நாங்கள்" அமைப்பு, வெளிநாடுகளின் பழைய மாணவர் சங்கக் கிளைகள், மற்றும் இந்திரவதனி கலையரங்கு அமைத்த இளைப்பாறிய அதிபர் திரு. செ.குமாரசாமி , முன் மதில் அமைத்துத் தந்த அமரர் திரு.வே.பரமசாமி குடும்பத்தினர் மற்றும் பல உதவிகளை வழங்கி வரும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் யாவரையும் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கின்றோம்.

2009 ஆம் ஆண்டு கல்லூரி ஆரம்பித்த பின்னர் இராணுவத்தினரும், பொலிஸாரும் பல வழிகளிலும் உதவியுள்ளனர்.

தற்போது கல்லூரியில் மாணவர் தொகைக்கு ஏற்ப பாடங்களுக்கான ஆசிரியர்கள் ஓரளவு இருந்துள்ளபோதிலும், க.பொ.த் உயர்தரம், வர்த்தகம், வரலாறு, தரம் 6,7 ஆங்கில மொழிக்கல்வி, விஞ்ஞானம், றோமன் கத்தோலிக்கம் ஆகிய பாடங்களிற்குரிய ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளது.

அதிகரித்து வரும் மாணவர் தொகைக்கு ஏற்ப தற்போது எமது கல்லூரிக்கு க.பொ.த உயர்தர உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல், ஆய்வுகூடங்கள், நூலகம், மைதானப் புனரமைப்பு, ஆசிரியர்கள் விடுதி புனரமைப்பு, புதிய விடுதிகள், மாணவர்கள் விடுதி என்பன அவசரத் தேவைகளாக உள்ளன.

ஆரம்பித்த காலம் தொடக்கம் இன்றுவரை காலத்துக்கு காலம் சேவையாற்றிய அதிபர், ஆசிரியர்களின் வழிகாட்டலில் மாணவர்கள் சாதனைபடைத்துள்ளனர். இவற்றுக்கெல்லாம் துணைபுரிந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறி தொடர்ந்து சேவையாற்றுகின்றவர்கள், வழிநடத்துகின்றவர்கள், பயன்பெறுகின்றவர்கள் அனைவருக்கும் இறைவன் தாமே அன்புக்கரம் கொடுத்து உதவ வேண்டும் என்று வேண்டி எனது அதிபர் அறிக்கையினை நிறைவுசெய்கின்றேன்.

நன்றி.

# எமது கல்லூரியின் அதிபர்கள் வரிசையில்...




திரு.சி.நடராசா
1961.02.10–1962.01.31




திரு.க.பெரியதம்பி
1962.02.01 – 1964.01.31




திரு.மு.ஆறுமுகம்
1964.02.01 – 1966.12.31




திரு.செ மயில்வாகனம்
1967.01.01 – 1983.12.31




திரு.தா.சிவசம்பு
1984.01.01 – 1984.03.04




திரு.த.சிவபாலு
1984.03.05 – 1989.09.10

# எமது கல்லூரியின் அதிபர்கள் வரிசையில்...






























# எமது கல்லூரியின் அதிபர்கள் வரிசையில்...






























# கல்லூரியின் வரலாறு

"வன்னி வளநாடு வளர்சோலை நாடு
வரியம் மூன்று விளைவுள்ள நாடு
கன்னி நாடு கதிர்சோலை நாடு
காராளர் வாழும் கன்னியர் நாடு"

முல்லையும், மருதமும் ஒருங்கே சேர்ந்து குளங்களும், ஆறுகளும் என்றும் பசுமையைக் கொடுக்கும் வன்னி நிலத்தில் பண்டைய மரபுவழித் தோன்றல்கள் வாழ்ந்து வந்திருக்கின்றனர். எழில் கொஞ்சும் வன்னியில் வளங்களோ ஏராளம். வன்னியின் பழங்குடியினர்கள் வாழ்ந்த பிரதேசங்களில் துணுக்காய் பிரதேசமும் ஒன்று. ஆங்கிலேயர் காலத்தில் துணுக்காய், கோட்டைகட்டியகுளம், தென்னியன்குளம், ஆலங்குளம் போன்ற பகுதிகளில் மக்கள் வாழ்ந்ததாகவும் நாளடைவில் அவர்கள் வாழ்வாதாரத்தைத் தேடிப் பரந்து வாழ்ந்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன. துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குள் 19 குளங்கள் காணப்படுகின்றன. குளங்களை அண்டிய பகுதிகளில் மக்கள் தமது குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்து வந்துள்ளனர். வேட்டைச் சமூகத்தில் இருந்து பிரதான உழவுத் தொழிலையும் மேற்கொண்டுள்ளனர். பேய் வழிபாட்டின் வளர்ச்சியாக சந்நியாசி, காளி, வைரவர் கோயில்களை இன்றும் காணக்கூடியதாக உள்ளது. வவுனிக்குளம் சிவாலயம், கோட்டைகட்டியகுளம் சிவலாயம் பழம்பெரும் வரலாற்றைக் கொண்டுள்ள சிவாலயங்கள் ஆகும். ஆங்கிலேயர் காலத்தில் இப்பிரதேசத்தில் ஓரிரு பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டாலும் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கபட்ட பிற்பாடு பல பாடசாலைகள் உருவாகின. அந்த வகையில் இன்று துணுக்காய் பிரதேசத்தில் 19 பாடசாலைகள் உள்ளன. அதில் ஒன்று தான் மல்லாவி மத்தியகல்லூரி.

இடப்பெயர்வுகள், யுத்த கொடூரங்களில் எமது உடமைகளை இழந்தோம், உயிர்களை இழந்தோம், உடல் அவையங்களை இழந்தோம், கல்வியை மட்டும் எம்மோடு சுமந்துகொண்டு முள்ளிவாய்க்காலில் இருந்து முட்கம்பி வேலிவரை சென்று மீண்டும் வந்திருக்கின்றோம். அந்த கல்வியை தந்த கல்லூரியின் வரலாற்றை எழுதுவதற்கு கல்லூரியில் ஆவணங்கள் ஏதும் இல்லை இருந்த போதும் கல்லூரியை உருவாக்கிய தலைமுறையினர் இருப்பதனால் அவர்களிடம் கேட்டு பெற்றுகொண்ட தகவல்களுடனும் "வரலாற்று பாதையில்" என்ற நூலில் இருந்து எடுத்து கொண்ட தகவல்களுடனும் தற்போதைய அதிபர், ஆசிரியர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களையும் சேர்த்து கல்லூரியின் வரலாறு எழுதப்படுகின்றது.

பகுதி -I

செவி வழியாகக் கேட்கப்பட்ட வரலாறு

செல்லமுத்தாச்சி என்று செல்லமாக அழைக்கப்படும் அபிராமி அம்மாவின் மகன் கார்த்திகேசு (சைவம்) அவர்களை சந்தித்து பாடசாலை பற்றிக் கேட்ட போது புன்னகை பூத்த முகத்துடன் தான் செய்து கொண்ட பணி பற்றி மிகவும் சுவாரசியமாக வரலாற்றைக் கூறி முடித்தார். இவர் கூறிய வரலாற்றுத் தகவல்களைச் சுருக்கமாக கீழே தருகின்றேன்.

மல்லாவிப் பகுதியில் பழைய குடியிருப்பாளர் ஆகிய நாம் எமது பிள்ளைகளை அணிஞ்சியன் குளம் பாடசாலைக்கு கல்வி கற்பதற்காக அனுப்பி வந்தோம். பாதைகள் இருமருங்கிலும் அடர்ந்த காடு சிறிய வீதி ஊடாகவே பிள்ளைகள் நடந்து செல்வார்கள். இடையிடையே காட்டு விலங்குகளின் தொந்தரவுகளும் இருந்து வந்தது. இதன் காரணமாக எமது பிள்ளைகள் பாடசாலைக்கு உரிய நேரத்திற்குச் செல்வது குறைவாக இருந்தது. நேரம் பிந்திப் பாடசாலைக்குச் சென்ற காரணத்தினாலும் ஏதோ குழப்படி செய்து விட்டான் என்றும் எனது மூத்த மகன் செல்வம், ஆசிரியரால் தண்டிக்கப்பட்டான். தந்தையாகிய என்னையும் அழைத்து "உனது மகனுக்குப் படிப்பு சரிவராது வீட்டை கூட்டிக்கொண்டு போ" என்று அந்த ஆசிரியை கூறிவிட்டார். உடனயே மகனை கூட்டிக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டேன். எனக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. இனிமேல் அந்தப் பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்புவதில்லை என முடிவுசெய்தேன்.

மல்லாவி பகுதியிலும் ஒரு பாடசாலை அமைந்தால் என்ன? ஏன் எமது பிள்ளைகள் தூர இடம் போய்ப் படிக்க வேண்டும்? என்ற எண்ணம் அலை மோதிக் கொண்டிருந்தது. அன்றிருந்த DRO, வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர்களைச் சென்று சந்தித்தேன். அவர்களின் ஆலோசனையைக் கேட்டகொண்டேன். கடவுளை வேண்டினேன் அம்மாவிடமும் விடையத்தைக் கூறினேன். அம்மா தனது வளவில் கொட்டிலைப் போடும்படி கூறினார். சிறிய கொட்டில் ஒன்றை அமைத்தேன். எனது துணைவியாரின் உறவினரான சிவசக்தியை மீசாலையில் போய்ச் சந்தித்து தகவலைச் சொன்னேன். கொட்டில் பள்ளிக்கூடத்துக்குப் படிப்பிக்க வர வேண்டும் என கேட்டுக்கொண்டேன். அவரும் சம்மதித்தார். 26.11.1959 ஆம் ஆண்டு கொக்காவில் வீதி, ஆலங்குளம், மல்லாவி போன்ற கிராமங்களில் இருந்து பிள்ளைகளை அழைத்து வந்தோம். வந்த பிள்ளைகள் 09 பேர் மாத்திரமே என்றாலும் கல்வி ஆரம்பிக்கப்பட்டது என்றார்.

பாடசாலை ஆரம்பித்ததற்கும் கொலனித் திட்டம் கொடுக்கப்பட்டதற்கும் சரியாக இருந்தது. எமது கொட்டில் பள்ளிக்கூடத்துக்கு கொலனித் திட்டத்தின் கீழ் யாழ்மாவட்டத்தில் இருந்து வந்த மக்களும் தமது பிள்ளைகளை அனுப்பினார்கள். மாணவர் தொகை அதிகரித்தது. அன்றிருந்த

பாராளுமன்ற உறுப்பினர்களைச் சென்று சந்தித்து மாணவர் தொகை, அயற் பாடசாலைகளின் தூரம் என்பவற்றை காரணம் காட்டி அரசிடம் பதிவு செய்யும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தோம். அரசிடம் பதிவு செய்வதற்காகப் பாடசாலைக்கு "கணேச வித்தியாலயம்" என்ற பெயரையும் இட்டிருந்தோம். பாராளுமன்ற உறுப்பினர் திருவாளர் நவரத்தினம் அவர்கள் தாம் வந்து பார்வையிட்ட பின்னரே பதில் கூறுவதாகச் சொன்னார். புளியடிக்கொட்டிலைப் பார்த்தால் அரசு அனுமதி தரப்போவதில்லை என்பது எமக்குத் தெரியும். அதனால் தற்போது பாடசாலை அமைந்திருக்கும் காணி, காணி உரிமையாளருக்கு (பெயர் ஞாபகம் இல்லை) வழங்கப்பட்ட போதும் அவர் தனது ஊரில் இருந்து இங்கு வரவில்லை அதனால் அக்காணி வெற்றுக்காணியாக இருந்தது. அன்றிருந்த DRO வின் வேண்டுதலின் பெயரில் அந்த காணியில் 20 x 40 அடி கொண்ட கொட்டிலை இக் கிராம வாழ் மக்கள் அனைவரும் சேர்த்து அமைத்துக் கொண்டோம். பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் வந்து பார்வையிட்டார். பாடசாலை அமைவதற்கான சூழல் அங்கு காணப்பட்டதால் அரசிடம் பதிவதற்கான அனுமதியும் கிடைத்தது. 10.02.1961 ஆம் ஆண்டு பாடசாலையை அரசு பொறுப்பெடுப்பதாகக் கூறினார்.

தொடர்ந்து முதல் ஆசிரியை சிவசக்தி சுந்தரமூர்த்தி அவர்களை 11.02.2011 அன்று மீசாலையில் அவரது இல்லத்தில் சென்று சந்தித்தேன். அவர் கூறிய விடயங்களை மிகவும் சுருக்கமாகக் கூறலாம்.

நான் கல்வி கற்றுவிட்டு வீட்டில் இருந்தேன். சைவம் அண்ணர் அவர்கள் எனது உறவுக்காரர். அவர் என்னை மல்லாவியில் வந்து படிப்பிக்குமாறு கேட்டிருந்தார். எனது பெற்றோரின் சம்மதத்துடன் மல்லாவிக்குச் சென்றேன். காட்டுவழி பயமாக இருந்தது. வாகனம் ஏதும் இல்லை. மாங்குளம் வரை ரயிலில் வரலாம் மாங்குளத்திலிருந்து ஒரு தட்டிவான் ஓடும் அதனை விட்டால் கால்நடை. ஒரு மாதிரி மல்லாவி நோக்கி பயணித்தேன். வீடுகளோ இல்லை 10 மைல் தூரத்துக்கு ஓரிரு வீடுகள் தான் இருந்தது. பயம் ஒரு புறம் வேலை செய்யும் ஆர்வம் மறுபுறம் மல்லாவி போய்ச் சேர்ந்தேன். 26.11.1959 அன்று 9 மாணவர்கள் பாடசாலைக்கு வந்திருந்தனர். 3 வயதில் இருந்து மாணவர்கள் வந்திருந்தார்கள். முதல் பதிவு செய்த மாணவி செ.குலேஸ்வரி ஆவர். 26.11.1959 வித்தியாதானம் ஆரம்பமானது. தொடர்ந்து பாடசாலை ஆரம்பித்ததை அறிந்து நடராசா, சிவபாக்கியம், பரமேஸ்வரி, சுந்தரமூர்த்தி போன்றவர்கள் படிப் படியாக வந்து சேர்ந்தனர். நடராசா அவர்கள் அதிபரானார். அரசு பாடசாலையைப் பொறுப்பெடுத்துக்கொண்ட நாளன்றே எமக்கு (10.02.1961) நிரந்தர நியமனமும் கிடைத்தது என்றார்.

## பகுதி - II

### வரலாற்றுப் பாதையில்... இருந்து

வளங்கொழிக்கும் வன்னி வள நாட்டின் முல்லை மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் மல்லாவி என்னும் பதி உண்டு. பண்டாரவன்னியனின் வழித்தோன்றல்கள் வாழ்ந்த இடம். வீரத்திற்கு தலைகுனியா மண். அம் மண்ணிலே கல்விக்கு ஏங்கித்தவித்த மக்களின் ஏக்கத்தை போக்கவென 26.11.1959 இல் திருமதி வேலுப்பிள்ளை செல்வமுத்துவின் காணியில் கல்விக்கான அத்திவாரம் இடப்பட்டது. புளிய மரத்தடியில் சிறு கொண்டிலில் வித்தியாதானம் ஆரம்பமானது. ஆரம்பத்தில் ஒன்பது மாணவர்களைக் கொண்டியங்கிய கல்விக்கூடத்தை அரசாங்கத்திடம் பதிவு செய்யும் நோக்கமுடன் விண்ணப்பம் செய்யப்பட்டது.

திரு.சி.நடராசா அவர்களின் சேவை மனப்பாங்கினாலும் மக்களின் ஊக்கத்தினாலும் 10.02.1961 இல் அரசாங்கம் இப் பாடசாலையைப் பொறுப்பேற்றுக் கொண்டது. அரசு பொறுப்பேற்றுக் கொண்ட போது திரு.சி.நடராசா அவர்களே அதிபராக செயற்பட்டார். இவரது சேவைக்காலம் குறுகிய சேவையே ஆனாலும் நீண்ட கால பயனுறுதிக்கான அடித்தளமாக அமைந்தது.

திருநெல்வேலியைச் சேர்ந்தவரும் வர்த்தகரும் ஆகிய திரு நல்லதம்பி அவர்கள் மல்லாவியிலே நடுத்தர வகுப்பு திட்டத்தின் கீழ், அரசாங்கத்திடம் இருந்து பெற்ற காணியில் ஐந்து ஏக்கரை நிறைந்த மனத்துடன் பாடசாலைக்கென இலவசமாக வழங்கினார். தமது பிள்ளைகளின் கல்வியை பற்றி சிந்தித்துக் கொண்டிருந்த இக்கிராம வாழ் மக்கள் ஒன்று சேர்ந்து அன்பளிப்பாகப் பெறப்பட்ட காணியை சிரமதானம் மூலம் துப்புரவுசெய்து தற்காலிகக்கட்டடம் ஒன்றை அமைத்தனர். பழைய இடத்தில் இருந்த பாடசாலை இன்று உள்ள இதே இடத்திற்கு இட மாற்றம் செய்யப்பட்டுப் பாடசாலை வடிவம் பெற்றதோடு இன்று தலை நிமிர்ந்து நிற்கும் கல்லூரியாகப் பரிணமித்தது. அக்காலப் பகுதியில் திரு.க.பெரியதம்பி அவர்கள் அதிபராக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

புதிய பாடசாலைக் காணியில் 08.10.1964 இல் நில அபிவிருத்தி திணைக்களத்தினரது ஆதரவில் பாடசாலை மண்டபம் ஒன்றும், கிணறொன்றும், மலசல கூடம் ஒன்றும், ஆசிரியர் விடுதிகள் இரண்டும், அதிபர் விடுதி ஒன்றும் அமைக்கப்பட்டது. வித்தியாதரசி திரு.க.கனகசபாபதி அவர்கள் இதனை பொறுப்பேற்று கட்டி முடித்து பாடசாலை அதிபரிடம் நிரந்தர கட்டடங்கள் ஒப்படைக்கப்பட்டன. வளர்ச்சிப் படியின் முதல் படியை அடைந்துவிட்ட மகிழ்ச்சியில் இப் பாடசாலை திகழ்ந்தது. தொடர்ந்து கல்விப் பணியின் விரிவுபடுத்தலினால் 1964 ஆம் ஆண்டில் 6 ஆம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து

1965 ஆம் ஆண்டில் 7 ஆம் வகுப்பு ஆரம்பமானது. இவ் வளர்ச்சிக்கு ஊன்று கோலாக செயற்பட்டவர் அன்று அதிபராக இருந்த பண்டிதர் மு.ஆறுமுகம் என்னும் பெருந்தகை ஆவார். இவரின் காலப்பகுதியில் வகுப்புக்களின் வளர்ச்சியும் மாணவர்களின் கற்றல் ஈடுபாடும் உயர்ந்திருந்தது. இவரது அயராத உழைப்பால் பல்வேறு கல்வித்திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

தொடர்ந்து வந்த காலப்பகுதியில் தான் இப்பாடசாலையும் கிராம வாழ் மக்களும் பெரும் பேற்றினைப் பெற்றனர். தன்னலமற்ற சேவையாளனும் பண்பாளனுமான அமரர் செ.மயில்வாகனம் அவர்கள் கல்விளானில் இருந்து மாற்றலாகி இங்கு வந்து தனது சேவைக்கென கால் பதித்த காலம். இக்காலம் கல்லூரியின் பொற்காலம். திரு.செ.மயில்வாகனம் அவர்கள் பெரியவர்களை நாடி இப்பாடசாலைக்கு உரமூட்ட உதவிக்கரங்கள் எழ வேண்டும் என வேண்டினார். 17.05.1969 இல் காணி ஆணையாளர் திணைக்களம் இப்பாடசாலையின் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளத் தொடங்கியது. இந் நேரத்தில் பாடசாலையின், பெற்றார் ஆசிரியர் சங்க செயலாளர் திரு.சு.தியாகராஜா அவர்கள் தனது வயற் காணியை திரு.சு.இராமையா அவர்களுக்கு இலவசமாக வழங்கிவிட்டு பாடசாலைக்கு அருகிலுள்ள திரு.சு.இராமையா அவர்களின் காணியைப் பெற்றுக்கொண்டார். இவரது மனப் பூர்வமான நன்கொடையாக அக்காணியைப் பாடசாலைக் கென அன்பளிப்புச் செய்தார். அத்துடன் ஏனைய வகுப்புத் திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட காணிகளும் பாடசாலையின் நற்பயனுக்கெனப் பெறப்பட்டது.

பெற்றுக்கொண்ட காணிகள் நில அபிவிருத்தி திணைக்களத்தினரால் காடு வெட்டித் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. திணைக் களத்தினருடன் இணைந்து பொதுமக்களின் பங்களிப்பும் கணிசமாக இருந்தது. காடுகள் வெட்டி திருத்தப்பட்ட இடங்களில் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

05.01.1971இல் கல்வியமைச்சின்தீர்மானத்திற்கு அமைய 8ஆம் தரம் ஆரம்பிக்கப்பட்டது. 20.01.1972 இல் 9 ஆம் தரமும் ஆரம்பிக்கப்பட்டது. புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டமையால் இடப்பற்றாக் குறையினை சந்தித்தது இப்பாடசாலை. இக்குறையை நிவர்த்திசெய்யும் முகமாக 20.01.1972 இல் புதிதாக அமைக்கப்பட்ட கட்டிடங்களை அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து பொறுப்பேற்று 26.01.1972 தொடக்கம் 01 ஆம், 02ஆம் மண்டபங்களில் வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

01.01.1973 இல் அரசாங்கத்தின் அனுமதியுடன் 10 ஆம் தரம் (க.பொ.த சா/த) ஆரம்பிக்கப்பட்டது. 1973 மார்கழியில் முதன்முறையாக க.பொ.த சா/த பரீட்சைக்கு 15 மாணவர்கள் தோற்றினார்கள். இவ் வளர்ச்சிக்கு உறுதுணையாக செயற்பட்டவர் அன்றிருந்த வட்டாரக்கல்வி அதிகாரி திரு.த.இராமலிங்கம் என்பவராவர்.

அரசினர் தமிழ்க்கலைவன் பாடசாலைக்கீதம்
வாழியவே எங்கள் பாடசாலை — அன்னை
மல்லாவி அரசினர் பாடசாலை
சூழுகவே பலர் உள்ளத்திலே ஞான
சோதி கொடுத்திடும் பாடசாலை
வாழியவே

விஞ்ஞான தத்துவம் மெஞ்ஞான பொக்கிசம்
எஞ்ஞான்றும் தந்திடும் எம் தாயே
அஞ்ஞானம் நீங்கிட அறிவுக்கலைகளை
எஞ்ஞான்றும் தந்திடும் எம் தாயே.
வாழியவே

பூகோள சாத்திரம் வரலாறு சித்திரம்
போற்றும் நல்லாங்கிலம் தருவாயே
பாகோவெனும் பாடல் பேச்சும் நடனமும்
பார்மேல் எமக்கென்றும் தருவாயே
வாழியவே

சமயக்கலையினால் இறைவன்பாதம் தொழும்
சற்சனராக்குவதும் நின் பணியே
எமை நல்வழியிலே ஏற்றி பணிந்திடும்
நற்றாயிவைகளும் நின்பணியே.

வாழியவே

(இக்கீதம் முழுமையாகக் கிடைக்கவில்லை)

21.01.1974 இல் நிலஅபிவிருத்தி திணைக்களத்தினரால் அமைக்கப்பட்ட கட்டடங்களாவன.

| | | |
|---|---|---|
| 1. | பாடசாலைக்கட்டிடங்கள் | - 03 |
| 2. | மலசலகூடங்கள் | - 02 |
| 3. | தண்ணீர்த் தொட்டி | - 01 |
| 4. | சலகூடம் | - 01 |
| 5. | நிர்வாகப் பகுதி கட்டிடம் | - 01 |
| 6. | அதிபர் விடுதி | - 01 |
| 7. | ஆசிரியர் விடுதி | - 01 |
| 8. | 8அறை கொண்ட தனிஆசிரியர்விடுதி | 01 |
| 9. | காணி இருபத்தைந்து ஏக்கர் | |

என்பவற்றை வட்டாரக்கல்வி அதிகாரியாக இருந்த திரு.சி.இ.மயில்வாகனம் என்பவர் பொறுப் பேற்று அதிபர் திரு.செ.மயில்வாகனம் அவர்களிடம் ஒப்படைத்தார். 1974 ஆம் ஆண்டில் இப்பாடசாலையில் பரீட்சை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு பரீட்சைகள் நடைபெற்றன.

1977 இல் வகுப்பறைகள் ஒன்றிணைந்த பாடத்திட்டத்திற்கேற்ப ஐந்தாம் ஆறாம் மண்டபங்கள் வரையறுக்கப்பட்டு பிரிக்கப்பட்டு ஒன்றிணைந்த பாடத்திட்டப்படி வகுப்புக்கள் நடத்தப்பட்டன. ஆனாலும் மாணவர்களின் குடிநீர்ப் பிரச்சினை தாண்டவமாடியதால் அப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்காக 15.09.1978 இல் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினரால் தண்ணீர்க்குழாய்கள் பொருத்தப்பட்டு குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

28.02.1978 வரை இப்பாடசாலை யாழ்ப்பாணக்கல்வித் திணைக்களத்தின் கீழ் செயற்பட்டு வந்தது. பின்னர் வவுனியா கல்வித் திணைக்கள நிர்வாகத்தின் கீழ் இப்பாடசாலை மாற்றம் செய்யப்பட்டது.

க.பொ.த சாதாரண தரத்துடன் இயங்கிவந்த இப்பாடசாலை 06.06.1979 இல் க.பொ.த உயர்தர கலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. அன்றைய காலப்பகுதியில் வட்டாரக்கல்வி அதிகாரியாக இருந்த திரு.மு.சிவானந்தம் அவர்களால் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. வ்குப்புக்களின் வளர்ச்சி ஒருபுறமிருக்க விஞ்ஞான ஆய்வு கூடம் அமைக்கும் பணியில் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 1981 இல் கட்டடம் ஒப்படைக்கப்பட்டது. இவ் ஆய்வுகூடம் பாடசாலையின் முதல் மாணவியான செல்வி செ.குலேஸ்வரி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இப்பாடசாலை யாழ் கல்வித் திணைக்களத்திற்கு பின்னர் வவுனியா கல்வித் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக்கொண்டு இருந்தது. 15.02.1981 இல் முல்லைத்தீவு கல்வித் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் பாடசாலை மாற்றப்பட்டது. 28.10.1982 வரை மல்லாவி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை என்ற பெயருடன் இயங்கிவந்த இந்தப் பாடசாலை 29.10.1982 இல் தரம் உயர்த்தப்பட்டு மு/மல்லாவி மகாவித்தியாலயம் எனப் பெயர் மாற்றப்பட்டது. பிரம்மஸ்ரீ வீரமணிஐயரைக் கொண்டு கீதம் இயற்றப்பட்டு பாடப்பட்டு வந்தது.

## மல்லாவி மகாவித்தியாலயக் கீதம்

மல்லாவி மகாவித்தியாலயம் - அன்னை
பல்லாண்டு பல்லாண்டு வாழ்கவே!

மல்லாவி

எல்லோரும் ஏற்றுபுகழ் - யோகபுரம் தனில்
எழில்கொஞ்சும் கலைக்கல்வி
பொழில் மேவும் எம் அன்னை

மல்லாவி

செந்தமிழ் ஆங்கிலம் செழுங்கலை விஞ்ஞானம்
பைந்தமிழ் வர்த்தகம் பயிலும் உடற்கல்வி
சுந்தரச் சித்திரஞ்சேரும் தொழிற்கலை
அந்தமிழ் விவசாயம் அனைத்தும் தரும் அன்னை –

மல்லாவி

அதிபரும் ஆசிரியர் அனைவரும் வாழி
மதி நிறை மாணவரும் மல்லாவி நகர் வாழி
துதி பெறும் வித்தியாலயம் துலங்கிட வாழி
பதி முல்லை நகர் வாழி பல்லோரும் வாழி –

மல்லாவி

இப் பாடசாலையில் இதே ஆண்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதியும் முதன்முதலாக கிடைக்கப்பெற்றது. முதன் முதலில் அனுமதி பெற்றவர்கள் செல்வி.இ.புஸ்பராணி, செல்வன் து.லிங்கேஸ்வரன் ஆவர்.

இப்பாடசாலையில் தொழில்சார் பயிற்சிகளை மேற்கொள்ளும் பொருட்டு தச்சுவேலைக்கான கட்டிடம் ஒன்று பூர்த்தியாக்கப்பட்டு 1983 இல் திறந்து வைக்கப்பட்டது. இதே ஆண்டில் சாரணியக் குழுவினர் சர்வதேச சாரணிய பாசறைக்காக (ஜம்போறி) அநுராதபுரம் சென்று வந்தனர். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு தன்னாலான பங்களிப்பைச் செய்து வந்த திரு.செ.மயில்வானம் என்னும் பெருந்தகையால் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் நோக்கில் காணியின் சுற்றுப்புறத்தில் பனம் விதைகள் நாட்டப்பட்டன. அத்துடன் பாடசாலை வளவின் முன்றலிலும் வீதியோரத்திலும் நடப்பட்ட ஆலமரங்கள் இன்றும் நிழல் பரப்பி காட்சியளிப்பதை காணக்கூடியதாகவுள்ளது.

31.12.1983 இல் திரு செ.மயில்வாகனம் அதிபர் அவர்கள் ஓய்வு பெற்ற நிலையில் திரு.தா.சிவசம்பு அவர்கள் நியமிக்கப்பட்டார். இவர் மூன்று மாதம் வரை கடமையாற்றி மாற்றலாகி வேறு பாடசாலைக்குச் செல்ல 05.03.1984 இல் திரு.த.சிவபாலு அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். அதிபர் செ.மயில்வாகனம் அவர்கள் விட்டுச்சென்ற பணிகளையும் தான் செய்யத்துணிந்த பணிகளையும் சிறப்பாகச் செய்த பெருந்தகை இவரென்பதில் இப்பாடசாலை நன்றியுடையதாகவே உள்ளது. இப்பாடசாலை வளர்ச்சிக்கு வித்திடுவது கல்வி மட்டுமல்ல செயற்பாடுகளுமே என உணர்ந்தார். அதிபர் த.சிவபாலு அவர்கள் பாடசாலையை பொறுப் பேற்றுக்கொண்டதன் பின்னர் கல்விப் பணிப்பாளராக இருந்த ஜனாப் எம்.எம் மன்சூர் அவர்களிடம் அனுமதி பெற்று 18.07.1984 இல் வர்த்தக வகுப்பை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து அதிபரின் அயராத உழைப்பினால் எம் பிரதேசத்திற்குப் பொருத்தமான தொழில்சார் பயிற்சிகள் வழங்குவதற்காக மாட்டுப் பண்ணை, கோழிப்பண்ணை என்பவற்றை ஆரம்பித்தார். மாணவர்களுக்குச் சிறந்த பயிற்சி நிலையமாகவும் பாடசாலைக்கு நல்ல வருமானமாகவும் அவை திகழ்ந்தன. முறைசாராக் கல்வி மூலம் தையற்பயிற்சி நடைபெற்று வந்தது.

இது மட்டுமல்லாமல் இவரின் அர்ப்பணிப்பால் பாடசாலைக்காக முன்னர் ஒதுக்கப்பட்ட 25 ஏக்கர் காட்டுக் காணிகளை வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளரின் உதவியுடனும், பெற்றோரின் உதவியுடனும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. காடுகள் வெட்டப்பட்டதைத் தொடர்ந்து விளையாட்டு மைதானம் துப்பரவு செய்யப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டிற்கு விடப்பட்டது. இவ்வளவு பாரிய வேலைத்திட்டத்திற்கும் உறுதுணையாக இருந்தவர் நீர்ப்பாசன பொறியியலாளராக இருந்த திரு.ஏ.ரீ பொன்னுத்துரை என்பவர் ஆவார்.

மைதான திருத்த வேலைகளுடன் பாடசாலை காணிகளைச் சுற்றி முட்கம்பிகளால் வேலிகள் அமைக்கப்பட்டன. அதற்குப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தவர்களின் உதவி கிடைக்கப்பெற்றது. மைதானத்துக்குப் போதியளவு காணியை விடுத்து மீதிக் காணியை சிறு தானியம் செய்வதற்கு குத்தகைக்கு விடப்பட்டதனால் பெருந்தொகைப் பணம் பாடசாலைக்கு கிடைத்தது. பாடசாலையின் ஆசிரியர் நலன்புரிச்சங்கத்தினரால் சிற்றுண்டிச்சாலையொன்று அமைக்கப்பட்டது. இத்துடன் பாடசாலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இரவு நேர காவலாளியினை பாடசாலை அபிவிருத்திச்சங்கம் நியமித்தது.

இவ்வளவு வளர்ச்சிகளையும் அக்கால கட்டத்தில் அதிபராக இருந்த திரு.த.சிவபாலு அவர்களும் அவருடன் ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பன முன்னின்று உழைத்ததால் பாடசாலைக் கல்வி மென்மேலும் வளர்ச்சியடைந்து வந்தது. 1985 இல் இப்பாடசாலையில் விஞ்ஞானப்பிரிவும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் கல்வித் திணைக்களத்திடம் அனுமதி பெறுவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அவை நிறைவேற்றப்பட்டன. இப்பாடசாலை கொத்தணிப் பாடசாலையின் தலைமைப் பாடசாலையாகவும் திகழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

அதிபராக இருந்த திரு.த.சிவபாலு அவர்கள் (10.09.1989) மாற்றலாகிச்செல்ல 11.09.1989 திரு.செ.சிவராஜா அவர்கள் அதிபர் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார். இக்காலப்பகுதியில் புலமைப்பரிசில் பரீட்சையில் அதிக மாணவர்கள் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது. க.பொ.த உயர்தர வகுப்புக்களுக்குமான மாணவர் தொகை கணிசமான அளவில் அதிகரித்தது. மாணவர்களின் சைக்கிள் பாதுகாப்புக்காகக் கொட்டகை அமைக்கப்பட்டது. முறைசாராக் கல்வி மூலம் வானொலித் திருத்தம், ஒட்டுவேலைகள் என்பன ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவந்தன. 26.06.1994 இல் திரு.செ.சிவராஜா அதிபர் அவர்கள் பதவி உயர்வு பெற்று செல்ல 27.06.1994 புதிய அதிபராக திரு.மா.இராஜ்குமார் அவர்கள் நியமிக்கப்பட்டார். இவர் காலத்தில் பாடசாலைக் கல்வியும், இணைபாட விதானச் செயற்பாடுகளும் நடைபெற்றது. தொடர்ந்து வந்த காலப்பகுதியில் (11.09.1995) அதிபராக திரு.ஜீ.எஸ் பரமேஸ்வரன் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவரது காலப்பகுதியில் தான் பாடசாலை நிறையச் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. நாட்டில் ஏற்பட்ட போர் காரணமாக அகதிகளாக்கப்பட்ட யாழ் மாவட்ட எம் உறவுகள் வன்னி மண்ணை நாடி வந்தனர். அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் நோக்காக எமது பாடசாலையும் பலரைத் தாங்கி நின்றது. அத்துடன் இழப்புக்களைச் சந்தித்துள்ள மக்களின் பிள்ளைகளுக்கு அவர்கள் கல்வியை இழந்த விடக்கூடாது என்பதற்காக மர நிழல்களில் சோர்வின்றி கல்விப்பணி சேமமுடன் தொடர்ந்தது. பல கட்டிடங்களைக் கொண்ட பாடசாலையாக இருந்த போதிலும் இரவல் காணியில் நிழல் மரம் தேடி கல்வி கற்க வேண்டிய சூழலிலும் கல்வியைக் கற்று சிறப்படைந்தனர்.

இந்த சூழலிலும் இப்பாடசாலை மீண்டும் தரமுயர்த்தப்பட்டு 01.01.1996 இல் மல்லாவி மத்திய கல்லூரி எனும் நாமம் தாங்கி நின்றது. புதிய நாமத்துடன் விளங்கிய கல்லூரிக்கு கீதம் இயற்றப்பட்டது. இக்கீதத்தை இயற்றியவர் முல்லைமணி வே.சுப்பிரமணியம் ஆவர். இடப் பெயர்வுகளினால் மக்களையும் மாணவர்களையும் சுமந்துகொண்டிருந்த பாடசாலைக்கு 01.10.1996 இல் திரு.சு.கலாதரன் அவர்கள் புதிய அதிபராக நியமிக்கப்பட்டார். பல நெருக்கீடுகளுக்கு முகம் கொடுத்து தம் பணியினை திறம்பட நடத்திய பெருமை இவரையே சாரும். சுமார் மூவாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களையும் நூறுக்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் கொண்டு இப் பாடசாலை பல இடங்களில் மர நிழல்களின் கீழ் இயங்கி வந்தது. இக்காலப்பகுதியில் க.பொ.த உயர்தர விஞ்ஞானப் பிரிவில் பல மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றமை கல்லூரிக்கு பெருமையை ஏற்படுத்தியது. 1997 ஆம் ஆண்டு இக்கல்லூரி மைதானம் 400M ஓட்டப் பாதையாக விஸ்தீரணமாக்கப்பட்டது. “மதுர இரவு” எனும் நாமம் கொண்டு கலை விழா வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது யாராலும் மறக்க முடியாது.

05.04.1999 ஆம் ஆண்டு இது வரை காலமும் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் கடமையாற்றிய திருமதி கோகிலவாணி தேவராஜா அவர்கள் அதிபர் பொறுப்பை ஏற்றுகொண்டார். 1985 ஆம் ஆண்டு தொடக்கம் இக்கல்லூரியிலே பணியாற்றிய இவர் கல்லூரியின் முதல் பெண் அதிபர் என்ற பெருமைக்கு உரியவர் ஆவார். இக்காலப் பகுதியில் உயிரியல், கணிதப்பிரிவுகளில் பல மாணவர்கள் பல்கலைக் கழகம் சென்றதுடன் மாவட்ட நிலையில் முதல் நிலை களையும் பெற்றுக்கொண்டனர். 2000ஆம் ஆண்டு விஜயபாலா ஜீவகன் உயர்தர உயிரியல் பிரிவில் தேசிய நிலையில் 24வது நிலையிலும், தமிழ் மொழிமூலம் தேசியரீதியில் 2வது நிலையிலும், மாவட்டநிலையில் முதல் நிலையையும் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமைசேர்த்திருந்தார். 1999 ஆம் ஆண்டுக்குப் பின் இக்கல்லூரிக்காக அரசசார்பற்ற நிறுவனங்கள் பல உதவிகளைச் செய்து வந்தன. குறிப்பாக தமிழர் புனர்வாழ்வுக்கழகம், வன்னிதமிழ் சமூக கலாசார மையம் - கனடா போன்ற நிறுவனங்களினால் ஏழைச் சிறுவர்களுக்கு உதவிகள் கிடைத்தன.

இக்காலத்தில் முறைசாராக் கல்வி மூலம் பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்களுக்கு கணினி வகுப்புக்கள் நடைபெற்றன. மின்சார வசதி இல்லாத போதும் இயந்திரம் மூலம் மின்சாரம் பெறப்பட்டு இலவசமாக பயிற்சிகள் நடைபெற்றன. பௌதீக வளத்தைப் பொறுத்தவரை மதில் சுவர் அமைக்கப்பட்டது. கல்வித் திணைக்களத்தின் ஆதரவில் கணினி அறை, கட்புல செவிப்புல சாதன அறை என்பன மாணவர்களின் நலன் கருதி பாவனையில் இருந்தது. இக்கல்லூரியின் பழைய மாணவர்களின் அயராத முயற்சியால் பிரித்தானியாவில் உள்ள எமது கல்லூரியின் பழைய மாணவர்கள் பழைய மாணவர் சங்கக் கிளையொன்றை நிறுவியதோடு முதன் முதலாக “அழியாத கோலங்கள்” எனும் நூலொன்றையும் வெளியிட்டிருந்தனர். சுவிற்சர்லாந்தில் உள்ள பழைய மாணவர் சங்க கிளையினர் 60,000 ரூபா நிதியினை அபிவிருத்திக்காக அன்பளிப்பு செய்திருந்தனர். 11.01.2005 இல் திருமதி.பு.பாலசுப்பிரமணியம் அவர்கள் தற்காலிக அதிபராகச் செயற்பட்டார். இக்காலப்பகுதியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் ஆண்களுக்கென தனியாக சைக்கிள் தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட்டது. UNICEF நிறுவனத்தின் ஆதரவில் நிரந்தரசமையலறை, தற்காலக வகுப்பறைக் கொட்டகைகள் திருத்தப்பட்டன. இளைஞர் சேவை மன்றத்தினரின் ஆதரவில் விளையாட்டு மைதானம் சிறு புனரமைப்புச் செய்யப்பட்டது. பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின

ரால் முன்புறவேலி (200அடி) முட்கம்பி இட்டு தகரத்தால் அடைக்கப்பட்டது. தற்காலிகமாக நடன அறை ஒன்றும் புனரமைக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டு க.பொ.த (சா.த) பரீட்சையில் முல்லை மாவட்டத்தில் சிறந்த பெறுபேற்றினை பெற்ற எமது கல்லூரி மாணவி ஆ.சுகர்ணியா DIALOG GSM நிறுவனத்தினரால் கௌரவிக்கப்பட்டார் அத்தோடு முல்லை மாவட்டத்தில் இளம் சாதனையாளராக தே.வைதேகி தெரிவு செய்யப்பட்டு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்களால் கௌரவிக்கப்பட்டார்.

பகுதி - 111

**அண்மைக்காலத் தகவல்களுடன்**

01.10.2005இல் திரு.கு.சத்தியபாலன் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்றுக் கொண்டார். போர்க்காலச் சூழல் என்பதால் இவருடைய செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கதாகவே இருந்தது.

01.03.2007 திரு.து.ஜேசுதானந்தர் அவர்கள் கல்லூரிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நாள் யாராலும் மறக்க முடியாது. வழமைபோலவே ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலையை வந்தடைகின்றனர். புதிய அதிபரும் கல்லூரிக்கு சமூகமளித்து விட்டார். காலைப் பிரார்த்தனை மணி அடிக்கின்றது. வகுப்பறை களில் மாணவர்கள் அமைதி பேணுகின்றனர். திடீரென வானில் பேரிரைச்சல். பச்சிளம் பாலகர்கள் முதல் பெரியவர்கள் யாவரும் வானத்தினை பார்த்தபடி அலறியடித்துக் கொண்டு கட்டடங்களிற்குள் மறைந்து கொள்வதற்கு முன்பே வெடிச்சத்தம் கட்டடத்தை அதிர வைத்தது. தேறாங்கண்டல் பகுதியில் கிபீர் விமானத்தின் குண்டுகள் வீசப்பட்டன. அந்த வெடியோசைகளின் மத்தியில் எமது தற்போதைய அதிபரின் பதவியேற்பு வைபவம் நடைபெற்றமை அனைவராலும் மறக்க முடியாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

அதிபர் அவர்கள் மாணவர்கள் விரும்பத்தக்க நடத்தைகளை வெளிக்காட்டுதல், கற்பித்தல் வகுப்பறைச் சூழலை கவின் நிலையில் வைத்திருத்தல் போன்ற விடயங்களில் மிகுந்த அக்கறை காட்டிவந்தார். இக்காலப்பகுதியில் ஏற்கனவே கட்டப்பட்டுக்கொண்டிருந்த கட்டடங்களான

- ✓ மாடிக்கட்டடம்
- ✓ கற்றல் வள நிலையம்
- ✓ ஆசிரியர் ஓய்வு அறை (எமது கல்லூரி ஆசிரியை அமரர் வாசுகி தியாகராசா நினைவாக) ஆகியனவும் புதிதாக அமைக்கப்பெற்ற
- ✓ சமையற் கூடம்
- ✓ பாற்சாலை
- ✓ அலுவலகம் (புனரமைப்பு)

என்பனவும் 18.03.2008 இல் திறந்து வைக்கப்பட்டன. கல்லூரியில் கடந்த காலங்களில் இல்லாத சில வசதிகள் காரணமாக மாணவர்களின் கல்வியில் சில தடைகள் ஏற்பட்டன. இதனை நிவர்த்தி செய்யும் முகமாகக் கல்லூரியின் பிரித்தானியக் கிளையினரின் ஆதரவில் மாணவர்களுக்கான குடிநீர் வசதிகள், மல சல கூடத்துக்கான நீர் விநியோகம், இஞ்சின் உட்பட மின்சாரவசதிகள் போன்ற அடிப்படை தேவைகள் செய்து கொடுக்கப்பட்டன.

யுத்த காலம் ஆதலால் வவுனியா வடக்கு, மாந்தை கிழக்கு பகுதிகளிலிருந்து ஏராளமான மாணவர்கள் இக்கல்லூரியில் வந்து இணைந்து கொண்டனர். இடப்பெயர்வு வன்னியில் யாரைத்தான் விட்டுவைத்தது. கல்லூரியும் இடம்பெயரும் நாள் வந்தது. லொறிகளில் பொருட்கள் ஏற்றப்பட்டன. 11.07.2008 இலிருந்து அக்கராயன் முதலாம் பாடசாலையில் கல்லூரி இயங்கத் தொடங்கியது. தொடர்ந்து வந்த எறிகணைத் தாக்குதல்களால் மீண்டும் கல்லூரி 22.09.2008 இல் கிளி/இராமநாதபுரம் ம.வி இல் தமது சேவையை ஆரம்பித்தது. தனியாக கொட்டில் அமைத்து அங்கிருந்த எமது கல்லூரி மாணவர்களுடன் ஏனைய பாடசாலை மாணவர் களையும் இணைத்து சிறப்பாகக் கல்விச் செயற்பாடு கள் நடைபெற்று வந்தன. இதற்கு அதிபர், ஆசிரியர்கள், தொண்டராசிரியர்கள், பணியாளர்களோடு பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கத்தினரின் பங்களிப்பும் மிகுதியாகக் காணப்பட்டது.

யுத்தம் உக்கிரம் அடைந்தது. கிளிநொச்சி பகுதியைக் கிபீர் விமானங்களும், எறிகணைகளும் பதம் பார்த்தன. மீண்டும் இடம் பெயரவேண்டிய கட்டாயம். அரைகுறைப் பொருட்களுடன் 05.01.2009 இல் றெட்பானா பாரதி வித்தியாலயத்துக்கு கல்லூரி நகர்த்தப்படுகின்றது. போர் நீடித்தது. பாடசாலையின் சொத்துக்களில் சம்பவத்திரட்டு, மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள், மாணவர்களின் பிறப்பு சான்றிதழ்கள், ஆசிரியர் சம்பளப் பட்டியல் என்பன அதிபர் அவர்களினால் 25.01.2009 இல் சுகந்திரபுரம் 40 வீட்டுதிட்டத்திற்கு எடுத்து செல்லப்பட்டது. இறுதியாக சுகந்திரபுரத்துடன் கல்லூரியின் ஆவணங்கள் யாவும் தொலைந்தன. வன்னி மக்கள் அனைவரையும் முகாம்கள் அரவணைத்தன.

வடக்கில் வசந்தம் வீசியது. முட்கம்பி வேலிகளை விட்டு 23.10.2009இல் முதன் முதலில் துணுக்காய் பிரதேச செயலகத்திற்குள் மக்கள் மீளக்குடியமர்த்தப்படுகிறார்கள். பாதுகாப்பு என கருதிய இடங்களில் மக்கள் தொடர்ந்து மீளக் குடியமர்த்தப்பட்டு வந்தனர். பாடசாலையும் மீள ஆரம்பிக்கப்பட்டது. 27.11.2009 இல் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் துரித மீள்குடியேற்றத்தின் மூலம் பாடசாலை திறக்கப்பட்டது. 23.12.2009 இல் வட மாகாண ஆளுனர் ஜீ.ஏ.சந்திரசிறீ அவர்கள் நேரடியாக பாடசாலைக்கு வருகை தந்து மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளை வழங்கியிருந்தார்.

கடந்த கால யுத்தத்தின் வடுக்களைச் சுமந்த மாணவமணிகளின் மனங்களில் புதிய உணர்வு அலைகளை உருவாக்கவேண்டும் என்ற நோக்கில் BANK OF LIFE எனும் அமைப்பினரால் மகிழ்ச்சி இல்லம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு 31.01.2010 அன்று வன்னி இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கமால் குணவர்த்தன அவர்களாலும், முல்லை அரச அதிபர் இமெல்டா சுகுமார் அவர்களினாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கல்லூரியின் இல்ல

மெய்வன்மைப் போட்டி நிகழ்வுகள் 03.03.2010 இல் நடைபெற்றன. பிரதம அதிதியாக கௌரவ அமைச்சர் ரிசாட் பதியுதீன் அவர்கள் கலந்து கொண்டார். அவர்களுடன் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், கனகரட்ணம் ஆகியோரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். கல்லூரி ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்க பிரதம அதிதியால் பாடசாலைக்கென போட்டோ கொப்பி மெசின், றோணியோ மெசின், பாண்ட் செற் என்பனவும் ஆசிரியர்களுக்கான 42 துவிச்சக்கரவண்டிகளும் அன்பளிப்பாகக் கொடுத்திருந்தார்.

மீள் குடியேற்றத்தின் பின்னர் புத்தாண்டு விழா கொண்டாடப்பட்டது. ஏற்கனவே அமைந்திருந்த இந்திர வதனி கலையரங்கம் வடமாகாண ஆளுநர் அவர் களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் (1 மில்லியன்) புனர் நிர்மானம் செய்யப்பட்டது. 20.04.2010 வடமாகாண ஆளுநர், வடமாகாணத்தின் கல்விச் செயலாளர் உட்பட வட மாகாண திணைக்கள அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்ட விளையாட்டுக்கள், கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. தேசிய ஒருமைப்பாட்டுடன் கூடிய பண்பாட்டு பன்முகப் பாடுகளுக்கு மதிப்பளித்து இந்நிகழ்வு கொண்டாடப்பட்டது.

நாடெங்கிலும் அமுல்படுத்தப்பட்டுக் கொண்டு இருக்கும் “இசுறு” பாடசாலை வேலைத்திட்டத்தின் கீழ் இக்கல்லூரியும் உள்வாங்கப்பட்டது. இசுறு வேலைத்திட்டம் தொடர்பாக கல்லூரியை மேற்பார்வை செய்வதற்காக அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் கல்விக்கான இணைப்பு செயலாளர் (பி.கே. கெட்டியாராட்சி) அவர்கள் 28.07.2010 கல்லூரியைப் பார்வையிட்டுச் சென்றார்.

மாணவர்களுக்குத் தேவையான தளபாடங் கள், இலவச பாடநூல்கள், சீருடைகள் என்பன காலக் கிரமத்தில் கல்லூரிக்கு வந்தசேர்ந்தன. ஆய்வுகூடப் பொருட்கள் நூலகத்தின் நூல்கள், கணினிகள் என்பன முற்றாக அழிந்துவிட்ட நிலையில் ஆய்வுகூடத்துக் கான வளங்கள் சிறிதளவு வழங்கப்பட்டன. ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களைக் கொண்டிருந்த நூலகம் இன்று 1000 வரையான நூல் களை மாத்திரமே கொண்டு இயங்குகின்றது. கணினி வளத்தைப் பொறுத்தவரை 20கணினிகளைக் கொண்டிருந்த நிலையில் 05 கணினிகள் மாத்திரம் தற்போது காணப்படுகின்றன. சுற்றுப்புறச் சூழலைப் பார்த்தால் UNOPS நிறுவனம் கல்லூரி வளாகத்தின் சுற்றுவேலியை அமைத்து கொடுத்திருக்கிறது. இத்தோடு கல்லூரியின் விளையாட்டு மைதானம் வட மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு மைதானம் ஆகும். இதன் முதல் கட்ட வேலையாக கூடைப்பந்தாட்டத்திற்கான மைதானம் பூரணப்படுத்தப் பட்டுள்ளது. 08.12.2010 இல் வட மாகாண வீர வீராங்கனைகளுக்கான பதினெட்டு நாள் கொண்டதான பயிற்சி முகாம் ஒன்று நடாத்தப்பட்டது. இதன் ஆரம்ப நிகழ்வுக்கு வடமாகாண கல்விச் செயலாளர் திரு.இ. இளங்கோவன், கலாநிதி நா.எதிர்வீரசிங்கம் மற்றும் பல முக்கியஸ்தர்கள் கலந்த சிறப்பித்தனர். 14.12.2010 அன்று சர்வதேச குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா அவர்கள் பயிற்சி முகாமில் கலந்து கொள்வதற்காகக் கல்லூரிக்கு வந்திருந்தார்.

கல்லூரி ‘இசுறு’ திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளதனால் ஆரம்பப்பிரிவு தனியாக பிரிந்து இயங்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதற்காக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளரின் வேண்டுகோளின் பிரகாரம் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்களை ஒன்று கூட்டி ஆரம்பப் பிரிவை தனியாக்குவது பற்றி கலந்துரையாடப்பட்டது. இறுதித் தீர்மானமாக மேல்மாடிக் கட்டிடத் தொகுதி ஆரம்பப்பிரிவிற்காக ஒதுக்கப்பட்டது. 03.01.2011 இலிருந்து ஆரம்பப் பிரிவு தனி நிர்வாகமாக அதிபர் திருமதி கீதா பாலசிங்கம் தலைமையின் கீழ் இயங்கத் தொடங்கியது. தனியாக்கப்பட்ட ஆரம்பப்பிரிவு பாடசாலைக்குப் புதிதாக பதிவுகள் மேற்கொள்ளப்பட் டன. இதில் பெரும் பங்காற்றியவர் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.த.மேகநாதன் அவர்கள். கடந்த காலங்களில் அதிபராக இருந்து அனைத்து மக்களின் மனங்களிலும் நிறைந்திருந்த செம்மல் அமரர் செ.மயில்வாகனம் அவர்களின் பெயரே ஆரம்பப்பிரிவுப் பாடசாலைக்கு (மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம் ) நாமமாக இடப்பட்டது.

மீள் குடியேற்றத்தின் பின்னர் கல்வி வளர்ச்சியைப் பொறுத்தவரையில் கல்லூரி மாணவர் கள் முதன் நிலையில் உள்ளனர். 2009, 2010 ஆண்டுகளில் உயர்தர பரீட்சைகளில், மாவட்ட நிலை களில் முதல்நிலைகளைப் பெற்றுள்ளனர். பல மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றும், இன்னும் சிலர் கல்வியியற் கல்லூரிக்குச் சென்றும், மற்றும் பலர் பல்கலைக்கழகத்திற்கு செல்வதற்குரிய அடிப்படைத் தகுதியினையும் பெற்றுக்கொண்டுள்ளனர். விளையாட்டுப்போட்டி, தமிழ்த்தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டிகளில் மாணவர்கள் சாதனைகளைப் படைத்து கல்லூரிக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். கட்டிட வசதிகளை நோக்கின் வகுப்பறைகள் தனியாகப் பிரித்து அடைக்கப்பட்டுள்ளன. அதிபர் அலுவலகம், குடிநீர் விநியோகம், மலசலகூடம் ஆகியவற்றோடு ஆசிரியர் விடுதிகளும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. அத்தோடு புதிய கட்டிடமாக விசேடகல்விக் கூடம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது.

விருட்சம் போல் வளர்ந்து வரும் இக் கல்லூரியின் வரலாறு முழுமையாகக் கிடைக்காத காரணத்தால் எனக்குக் கிடைத்த தகவல்களை தொகுத்து எழுதப்பட்டிருக்கின்றது என்பதையும், எதிர் வரும் காலங்களில் வரலாற்றை முழுமையாக வெளியிடுவதற்கு சமூகத்தின் மத்தியிலிருந்து உதவிக்கரங்கள் எழ வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றேன்.

**திருமதி. றுஜினா இலட்சுமணநாதன்,**
**பழைய மாணவி,**
**முகாமைத்துவ உதவியாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**துணுக்காய்.**

# மாண்புடன் மிளிரும் மாந்தரின் மனங்களிலிருந்து...



## ஆலமரம் போல் என்றும்...

எனது அன்றைய கொட்டிற் பாடசாலை இன்று மல்லாவி மத்திய கல்லூரியாகத் திகழ்வதற்கு காரணகர்த்தா கார்த்திகேசு (சைவண்ணா) என்று கூறின் அது மிகையாகாது. அவர் 27.11.1959 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் திருவாளர் நவரத்தினம் அவர்களின் சிபார்சுப்படி என்னை மல்லாவிக்கு அழைத்தார். அங்கு செல்லமுத்து ஆச்சி என்று எல்லோராலும் அழைக்கப்படுகின்ற கார்த்திகேசு (சைவண்ணாவின்) தாய் வீட்டருகில் கொட்டிற் பாடசாலை அமைத்துப் படிப்பித்தலை ஆரம்பித்தேன். பின்பு நடராசாஇ சிவபாக்கியம்இ பரமேஸ்வரி என்று மூவர் வந்து சேர்ந்தனர். இதைக் கேள்விப்பட்ட சுந்தரமூர்த்தி என்பவர், தான் அயலில் உள்ளவர் என்று தன்னையும் சேர்க்கும்படி கேட்டார். அவரையும் சேர்த்து ஐவரானோம். பாடசாலையைப் பொறுப்பேற்க மேலதிகாரிகள் வருவதாக அறிவித்தல் வந்தது. சராசரி மாணவர் தொகை போதாது என்று நாம் பயந்திருக்க சுந்தரமூர்த்தி என்பவர் துணுக்காய் உயிலங்குளம் முதலிய இடங்களில் இருந்து மாட்டுவண்டியில் பிள்ளைகளை ஏற்றி வந்து இறக்கினார். இவற்றுக்கு மல்லாவி மக்களும் உதவினர்.

அதிகாரி பார்வையிட்டு பாடசாலையைப் பொறுப்பேற்று ஐவருக்கும் நியமனமும் கிட்டியது. 10.02.1961 எமது நியமனம் மறக்கமுடியாதது. நாம் அன்று முதல் ஆசிரியர் ஆகிவிட்டோம். சுமார் 10 மாதமாக சம்பளம் இல்லாது இருந்த எமக்கு மட்டற்ற மகிழ்ச்சி. பின்பு தற்போதைய பாடசாலை இருக்குமிடத்தில் பெரும் கொட்டில் போடப்பட்டது. வடகாட்டில் இருந்து பெரியதம்பி என்ற அதிபரும் வந்தார். படிப்பு நடைபெற்றது. பாடசாலை வீதி மிகக் கேவலம். நாளொன்றுக்கு ஒரு வாகனம் துணுக்காய் போய்த் திரும்பும். மழை பெய்தால் அதுவும் இல்லை. இந்த வீதிக்கு றோட்டு போடப்படுமா? பஸ் ஓடுமா? என்று நாம் ஏளனமாகக் கதைப்போம். அன்றிருந்த எமது கொட்டிற் பாடசாலை இன்று இந்நிலையில் உள்ளது. மாணவர் சராசரி போதாது என்று எம்மில் சிலருக்கு இடமாற்றம் கிட்டியது. எனது சேவைக்காலம் முடிந்து ஓய்வு பெற்றாலும் மாண்புமிகு மல்லாவி மக்களின் உதவிகளையும், பாடசாலையையும் மறக்கமாட்டேன் என்பது உறுதி. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

**திருமதி. சிவசக்தி. சுந்தரமூர்த்தி,**
**(முதல் ஆசிரியை)**
**ஓய்வுபெற்ற ஆசிரியை,**
**மீசாலை.**

# எமது ஆசிரியர் குழாம்



முன்வரிசை:- திரு. சி.சிவகுமார். திரு. க.கஜந்தன். திரு. கு.கண்ணதாசன். திரு. தி.சாந்தகுமார். திரு. து ஜேசுதானந்தர் ( அதிபர்). திருமதி. பு.பாலசுப்பிரமணியம் (பிரதி அதிபர்)
திருமதி சு.கிஷ்ணதாஸ். திருமதி. கி.குணாளன். திருமதி. பா.சிவலிங்கம்

2ம் வரிசை:- திருமதி.கா.விஜயராஜ். திருமதி. சு.இராசேந்திரம். திருமதி. க. கிங்ஸ்லி. செல்வி. இ.பிரியதர்சினி. செல்வி. இ.சோபியா. செல்வி. ச.சுதர்சினி. செல்வி. இ.தமிழினி.
திருமதி. வ.சந்திரமோகன். திருமதி. தி.பார்த்தீபன். செல்வி. சி.தரங்கிணி. செல்வி. கு. அகல்ஜா. செல்வி. சு.விஜிதா. செல்வி. சி.சுஜித்தா. திருமதி.ரா.துரேஸ்ராம்.

3ம் வரிசை:- திரு. த.விதுரன். திரு. க. கஜேந்திரன். திரு. இ.சிவநாதன். திரு. இ.வின்சன்ற். திரு. ப.காண்டீபன். திரு. சி.வின்சன். திரு. கு.நிரோஜன். திரு. இ.காண்டீபன்.
திரு. சு.சரவணபவன். திரு. சி.டிகுகுமார். திரு. தி.உமாகரன். திரு. வ.ஜங்கரன். திரு. ஜெ.ஜெகதீசன். திரு. செ.செல்வச்சந்திரன். திரு. த.ஜீவானந்தன். திரு. ஜெ.ஜெசீபன்.
திரு. ந.புலேந்திரகுமார். திரு. சி.சற்குணேஸ்வரன்.

# மலர்க்குழு



மு/மல்லாவி மத்திய கல்லூரியிலிருந்து இசுறுபாடசாலைத்திட்டத்தில் வேறாக்கப்பட்ட ஆரம்பப்பாடசாலை
(மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம்)







மு/மல்லாவி மத்திய கல்லூரியிலிருந்து இசுறுபாடசாலைத்திட்டத்தில் வேறாக்கப்பட்ட ஆரம்பப்பாடசாலை (மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம்) அதிபர், ஆசிரியர்களுடன் எமது அதிபர், பிரதி அதிபர்.




## கல்விசாரா ஊழியர்கள்



இருப்பவர்கள்:- திரு. து.யேசுதானந்தர் (அதிபர்), திருமதி. பு.பாலசுப்பிரமணியம் (பிரதி அதிபர்)

நிற்பவர்கள்:- திரு. அ.கெனிகலிஸ்ரஸ், திரு. க. செல்வராசா, திரு. சூ.சடகோபன் திருமதி. று.இலட்சுமணநாதன் திரு. கு.மதிபாலன், திரு. கு.உதயகுமார்.





## பழைய மாணவர் சங்கம்



## பெற்றோர் ஆசிரியர் சங்கம்



# வகுப்பாசிரியருடன் மாணவர்கள்



தரம் 6A



தரம் 6B



தரம் 7A



தரம் 7B









# வகுப்பாசிரியருடன் மாணவர்கள்



தரம் 8



தரம் 9A



தரம் 9B



தரம் 10A

# வகுப்பாசிரியருடன் மாணவர்கள்



தரம் 10 B



தரம் 11 A



தரம் 11 B



தரம் 11 C









# வகுப்பாசிரியருடன் மாணவர்கள்



தரம் 12 கலை



தரம் 12 விஞ்ஞானம்



தரம் 12 வர்த்தகம்



தரம் 13 கலை









# வகுப்பாசிரியருடன் மாணவர்கள்



தரம் 13 வர்த்தகம்



தரம் 13 விஞ்ஞானம்



வடமாகாண விளையாட்டு பயிற்சிப் பட்டறை



வடமாகாண விளையாட்டு மைதானத்திற்காகத் திட்டமிடல்



# வாழ்த்துரை

1958 இல் இங்கு வந்து குடியேறிய மக்களின் கல்வித் தேவைக்காக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் மல்லாவி மத்திய கல்லூரி முக்கிய இடம் பெறுகின்றது. 1959இல் செல்லமுத்து ஆச்சியின் வளவில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை, பின் தற்போதுள்ள இடத்தில் அமைக்கப்பட்டு 10.02.61இல் அரசினரால் பொறுப்பேற்கப்பட்டது. அப்போது எனது கணவர் திரு.சி.நடராசா இன்னும் இரண்டு பெண் ஆசிரியைகளுடன் இப்பாடசாலையைப் பெறுப்பேற்று, அதிபர் பதவியையும் ஏற்றுக்கொண்டார். அப்போது பாடசாலையின் பெயர் மல்லாவி அ.த.க பாடசாலை படிப்படியாக வளர்ந்து, இப்போது மல்லாவி மத்திய கல்லூரியாக உயர்ந்திருப்பது மகிழ்ச்சியையும் பெருமையையும் தரும் விடயமாகும்.

இந்தக்கல்லூரியில் நானும் சில வருடங்கள் ஆசிரியையாகக் கற்பித்த, அந்த பசுமையான நினைவுகளோடு பொன்விழாக் காணும் எங்கள் கல்லூரியை வாழ்த்தி ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். கண்டிப்பும் அரவணைப்பும் நிறைந்த அதிபர் திரு.செ.மயில்வாகனம் அவர்கள், என்றும் எவரோடும் தோழமையோடு பழகும் அதிபர் திரு.த.சிவபாலு இருவரும் பாடசாலைக்கு ஆற்றிய சேவைகளை எவரும் எளிதில் மறந்துவிட முடியாது.

மூன்று ஆசிரியர்களும் ஒரு சில மாணவர்களோடும் ஆரம்பித்த கொட்டில் பாடசாலை, இன்று பல ஆசிரியர்களையும் மாணவர்களையும் கொண்டு, பல கட்டிடங்களோடு காட்சி தருவது மகிழ்ச்சி தரும் செய்தி. அது மாத்திரமல்ல, சில வருடங்கள் சொல்லவொண்ணாத் துன்பங்களை அனுபவித்த எமது கல்லூரி, மீண்டும் உறுதியோடு தலை நிமிர்ந்து நிற்க வழி செய்த கல்வியலாளர்களுக்குத் தலைசாய்த்து நன்றி செலுத்தவதோடு, இன்றைய அதிபர் திரு.து.யேசுதானந்தர் அவர்களின் அயராத உழைப்பையும் பாராட்டிக் கல்லூரி மேன்மேலும் வளர்ச்சியடைய எல்லோரும் எமது கரங்களை நீட்டுவோம் என்று கூறி, பொன்விழாக் காணும் எங்கள் மல்லாவி மத்திய கல்லூரி வன்னிப் பெருநிலப்பரப்பில் பல்லாண்டுகள் நிலைத்து நின்று, வரலாறு படைக்க எனது நல்லாசிகளை வழங்குவதில் அளவிலா ஆனந்தம் அடைகிறேன்.

திருமதி.புவனேஸ்வரி நடராசா,
ஓய்வுபெற்ற ஆசிரியை,
மல்லாவி மத்திய கல்லூரி.

# மல்லாவி மத்திய கல்லூரியின்

# 50ஆவது ஆண்டு நிறைவையொட்டிய வாழ்த்துரை

மாங்குளம் நகருக்கு அணி செய்யும் வகையில் சந்தியிலிருந்து 8 மைல் தொலைவில் துணுக்காய் வீதியில் அமைந்துள்ள பாடசாலையாக மல்லாவி மத்திய கல்லூரி மிளிர்கிறது. இப்பாடசாலை 10.02.1961ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டபோது மல்லாவி அரசினர் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. அதிபர் உட்பட 5 ஆசிரியர்களுடன் ஆரம்பமான இப்பாடசாலையின் ஆரம்ப காலத்தில் கல்வி கற்பித்த பெரும் பேற்றினைப் பெற்றவர்களில் நானும் ஒருவர். ஏறத்தாள 32 மாணவர்களுடன் உதயமான இப்பாடசாலை 40 ஒ 20 அடி நீளமான கொட்டிலாக ஆரம்பத்தில் நிர்மாணிக்கப்பட்டது.

ஆரம்ப காலத்தில் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு சிவசுந்தரம் அவர்களாலும் துணுக்காய் விதானையாரது முயற்சியினாலும் அத்திவாரம் இடப்பட்டு தரம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாக இயங்கி வந்தது. மல்லாவியுடன், மல்லாவியை அண்டிய கிராமத்திலுள்ள மாணவர்கள் கல்வி கற்பதற்கு பெரும் தளமாக அமைந்தது என்றால் அது மிகையாகாது. இப்பிரதேசத்து கல்வியியலாளர்களதும், கிராம முன்னேற்றச் சங்க உத்தியோகத்தர்களதும் முயற்சியால் இப்பாடசாலை வளர்ச்சியினைப் பெற்று படியுயர்ந்து தரம் 8 பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது. மேலும் அக்கிராமத்தில் அதிகரித்த வளர்ச்சிப்போக்கின் வேகத்தினால் தற்போது க.பொ.த உயர்தரம் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளைக் கொண்டு பரிணமித்து இன்று அப்பிரதேசத்தின் இசுறு பாடசாலையாக மிளிர்வதையிட்டு நான் மிகவும் மகிழ்வடைவதுடன், பொன்விழாவைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

சிவபாக்கியம் சின்னத்தம்பி,
பாடசாலை ஆரம்பித்த காலத்து,
முன்னாள் ஆசிரியை.



# வரலாற்றுச் சுவடுகள்

"கல்வி அழகே அழகு" என நாலடியார் பாடல் வழி கட்டியங்கூறி பரிணமித்து எழுந்ததுதான் வன்னி மண்ணாள் மடியிலே மல்லாவி மகாவித்தியாலயம். அது இன்று சான்றுபகன்று அதன் பாதையில் வளர்ந்து உயர்ந்து மல்லாவி மத்திய கல்லூரியாக நிமிர்ந்து நிற்கிறது என்றால் மிகையாகாது. தன் கல்விக்கூட வளர்ச்சியில் தன்பாதையிலே பொன்விழாக் கண்டு உவக்கும் பொன்னாளிலே என் மனதிலே எல்லையில்லா மகிழ்ச்சி பொங்குகின்றது. இத்தருணம் எண்ணற்ற பசுமை நினைவலைகளையும் கொண்டு வருகின்றது. இருப்பினும் என்னுடைய நினைவுகள் எத்தனையோ! சற்றே நாற்பத்துநான்கு வருடங்கள் பின்னோக்கிப் பார்க்கின்றேன். மல்லாவி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலிருந்து மல்லாவி மகாவித்தியாலயம் வரை அதாவது 1983 வரை அடிபதித்த வரலாற்றுச் சுவடுகளை உங்கள் அனைவரின் அகங்களிலும் நிழற் சுவடுகளாகத் தருவதில் ஆனந்தம் கொள்கின்றேன்.

வரலாறுகள் என்றென்றும் காலத்தின் கண்ணாடிகளாகும் எனக் கூறப்படுகின்றது. ஆனால் இன்றைய காலத்தின் கட்டாய தேவையுமாகின்றது. வளம் கொழித்த வன்னி நாடு, வரலாறு தந்த நாடு இந்த நாட்டின் பெயரை இன்று அறியாதார், புரியாதார் அகிலத்தில் இல்லை எனலாம். அடங்காப்பற்று என வன்னி முன்னர் அழைக்கப்பட்டது எனவும் பின்னர் தான் வன்னி என அழைக்கப்பட்டு பிரசித்தமானது என நூலாய்வாளர்கள் கூறுகின்றனர். பண்டாரவன்னியன் ஆட்சிச் சிறப்பும் அதன் மாட்சியின் வழித்தோன்றல்களே தமிழர்களும் அவர்களின் பண்பாடு கலாசாரத்திற்கு பாத்திரமான பகுதியே வன்னி நாடு ஆகும். இங்குள்ள கிராமங்களின் பெயர்கள் வளத்தைக் காத்து நிற்கும் குளங்களின் பெயர்கள் யாவும் தமிழையும், இனத்தின் தொன்மையையும் பறைசாற்றி நிற்கின்றது.

நால்வகை நிலங்களில் முல்லை நிலமங்கையவள் இயற்கை எழிலின் பச்சைப் பட்டாடை விரிந்த முல்லைத்தீவின் மேற்கே நிலமண்ணால் சுரந்திட்ட பதியே மல்லாவியாகும். வளங்கள் அரவணைக்க புதுக்குடியேற்றங்கள், கால்பதிக்க காணி அபிவிருத்தி அதிகாரி (L.D.O) திரு ஆழ்வாப்பிள்ளை அவர்கள் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் யூனிற்றுக்களாகப் பகுக்கப்பட்டு சமூக நலக் குடியிருப்புக்கள் உருவாக்கப்பட்டன.

காலத்தின் நகர்வில் பசுமை நிறைந்த வயல்களும், சிறுதானியங்களின் செழுமையும் செந்நெல்லும், பால்சுரந்தளிக்கும் ஆவினக் கூட்டங்களும் சேர்ந்து பசுமைப் புரட்சியை தந்தது எனலாம். வளங்கள் குவிந்திருந்தாலும் கல்வி எனும் செல்வத்திற்கு ஏங்கியவண்ணம் மல்லாவிப்பதி இருந்தது. இவ்வேளை திருமதி வேலுப்பிள்ளை அபிராமி என்பவர் பழைய குடியிருப்பாளர் ஆவார்.

அன்னாரே செல்லமுத்தாச்சி என்னும் செல்லப்பெயராக அன்புடன் அழைக்கப்பட்டவர் பழைமை அநுபவங்கள் மிகுந்தவர். எல்லோருடனும் அன்புடன் பழகும் பாங்கும் உள்ளவர். இவரது வளவிலே புளிய மரநிழலிலே ஓர் சிறு கொட்டில் அமைக்கப்பட்டது. இதனை அவரது மகன் கார்த்திகேசு(சைவம்) என அழைக்கப்பட்டவரின் ஊக்கமும் ஒத்துழைப்பினாலும் இக்கொட்டில் உருவானது. மக்களின் ஆவலுடன் திருமதி சு. சிவசக்தி அவர்கள் முதல் ஆசிரியராகவும், திரு.நடராசா தலைமை தாங்குபவராகவும் 26.11.1959இல் 9 மாணவர்களுடன் ஓர்பாடசாலையாக வித்திடப்பட்டது. அகரத்தின் ஒலிகள் மல்லாவியில் ஒலித்தது. கல்வி வளர்ச்சியிலும் கார்த்திகேசு அவர்களின் ஒத்துழைப்புமிருந்தது. பாலகர்களான மாணவச் செல்வங்கள் குறுகுறுவென நடந்து கல்வியைச் சுடர்விடச் செய்தனர். இது கல்விப் பாதையில் முதல் பதிந்த வரலாற்றுச் சுவடாகும்.

10.02.196 இல் அரசாங்கம் தற்காலிக அதிபர் திரு. நடராசா உட்பட பாடசாலையைப் பொறுப்பேற்றுக் கொண்டது இதுவும் ஓர் வரலாற்றுச் சுவடாகும். இத்தருணம் திருநெல்வேலியைச் சேர்ந்தவரும் வர்த்தகருமாகிய திரு. நல்லதம்பி அவர்கள் மல்லாவியிலே நடுத்தர வகுப்புத் திட்டத்தின் கீழ் அரசாங்கத்திடமிருந்து பெற்ற காணி 5 ஏக்கரை இப்பாடசாலைக்கென 23.10.1961 இல் இலவசமாகப் பெருமனதோடு வழங்கினார். இக்காணியில் பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் ஓர் கொட்டிலில் பாடசாலை நடக்கத் தொடங்கியது. இதுவும் ஓர் வரலாற்றுச் சுவடாகும். 01.02.1962 இல் இப்பாடசாலைக்கு அதிபராக திரு.க. பெரியதம்பி அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார்.

சீரற்ற பாதைகள், போக்குவரத்துக் கஸ்டங்கள் இருப்பிட வசதிகளற்ற நிலையிலும் இத்தனைக்கும் மத்தியிலும் மாணவர்கள் கல்வி வளர்ச்சி கண்டே வந்தது. 8.10.1964 இல் நில அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆதரவில் பாடசாலை மண்டபம் ஒன்றும் அதிபர் விடுதி ஒன்று ஆசிரியர் விடுதிகள் இரண்டு, கிணறு ஒன்று மலசலகூடம் ஒன்று எனக் கட்டடங்கள் அமைக்கப்பட்டன. இவைகளை வித்தியாதரிசி திரு.க. கனகசபாபதி அவர்கள் பொறுப்பேற்றார். அதையடுத்து 11.02.1964 இல் அதிபர் பண்டிதர் மு. ஆறுமுகம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. 31.12.1966 ஆம் ஆண்டு பண்டிதர் மு. ஆறுமுகம் அவர்கள் இடமாற்றலுற்றார்.

அவ்வேளையே கல்விளான் அ.த.க பாடசாலையில் அதிபராக இருந்த திரு செ. மயில்வாகனம் அவர்கள் 01.01.1967 இல் மல்லாவி அ.த.க பாடசாலைக்கு அதிபரானார். திரு.சி.சந்திரசேகரம் ஆசிரியர் அவர்களும் திரு.க. செல்வரத்தினம் ஆசிரியர் அவர்களும் கடமையிலிருந்தனர்.

1967ஆம் ஆண்டு 8 ஆம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. 70 மாணவர்கள் இருந்தனர். அதிபருட்பட மூன்று ஆசிரியர்களாலும் எட்டுப்பாடங்களும் மாணவர்கட்கு வரப்பிரசாதமாகின. அயற் கிராமங்களான ஆலங்குளம், கொக்காவில் போன்ற இடங்களிலிருந்து மாணவர்கள் அனுமதி பெற்றனர். ஆசிரியர்களின் கல்வி முனைப்பு மாணவர்களுக்கு உற்சாகத்தை அளித்ததுடன் ஊக்கத்தையும் கொடுத்தது.

மாணவர் தொகை சிறிது சிறிதாக உயர்ந்தது இவ்வேளை திருமதி மாணிக்கம் பூபாலசிங்கி எனும் பெண் ஆசிரியை நியமனம் பெற்றார். கல்வி வளர்ச்சி மேலுற ஊக்கத்துடன் ஆசிரியர்கள் முனைந்தனர். அதிபர் உற்சாகமாக வழிநடத்தினார். உழவுத் தொழில் காரணமென மாணவர்கள் வரவு அடிக்கடி குறைவாகத் தென்பட்டது. மாணவர்கள் அதிகரித்ததால் தளபாடப் பற்றாக்குறை, இடப் பற்றாக்குறையும் தென்பட்டது. ஆகவே பாடசாலைக் குறைநிறைத் தேவைகள் என்பவற்றை ஆராய்ந்து செயல்வடிவம் பெற, பெற்றார் ஆசிரியர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. மாணவர்களிடையே தமிழ் வளர்ச்சி ஆளுமை, கலை வளர்ச்சியால் தேர்ச்சிபெற மாணவர் தேர்ச்சிச் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. 8 ஆம் வகுப்பு புலமைப்பரீட்சை, சைவசமயபாடப் பரீட்சை தமிழ், ஆங்கிலம் என்பவற்றை ஊக்குவிக்க மாலை நேரத்தில் ஆசிரியர்கள் அனைவரும் வகுப்புக்கள் நடத்தினர். கல்வியின் பணியாகவே இலவசமாகப் போதித்தனர்.

1969 இல் பெற்றோர் தினவிழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இசைநடன ஆசிரியர் திரு.சிவஞானம் அவர்களால் நடனங்கள் பயிற்றுவிக்கப்பட்டன. பெற்றோரின் ஒத்துழைப்பு மிகவும் ஊக்குவிக்கக் கூடியதாக இருந்தது. "ஆடல், பாடல், நாடகம், பேச்சு என முத்தமிழ்ச் சுவை தரும் மாணவர்களின் கலையம்சங்கள் மூலம் வெளிப்பாடாயின. மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் யாவரையும் கவர்ந்தன.

இவ்விழாவிற்கு கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு.க. பொ. இரத்தினம் அவர்கள் இந்தப் பாடசாலை வளர்ச்சிக்குத் துணையாகச் செய்த சேவைகள் சொல்லுந்தரமன்று. தமிழ்ப்பற்றும் தன் பிராந்தியம் கல்விச் சிறப்பில் ஓங்க வேண்டும் என்ற உணர்வும் அவரிடம் குடிகொண்டிருந்தது. அமைதியின் வழியிலே செயல்வடிவம் காண்பவர். இந்தப் பெருந்தகை இக்கட்டுரை எழுதும் போது 21.12.2010 இல் அமரராகிவிட்டார். இக்கல்லூரி சார்பாக நினைவு கூர்வோமாக.

துணுக்காய் மாங்குளம் வீதியிலே மல்லாவி அயல் கிராமங்கட்கு மத்தியிலே மல்லாவிப் பாடசாலை அமைவிடம் பொருத்தமாய் அமைந்திருந்தது. இத்துணைச் சாத்தியக்கூறுகள் அமைந்ததால் அமரரான திரு. செ. மயில்வாகனம் இப்பாடசாலையை உயர்நிலைக்கு உயர்த்த அயராது பாடுபட்டார்.

பெற்றோர் , ஆசிரியர் சங்கம், பாலசுப்பிரமணியம் கிராம முன்னேற்றச் சங்கம் எல்லாம் உயர் திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டார். ஆதிபர் உயர் அதிகாரிகளையெல்லாம் நாடினார். இவ்விதமாக கடின உழைப்பும் விடா முயற்சியுமாக அன்னார் பாடுபட்டார்.

கிளிநொச்சியில் நடக்கும் மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் பாடசாலை அபிவிருத்திக்கு அனுமதி கிடைத்தது. அதன்பிரகாரம் 1969 இல் காணி ஆணையாளர் திணைக்களம் பாடசாலை அபிவிருத்தியை மேற்கொள்ள வந்தபோது நில அளவையாளர் இடம்போதாமை எனக்கூறி பின்வாங்கியது. இத்தடை காரணத்தால் பெற்றார்கள் ஆசிரியர்கள் மனங்கலங்கினர். பாடசாலைக்கு அருகிலுள்ள வெற்றுக்காணி உரிமையாளர் திரு. இராமையா அவர்களிடம் நாடியபோது அவரின் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. அதேவேளை திரு.சு.தியாகராசா அவர்கள் மல்லாவி மக்களால் தொண்டர் என அழைக்கப்படுபவர். பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாளருமாகிய அன்னார் தன் வயற்காணியைப் பாடசாலைக்காக திரு. இராமையா

அவர்கட்குக் கொடுத்து அக்காணியை பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்தார். அன்னார் அமரராகிவிட்டபோதும் அவரின் பெருந்தன்மை தியாகம் எமது வரலாற்றுச் சுவடேயாகும். பாடசாலை பின்புறமுள்ள நடுத்தர வகுப்புக்காணி O.A சிதம்பரப்பிள்ளை அவர்களின் காணி பாடசாலைச் சொத்தாகின.

17.05.1969 இல் காணி ஆணையாளர் திணைக்களம் இப்பாடசாலையின் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்கின்றது. நில அபிவிருத்தித் திணைக்களம் காடுகளை அழித்துக் கட்டிட வேலைகளைத் தொடங்குகின்றது. 20 ஏக்கர் உட்பட திருத்த வேலைகள் நடைபெற்றது.

பாடசாலையில் மாணவ இல்லங்களாக கம்பன், வள்ளுவன், பாரதி என இல்லங்கள் பிரிக்கப்பட்டு விளையாடடுப் போட்டிகள் நடைபெற்றன. 20 ஏக்கரில் ஒருபகுதி உருவாக்கப்பட்ட திடல் மைதானமாக்கப்பட்டு முதல் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

மல்லாவி மண்ணாள் மகிழ, மல்லாவிப் பாடசாலை கல்வித் தாய் நெகிழ, மல்லாவி அரசினர் தமிழ்க் கலவன் என்றிருந்த பாடசாலை 29.10.01982 இல் மல்லாவி மகாவித்தியாலயம் என உயர்ந்தது. அந்த நாமத்தை ஓர் மணிமகுடமாகச் சூடி மகிழ்ந்தது. அயோத்தி திரும்பிய இராமனுக்கு முடிசூட்டியபேறு போன்று மகாவித்தியாலயமாக ஒளிர்ந்தது. இவ்வாண்டிலே 1982 இல் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதியும் முதன் முதலில் கிடைக்கப்பெற்றது. செல்வி இ. புஸ்பராணி, செல்வன் து. லிங்கேஸ்வரன் ஆவர். இத்துணைப்பேறு மல்லாவி மகாவித்தியாலயத்திற்கு கிடைத்தபெரும் பேறல்லவா!. மல்லாவி மகாவித்தியாலயம் தன் இலட்சியப் பாதை வரலாற்றுச் சுவட்டில் கால்பதித்து விட்டது.

இருப்பினும் இப்பாடசாலையின் தனிச் சிறப்பம்சங்கள் என்னவெனில் தனியார் கல்வி தலைதோன்றாக் காலம் விசேட பரீட்சைகள் தமிழ், ஆங்கிலம் மற்றும் பாடங்கட்கு மாலைநேர வகுப்புக்கள் அதிபர், ஆசிரியர்கள் நடாத்தி கல்வியின் பணியாகவே இலவசமாக உயர்வு பெறச் செய்தனர்.

ஆசிரியர் பணியின் மகத்துவத்தை நிலைநாட்டிய பெருமை இப்பாடசாலைக்குண்டு. மாவட்டக் கலை விழாக்களின்பங்கு யாழ் வரைசென்று பரிசிலைத் தட்டிய பெருமை இப்பாடசாலைக்குண்டு. கூட்டுறவாளர் தினவிழா, திருக்குறள்மனனப்போட்டி, நாவலர் பேச்சுப் போட்டி என நிகழ்ந்த போட்டிகளிலெல்லாம் முதற் பரீட்சைப் பெற்று ஓர் தனியிடத்தையே பெற்று வந்தது.


அடுத்து மனையியல், விஞ்ஞானம், வர்த்தகம் என்ற பாடங்கள் இப்பாடசாலையில் கற்கும் வாய்ப்புகள் உருவாகின உயிர்நாடியாக நூல்நிலையம் உருவாக்கப்பட்டது.

இம் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய ஆசிரியர்கள், அதிபர் ஆற்றிய உன்னதசேவையே மாணவர்கள் உயர்வு, பாடசாலை உயர்வு பெற்றது. அத்தோடு ஒத்துழைத்த பெற்றோர் ஆசிரியர் சங்கம் பெரும் தூண்களாக ஒருமித்து ஒலித்த எதிரொலிகளால் மகாவித்தியாலயம் பெருமை பெற்றது. பெயர்கள் தனித்தனியாகக் குறிப்பிட முடியவில்லை. அன்று இப்பகுதி மாணவர்கள் கலைப்பட்டதாரிகளாகவும், சிலர் வைத்தியர்களாகவும் சிலர் பொறியியலாளர்களாகவும், தமிழ்ப் புலமை பெற்றவர்களாகவும் நிகழ்ந்தார்கள் என்பதை மறுப்பதற்கு யாருமிலர்.

அமரராகிய அதிபரின் சுற்றுப் புறச் சூழலில் சான்றாக ஆலமரமும், பனைமரங்களும் எழுந்தது. முருகபக்தரும் கவித்துவ புலமைமிக்கவருமான அதிபர் முன்னர் கல்விளான் கிராம முன்னேற்றச் சங்கம் மல்லாவி பாலசுப்பிரமணியம் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவராகவும் வவுனிக்குள சிவாலயத் திருப்பணிச்சபை செயலாளராகவும் சமூகத் தொண்டாற்றினார். தனக்கென வாழாது மல்லாவி, கல்விளான், துணுக்காய் மக்களின் நெஞ்சங்களில் வாழ்ந்த ஓர் வித்தகன் 13.08.1993 இல் நீங்காப் புகழோடு இறைவன் பதம் சேர்ந்தனன்.

*வாழ்க செந்தமிழ், வளர்க மல்லாவி மத்திய கல்லூரி!*

**திருமதி பவானி மதியாபரணம்.**
**(முன்னாள் அதிபர் அமரர்**
**செ.மயில்வாகனம்**
**அவர்களின் சார்பாக.)**



# "மனிதநேயம் பரப்பி ....
# மாண்புடன் மிளிர்க..."

கல்வி கருந்தனம். கற்றோர்க்குச் சென்ற இடமெலாம் சிறப்பு. சிறப்பைப் பெற்றுத்தருவது கல்விக்கூடங்கள். கல்விக்கூடங்கள் ஒரு நாட்டின் முதுகெலும்பாகும். ஆலயங்களும் திண்ணைப் பள்ளிகளும் வளர்த்த கல்வியை இன்று கல்விக்கூடங்கள் வளர்த்து வருகின்றன. கல்விக்கூடங்கள் தனியே கல்வியறிவை அல்லது நூலறிவைத்தருவதோடு மட்டும் நின்றுவிடாது, அவனிடம் மறைந்திருக்கும் அறிவைக் கல்வி வெளியே கொண்டுவருகின்றது. மனிதனை மனிதனாக்குவது கல்வி. "மனிதன் வாழ்க்கை முழுமையும் கற்கவேண்டும். கற்க மறுப்பவன் வாழமறுப்பவன்" என்பது ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரது அருள்வாக்கு. கல்வி ஒருவனுக்கு தொழிலை மட்டுமல்ல நல்ல பண்பை, பெயரை, உயர்ந்த பண்பாட்டைக் கற்றுத்தருகின்றது. கற்பவற்றை ஐயந்திரிபறக் கற்று தான் கற்றவழி நிற்றலே மனிதனுக்குக் கல்வி கற்றுத்தரும் பாடமாகும்.

இந்த அற்புதமான பணியைச் செய்துவரும் கலைக்கூடங்கள் என்றென்றும் கட்டி வளர்க்கப்பட வேண்டியவை. ஆங்காங்கு குக்கிராமங்களாகக் காணப்பட்ட வன்னிப் பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் 1950களுக்கு முன்னர் கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படவில்லை என்பது முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களின் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது தெளிவாகும். W.W. கன்னங்கரா அவர்கள் கல்வி மந்திரியாக இருந்தவேளை 1944க்குப் பின்னர் இலங்கைக் கல்விவரலாற்றில் பாரிய முன்னேற்றம் காணப்பட்டது. சுதேச பாடசாலைகளின் விருத்திக்கு அத்திவாரம் இட்டவர் இவரே எனலாம். இக்காலகட்டத்தில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கிய பிரதேசத்திற்கான பாராளுமன்ற உறுப்பினராக விளங்கிய திரு. சி.சி. சுந்தரலிங்கம் அவர்கள் முள்ளியவளையில் "வித்தியானந்தக் கல்லூரி" என்னும் பெயரில் ஒரு பாடசாலையை ஆரம்பிக்க வழிவகுத்தார். இதுவே முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பெரிய பாடசாலை எனக்கொள்ளலாம்.

1958ஆம் ஆண்டிற்குப்பின்னர் ஏற்படுத்துப்பட்ட விவசாயக் குடியேற்றங்களின் காரணமாக கிளிநொச்சி, வவுனிக்குளம் போன்ற பெரிய திட்டங்கள் வன்னிநோக்கி மக்களின் இடப்பெயர்வை ஏற்படுத்தியதோடு பொருளாதார, விருத்தியையும் வன்னி கண்டுகொண்டது. இந்த நடவடிக்கைகள் கல்வித்துறையின் விருத்தியிலும் கணிசமான பங்களிப்பைச் செய்யத் தொடங்கின. மாங்குளத்திற்குத் தெற்கே அமைந்திருந்த பண்டைய கிராமங்களில் வன்னிவிளாங்குளம், அனிஞ்சியன் குளம், துணுக்காய், கல்விளான் நட்டான்கண்டல், பனங்காமம் போன்ற கிராமங்களிலேயே மக்கள் வாழ்ந்து வந்தனர். சிறிய சிறிய பாடசாலைகளும் காணப்பட்டன. ஆனால் குடியேற்றத்திட்டத்தின் பயனாக இன்று யோகபுரம் மகாவித்தியாலயம் என அழைக்கப்படும் வவுனிக்குளம் 3ஆம் படிவம், மல்லாவி காஞ்சுரையடிப் பள்ளிக்கூடம், 2ஆம் படிவம் பாடசாலை, பாண்டியன் குளம் பாடசாலை போன்றன ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அவற்றைத் தொடர்ந்து உயிலங்குளம், கோட்டைகட்டிய குளம், தென்னியங்குளம், வன்னேரி போன்ற இடங்களிலும் பாடாசலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

காணி அபிவிருத்தித் திணைக்களத்தின் சிபார்சின்பெயரில் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஒரு உயர்தர பாடசாலைக்கான அடித்தளம் இடப்படவேண்டும் என்னும் கொள்கை முன்வைக்கப்பட்டு, இன்று மல்லாவி மத்திய கல்லூரியாகப் வளர்ச்சிகண்டுள்ள மல்லாவிப் பாடசாலைக்கான கட்டிடத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டது. பல கிராமங்களுக்கு மத்தியிலும் போக்குவரத்திற்கு இலகுவாகவும் அமையக்கூடிய ஒரு இடம் தெரிவு செய்யப்பட்டு இந்தப்பாடசாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடசாலை நிர்மாணத்தில் காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் கடமையாற்றி பின்னர் முல்லைத்தீவு அரசாங்க அதிபராக தன்னலம் கருதாது பணியாற்றிய திரு. பொன்னம்பலம் அவர்களின் பங்களிப்பு என்றென்றும் அவ்வூர் மக்களால் மறக்கப்படாது பேசப்பட்டு வருவதனையும் அவர்மீது கொண்டுள்ள மதிப்பையும் நான் நன்கு அறிவேன்.

யோகபுரம் மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய வேளை எனது முதுகலைமாணிப் பட்டப்படிப்பின் பொருட்டு விடுகைபெற்றுச் சென்ற நான் மீண்டும் அப்பகுதியில் கடமையாற்றவேண்டும் என்னும் பெருவிருப்போடு மல்லாவி மகாவித்தியாலத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்றேன். அங்கிருந்த அதிபர் திரு. மயில்வாகனம் அவர்கள்

ஓய்வுபெற்றுமையால் பாடசாலையின் பொறுப்பை 1983ஆம் ஆண்டில் ஏற்றுக்கொண்டேன். பெற்றோரின் ஒத்துழைப்பும் வேண்டுதலும் என்னை ஊக்குவித்தமையால் நான் பாடசாலையை மிகத்துரிதமாக அபிவிருத்தி செய்ய முயற்சித்து அதில் வெற்றியும் பெற்றேன். எனது முயற்சிக்கு முல்லைத்தீவுக் கல்விப்பணிப்பாளர்களாக இருந்த திரு சுந்தரலிங்கம், ஜனாப் மன்சூர் அத்தோடு கல்வியதிகாரியாக இருந்த திரு. தியாகராஜா அவர்களின் ஒத்துழைப்பும் அரவணைப்பும் என்னை ஊக்கப்படுத்தியது. எனது கோரிக்கைகளைச் செவிமடுத்து ஆசிரியர்களின் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய உதவியதோடு, பாடசாலைக்குத் தேவையான கட்டிட தளபாட, உபகரணத்தேவைகளையும் தந்துதவியமை மல்லாவி மத்திய மகாவித்தியாலயத்தின் வளர்ச்சியில் ஒரு மைற்கல்லாக அமைந்தது.

இவற்றிற்கு மேலாக பாடசாலைக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிலத்தில் ஏறத்தாழ 17 ஏக்கர் பரப்பளவான காணி காடுமண்டிக் கிடந்தது. இந்தக் காட்டை அழித்து ஒரு விளையாட்டு மைதானத்தை உருவாக்க முயற்சித்தேன். பாடசாலையின் அடிப்படைத்தேவைகள் பூரணப்படுத்தப்படுவதால்தான் மாணவர்களின் கல்வி சிறப்படையும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த நான் வவுனிக்குளப் பிரதேசத்தின் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதம நீரப்பாசனப் பொறியியலாளர் பொன்னுத்துரையவர்களை நாடி இந்தக் காட்டை அழிப்பதற்கு உதவவேண்டும் என்ற எனது விருப்பத்தை தெரிவித்தேன். எந்தவித ஐயமோ, பயமோ இன்றி காட்டைத் தள்ளுவதற்கு தன்னிடம் இருந்த ஒரு பாரிய மண்ணைத் தள்ளும் இயந்திரத்தை (Buldozer) அனுப்பிவைத்தார். ஆனால் இந்த இயந்திரத்திற்கு யானைக்குத் தீனி போடுவது போன்று எரிபொருளை ஊற்றவேண்டிய பாரிய பொறுப்பு என்னைப் பயமுறுத்தியது. எனினும் அற நனைந்தவனுக்குக் குளிர் என்ன, கூதல் என்ன என்பதுபோன்று நான், பெற்றோரை நாடினேன். அனைவருமே மனமுவந்து ஒத்துழைப்புத் தந்தமையால் மூன்று வாரங்களில் அந்தக்காடு பண்பட்ட தரையாகக் காட்சியளித்தது. அதனைப் பாடசாலையின் தேவைக்கு எவ்விதம் உபயோகிக்கலாம் என்று தீர்மானித்து அவற்றை ஊரவர்களிடம் உழுந்துப் பயிர்ச்செய்கைக்குக் கொடுத்தமையால் பெருந்தொகையான பணத்தைத் திரட்ட முடிந்தது. ஆண்டுதோறும் இந்த நிதி பெற்றார் ஆசிரியர் சங்கதின் கணக்கில் வைப்பிலிடப்பட்டது. 1989இல் நான் இடமாற்றலாகிச் செல்லும்போது இந்த வங்கிக் கணக்கில் கிட்டத்தட்ட ரூபா 30,000 (முப்பதினாயிரம்) நிலுவையில் இருந்தது.

இப்பாடசாலையில் உயர்தர வகுப்பில் கல்விகற்று வந்த செல்வி இந்திரவதனி குமாரசாமி அவர்கள் எதிர்பாராத விதமாக இறந்தமையை பொறுக்காத அவரது பெற்றோர் அவரின் நினைவாக பாடாசலையில் நிரந்தரமான ஒரு கட்டிடத்தை நிறுவவேண்டும் என என்னிடம் 1987ஆம் ஆண்டு ரூபா 50,000 ஐம்பதினாயிரம் தந்து நீங்களே என்னவேண்டுமானாலும் செய்யுங்கள் என்றார். பெற்றோர்கள், ஆசிரியர்களோடு கலந்தாலோசித்து புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தில் ஒரு கலையரங்கத்தை செல்வி இந்திரவதனியின் பெயரில் நிர்மாணிப்பது எனத்தீர்மானித்து அதன் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அது பூரணமாக நிறைவேறுமுன்னர் நான் இடமாற்றத்தில் மண்டைதீவு கொத்தணி அதிபராகச்செல்ல வேண்டிய இக்கட்டான நிலை தோன்றியது. செலவு போக மீதியை திருவாளர் குமாரசாமி அவர்களிடமே ஒப்படைத்து தொடர்ந்து செய்வியுங்கள் என்றேன். அவரோ நீங்கள் உங்கள் கையால்தான் இதனைத் திறந்து வைக்கவேண்டும் என்று எனக்கு ஒரு அன்புக்கட்டளையைப் பிறப்பித்திருந்தார். நாட்டின் சூழ்நிலை காரணமாக நான் வெளிநாட்டிற்குச் செல்லவேண்டி வந்தமையால் நான் அந்த நிகழ்வில் கலந்துகொள்ள முடியவில்லை.

இந்தப் பாடசாலையின் வரலாற்றில் பெற்றோர் பழைய மாணவர்களின் பங்களிப்பு அளப்பரியது. கல்வி விருத்திக்கு தங்கள் உயிரையே தரத்தக்கவர்கள். என்மீது அன்பும், ஆதரவும், பெருமதிப்பும் வைத்துள்ளவர்கள் நான் 1983இல் இந்தப்பாடசாலையில் காலடி எடுத்து வைத்தபோது 261 பிள்ளைகளே படித்துக்கொண்டிருந்தார்கள். மாணவர்களின் தொகையை அதிகரிப்பதற்கு பெற்றோரிடம் சென்று வரவை அதிகரிக்கவேண்டிய பணியை மேற்கொண்டமை, கல்வியை மேலதிகமாகக் கற்பிக்க வைக்கவேண்டிய பணியை ஆசிரியர்களோடு இணைந்து செய்தமை, போன்றவற்றால் பாடசாலை துரிதகதியில் விருத்தி கண்டது எனலாம். இதுவரை வெளியுலகத்தால் அறியப்படாது இருந்த பாடாசலையின் பெயர் மிளிரத்தொடங்கியது. 1985களில் பாடசாலை 1000க்கு மேற்பட்ட மாணவர்களையும் 60க்கு மேற்பட்ட நிரந்தர ஆசிரியர்களையும் கொண்டதாக வளர்ச்சி கண்டது. விஞ்ஞானகூடம், விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. மாணவர்கள் கலைத்துறைக்கு மட்டுமன்றி விஞ்ஞான, பொறியியற் துறைகளுக்கும் பல்கலைக்கழகத்திற்கு செல்லும் வாய்ப்பையும் மல்லாவி மத்திய கல்லூரி பெற்றுக்கொண்டது.

1984ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்று பாடசாலைகள் கொத்தணிப் பாடசாலைகளாகத் தரமுயர்த்தப்பட்டன.

வித்தியானந்தக் கல்லூரி, மல்லாவி மத்திய கல்லூரி, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி ஆகியவையே அவையாகும். அதன் பின்னர் மாங்குளம், முல்லைத்தீவு, செம்மலை, பாண்டியன்குளம் ஆகிய பாடசாலைகள் கொத்தணிப் பாடசாலைகளாக்கப்பட்டன.


முல்லைத்தீவு மத்திய மகாவித்தியாலயம், யோகபுரம் மகாவித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி என்பன என் நெஞ்சத்தில் நிறைந்த கல்விக்கூடங்கள். எனது சேவையை உள்வாங்கியவை. இவற்றுள் மிகக்கூடிய சேவையைப் பெற்றுக்கொண்டது மல்லாவி மத்திய கல்லூரியே எனலாம். இந்தக் கல்லூரியின் வளர்ச்சியில் பங்குகொண்ட முன்னைய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்வி அதிகாரிகள் அனைவரும் நினைவுகூரப் படவேண்டியவர்கள்.

நான் 2003இலும் 2010இலும் மல்லாவிக்குச் சென்று பாடசாலையை பார்வையிட்டு வரக்கூடிய வாய்ப்புக்கிடைத்தது. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? என்ற மனநிலை எனக்கு ஏற்பட்டது. பழைய பெற்றோர்கள், மாணவர்கள், நண்பர்களைப் பார்த்தமை பெரு மகிழ்ச்சியைத் தந்தது. ஆசிரியர்கள் பெருமையடைவது தங்கள் மாணாக்கர்கள் நல்ல நிலையில் இருக்கின்றார்கள் என்பதனை உணரும் போதுதான். அந்த உணர்வை எனக்குப்பலமாணாக்கர்கள் தந்தார்கள். என்னைப் புளகாங்கிதம் அடையச்செய்தார்கள்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது என்பார்கள். அன்போடு உலாவிய மண்ணையும், மல்லாவி மத்திய கல்லூரியையும் மதித்து அதன் வளர்ச்சிக்கு அனைவரும் பாடுபடவேண்டும் என்பது எனது ஆதங்கம். மல்லாவி மத்திய கல்லூரி இன்று தனது பொன் விழாவைக் கொண்டாடுவதையிட்டு மனம் பூரிக்கின்றது. மல்லாவி மத்திய கல்லூரி எனும் விருட்சம் நன்கு ஓங்கிவளர்ந்து பசுமையாக, இளமையாக கல்விப்பசியாற்றி மிளிர வாழ்த்துகின்றேன்.

***Thangarajah Sivapalu B.Ed.(Hons), M.A.***
***President, Canada Tamil Writers Association***
***2800- Eglinton Avenue, East, Toronto, Canada***
***M1J – 2C8***

**பாடசாலையில் நடைபெற்ற ஒளிவிழாவில் பாலன் தொட்டில்**





# பொன் விழா வாழ்த்துச் செய்தி

ஆரம்ப காலந்தொட்டு இன்றுவரை பல சாதனைகளைப் படைத்த மு/மல்லாவி மத்திய கல்லூரி தனது பொன் விழாவைக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். பொன்விழாவின் குறியீடாக கல்லூரியால் வெளியிடப்படும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமிதமடைகிறேன்.

கல்லூரியின் வளர்ச்சியில் அன்றிலிருந்து இன்றுவரை பலரும் பங்கெடுத்துக் கொண்டனர். மாவட்டத்தில் உள்ள முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகத் திகழும் இக்கல்லூரி, சரித்திரங்கள் படைக்க காலத்துக்குக் காலம் இருந்த அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் போன்றோரின் ஊக்குவிப்புக் காரணமாக அமைந்தது. இக்காலவோட்டத்தில் சிலவருடங்கள் எனக்கும் கிடைத்தமையால் நான் பெருமையடைகிறேன்.

கல்லூரி எல்லாத்துறைகளிலும் வளர்ச்சியடைந்து வருகின்றது. இதற்கு ஆக்கமும் ஊக்கமும் தருவதற்கு சுறுசுறுப்பான அதிபரொருவரும், அவருக்குப் பக்கபலமாக இருக்கின்ற அன்பும், அறிவுமிக்க ஆசிரியர்களும் உள்ளனர். பக்கத்துணையாக பெற்றோர்களும், உள்நாட்டு, வெளிநாட்டு பழைய மாணவர்களும் உள்ளனர்.

> ''உலகில் உள்ள எல்லாத் தீமைகட்கும் முறையான தீர்வானது கல்வியேயாகும். மனிதனில் ஏற்கனவே மறைந்திருக்கும் தூய்மைத் தன்மையை வெளிப்படுத்தி அவனைச் சொந்தக் காலில் நிற்கவைக்கும் உண்மையான கல்வியே இன்று எமக்குத் தேவையாகும்''

சுவாமி விவேகானந்தர்

இக்கல்லூரியின் பழைய மாணவர் பலர் இப்பிரதேசத்தின் கல்வியலாளர்களாக இருப்பதைக் காணும் தோறும் இந்நிறுவனத்தின் சேவை பறைசாற்றப்படுகிறது.

எதிர்காலச் சந்ததியினரை ஆளுமையுள்ளவர்களாக மாற்ற இக்கல்லூரிச் சமூகம் மாணவர்கட்கு வழிகாட்ட வேண்டும்.

பொன்விழாக் காணும் கல்லூரி சிறக்க இறையருளை வேண்டி எனது நல்லாசிகளையும் வழங்குகிறேன்.


செ. சிவராசா,
ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப்பணிப்பாளரும்,
முன்னாள் அதிபரும்,
தண்ணீரூற்று, முள்ளியவளை.



## Message from former Principal

## G.S.PARMESWARAN

I am very pleased to write a felicitation message for Mallavi c.c. I worked as a principal in Mallavi c,c from 1995 to 1996.

It was a happy period for me all the teachers and school development committee and parents were very cooperative to carry our duty well.

I thank all the people for their contribution to provide good education for the young children.

I wish all the been on this Golden Jubilee day

G.S.PARAMESWARAN,

DEO,

Puthukudiyiruppu.



# "மீண்டும் தொடங்கும் மிடுக்கு"

*"வாடை குளிர்ந்த தெனில் வாடி விடலாமோ?*
*வாரும் கடல் முழுதும் ஓடி வலைவீச"*

மகாகவியின் நரம்பைச் சுண்டும் இவ்வரிகள் ஞாபகத்தில் மோதுகின்றன. துன்பியல் கடந்து, துயரங்கள் மென்று சொத்துக்கள் சுகங்களை மட்டுமன்றி தனது வரலாறு கூறும் ஆவணங்களைக் கூட இழந்துவிட்ட நிலையிலும் மீண்டும் அன்றிருந்த அதே மிடுக்கோடு மல்லாவி மத்திய கல்லூரி தனது பொன்விழாவினைக் கொண்டாட உற்சாகத்தோடு முனைவதறிந்து, கல்லூரியின் நிழலில் வளர்ந்த என்போன்ற அனைவரும் பேருவகை கொள்வர். தனது நீண்ட பெரும் பயணத்தில் இத்தாய் அரவணைத்து அடைகாத்து வளர்த்த எண்ணற்ற குஞ்சுகள் இன்று பட்டுச்சிறகடித்து சொந்த நாட்டிலும் பிற தேசங்களிலும் புகழ் சேர்த்து நிற்கின்றன. அவர்கள் யாவருமே புளகாங்கிதம் அடைவது திண்ணம்.

கற்ற பாடசாலையையும் கற்பித்த ஆசிரியர்களையும் எவரும் இலகுவில் மறப்பது இல்லை. வாழ்நாள் முழுவதும் கூடவரும் நினைவுகள் அவை. கற்பித்த நினைவுகளும் இவ்வாறு அமையக்கூடும் என்பதற்கு நான் சாட்சி. ஆசிரியராகி, நல்லாசிரியராகி, பகுதித் தலைவர், உபஅதிபர், பிரதிஅதிபர், அதிபர் என தொழில் வாழ்வில் மேன்மையும் பெருமையும் பெற இடமளித்து கண்ணியமும் கௌரவமும் தந்த கல்லூரி என்றும் வணக்கத்துக்குரியது. இது வெறும் கல்விக்கூடம் மட்டுமன்று கற்றுகுட்டிகளான பலரைப் பட்டை தீட்டி ஒளிரச் செய்த கலைக்கூடமெனின் மிகையன்று.

இக்கல்லூரியின் நீண்ட நெடும் வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் நானும் இதனோடு பிணைப்பும் நெருக்கமும் கொண்டிருந்தேன் என்பது எனக்கு பெருமை தருவதாகும் உன்னுந் தோறும் உள்ளம் மகிழ்கிறது.

1984 முதல் 2004 வரையான, ஏறத்தாள இருபது ஆண்டுகள் இப்பாடசாலையிற் சேவையாற்றக் கொடுத்து வைத்திருந்தேன். 1984ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இப்பாடசாலையின் புகழ் பூத்த அதிபர்களில் ஒருவரான திரு.தா.சிவபாலு அவர்களின் காலத்தில் இப்பாடசாலையில் என் சேவை ஆரம்பமானது. அன்று முதல் பாடசாலையின் படிப்படியான பல்வேறு வளர்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்திருக்ககூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. பலவற்றிற்கு பங்காளியாக இருக்கக்கூடிய பாக்கியமும் கிடைத்தது என்று சொல்வது மிகையானதல்ல.

பாடசாலைக்காகத் தனது வாழ்வையும் வளத்தையும் முழுமையாக அர்பணித்துழைத்த செம்மல் அமரர் உயர்திரு செ.மயில்வாகனம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றார். தனது உன்னதமான உழைப்பினால் ஒரு செம்மை மிக்க தடம் அமைத்துச் சென்ற அமரரின் பாதையில் புதிய அதிபர் கால் பதித்தார். இவர் தமது சேவைக் காலத்தில் பாடசாலைக்காகச் செய்த சேவைகள் அளப்பரியன. நன்றியோடு நினைவு கூறப்படவேண்டியன. கல்வியிலும் கவிநிலையிலும் பௌதீகவள மேம்பாட்டிலும் பாடசாலை இவரது காலத்தில் உச்சத்தைத் தொட்டமை யாராலும் மறுக்க முடியாத உண்மை.

எளிமையாகவும் அதேவேளை அந்நியோன்யமாகவும் பழகும் பண்பு காரணமாகக் கல்லூரிச் சமூகத்தை முழுமையாக உள்வாங்கிப் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தினார். எண்ணற்ற அபிவிருத்திப் பணிகள் இவரது காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. எனினும் விசேடமாகப் பற்றையாக இருந்த பகுதியைத் தானே முன்னின்று, பலரது உதவியையும் பெற்று, வெட்டித் துப்புரவு செய்து சிறந்தவொரு விளையாட்டு மைதானமாக உருவாக்கியமை, க.பொ.த உ/தர வகுப்பில் விஞ்ஞான வகுப்புக்களை ஆரம்பித்து 1C பாடசாலையாக இருந்த பாடசாலையை 1AB பாடசாலையாக்க அரும்பாடுபட்டமை போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். ஏறத்தாழ ஏழு வருடங்கள் இவர் அதிபராகப் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.


இவரைத் தொடர்ந்து 1990இல் திரு. சிவராசா அவர்கள் அதிபராகக் கடமையேற்றார். இனிமையான மென்மையான சுபாவம் கொண்டவரெனினும் கடமையில் கண்டிப்புடன் பாடசாலையைத் திறம்பட வழி நடத்திச் சென்றமையை மறக்க முடியாது. கல்வியிலோ இணை பாடவிதானச் செயற்பாடுகளிலோ, பௌதீக வள விருத்தியிலோ எந்தப் பின்னடைவுமின்றி பாடசாலை ஏறு முகமாகக் காணப்பட்டது. பலரது பாராட்டையும் பெற்றது.

தொடர்ந்து திரு.பரமேஸ்வரன் அவர்கள் 1995இல் அதிபரானார். குறைந்த காலப்பகுதியே ஏறத்தாழ ஒருவருடம் இவர் அதிபராகச் சேவையாற்றினும், மிகுந்த செயலூக்கமுள்ள அதிபராக விளங்கினார். இவரது காலத்திலேயே மல்லாவி மகா வித்தியாலயம் மல்லாவி மத்திய கல்லூரியாகத் தரமுயர்ந்தமை குறிப்பிடத்தக்கது. அதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டாரென்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த வலிகாமம் இடப்பெயர்வோடு கல்லூரி பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தது. அக்காலகட்டத்தில் திரு.சு.கலாதரன் அவர்கள் அதிபராக கடமையேற்றார். இடம்பெயர்ந்தோர் நலன்புரிமுகாமாகவும் அதே வேளை ஏற்கனவே இருந்த மாணவர்களோடு பெருந்தொகையாக வந்து சேர்ந்த இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு கற்பிக்கும் கல்விக்கூடமாகவும் கல்லூரி மாறியது. பற்றாக்குறையான வளங்களோடும் துணிச்சலோடும் சந்தர்ப்பத்திற்கேற்ப முடிவுகளை மேற்கொண்டு பலரது ஆதரவையும் பெற்றுப் பாடசாலைக்கேற்பட்ட சவால்களை வெற்றிகரமாகக் கையாண்டார். பாடசாலை நெருக்கடி நிலைமையிலும் புகழோடு நிமிர்ந்து நின்றது. இவரது காலப்பகுதியும் பாராட்டுக்குரியதோர் காலப்பகுதியாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

திரு.சு.கலாதரன் அவர்கள் வெளியூர் சென்றதன் காரணமாக பிரதி அதிபராகக் கடமையில் இருந்த நான் அதிபர் பொறுப்பை ஏற்க வேண்டியிருந்தது. 1999 மார்ச் முதல் நான் அதிபராகக் கடமையாற்றினேன். எனது சேவை 2004 வரை நீடித்தது. எனவே கடுகி நடந்து நீண்ட பயணம் அதுவும் கல்விப் பயணம் மேற்கொண்டுள்ள மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழாவில் தாயை வணங்கி வாழ்த்தி மகிழ்கிறேன்.

**திருமதி. கோகிலவாணி தேவராசா,**
**முன்னாள் அதிபர்.**



# வாழ்த்துச்செய்தி

1. வளங்கொழிக்கும் வன்னி மாநகரிலே முல்லைமாவட்டத்திலே துணுக்காய்ப் பிரதேசத்தில் பெரும்விருட்சமாக அமைந்து தரமான கல்வி மூலம் தரமான சமூகத்தை உருவாக்கி மற்றும் உருவாக்குவதற்க்காக அரும்பணியாற்றிக்கொண்டிருக்கும் மு/மல்லாவி மத்தியகல்லூரியின் 50வது ஆண்டுகள் நிறைவையொட்டி கல்லூரித்தாய்க்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமையடைகிறேன்

2. எவ்வித இன்னல்களும் தடைகளும் ஏற்பட்ட போதிலும் கல்லூரியானது தனது வளர்ச்சிப்பாதையில் இருந்து சிறிதளவும் விலகி இருக்கவில்லை

3. இன்றைய காலகட்டத்திலும் கல்லூரியின்தற்போதைய அதிபரான திரு.து,யேசுதானந்தா அவர்களின் தலைமையின் கீழ் கல்லூரி வளர்ச்சி கண்டு வருவது மிகவும் பாராட்டுதற்குரியது.

4. மேலும் பல்துறைசார்ந்த விற்பன்னர்களையும், ஆசான்களையும், பெரியோர்களையும், சான்றோர்களையும் உருவாக்கிய, உருவாக்குகின்ற உருவாக்கும் இப்பாடசாலை எதிர்காலத்தில் சகல துறைகளிலும் மென்மேலும் சிறப்படைந்து தரமான சமூகத்தை வளர்த்திட எனது நல்லாசிகளையும் உளமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

**தி.சத்தியபாலன்,**
**(முன்னாள் அதிபர், மு/மல்லாவி மத்திய கல்லூரி,)**
**அதிபர்,**
**யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.**


பொன்விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்
நீதிராசா
ஸ்ரோர்ஸ்
Neethirasa Stores
மொத்த சில்லறை வியாபாரம்
RELIABLE
தரமான பொருட்களை மலிவாகப்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்
Puredale
Puredale
கொழும்பு
மல்லாவி

# என் மனத்திரையிலிருந்து .........

பொன் விழாக் காணும் மு.்.மல்லாவி மத்திய கல்லூரித் தாயின் கிளைகளோடு 1998.01.23 ஆந் திகதி கிளையாய் நானும் இணைந்துகொண்டேன். இன்றுவரை கடமையாற்றும் என் நினைவுப் பதிவுகளை உங்களுடன் பகிர்ந்துகொள்வதையிட்டு மனமகிழ்வடைகின்றேன்.

1998 ஆம் ஆண்டு இக்கல்லூரியின் அதிபராக திரு.சு. கலாதரன் அவர்கள் கடமை புரிந்தார். அவரது காலத்தில் ஆசிரியராகவும் , பகுதித் தலைவராகவும் கடமைபுரிந்த இக்காலங்களை நன்றியோடு மீள நினைக்கின்றேன். இக்காலம் மல்லாவி மத்திய கல்லூரியின் மைற்கல் எனக்கூறலாம். யாழ் இடப்பெயர்வின்போது எமது பகுதி மாணவர்களுடன் ஏறக்குறைய நான்காயிரம் மாணவர்கள் கல்விகற்ற காலம். மத்திய கல்லூரியில் கட்டிடத்தொகுதி போன்று தற்காலிகக் கொட்டகைகளும் அமைக்கப்பட்டிருந்தன. எண்பதிற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் அனைத்துத் துறைகளிலும் சிறப்பான வளர்ச்சிப் பாதையில் காலடியை உறுதியாகப் பதித்த, அக்காலப் பகுதியில் சேவையாற்றிய அதிபரை பொன் விழாக் காணும் இந்நாளில் பெருமையோடு நினைவுகூறுகின்றேன்.

திரு.சு.கலாதரன் அதிபரிற்குப் பின், இவரது காலத்தில் பிரதி அதிபராகக் கடமை புரிந்த திருமதி.கோ.தேவராஜா கல்லூரித் தாயின் பெண் அதிபராகக் கடமை ஏற்றுக்கொண்டார். எந்தத் தடைவரினும் தளராத உறுதிகொண்டவர். மேடைகளில் யாருடைய பேச்சைக் கேட்காவிடினும் இவரது பேச்சைக் கேட்கும் சந்தர்ப்பத்தைத் தவறவிடுவதில்லை. பேச்சிலே தமிழ் துள்ளிவிளையாடும். எழுத்தில் தமிழ் தன்பண்பைக் காட்டும். இவரின்பணி கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும்பங்கு வகித்தது யாவரும் அறிந்ததே. கல்லூரியின் பழைய மாணவர் சங்க இலண்டன் கிளையின் ஆரம்ப ஸ்தாபகர் இவரே. இவரது முயற்சியாலும் இலண்டன் வாழ் பழைய மாணவரது முயற்சி ஒத்துழைப்பாலும் சங்கம் ஆரம்பித்து இயங்கத்தொடங்கியது. இவரது காலத்தில் பிரதி அதிபராகக் கடமை புரிந்தேன்.

2005 ஆம் ஆண்டு திருமதி.கோ.தேவராஜா இடமாற்றம் பெற்றுச் சென்ற காலத்தில், கல்லூரியின் பொறுப்பை அதிபர் இல்லாத காரணத்தினால் ஏற்றுக்கொண்டேன். திரு.சு.கலாதரன், திருமதி.கோ.தேவராஜா இரு அதிபர்களிடமும் கற்றுக்கொண்ட நிர்வாகத்திறனும், ஆளுமைப் பண்புடன் இறைவனின் ஆசியும் கிடைத்தமையினால் கல்லூரியின் வளர்ச்சிப் பாதை எந்த இடையூறும் இல்லாது தொடர்ந்து இருந்தது. அந்தக் காலப்பகுதில் நாட்டுச்சூழல் எப்படி என்பது அனைவருக்கும் தெரிந்ததே. அக்காலத்தில் கடமையாற்றிய ஆசிரியச் சகோதரர்கள், தொண்டராசிரியர்கள், பணியாளர்கள், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியோரின் ஒத்துழைப்பால் கல்லூரி தனது கல்விச் சேவையைத் தளராது முன்னெடுத்தது. இக்காலத்தில் மாடிக்கட்டிடம், நூலகம், கொடியேற்றும் மேடை, நடன அறை என்பன பௌதீக வளமாக அமைக்கப்பட்டன. தண்ணீரத்தாங்கி பழைய மாணவரின் நிதியுடன் சேர்த்துப் புனரமைக்கப்பட்டது. மயில்வாகனம் மண்டபம் திருத்தப்பட்டது. பழைய மாணவர்சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இரண்டினதும் அனுசரணையுடன் திருமதி றுஜினா இலட்சுமணநாதனின் ''வரலாற்றுப் பாதை'' எனும் நூல் சிறப்பாக வெளியீடு செய்யப்பட்டது. கல்லூரியால் வெளியிடப்பட்ட முதல் நூல் எனும் பெருமையையும் பெற்றுக்கொண்டது.

2006 ஐப்பசி மாதம் திரு.க.சத்தியபாலன் அதிபராகப் பொறுப்பேற்றார். போர்ச்சூழல் காரணமாக அதிக காலம் சேவையாற்ற முடியவில்லை. மீண்டும் 2007 இரண்டாம் மாதம்வரை நானே பொறுப்பேற்கவேண்டிய நிலை. இக்காலம் வன்னி வரலாற்றின் கடுங்காலம் என்றே கூறவேண்டும். சோதனைகள், வேதனைகள் எல்லாவற்றையும் மனதிற்குள்ளே மறைத்துக்கொண்டு, மாணவரின் கல்விச் சேவைக்கு, கல்விச் சமூகம் முகங்கொடுத்தது மறக்கமுடியாத காலப்பகுதி. இருப்பினும் மாணவரின் வெளியீடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தினோம். ஏழு மாணவர்கள் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்றனர். க.பொ.த. சாதாரண தர, க.பொ.த. உயர் தரத்தில் சிறப்பான சித்திகளைப்பெற்று பல்கலைக்கழகத்திற்கு அநேகமான மாணவர்கள் தெரிவானார்கள். (தரவுகள் அழிவடைந்தமையால் சரியாக விபரம் குறிப்பிடமுடியவில்லை)

2007 மார்ச் மாதத்தில் தற்போதைய அதிபர் திரு.து.ஜேசுதானந்தர் அதிபராகக் கடமையேற்றார். 2008 ஆம் ஆண்டு இடப்பெயர்வு 2009 இல் டிசம்பர் மாதம் மீள்குடியேற்றத்துடன் மீண்டும் தன்பணியைக் கல்லூரி ஆரம்பித்துள்ளது. இப்பிரதேசவாசியான தற்போதைய அதிபர் கல்லூரியின் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் ஆர்வமுடையவர். சிறந்த அதிபருக்கான ஜனாதிபதி □பிரதீபா பிரபா□ விருது இவ்வருடம் கிடைத்துள்ளமை பாராட்டுக்குரியது.

பொன்விழாவைக் கொண்டாட வேண்டும் என்ற எண்ணக்கருவை வெளிப்படுத்தி இன்றைய விழாவிற்கு தூண்டுகோலாக விளங்கிய திருமதி.று.இலட்சுமணநாதன் இதழாசிரியருக்கு இந்த இடத்தில் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். தன்வளர்ச்சிப் பாதையில் வீறுநடைபோடும் மு.்.மல்லாவி மத்திய கல்லூரித் தாய் பொன்விழாக் காணுகிறாள். தன்வரலாற்றில் பல சாதனைகள் ஈட்டிய கல்லூரி, இனிவருங் காலங்களிலும் வெற்றித் தடயங்களைப் பதிக்க எல்லோரும் கைகளை இணைத்துக்கொள்வோம்.

**திருமதி. பு. பாலசுப்பிரமணியம்**
**பிரதி முதல்வர்,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி.**



# எண்ணத்தில் உதித்த சிலதுளிகள்..

"மனம் ஒன்றாய்
மதம் ஒன்றாய்
இனம் ஒன்றாய்
இடம் ஒன்றாய்
குலம் ஒன்றாய்
குணம் ஒன்றாய்"

கூடிக்கற்கும் இடமே பாடசாலை. இவ்வாறு ஒரு பாடசாலை வேண்டும் என மல்லாவிப் பிரதேச மக்களிடம் நல்லெண்ணம் உதயமாகியதால் ஒரு பாடசாலை உருவாகி, படிப்படியாக வளர்ச்சியடைந்து மல்லாவி மத்திய கல்லூரி என மிளிர்ந்துநின்று இன்று பொன்விழா காணுகின்றது என்பதை நினைத்தால் பெருமையாக இருக்கின்றது. கல்லூரி வளர்ச்சிக்காக உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், அதிகாரிகள், நலன்விரும்பிகள் அனைவரதும் ஆசியுடன் தொடர்கிறேன்.

1961இல் ஓலைக்கூரையுடன் கூடிய ஒரு மண்டபத்தில்தான் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கப்பட்டது. பின் அது இரண்டு மண்டபமாகக் கட்டப்பட்டு வகுப்பறைகள் பிரிக்கப்பட்ட கட்டிடங்களாக வளர்ச்சியடைந்தது. ஆய்வுகூடம் அமைக்கப்பட்டும், வாசிப்புக்கு உதவியாக நூலகம், பிரார்த்தனை மண்டபம், விளையாட்டு மைதானம் என விரிவடைந்து கல்லூரியாக வளர்ந்து பல நல் முத்துக்களை உருவாக்கி கல்லூரி பொன்விழா காண்பதை நினைத்து மனம் மகிழ்ச்சி காண்கின்றது.

இக்கல்லூரியில் கடமை புரிந்து ஒளியேற்றி நன்முத்துக்களை உருவாக்கிய அதிபர்கள் ஆசிரியர்கள் வாழ்க! கல்வி வளர்ச்சிக்கும் கல்லூரி வளர்ச்சிக்கும் ஒத்துழைத்த மாணவர்கள் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், அதிகாரிகள், நலன்விரும்பிகள், பொறியியலாளர்கள், மிருக வைத்தியர்கள், பல்வைத்தியர்கள், விவசாய உத்தியோகத்தர்கள், கணக்காய்வாளர்கள், விஞ்ஞான மற்றும் கலை பட்டதாரிகள் கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைக்கும் நற்பிரஜைகள் அனைவரையும் மனதில் நினைத்து கல்லூரித்தாய் பெருமையடைவதை நினைத்தால் மகிழ்ச்சியாக இருக்கிறது.

1962இல் அதிபராக இருந்த திரு.க.பெரியதம்பியாகிய எனது தந்தையார் இருந்தால் பொன்விழா காணும் இந்நாளை நினைத்து பெரு மகிழ்வுடன் ஆசி வழங்குவார். காலத்தால் அழியாதது கல்வி, உலகில் நிலைத்து நிற்பது கல்வி, எனவே கல்வி என்றும் வளரட்டும்

*ஓங்குக கல்லூரி வளர்ச்சி, வளர்க அதன் பெருமை*

செல்வி. ஈஸ்வரிதேவி பெரியதம்பி,
இளைப்பாறிய ஆசிரியர்.

# வேரூன்றி ஆண்டுகள் ஐம்பது

வந்தவரை வாழவைக்கும் வன்னி மண்ணிலே செல்லமுத்து அம்மையின் புளியடி வளவிலே ஓலைக் கொட்டிலிலே ஐந்து ஆசிரியர்களுடனும் விரல் விட்டு எண்ணக் கூடிய மாணவர்களுடனும் தான் இப்பாடசாலை ஆரம்பமாகியது. அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையாக இருந்து மகாவித்தியாலயமாகி இன்று மத்திய கல்லூரியாகி பொன் விழாக் கொண்டாடப்படுகின்றது, என்பதை எண்ணி புளகாங்கிதம் அடைகிறேன். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது அல்லும் பகலும் உழைத்தவர்கள் பலரே அவர்களின் அயராத உழைப்பினால் ஆலமரம் போல் பெருவிருட்சமாக வளர்ந்து நிற்கின்றது. ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களை உள்ளடக்கி ஆசிரியர்கள், நிர்வாகத்தினர், பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் முன்னேறி பல கல்விமான்களை உருவாக்க வித்திட்ட கல்விக்கூடமாக விளங்கின்றது.

சுட்டு விரல் பிடித்து வித்தியாரம்பம் செய்து பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை ஒரே பாடசாலையில் கல்விகற்று முதல் மாணவியாக பல்கலைக்கழகம் செல்வதற்கு வழிகோலியதும் இப்பள்ளிதான். இப்பாடசாலையின் குறுகிய காலம் ஆசிரியராகப் பணிபுரிய கிடைத்ததும் நான் செய்த பாக்கியமே.


வன்னி மண்ணில் தவழ்ந்து, வளர்ந்து இன்று புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் இப்பாடசாலையின் ஒவ்வொரு வளர்ச்சிப் படியினையும் கண்டு பெருமிதமடைவேன். மாணவர்களுக்கு கல்வியறிவு புகட்டுவதிலிருந்து புலம்பெயர்ந்தமக்களுக்கு புகலிடம் அளிப்பது வரை பலபணிகளை இப்பாடசாலை செய்வதை நாம் அறிவோம்.

இப் பாடசாலைியில் நான் பெற்ற கல்வியறிவு தான் இன்று நோர்வே நாட்டின் தலைநகரத்தில் தலை சிறந்து விளங்கும் தமிழ் பாடசாலையின் நான் கல்விப் பணியாற்றுவதற்கு வழிகோலியது எனலாம். இவற்றுக்கெல்லாம் களம் அமைத்த பெருமைகளுக்குரிய இக்கல்லூரியின் மேம்பாட்டிற்கு இங்கு பணிபுரியும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், சமூக நல ஆர்வலர்கள் போன்றோரின் பங்களிப்பு முக்கிய இடம்பெறுகிறது. இக் கல்லூரியின் கல்வி கற்ற மாணவர்கள் பூமிப்பந்தின் மூலை முடக்குகளிலெல்லாம் வாழ்ந்து வந்தாலும் அவர்களின் கடந்த கால வாழ்வும் வளர்ச்சியும் இக் கல்லூரியின் பெயர் சொல்லுமே.

இப்பாடசாலையின் வெள்ளிவிழா கொண்டாட்டத்தின் போது கலந்து கொண்டு உரை நிகழ்த்த சந்தர்ப்பம் கிடைத்தது, ஆனால் பொன்விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள முடியாதது மனதிற்கு வேதனையைத் தந்தாலும் மறுபுறம் பொன்விழாக் கொண்டாடுவதில் மனதிற்கு மகிழ்வும், நிறைவுமே. இந் நிகழ்வு சிறப்பாக நடந்தேற வாழ்த்துக்களையும், ஆசிகளையும் கூறிக் கொள்கிறேன்.

*வாழ்க தமிழ், வளர்க நம் கல்விக்கூடம்*

**திருமதி. புஸ்பராணி இளையராஜா,**
**பழைய மாணவி,**
**நோர்வே.**



# மல்லாவி மத்திய கல்லூரி

## அன்னையே நீ வாழி!!!

முல்லையும் மருதமும் சேர்ந்து அழகுறும்
மல்லாவி என்னும் மகிழ்வுறு பதியில்
புள்ளினம் இசைபாட மந்திகள் மகிழ்ந்தாட
புள்ளிமான் துள்ளிவர பசுவினங்கள் பால் சொரியும்.

வன்னி மண்ணின் வளமிகு பதியில்
தன்னி கரில்லா தனிப்பெரும் கல்லூரி
என்னருந் தாயே! மல்லாவி மத்திய கல்லூரி
அன்னையே நீ பல்லாண்டு வாழ்க!

கல்வித் தீபம் ஏற்றி வைத்து
நல்லொளி பரவ வழி அமைத்தாயே
மல்லாவி மத்திய கல்லூரி அன்னையே!
பல்லோரும் போற்றப் பல்லாண்டு வாழியவே!

உன் சிறகிற்குள் இருந்த சிறார்கள்
உன் புகழ்கூற பல்துறையில் மிளிர்கின்றனர்.
பொன்விழாக் காணும் அன்னையே நீயென்றும்
பொன் போல் மிளிர்ந்திட வாழிய! வாழியவே!

முச்சங்கம் வளர்த்து மூவேந்தர் காத்ததமிழ்
முத்தமிழ் எம்மூச்சிற் கலந்த தமிழ்
செந்தமிழை வளர்க்கும் சீரிய நற்தாயே!
பைந்தமிழால் உனக்குப் பாமாலை சூட்டுகிறேன்.

அதிபர், ஆசிரியர் அனைவரும் வாழியவே!
மதிநிறை மாணவர்கள் மாண்புடன் வாழியவே!
மல்லாவி மத்திய கல்லூரி வாழியவே!
எல்லோரும் போற்றிட என்றுமே வாழியவே!

**திருமதி. வாணி தியாகராஜா,**
**பழைய மாணவியும், ஆசிரியையும்,**
**பிரான்ஸ்.**



# என்றும் வாழ்க என் தாயே...

மல்லாவி மத்திய கல்லூரிக்குப் பொன்விழா என நினைக்கும் போதே உடல் சிலிர்க்கிறது. என் வாழ்க்கைக்கு ஒளியூட்டி, வழிகாட்டிய என் அன்னை தன் சேவையில் ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளார். அளப்பெரும் கல்விப் பணியில் தன்னை அர்ப்பணித்த என் தாய்க்கு பொன் விழா எடுப்பது சாலச்சிறந்ததே.

என் வாழ்வின் வசந்த காலங்கள் பெரும்பாலும் மல்லாவி மத்திய கல்லூரியிலேயே கழிந்தன. எங்கள் தாய் எண்ணம் போல பலருக்கு அறிவுகாட்டி, வழிகாட்டி, நெறிப்படுத்தி,உயர்வுக்கு வழிகோலிய அந்த நாட்கள் என்றும் பசுமையானவை.

தமிழர் தம் வாழ்வில் பல்வேறு துன்பங்களை ஏற்படுத்திய யாழ்ப்பாண இடப்பெயர்வு என் வாழ்வில் ஒரு பெரும் நன்மையைச் செய்தது. அது என்தாயிடம் நான் கற்பதற்கு வழிகோலியது.

1996ஆம் ஆண்டு நான் தரம் பத்தில் சேர்வதற்காக மல்வாவி மத்திய கல்லூரிக்குச் சென்றேன். பாடசாலை இடம் பெயர்ந்தவர்களால் நிரம்பி வழிந்தது. அதிபராக திரு.G.S.பரமேஸ்வரன் அவர்கள் அவரது அலுவலக அறையில் இருந்தார். ஆனால் பாடசாலை மாஞ்சோலை என்னும் இடத்தில் மரநிழலில் நடைபெற்றது. நான் அதிபரிடம் எனக்குரிய அனுமதியை வேண்டினேன். ஆனால் போதிய இடமின்மை காரணமாக என்னை அனுமதிக்க முடியவில்லை என அவர் கூறினார். எனக்கு கல்வி மேலிருந்த தீராததாகம் என்னை அவர் காலில் விழ வைத்தது. உடனே எந்த விதமான சம்பிரதாயங்களும் இல்லாமல் தரம் 10வகுப்பறைக்குள் கொண்டு வந்து விட்டுச் சென்றார். அதற்கு அடுத்தநாள் நான் பதிவுகளை முறைப்படி மேற்கொண்டேன். என் தாயிடம் நான் சேருவதற்கு எனக்கு அனுமதித்த அதிபர் திரு.G.S.பரமேஸ்வரன் என்றும் என் நன்றிக்குரியவர்.

தரம் 10இல் மல்லாவி மத்திய கல்லூரியில் அனுமதிக்கப்பட்ட போது மாஞ்சோலையில் மர நிழலிலேயே நாம் எல்லோரும் கல்வி கற்றோம். வகுப்பில் ஆசனங்களுக்குப் பற்றாக்குறை, ஒரு கதிரையில் இருவர் என்ற நிலையில் உட்காந்திருந்தோம். என்னைப்போல் பலர். எவருமே எனக்கு முன்னர் தெரிந்தவர்கள் அல்லர். நான் மல்லாவி மத்திய கல்லூரியில் சேர்ந்தபோது எனக்கு முதல் வகுப்பு எடுத்தவர் திருமதி. குலேஸ்வரி அவர்கள். எடுத்த பாடம் சமூகக் கல்வி, பாடத்தின்மேல் இருந்த ஆர்வமும் ஆசையும் அவரின் கனிவான அணுகு முறையால் அதிகரித்தது. அவர் பின்னர் எனக்கு கா.பொ.த உயர்தரத்தில் புவியியல் கற்பித்தார். அவருடைய அணுகுமுறைதானோ தெரியவில்லை எனக்கு புவியியற் பாடத்தின் மேல் தீராத காதலை ஏற்படுத்தியது தான் இன்று என்னை பல்கலைக்கழக புவியியற்துறை விரிவுரையாளராக்கியது.

பத்தோடு பதினொன்றாய் அத்தோடு இதுவும் ஒன்றாய் இருந்த என்னைப்பலரும் அறியும் வண்ணம் என்னை மேடையேற்றியவர் எனது வகுப்பாசிரியராகவும், விஞ்ஞான ஆசிரியராகவும் இருந்த திரு. கஜன் அவர்கள். முதன்முதலில் மல்லாவி மத்திய கல்லூரி மேடையில் பேசும் சந்தர்பத்தினை வழங்கியிருந்தார். இந்துமாமன்ற நவராத்திரி பூஜைக்காக மயில்வாகனம் மண்டபத்தில் மேடையேறிய நான் பின்னர் பல தடவைகள் மேடையேறவும் இந்துமாமன்றத்தின் தலைவராகி ஒவ்வொரு வெள்ளிக்கிமையும் நற்சிந்தனையும் இந்துமாமன்றத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்க அவரே எனக்கு வழிகோலினார்.

மல்லாவி மத்திய கல்லூரியின் கலை நிகழ்வுகளில் இன்றும் என்னால் மறக்கமுடியாதது 1997ஆம் ஆண்டு நடைபெற்ற “மதுர இரவு” நிகழ்வு. தரம் 11ல் நான் கல்விகற்றுக் கொண்டிருக்கும் போது நிகழ்ந்த இந்நிகழ்வில் இடம்பெற்ற நாடகத்திற்கு அழைத்து நடிக்கச் சொன்னவர் அப்போது மல்லாவி மத்தியகல்லூரியின் ஆசிரியரும் தற்போது வேலணை மத்திய கல்லூரியின் அதிபராக இருக்கின்ற திரு. கிருபாகரன் அவர்களே. அப்போது மிகச்சிறந்த கிரேஷ்ட மாணவர்களும் என்னுடன் அந்த நாடகங்களில் நடித்திருந்தனர். அவர்களில் பலர் தற்போது உயர்ந்த நிலைகளில் உள்ளனர்.

மல்லாவி மத்திய கல்லூரிக்கும் எனக்குமான உறவினை அதிகரித்தது என்னுடைய உயர்தர வகுப்புக்காலத்திலே. நான் கலைப்பிரிவினைத் தேர்ந்தெடுத்திருந்தேன். என்னுடைய வகுப்பு மயில்வாகனம் மண்டபத்தில் மேடைக்கு அருகில் உள்ள வகுப்பு. எமது வகுப்புக்கு எங்களுடைய இந்து நாகரீக பாட ஆகிரியர். செல்வி.பு.இராஜேஸ்வரி அவர்கள் வகுப்பாசிரியராக நியமிக்கப்பட்டார். தமிழ் பாடத்தினை அப்போது அதிபராக இருந்த திருமதி.கோகிலவாணி தேவராஜாவும் புவியியல் பாடத்தினை ஆரம்பத்தில் திருமதி.குலேஸ்வரி அவர்களும் திருமதி. சண்முகரட்ணம் அவர்களும் கற்பித்திருந்தனர். இவர்களுடன் திருமதி.சந்திரா திருநாவுக்கரசு, திரு.தாஸ் போன்றோர் தமிழை கற்பித்தனர். இவர்களிடம் நான் பயின்றது என்னுடைய அதிஷ்டம் .அவர்கள் எனக்கு அறிவினையும், அன்பினையும், கல்வி மீது தீராத ஆசை போன்ற எல்லாவற்றையும் எனக்கு போதித்தனர். இக்காலப்பகுதியில் நான் புவியியற்துறை தலைவராகவும், இந்துமாமன்றத்தின் தலைவராகவும் இருந்து பல்வேறு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தியிருந்தோம். மாணவர்களுக்கு போதனைகளையும், ஆலோசனைகளையும் வழங்குவதற்கு இந்துமாமன்றம் பெரிதும் பாடுபட்டது.

நான் க.பொ.த உயர்தரத்தில் பயின்றபோது சிரேஷ்ட மாணவ முதல்வனாக நியமிக்கப்பட்டேன். 1999/2000 ஆண்டுகளில் நான் சிரேஷ்ட மாணவ முதல்வனாக செயற்பட்டேன். வன்னியில் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற இடப்பெயர்வு காரணமாக 3000க்கு மேற்பட்ட மாணவர்கள் எங்கள் பாடசாலையில் கல்வி பயின்றனர். அதனால் சிரேஷ்ட மாணவ முதல்வன் பதவியும் மிகவும் கடினமானதாக இருந்தது. எனினும் என்னுடைய காலத்தில் அந்தப்பணியைச் சிறப்பாக செய்தேன். என்றே எண்ணுகிறேன். அதற்கு அப்போதிருந்த அதிபர் ஆசிரியர் என பலரும் உதவிபுரிந்தனர்.

மல்லாவி மத்திய கல்லூரியுடன் நாம் இணைந்திருந்த பொன்னான காலத்தில் மாணவர்களுக்கே உரிய சின்னச் சின்ன சேட்டைகள், சண்டைகள்,கேலிகள்,கிண்டல்கள் என இருந்தாலும்,எங்கள் கல்லூரித்தாயின் பெருமையைப் பறைசாற்ற நாங்கள் எங்களை ஈட்டத்தவறுவதில்லை. துணுக்காய்க் கல்விவலயத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வன்னிப்பெருநிலப்பரப்பில் எங்கள் பாடசாலை கல்வி,விளையாட்டு, கலை நிகழ்வுகள் என எல்லாவற்றிலும் கொடிகட்டிப் பறந்தது.

எங்களுக்கு எங்கள் தாய் கல்வியை ஊட்டி அன்பினை வளர்த்து,பண்பைப் பெருக்கி,புதிய உறவுகளை இணைத்து எங்கள் வாழ்க்கையை மேம்படுத்தினாள். துன்பங்கள் பல நிறைந்த அந்த காலங்களில் இன்பங்கள் பலவற்றை எங்களுக்கு வழங்கினாள். எங்களுடைய உயர்தர வகுப்பின் கடைசிக்காலங்களில் நாங்கள் பகலில் கல்வி கற்பதற்கும் இரவில் கற்றதை மீட்பதற்காகவும் பாடசாலையில் இணைந்திருந்தோம். இதனால் எங்களுக்கும் எங்கள் தாய்க்குமான உறவு மேலும் அதிகரித்து இறுக்கமானது.

மல்லாவி மத்திய கல்லூரியுடனான எனது அனுபவங்கள் எழுத்தில் வடிக்க முடியாதவை. மனிதனின் சில உணர்வுகளை வெளிப்படுத்த மொழி இல்லை. மல்லாவி மத்திய கல்லூரி என்னும் பெயரை உச்சரித்தாலே உள்ளம் சிலிர்க்கும். ஊடல் சிலிர்க்கும். எங்கள்தாயின் நினைவுகள் எங்கள் கண்முன்னே மீண்டும் வராத சொர்க்கம். தாயே உன்னிடம் எமக்குள்ள பசுமையான நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சில் நிற்கும்.

எங்கள் தாயே பொன் விழாக் காணும் உந்தனுக்கு நாம் செய்யும் கைமாறு உன்புகழ் பரப்பி உன்னை விண்ணை முட்டும் புகளுக்குரியவளாக்குவதே. உந்தன் பெருமையை உலகறியச் செய்வோம். எங்கள்தாயே மீண்டும் ஒரு பிறப்புண்டேல் அதிலும் உன்னிடமே நாம் கல்வி கற்க வேண்டும். எப்போதும் உன் நினைவை என் நெஞ்சில் சுமக்கவேண்டும். எங்கள் தாயே நீ என்றும் வாழ்க!

*"மல்லாவியுறை மத்திய கல்லூரி மாண்புடனே என்றும் வாழ்க!"*

**நா.பிரதீபராஜா**
**(சிரேஷ்ட மாணவ முதல்வன்1999/2000,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி),**
**சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியற்துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

**வெளிநாட்டிலிருந்து வருகை தந்த புகைப்படப்பிடிப்பவர்கள் எமது பாடசாலை மாணவர்களுக்கு பயற்சிகளை வழங்கியபோது.....**





# என் தாயே நீ வாழ்க!

அன்று வாழையிலை அரிசியில்
உன் மடிமீதமன்று
"அ" எழுதிய அதே கரங்கள்
இன்று பொன்னேட்டின்
நீங்கா வரிகளை
எழுதுகின்ற மகிழ்வே!

ஆண்டு ஒன்று தொட்டு
இதே பாடசாலையில் தான் - நான்
சிந்திச் சிதறிச் சிரிப்பொலித்த
நினைவுகளை
இரைமீட்கும் விலங்கைப்போல்
மீட்டு மகிழ்கின்றேன்.

பசுமைப் புல்வெளியில் உறைந்து
தோய்ந்த பனித்துளிகளாகவும்
இலையுதிர் காலத்தில் பழுத்த இலைகளை
பறிகொடுக்கும் மரத்தின் வலிகளாகவும்
குரு சேஷ்திரத்தில் மரிக்கும்
மாவீரனின் உயிரின் இறுதிச்சொட்டு
ஒழுகும் தருணமாகவும்
வெயில் வெளியில் விழுந்த புழுவாகவும்
தாங்கொணா வலியில் தவழ்ந்தேன் - என்
கடைசிக்காலங்களில்

நீ அதிசயம்
நீ அழகு
ஆயிரம் நாகபாணங்கள் வீசியும்
அழியாத வாய்மை நீ!
நீ சொல்லிக் கொடுத்தவை
இன்றும் என்னுள்
செம்புலப் பெயர் நீர் போல
இறுகப் பிணைந்ததால் தான்
நான் ஆசானானேன்.

ஐந்து வருடப் பட்டப்படிப்பில்
நான் அடைந்த இன்பமொன்றும்
உன் ஐம்பது வருடம் கடந்தும்
அழியாத உடலைக் கட்டியணைத்து
கண்ட இன்பம் போலில்லை
ஆயிரம் ஆயிரங் குழந்தைகளை
ஆழாக்கி வாழ வைத்த நீ
இன்றும் அதே நீயாய்
அதிசயம் என்ன தெரியுமா?
உன்னில் கல்வி கற்ற பலர்
இன்று முழுநகை பூத்த
தலைகளாய் மாற
நீ மட்டும் அதே நீயாய்
மழலை இதழ் திறந்து
புன்னகைக் தழைக்கின்றாய்.

நீ பொன்விழாக்
காணும் போது நானும்
எழுபத்தைந்தாம் ஆண்டு எனது பிள்ளையும்
நூறாண்டு விழாவைப் பேரனும்
ஆயிரமாம் ஆண்டை என் சந்ததியில்
ஏதோ எந்திரப் பூவும்
காண்பது நிஜம்

உலகம் என்று அழியுமோ!
அன்று தான் தமிழும் அழியும்
தமிழ் என்று அழியுமோ
அன்று தான் நீ!
நான் சொல்வதைப் போல்
செம்மொழித் தமிழ்
அழிவது பொய்மை
ஆகவே தாயே
ஆண்டுகள் கடந்தும்
அழியாத உடலோடு
என்றென்றும் நீ வாழியவே
ஈரேழு உலகமும்
உன்பெயர் கூறும் என்தாய்
நீ வாழ்கவே

**திருமதி. சிவானந்தராணி மகேந்திரராஜா,**
**(பழையமாணவி),**
**ஆசிரியை,**
**விபுலாநந்தா கல்லூரி,**
**வவுனியா.**

# தொலையாத நினைவுகள்

1981ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நான் ஆசிரியர் கலாசாலையை முடித்துக் கொண்டு செல்லப் போகும் பாடசாலை எதுவாக இருக்கும் என்று என் எண்ண அலையை ஓட விட்டபோது முல்லை மாவட்டத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளீர்கள் என்ற கடிதமும் அதை அடுத்து சில தினங்களில் மு/ மல்லாவி அ. த.க பாடசாலைக்கு நியமனம் என்ற கடிதமும் என் கைக்கு எட்டியது. என்னுடன் செல்வி.வி. கந்தையா, திரு.யூ.றகுமத்துலா, செல்வி.ஜே. சின்னத்தம்பி ஆகியோரும் இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

முதன்முதலாக யாழ் மண்ணை விட்டு வெளிமாவட்டத்திற்கு இடமாற்றப்பட்ட திகிலுடன் 17.01.1982 அன்று இப்பாடசாலைக்கு யாழிலிருந்து. முல்லை செல்லும் பேருந்தில் புறப்பட்டேன். மாங்குளத்தில் இறங்கி மல்லாவி செல்லும் சிறிய பேருந்தில் ஏறிக்கொண்டேன். அந்நேரம் மல்லாவியைச் சேர்ந்த தங்கவடிவேல் என்பவரே சாரதியாக கடமையாற்றினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். சிறிது தூரம் சென்றதும் வன்னிவிளாங் குளத்தடி பாதையில் பேருந்து காற்றுப்போய் நின்று விட்டது. அச்சம் எல்லோரையும் பற்றிக் கொள்கிறது. காட்டுப் பாதை சற்று நேரத்தில் பேருந்து திருத்தப்பட்டு மீண்டும் தன் பயணத்தை தொடங்கிறது.

மல்லாவி அதிபர் விடுதியை. பேருந்தில் வரும்போதே கேட்டு அறிந்து கொண்டேன். அதிபரின் விடுதியின் இருமருங்கிலும் பச்சைப்பசேலென்ற வயல்வெளிகள் அவை காற்றில் அசைந்து என்னை வருக வருக என வரவேற்பதைப்போல் இருந்தன. அதிபர் எங்களை அன்புடன் வரவேற்றதுடன் மட்டுமல்லாது அன்றிரவு விடுதியில் தங்குவதற்கு ஒழுங்குகளையும் செய்து தந்தார். நான் ஆசிரியர் கலாசாலையிலிருந்து வெளியேறி முதன் முதலாக சந்தித்த அதிபர் இவரே. நான் அங்கு கடமையேற்க சென்றபோது திரு. செ. மயில்வாகனம் அவர்களே முதல்வராகக் கடமையாற்றினார்.

அடுத்த நாட் காலை முதல்வர் என்னை பாடசாலைக்கு அழைத்துச் சென்றார். மூன்றாம் தவணைக்காக விடப்பட்டிருந்த பாடசாலை மீண்டும் முதலாம் தவணைக்காக ஆரம்பிக்கப்பட்டு இரண்டாம் நாள் பாடசாலை மிகவும் அசுத்தமாகவும் துர்நாற்றமாகவும் காணப்பட்டது. பின் அங்கு வந்த மாணவர்களால் வெளவால் எச்சங்கள் உட்பட ஏனைய குப்பைகள் யாவும் அகற்றப்பட்டது. அத்துடன் மாணவர்கள் வரவும் மிகவும் குறைவாகக் காணப்பட்டது. இதற்குரிய காரணத்தை அதிபரிடம் வினவிய போது கால போக நெற்செய்கை அறுவடைக்காலம் என்பதால் மாணவர் வரவு குறைவு எனப் பதிலளித்தார். அப்போதே புரிந்து கொண்டேன் விவசாயத்தையும் , கல்வியையும் தங்கள் இருகண்கள் போல் பேணுகின்றனர் என்பதை.

அக்காலகட்டத்தில் ஒரு சில ஆசிரியர்களைத் தவிர மீதி ஆசிரியர்கள் யாழிலிருந்து தான் வருகை தந்தனர். பெரும்பாலும் காலை 6.00மணிக்கு புறப்படும் பேருந்து மல்லாவிக்கு காலை 9.00 மணிக்கு வந்தடையும். அனைத்து ஆசிரியர்களும் திங்கள் காலை இங்குவருகை தந்து வெள்ளி மாலையே யாழ் திரும்பச் செல்வார்கள்.

பெண் ஆசிரியர்களுக்கு என ஒரு பெரிய விடுதி உள்ளது. அவ்விடுதி 8 அறைகள் கொண்ட விடுதி அங்கு ஒரு ஆசிரியர் குடும்பம் வசித்து வந்தது. இதனால் நாம் அவ்விடுதியில் தங்குவதற்கு மிகவும் பெருந்துணையாக இருந்தது. மாலை வேளைகளில் பாடசாலைச் சுற்றாடல்களை நோக்கிய போது பாடசாலை விடுதியின் பின்பகுதி பெருங்காடாகவும், முன் பகுதி துணுக்காய் நோக்கிய வீதி அதனையும் கடந்தால் நீண்ட வயல்வெளி இதை விட அங்கு குடிமனைகளைக் காண்பது அரிதாகவே இருந்தது. பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு கடைகள் கூட இல்லை. பொருட்கள் வாங்குவதற்குச் செல்வதாயின் மல்லாவி வைத்தியசாலைக்கு அருகில் தான் வரவேண்டும். பயிர்ச்செய்கைக்காலத்தில் மட்டுமே அங்கொன்றும் இங்கொன்றுமாக மனித நடமாட்டங்களைக் காணமுடியும்.

மல்லாவி அ.த.க. பாடசாலையில் நான் வர்த்தக அசிரியராகக் கடமையாற்றினேன். அவ்வருடம (1982) தான் முதன்முதலாக க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றியதோடு மட்டு மல்லாது பல்கலைக்கழகத்திற்கும் புஸ்பராணி, லிங்கேஸ்வரன் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டமை ஆனது, பாடசாலை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

மேலும் இவ்வாண்டிலேதான் முதல்முதலாக க.பொ.த உயர்தர மாணவர்களின் இராப்போசன விருந்தும் நடைபெற்றது. இவ் இராப்போசன விருந்துக்கு வரலாற்றுத்துறைப் பேராசிரியர் யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கலாநிதி சிற்றம்பலம்

அவர்கள் சிறப்புவிருந்தினராகக் கலந்து சிறப்பித்தமை ஆனது இங்கு சிறப்பாக எடுத்துரைக்கப்படவேண்டிய விடயமாகும்.

வர்த்தகப்பிரிவு 1983ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டதுடன் இதே ஆண்டிலே மல்லாவி அ.த.க.பாட சாலை, மல்லாவி மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப் பட்டது. இத்தகைய பாடசாலையின் குறுகிய காலத்தில் ஏற்பட்ட வரலாறு காணாத வளர்ச்சிக்கு அக்காலப்பகுதியில் கடமையாற்றிய அதிபர் திரு.செ. மயில்வாகனம் அவர்களையே சாரும் என்றால் அது மிகையாகாது. இவரது குடும்பமே இப்பாடசாலைக்கு வரும் கல்வித்திணைக்கள அதிகாரிகளை வரவேற்பது முதல் அவர்களுக்கான சிற்றுண்டிகள் பரிமாறுவது வரை பெரும் பங்காற்றியுள்ளார்கள். அக்காலத்தில் மாணவர்கள் முழுமையாக ஆசிரியர்களின் கைகளிலே தங்கியிருந்தனர். ஆசிரியர், மாணவர்களின் அன்பு மிகவும் மகிழ்ச்சிக்குரியதாக இருந்தது. அத்தோடு பெற்றோரின் ஒத்துழைப்பும், அதிபர் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளும் மல்லாவி மகா வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு மைல் கற்களாக விளங்கின என்றால் அது மிகையல்ல.

குறுமுனியின் தோற்றம், மிகவும் அன்பாகப் பழகுவார், கல்லூரியின் வளர்ச்சியில் இவருக்கும் பங்குண்டு. ஆம், எமது காலத்தில் துணுக்காய்க் கோட்ட வட்டாரக்கல்வி அதிகாரியாக இருந்த திரு.சிவானந்தம் அவர்களே! இவரை பொன்விழா நாளில் நினைவிற் கொள்வது சாலச்சிறந்ததாகும்.

பாடசாலை அபிவிருத்திச்சங்க கூட்டங்களில் பெற்றோர் தங்களின் பங்களிப்பை வழங்குவதற்காக பல விவாதங்களில் ஈடுபட்ட பின்பே கூட்டம் நிறை வுறும். வருடா வருடம் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர் தொகை அதிகரித்துக் கொண்டே வந்தது. அக்காலகட்டத்தில் அயல் கிராமங்களான பாண்டியன் குளம், துணுக்காய், ஐயங்கன்குளம், கல்விளான், வவுனிக்குளம், பனங்காமம் போன்ற தூர இடத்து மாணவர்களுக்கும் உயர்கல்வி வழங்கும் கல்வி நிலையமாக எமது பாடசாலை விளங்கியது.

1984ஆம் ஆண்டிலே திரு.செ.மயில்வாகனம் அதிபர் அவர்கள் இளைப்பாறிய பின் திரு.சிவபாலு அதிபர் அவர்கள் அதிபராக கடமையாற்றினார். இவருடைய காலம் கல்லூரியின் பொற்காலம் என்று கூறப்படுமளவிற்கு பெருவளர்ச்சியடைந்திருந்தது. கல்லூரியின் சுற்றாடல் நிலம் பெருங்காடாகவே சுமார் 20ஏக்கர் நிலம் காணப்பட்டது. அவற்றை பாடசாலை அபிவிருத்திச்சங்கம் மூலமாகவும், வவுனிக்குள நீர்ப் பாசன திணைக்கள வாகன உதவியுடனும் பெரும் செலவில் காடழித்து, கழனிகளாக்கி பெரும் பணியாற்றினார். மேலும் அந்நிலம் காடாக மாறா வண்ணம் வருடாவருடம் சிறுதானியப்பயிர்ச் செய்கைக்கு பொதுமக்களிற்கு குத்தகைக்குக் கொடுத்துப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு வருமானம் ஈட்டும் வழியையும் முதன்முதலாக அறி முகப்படுத்தி வைத்தார். இன்னும் இந்த நடை முறையைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கையாண்டு வருகின்றமையை காணக்கூடியதாக உள்ளது.

துணுக்காய்ப் பிரதேசத்தின் கலங்கரை விளக்காகவும் அறிவொளி பரப்பும் கல்விக்கூடமாகவும், அப்பிராந்திய மக்களின் கண்ணாகவும், அரசினாலும் அதிபர்களாலும், பெற்றோராலும் அபிவிருத்தி செய்யப்பட்ட இப்பாடசாலை 1995ஆம் ஆண்டு யாழ் இடப்பெயர்வுடன் 1997ம் ஆண்டு இப்பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்தேன். எனவே இக்கல்லூரியின் வளர்ச்சிப்படிகள் மூன்று நிலைகளிலும் கடமையாற்றிய பெருமை எனக்கு உண்டு. மாங்குளம் துணுக்காய் வீதியிலே கம்பீரமாக காட்சி அளிக்கும் மல்லாவி மத்திய கல்லூரியின் உயர்ச்சியும், வளர்ச்சியும், மேலும் தொடர பொன்விழா நாளில் வாழ்த்தி தொலையா நினைவுகளை ஓர் கணம் மீட்டிப் பார்த்த திருப்தியுடன் நிறைவு கொள்கின்றேன்.

**திருமதி. பா. கிருபைநாதன்,**
**ஓய்வு பெற்ற பிரதி அதிபர்,**
**கிளி/திருவையாறு மகாவித்தியாலயம்,**
**கிளிநொச்சி.**



# வாழ்த்துரையும் வரலாறும்

சிற்பிக்குள்ளே இருக்கும் முத்து எல்லோருக்கும் எப்போதும் கிடைப்பதில்லை மிகவும் அரிதாக கிடைப்பதுதான் முத்து. அம்முத்துப் போன்றது தான் எங்கள் சொத்தான மல்லாவி மத்திய கல்லூரி. மல்லாவி அ.த.க பாடசாலை இன்று இப்படிப்பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது.

இந்த அன்னையின் மடியில் தவழ எல்லோருக்கும் கிடைப்பதில்லை. "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" இது ஔவையின் அமுத வாக்கு, அது போன்றதே இக்கல்லூரித்தாயின் வயிற்றில் பிறக்காது விட்டாலும் அவரின் அரவணைப் பில் வளர்வது அரிது. அப்படியான தாயின் முற்றத்தில் தவழ்ந்து நிமிர்ந்து நிற்போர் பல்லாயிரம் பேர். அதிலும் எழுத்து அறிவிப்பவன் இறைவன் என்பர். அவர்கள், உயிர்காக்க உடன் இருக்கும் வைத்தியர்கள், அரசியல்வாதிகள், பொறியியலாளர்கள், சங்கீத வித்துவான்கள், நடன நாட்டியக் கலாமணிகள், ஆசாரி கள், வியாபாரிகள் என் பேர் பெற்று வாழ்பவர்கள் பலர் உள்ளனர்.

இத்தனையும் இந்தத் தங்கத்தாயின் பிள்ளை கள். எத்தனை விலைமதிக்க முடியாத முத்துக்களை சிற்பி ஈன்றாலும் முத்தை எடுத்து விட்டால் முத்துக்கு சிற்பி சொந்தமில்லை. ஆனால், இந்தச் சிற்பியோ முத்தக்களை ஈன, ஈன இந்த சிற்பி தான் சொந்தக்காரி காலத்துக்கு காலம் பெருமை அடைகிறாள். தன் மைந்தர்களின் பெருமைகளைக் கேட்கக் கேட்க ஆனந்த நடனம் புரிகிறாள்.

மகன் தந்தைக்கு ஆற்றும் நன்றியை எல்லா மைந்தர்களும் செய்வதில்லை. ஆனால் இந்தத் தாய்க்கு எல்லோரும் நன்றி உடையவர்கள். 1958ஆம் ஆண்டு ஜனநாயக சோசலியக் குடியரசினால் குடியேற்றப்பட்ட இப்பிரதேசம் விரல் விட்டு எண்ணக்கூடிய குடும்பங்கள் வாழ்ந்த காலம்.

மாங்குளத்தில் இருந்து மல்லாவி வருவதானால் ஒற்றையடிப்பாதை கால்நடையாக அல்லது மாட்டு வண்டியில் வருவது அன்றைய வாகன வசதி அதுதான். இச்சிற்றூருக்கு நீர் ஊற்றுவது போல் மக்கள் குடியேற ஆரம்பித்தன. ஓரிரண்டு குடும்பம் பத்து பதினைந்தாக மாறியது. மக்கள் மாடு, மனை, வீடு எனக் கூடி வாழ்ந்தனர்.

கோயில் வைத்தியசாலை, பள்ளிக்கூடம் இப்படிப் பல சாலைகள் கிராமத்துக்குத் தேவைப்பட்டது. பள்ளிக்கூடம் சிறு கொட்டிலால் ஆனது. 1961இல் அரசினால் ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது. மல்லாவி எனும் கிராமம் வளம் கொழிக்கும் கிராமம் ஆனது. முத்துக்குளிக்கும் முல்லை மாநகரத்தில் பெருமையான கிராமம்.

தென்னங்கீற்றும் தென்றலும், செந்நெல்லும் கரும்பும், மாவும், கமுகும், பனையும் அதிலே தூக்கணாம் குருவிகள் சேதி சொல்லும் மாங்கிளியும் ,மரங்கொத்தியும் மகிழ்ந்து பாடும், செவ்வாழை தோட்டமும், தென்னை இளநீர்களும் தெம்மாங்கு பாடும், வளமுள்ள பலாவும் வானம்பாடிக்கூட்டமும் அன்ன ஊஞ்சல் கட்டி ஆட சிறுவர் கூட்டமும் எல்லாமே உருவானது.

ஆரம்பப் பாடசாலையிலே கல்வி கற்ற பலர் அன்னை மண்ணிலே அழித்து, அழித்து அ, ஆ, இ, ஈ என எழுதினோம். சிறு கொட்டில் மாறி பெரியதோர் மண்டபம் ஆனது. மேடை அமைக்கப்பட்டது. அங்கே பண்ணோடு இசை பாடினோம், கோலாட்டம், கும்மி, பண்டாரவன்னியன் நாடகம் என பள்ளிப்படிப்போடு நின்று விடாமல் பல கலைகளையும் கற்றோம்.

குடிநீருக்காக கிணறு வெட்டிக்கட்டப்பட்டது. அதிபர் விடுதி ஆசிரியர் விடுதி என ஓரளவு அரசினால் செய்து கொடுக்கப்பட்டது. நடராசா சிவசக்தி, சுந்தர மூர்த்தி சிவபாக்கியம் என பல மாமனிதர்கள் கல்வி கற்பித்தார்கள். 1967ற்கு பின் இன்று வரை பல அறிவாளிகள் தொடக்கம் ஆசாமிகள் வரை இப்பாடசாலையின் பெருமைக்குரியவர்களாக உள்ளார்கள்.

அவர்களுக்கு எல்லாம் எழுத்தறிவித்த இறைவன் "திரு.மயில்வாகனம்" அதிபர் அவர்கள் அவருக்கு அவர்தான் நிகரானவர். நீத்தார் வரிசையில் உள்ளார். அவருடைய காலத்திலேயே இப்பாடசாலை ஆல் போல் வளர்ந்து அறுகு போல் வேரூன்றியது.

பிள்ளைச்செல்லங்கள் துள்ளி விளையாட நல்ல விளையாட்டுத்திடல் பெற்றோராலும் மாணவர்களாலும் துப்புரவு செய்யப்பட்டு மைதானம் ஆகியது. தற்போது மாகாணத்தினால் முன்னுரிமைப் படுத்தப்பட்டு பெருமை சேர்த்து பல விளையாட்டு வீரர்களை உருவாக்கிக்கொடுக்கும் திடல் அன்று விடத்தல் பற்றைகளால் சூழப்பட்ட பிரதேசமாகக் காணப்பட்டது.

அன்றைய மாணவர்களாகிய நாங்கள் பாடசாலையில் பாடமல்லாத நேரங்களில் அங்கு சென்று விடத்தல் பற்றைகளை வெட்டி துப்புரவு செய்வோம். சின்னத்தம்பி ஆசிரியர் 5ம் வகுப்பு பாடத்தில் உள்ள மாணவரும், பெற்றோரும், ஆசிரியரும் சேர்ந்த சிரமதானம் செய்து மைதானம் பிறந்த கதை செல்லி முடிப்பார்.

1977இல் பின் ஒரு கட்டிடம் பல கட்டிடங்களாக மாறியது. அக்காலத்திலே பன்னவேலை, அதாவது கைப்பணி மனையியல் தும்புத்தொழில் எனப் பல பாடங்கள் கற்பிக்கப்பட்டன. ஆங்கிலம் கற்பிக்க திரு செல்வரத்தினம் ஆசிரியர் இருந்தார். இப்படியே சொல்லப்போனால் அன்னையின் வரலாறு நீண்டு கொண்டே போகும். இடையில் நிறுத்த வேண்டிய தேவை உள்ளது.

இச்சிறிய உரையை எழுத வேண்டும் என்பது எனது பேரவா. இந்த அன்னையின் பொன்விழா கொண்டாட நாம் கெடுத்து வைத்தவர்கள்

# எமது கல்லூரியில் கற்பித்து ஓய்வு பெற்ற எமது பிரதேச ஆசிரியர்கள்




திருமதி S. குலேஸ்வரி
(முதல் மாணவி, முன்னாள் ஆசிரியர்)




திரு. க. குமாரசாமி




திருமதி. ந. புவனேஸ்வரி




திரு. க. செல்வரட்ணம்




திருமதி. சே. பாலாம்பிகை




திரு. த. பாக்கியநாதன்













# எமது கல்லூரியின் மன்றங்கள்.



உயர்தர மாணவர் மன்றம்



இந்து மாமன்றம்



கிறிஸ்தவ மன்றம்



அழகியல் மன்றம்






# எமது கல்லூரியின் மன்றங்கள்.



மாணவர் கூட்டுறவுச்சங்கம்



சுகாதார மன்றம்



தமிழ் மன்றம்



வணிக மன்றம்









# எமது கல்லூரியின் மன்றங்கள்.



ஆங்கில மன்றம்



கணித, விஞ்ஞான மன்றம்



சமூக விஞ்ஞான மன்றம்



பாண்ட் வாத்திய அணி









எத்தனையோ பேர் இக்கல்லூரித்தாயின் பிள்ளைகள் இக்கொடிய யுத்தத்தால் மாண்டு போய் விட்டார்கள். மாண்டு போன மைந்தர்களையும் நினைவில் நிறுத்தி,

நான் 1962ம் ஆண்டு பிறந்து இந்தத்தாயின் மடியில் விளையாடி பாடி, ஆடி இதே மேடையில் பேச்சுப்பேசி, உயர்தரம் வரை படித்து முடித்தவள். நான் கல்வி கற்ற கடன் என் ஆசான்களுக்கு இன்னும் தீர்க்கவில்லை. எனது பிள்ளைகளும் இப் பாடசாலையில் கல்வி கற்றவர்கள் என்பதில் எனக்கு மிகவும் மகிழ்வு. இந்த சந்தர்ப்பத்தை வழங்கிய கல்லூரி சமூகத்திற்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, என் கல்லூரித்தாய் ஐம்பது ஆண்டென்ன வையகம் உள்ள காலம் வரை இன்புற்று செழிப்பாக வாழ வேண்டும் என வாழ்க! வாழ்க! என வாழ்த்தி விடை பெறுகிறேன்.

*"வாழ்க தமிழ் மொழி வாழிய வாழியவே"*

**திருமதி விஜயலட்சுமி ஜெகதீஸ்வரன்,**
**பழைய மாணவி,**
**பாடசாலை**
**அபிவிருத்தி சங்க உறுப்பினர்.**



# மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழா

துணுக்காய் கோட்டத்திலே நடுநாயகமாக விளங்கும்
நற் பெருங் கல்லூரியே
துணுக்காய் வலயத்தில் துல்லியமாக விளங்கிடும் கல்லூரியே
பாடசாலையாக கல்லூரியாக, இசுருவாகத்
தரமுயர்ந்து பொன்விழா காணும் புதுப்பொலிவு கொண்ட கல்லூரியே
அன்பையும் அறிவையும் தரும் ஆசான்களை வளர்த்தெடுத்தாயே
பல்கலைகளையும் வளர்த்துப் பல மாணவர்களைப்
பல்கலைக்கழகம் அனுப்பிய அறிவியற்கூடமே!
பிள்ளையோ பாடசாலையாக பிரகாசித்துக் கொண்டிருக்கின்றாயே
மகிழ்ச்சி இல்லத்தையும் உன்னகத்தேகொண்டு
மனோரம்மியத்தைத் தரும் மத்திய கல்லூரியே
வையகம் போற்றிடும் வைத்தியர்கள் பொறியிலாளர்கள்
கல்வியியலாளர்களை ஈன்றெடுத்த மத்திய கல்லூரியே
அறிவுக் கருசீலத்தை அளித்திடும் கல்லூரியே
அனைத்துத் துறைகளிலும் மிளிர்வதற்கு அன்னையைப்போல் உழைத்தாயே
அகவை ஐம்பதிலே அகமகிழ்ந்து நிற்கின்றீரே
நீர் என்றென்றும் புதுப்பொலிவு பெற்று வாழிய வாழியவே....

**இ.லீலாவதி,**
**சங்கீதஆசிரியர்.**



# நிழல் அல்ல நிஜம்

எமது கல்லூரித் தாய்க்கு வயது ஐம்பத்தொன்று. விதை முகிழ்ந்து சிறு செடியாகி பின் மரமாகி இன்று பெரு விருட்சமாக நிற்கும் மல்லாவி மத்திய கல்லூரியின் வளர்ச்சியை எண்ணிப் பார்த்தபோது என்னில் மலர்ந்த இனிய நினைவுகளை இன்றுள்ள இளையவர்களோடு பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வரலாறு என்பதை வரையறை செய்து எழுதி விடலாம். ஆனால் பழைய மாணவியான யான் பெற்ற இன்ன அனுபவம் அளவிட முடியாது. எழுத்திலும் அடக்க முடியாது. இருப்பினும் பொன்விழாக் காணும் இவ்வேளையில் சில வரிகள் எழுதுவதில் ஆனந்தமே! குக்கிராமமாக இருந்த மல்லாவியில் ஒரு பள்ளியை உருவாக்க வேண்டுமென்று எண்ணிய எனது தந்தையார் இராசையா கார்த்திகேசு என்பவர் தாயாரின் புளியடி வளவிற்குள் கீற்றுக் கொட்டகை ஒன்றில் பள்ளியைத் தொடக்கினார். அப்போது யாழ்.மாவட்டத்திலிருந்து சிலரை ஆசிரியர்களாக அழைத்துக்கொண்டதாக எனது தந்தையார் இப்போதும் கூறுவதுண்டு. இவர் தொண்டர் ஆசிரியர் பணியிலிருந்து ஓரிரு வருடத்தில் அரச நியமனம் பெற்றார். ஆரம்பத்தில் மல்லாவிக் கிராமத்தில் பதினெட்டுக் குடும்பங்களே இருந்தன. பின்நாளில் வவுனிக்குள நீர்ப்பாசனத் திட்டத்தில் காணி பெற்று பிற மாவட்டங்களில் இருந்து வந்து குவிந்தனர். வசதிகள் குறைந்த வன்னி மண்ணிற்கு வந்தவர்களில் பலரை அன்புடன் உபசரித்தவர் எங்கள் ஆச்சி அபிராமி. இவரே செல்லமுத்து என்ற செல்லமுத்தாச்சி. மல்லாவி மத்திய கல்லூரி அ.த.க.பாடசாலையாக இருந்த காலத்தில் தலைமை ஆசிரியராக இருந்த திரு.செல்லத்துரை மயில்வாகனம் அவர்கள் பள்ளிக்கூட வரலாற்றினை வில்லிசையில் வடித்திருந்தார். இப் பாடசாலையின் மாணவர் பதிவேட்டில் முந்நூற்று இருபத்தோராவது ஆளாக இருந்த பழையமாணவியான எனக்கு கைப்பிடித்த அகரம் தொடக்கிய ஆசிரியர் மயில்வாகனனார் தந்த இப் பாடல் வரிகளை நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

"வீரத்திருமகள் செல்லமுத்தம்மையின்
மேன்மைசால் மைந்தனாம் கார்த்திகேசு
சேரக் கருதினன் சிந்தையிலேயுரம் சேர்த்து
பள்ளி எழலாச்சு" என்றும்

"நடராசா சிவசக்தி சுந்தரமூர்த்தியும்
நங்கை சிவபாக்கியத்தோடு
திடமான கல்விக்கு பரமேஸ்வரி தானும்
சேர்ந்து கடமை புரிந்தனளே."

என்று தொடக்கப்பள்ளி ஆசிரியர்களை பெயர் சுட்டிப் பாடிப் பெருமை சேர்த்தார். பாடசாலை வரலாற்றில் இவர்கள் மறக்க முடியாதவர்களே! வன்னிப்பிரதேசம் வளங்கள் பெருகி கொடி கொடியாகக் குடியேறிய எல்லா மக்களையும் உள்வாங்கியது. மக்கள் பெருக்கம் வளர்ந்த வேகத்தில் மாணவர்கள் நிறைந்தனர். பள்ளி மண்டபங்கள் பெருகின, வகுப்புக்களும் உயர்ந்தன. 2005ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட செல்வி.ருஜீனா பாக்கியநாதனின் தொகுப்பான "வரலாற்றுப் பாதையில்..." என்ற நூலிலே பாடசாலையின் படிமுறை வளர்ச்சி காட்டப்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

பல நூறு ஆசிரியர்கள் வந்து போனார்கள். பத்துக்கும் மேற்பட்ட அதிபர்களும் மாறி மாறி வந்தனர். ஆயினும் எனது பள்ளி வாழ்வில் பார்த்தவை, பழகியவை, கேட்டவைகளை சொல்லும் போது உங்களுக்கு அவை புதினச் செய்தியாகத் தெரியலாம். இவ்வேளை என் உள்ளுணர்வுகளோடு ஒட்டி வாழும் ஆசிரியர்கள் சிலரை நினைவுகூருவதில் புளகாங்கிதம் அடைகின்றேன்.

என் பள்ளிக் காலம் முழுவதிலும் அதிபராய் இருந்தவர் திரு.செ.மயில்வாகனம். இவர் அதிபர் மட்டுமல்ல எங்கள் ஊரின் வளர்ச்சிக்கும் உரமூட்டியவர். வயல் வெளிகளிலும் தோட்டங்களிலும் உலாவித் திரிந்த எம்மை கல்வியோடு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற திட்டமிட்ட வாழ்வுக்குள் இழுத்து வந்தார். சக ஆசிரியர்களும் உறுதுணை புரிய அவர் ஆற்றிய பணியை நான் மட்டுமல்ல மல்லாவி மக்களுமே மறவார். கைப்பணி ஒரு பாடமாக இருந்த அந்தக் காலம் எமக்கு தையற் கலையைத் தொடக்கினார். ஆசிரியை மாணிக்கம் பூபாலசிங்கி அவரின் துணையால் தையலில் தேர்ச்சி அடைந்தோம். துன்னா, விஸ்பம், கம்பளி என பல வகைத் தையலில் தையல் நாம் கற்றுத் தேறி கதிரைச் சேலை முதல் கட்டைக் காற்சட்டை வரை தைத்தோம். ஆண்களும் பெண்களும் என மாணவர்கள் நாங்கள் கூடிக் கயிறு திரித்தோம், கால்மிதி பின்னினோம், தும்புத்தடி கட்டினோம். தூரிகைகள் மட்டுமல்லாமல் துவிச்சக்கர வண்டிச்சில்லுக்கு அழகிய பூக்களும் தும்பினால் முறுக்கினோம். இந்த அற்புத கைப்பணிக் கலையை கற்பித்தவரும் அதிபர் மயில்வாகனரே. கட்டைப் பிரம்புடன் எப்போதும் சுற்றிவரும் அவர் கண்டிப்பானவர். ஆனால் பிரம்பைத் தொடாமலே கண்டித்து வளர்த்தவர் ஆசிரியர் க.குமாரசாமி. அவரும் கம்பீரக் குரலும், நடையும் எம்மை ஆட்டிப்படைத்தது. கிட்டிப்புல், கிளித்தட்டு, எட்டுக்கோடு என கெந்திக் கெந்தி விளையாடிய எங்கள் முன்னே ஒரு P.T வந்தார். ஆங்கிலத்தில் அல்ல அழகான தமிழில், உரக்கக் கத்தினார். சீலைக் காலை முன்னே வைத்து ஓலைக் காலைப் பின்னே வை கேலி பேசிய அந்தநாட்களில் இடம், வலம், நில், திரும்பு என இயல்பு மொழியில் உடற்பயிற்சி பழக்கிய ஆசான் திரு.த.பாக்கியநாதனே! பள்ளிக்குப் போனோம், பாடம் படித்தோம் என்று நாம் நின்று

விடவில்லை. களனிகளில் இறங்கி களையும் பிடிங்கினோம். வாழ்வோடு ஒட்டிய கல்வி, கல்வியோடு இணைந்த அற்புத வாழ்வு, விவசாயமும் ஒரு பாடமாக அறிமுகமாகியது. நீளக் காற்சட்டையுடன் வந்த நெ.வி.இராமலிங்கமே விவசாய ஆசிரியர். உழுந்து, பயறு, எள்ளு என்பதோடு நின்ற எம்மை இறுங்கு, சோளம், கோதுமை முதல் உருளைக்கிழங்கு வகை பயிரிடப்படப் பழக்கினார். வீட்டுத் தோட்டப் போட்டிக்கும் அனுப்பினார். இவை மட்டும் அவர் செய்யவில்லை. பெட்டிகளில் தேன் வளர்த்தோம், மரக்கன்றுகளை ஒட்டினோம், "ஏர் முனை விவசாயக் கழகம்" எனும் கழகத்தையும் அமைத்தோம். வானொலி விவசாய அறிவுப் போட்டிக்கும் போனோம். பரிசில்கள் பெற்றோம். எங்கள் ஊர் புகழும் வானம் எட்டியது.


கற்பித்தற் கடமை என்று ஊதியத்திற்கு மட்டும் உழைக்காமல் எங்கள் உயர்வான கல்விக்கு என்றும் ஊக்கம் தந்த பல ஆசிரியர்கள் இருந்தனர். இவர்களில் ஒருவர் தான் திருமதி.கமலா குணராசா. சமூகவியற் பாடத்தை சரளமாகப் படிப்பித்தார். வரைபடங்களும் ஆக்கித் தந்தார். எனது கிராமம் அயற் கிராமம் என்பதோடு நின்ற எமக்கு நகர்ப்புறம் காட்ட எண்ணினார். ஆகா! என்ன அற்புதம்! சுற்றுலா சென்றோம், வாழ்வில் மறக்க முடியாத இன்ப அனுபவம். ஆயிரம் கால் மண்டபம், சிகிரியா, அநுராதபுரம், பொலநறுவை என எண்ணற்ற இடங்களை பார்த்து மகிழ்ந்தோம். என்றும் அவரை நாம் மறக்க முடியாது. ஆழமாக எம் உள்ளத்தில் பதிந்துவிட்ட தாயவர். எம்மில் அக்கறையுள்ள பல ஆசிரியர்கள் பிற்பகல் வகுப்புக்களைப் பிரத்தியேகமாக நடத்தினர். ஊதியமில்லா உழைப்பை வழங்கினர். அவர்களில் இன்னொருவர் தான் "தங்கக் கிளி" சுவாமிநாதன். வண்ண வண்ண கலர் வர்ணங்களால் சித்திரம் வரைய வைத்தார். ஊருக்குள்ளும் ஒருவராய் ஆசிரியருக்குள்ளும் ஒருவராய் இருந்தார். ஆங்கில ஆசிரியர் செல்வரத்தினம் எனும் பெயராலும் இனிப்புக்குள் மாத்திரை வைத்துக் கொடுப்பது போல இனிமையாகப் பேசி அமைதியாக இருந்து ஆங்கிலத்தை எமக்கு அறியத்தந்தார். இப்படிப் பல பல சந்ததிகள் இன்றும் பசுமையான என் நினைவில் நிழலாடுகின்றன.

இறுதியாக என் இனிய வரி பொன்விழாக் காணும் எங்கள் மல்லாவி மத்திய கல்லூரி இன்னும் பொலிவு பெற வேண்டும். அதைக்கண்டு பழைய மாணவர் நாம் பெருமைகொள்ள வேண்டும். காடும் கட்டாந்தரையும் பாம்பும், பல்லியும் நிறைந்தது வன்னி என்று பலரும் பயந்த அரை நூற்றாண்டுக்கு முந்திய அந்தப் பொழுதில் தளராத மனத்துடன் வந்து தொடக்கப் பள்ளிக்கு அணிசேர்த்த ஆசான்களை பெருமையுடன் நினைவுகூருகின்றேன். அவர்கள் பெயரை மறவாதிருப்பதும் எமது கடமை. எங்கள் பெற்றோரைப் போற்றி வாழ்வது போல் பள்ளியை உருவாக்க உறுதுணை புரிந்த அவர்களையும் மறவாதிருக்க வேண்டும். "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற பொன்மொழிக்கு இணங்க எங்கள் கல்லூரிக்கு வந்து சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற ஆசிரியப் பெருமக்களின் சேவை தனைப் பாராட்டி மகிழ்கின்றேன்.

**திருமதி. அரியமலர் கந்தசாமி,**

**பழைய மாணவி.**

**புகைப்படப் பயிற்சிக் குழுவினருடன் எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்.**



# என் சிந்தையிலிருந்து சில துளிகள்

பல கலைகளையும் பயில்வித்து மண்ணில் சான்றோர்களை உருவாக்கிய மாபெரும் கல்லூரியான மு/மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழாப் பெருமை உணர்ந்து தலை வணங்குகின்றேன்.

மல்லாவி மாந்தரின் ஒளிபொருந்திய கண்ணான கல்வியின் கலைக்களஞ்சியமாக எம் கல்லூரி திகழ்வதை அனைவரும் அறிந்ததே. சமூகத்தை வளப்படுத்தும் துறைகள் எல்லாவற்றிலும் அறிஞர்களையும் ஆற்றல் மறவர்களையும் காலந்தோறும் உருவாக்குவதில் தனிப்பெருமை இக்கல்லூரிக்கு உண்டு.

கல்விக்கனி பறிக்க மாணவப் பறவைகள் கூடுகின்ற அழகான பூந்தோட்டம் இக்கல்லூரி. பேதங்கள் எதுவுமின்றி மத்தியில் ஒன்றாய் இணையும் மாணவர் கூட்டம் சமூக ஒருமைப்பாட்டின் அடையாளமாய்த் திகழ்கின்றது.

இன்று இக்கல்லூரியின் மாணவர் சமூகம் உலகெங்கும் பரந்து வாழ்கின்றது. தன் தனிப்பெரும் ஆற்றலால் மாணவர் மனமெங்கும் இடம்பிடித்துள்ளது. அவ்வகையில் எம் கல்லூரித் தாயின் பங்கு கணிசமாய் இருப்பதை யாவரும் அறிந்ததே.

*"வாழிய மல்லாவி மத்திய கல்லூரி வையகம் போற்றிடவே"*

**க. பத்மநாதன்,**
**ஆசிரியர்.**

---



# பொன்விழா காணும் இப்பொன்னான நாளில்...

ஆரம்பக்கல்வி முதல் உயர்தரக் கல்வி வரை அறிவூட்டிய இக்கல்லூரியை இந்நாளில் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இப்பொன்னான நாளில் எனக்கு கல்வி புகட்டி கணிதத்துறையில் பல்கலைக்கழகம் புகவைத்த எனது அன்பிற்கினிய அதிபர்கள் நல் ஆசான்களை இப்பொன்விழா நாளில் பெருமனதுடன் வாழ்த்துகிறேன்.

அன்று முதல் இன்று வரை பல இன்னல் இடையூறுகள் இடப்பெயர்வுகள் மத்தியிலும் இக்கல்லூரி தனது கல்விச்சேவையை சிறப்பாக ஆற்றி வருவதை பலரம் கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு சிறப்படைவதற்கு மூலகாரணமாக அமைவது இங்கு கடமையாற்றும் அதிபர் ஆசிரியர்களின் பெருமுயற்சியும் அர்பணிப்பும் என்பது குறிப்பிடத்தக்கது.

இனி வருங்காலங்களிலும் இவ்வாறு பன்மடங்கான வளர்ச்சியை காண வேண்டும் என இறை ஆசியை வேண்டி பொன்னெழுத்தக்களால் பொறிக்கப்படும் இந்நாளில் கல்லூாஜயை என்றென்றும் வாழ்த்துகின்றேன்.

**திருமதி பாங்கஜகுமாரி சசிகுமார்**
(B.Sc.DIP.Ed),
**ஆசிரியர்,**
**வ/நெளுங்குளம் கலைமகள் ம.வி.**



பொன் விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்
விநாயகர் ஸ்ரோர்ஸ்
Vinayakar Stores
துணுக்காய் சாலை, மல்லாவி
தொ.பே:-0779582156




பொன் விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்
வாணி
உணவகம்
சகல விதமான உணவுப்பொருட்களையும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
உரிமையாளர்:- ஜெ.கஜேந்திரா
பிரதான சாலை, மல்லாவி
தொ.பே:-0775882342




வின்னர் கல்வி நிலையம்
WINNER EDUCATION CENTER
SUN TEC SUN TEACHNICAL ENGINEERING COLLEGE (PVT) LTD
இங்கிலீஸ் & தமிழ் மீடியம், பாஸ்பேப்பர்,
ICT வகுப்புக்கள், கருத்தரங்குகள்,
Spoken English & Grammar, பிரத்தியேக வகுப்புக்கள்.
புலமைப்பரிசில் 09,O/L,A/L மீட்டல் வகுப்புக்கள்
தரம் 01-13 வரையான வகுப்புக்கள்
e-mail
winneredu@gmx.com
Thunukkai Road,
Yogapuram,
Mallavi.
M-077 372156

# அகவையில் பொன் பதிக்கும், என்னை வளர்த்த கல்லூரித்தாய்...

முத்தமிழின் காவலனாய்....!
வன்னி மண்ணின் மைந்தனாய்.....!
வானுயர எழுந்து நிற்கும்,
எனைச்சுமந்த கல்லூரித்தாய்க்கு
அகவை ஐம்பதாம்.
பதின்மூன்று வருடங்கள் பட்டாம்

பூச்சிகயாய் உன் முற்றத்தில்
துள்ளித்திரிந்தவன் நான்.
எத்தனையோ மாணாக்கரை
ஏணிபோல ஏற்றிவிட்டு ஒரு
அகங்காரத்துடன் புன்முறுவல் புரிகின்றாய்
குழப்படிகள் பல செய்தாலும் நீ
அன்னையை போல அரவணைத்தாய்..
ஆதரவு காட்டி எனக்கு அறிவுட்டினாய்..
மறக்க முடியவில்லை நான் உன்னோடு
உறவாடிய காலங்களை........!

நண்பர்கள் பலரோடு நான் சிரித்து மகிழ்ந்த
காலங்கள் மீண்டும் வருமா என
மனதால் ஏங்குகிறேன்.
மறுமையிலும் உன்னிடம் அறிவு பெற,
இறைவனை வேண்டுகிறேன்.
இவ்வுலகத்தில் நாமெல்லாம்
படித்து பட்டம் பெற்றபின்,
இயந்திரமாய் மாறிடுவோம்.
உழைபப்போடு வாழ்ந்திடுவோம்.

நீ தந்த அறிவுடனே பூமியில் வலம் வருவோம்.
ஆனாலும் நீ தந்த நினைவுகளை மீட்டும் போதும்,
உன்னை காணும் போதும் ,
மீண்டும் உன்னிடம் படிப்பதற்காய்,
மனம் ஆவலோடு நெருடவே செய்யுமம்மா...!
நின் பணியில் நீ, இமாலயம் தொட
உன்னுடைய பிள்ளைகளுள் ஒருவனாக,
இதயம் கனிந்து வாழ்த்துகிறேன்.
மனிதனை புனிதனாக்கும் மகத்தான
உனது பணி வையகம் வியக்க
நிலையாக தொடரட்டும்..

**திரு. தங்கராஜா நிரஞ்சன்,**
**(பழைய மாணவன், 2006**
**உயிரியல்).**

# மல்லாவியின் மணிவிளக்கே!

மண்ணில் பிறந்த நாள் முதல்
மரிக்கும் காலம் வரை
ஞானமதில் நீ செய்த தவம்
நயந்து உரைத்திடவா! உன்
பொங்கும் கரங்களால்
ஒல்காப் புகழ் படைத்து
மல்லாவி மண் தனிலே
மகிழ்வுடன் வீற்றிருந்து
மாணவர்க்காய் செய்த நலம்
மாசறு திங்களாய்
மனங்களிலே நிறைந்திருக்கும்

கல்லூரித் தாயே அன்று என்
கனவுக்குள் நீ இருந்தாய்
கண்ணியமாய் எனை அணைத்து
உன் சிறகுக்குள் அடை காத்தாய்
இன்று நாம் சிறகு முளைத்துத்
திக்கெட்டாத் தூரம்
பறந்து சென்றாலும்
மறக்கவில்லை உன் உருவுதனை

மல்லாவியின் மணிவிளக்கே- உன்
மடிதவழ்ந்த நாட்கள்
ஒவ்வொன்றும் என் மனதில்
மறந்தாலன்றோ உனை நான் மீட்பதற்கு
மீளப் பிறப்பெடுத்து- நான்
உன் மடியில் தவழ்ந்திடவே
தூரதேசந்தனை விட்டொழிந்து
மீண்டும் கல்லூரி வந்தால் என்ன
எனதுள்ளம் வசமிழந்து தவிக்கிறது
பச்சை வயலின் பின்னே
பாங்காய் அமர்ந்திருக்கும்
பார் போற்றும் தாயே நீ
பௌவியமாய் நாம்
பல கலைகள் கற்றிடவேஇ
தரணியிலே நீ புரிந்த
நற் செயல்கள் ஒவ்வொன்றும்
ஓராயிரம் கதை சொல்லும்

எத்தனை விதமான மாணவர்கள்
உன் மடியில் தவழ்ந்திட
அத்தனையும் நீ சுமந்து
மண்ணின் மாந்தர்களாய்
வழியனுப்பி வைத்தாயே
ஆர்ப்பரிக்கும் கடலலையாய்
மாணவர் நாம் செய்த செயல்
சத்தம் விளையாட்டுஇ
ஓட்டம் பாட்டம் என்றுஇ
அத்தனையும் அமைதியாக □ நீ
பார்த்து ரசித்திருந்தாய்
உனக்குள்ளே எமைப்பற்றி
எண்ணிய கதை நாமறியோம்.

அன்னையே நீ இருந்த திருக்கோலம்
என் மனதில் அரியணையாய்
உதயம் ஆகிறது
முன்னேயுள்ள ஆல்
பின்னேயுள்ள புளியமரம்,
மைதானம், நூல் நிலையம்
அரங்கம் ஆய்வுகூடம்
அத்தனையும் எம் கண் முன்னே
அற்புதமாய்க் காட்சி தருகிறது.

நாட்கள் நகர்ந்திடவே - நீ
நானிலம் போற்றும் வசப்பட்டாய்
ஐம்பது ஆண்டு தன்னில்
அயர்விலாது உழைத்திட்ட உன்
பொங்கும் கரங்களுக்காய்
பொன்விழாச் சூடும் இந்நாள் தனிலே - உன்
செய்ந்நன்றி மறந்திடாது
செப்புகின்றேன் இக்கவிதன்னை
அன்புடனே நானும்

**ஊர்மிளா பாலசுப்பிரமணியம்,**
**1ஆம் வருடம் (விஞ்ஞானம்),**
**யாழ் பல்கலைக்கழகம்.**

# எனது வாழ்வின் படிக்கற்களுக்கு இன்று பொன்விழா

துணுக்காய் பிரதேச பாடசாலைகளில் உயர்ந்த தரத்துடன் எமது பாடசாலை கல்லூரியாகத் தலைநிமிர்ந்து நிற்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். என்னோடு சேர்ந்த இந்த சமூகத்தினரின் படிக்கற்களாக இப்பாடசாலை விளங்குகின்றது. தரம் 01 இல் காலடியெடுத்து வைத்த காலத்திலிருந்து பாடசாலைக்காலத்தின் நினைவுகள் என்முன் நிழலாடுகின்றது. சிறு பராயம் தொட்டே கல்வியுடன் நல்லொழுக்கத்தையும் மாணவர்களுக்கு ஊட்டிய பெருமை இப்பாடசாலையின் உயர் பெருமை பெற்ற ஆசான்களுக்கு உரியதாகும். குறிப்பாகத் "தலைமை வாத்தியார்" என அன்பாக அழைக்கப்பட்டு வந்த பாடசாலை அதிபர் அமரர் உயர்திரு. செ. மயில்வாகனம் ஐயா அவர்களின் சிறந்த நல்லொழுக்க வழிகாட்டல்கள் இன்னமும் மாணவர்களால் மறக்கப்பட முடியாதவை.

நகர்ப்புறப் பாடசாலைகளில் காணமுடியாத பலநற்பண்புகள் கிராமப்புறப் பாடசாலையாகிய எமது பாடசாலை மாணவர்களிடம் காணக்கூடியது எவரும் மறுக்கமுடியாத உண்மையாகும். எனது பாடசாலை வாழ்வின் ஆரம்ப ஆசான்களில் திரு. க.செல்வரத்தினம் ஐயா அவர்களும், திருமதி.புவனேஸ்வரி நடராஜா அம்மணி அவர்களும் இன்றும் எமது சமூகத்திலே ஞாபகார்த்த சின்னங்களாக எம் கண்முன்னே உலவிவருகின்றனர்.

இப்பாடசாலை மு/மல்லாவி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை என்ற பெயரிலிருந்து ஆரம்பித்து மு/மல்லாவி மகாவித்தியாலயமாக உயர்ந்து தற்பொழுது மு/மல்லாவி மத்திய கல்லூரியாகப் பெருமையுடன் விளங்குகின்றது.

ஆரம்ப காலம் தொட்டு"கம்பன்" "வள்ளுவன்" "இளங்கோ" "பாரதி" என்ற பெயர்களைத் தாங்கிய இல்லங்களையுள்ளடக்கிய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் "வள்ளுவர் விழா" சமயகுரவர்களின் "குருபூசை", நவராத்திரி விழா, தமிழ்த்தின போட்டி, ஆங்கில தினப் போட்டி, சைவபரிபாலன சபையினரால் நடாத்தப்படும் போட்டிகள் ஆகியன இப்பாடசாலையில் நடாத்தப்பட்டுவரும் விழாக்களாகும்.

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்" என்று குறிப்பிடப்படுவது போல இந்தப்படசாலையும் இந்தப் பிரதேசமும் "என்னுடையது" என்ற உணர்வை எமது அடிமனதிலிருந்து என்றும் அழித்துவிடமுடியாது. அதே போல் நாம் கற்ற பாடசாலையிலேயே எமது பிள்ளைகளும் கல்வி கற்பது பெருமைக்குரிய விடயமாகவே நான் கருதுகின்றேன்.

என்னால் இதில் பெயர் குறிப்பிடப்படாத இப்பாடசாலையின் முன்னைநாள் அதிபர்களும், ஆசிரியர்களும், தற்போதைய அதிபர்களும், ஆசிரியர்களும் என்றும் எனது வணக்கத்துக்குரிய தெய்வங்களாகவே உள்ளனர்.

அத்துடன் இதுவரை காலமும் இறையடி சேர்ந்த ஆசிரியர்கள், எனது சகோதரர்களாகிய மாணவச் செல்வங்கள், பாடசாலை நலன்விரும்பிகள் ஆகியோரை இந்நாளில் நினைவு கூருவதுடன் அவர்களது ஆத்மாக்கள் சாந்தியடைய இறைவனைப் பிரர்த்திக்கின்றேன்.

இக்கல்லூரிக்குத் தொடர்ந்து பெருமை சேர்த்து வரும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் சேவைகள் மென்மேலும் சிறப்புத் தொடர இறைவனைப்பிரார்த்திக்கின்றேன்.

"பசுமை நிறைந்த நினைவுகளாக எமது பாடசாலை வாழ்க்கை என்றும் என் மனதில் அழியாது நிலைத்திருக்கும்"

**திருமதி.பானுமதி காந்தருபன் (பழைய மாணவி),**
**பிரதம முகாமைத்துவ உதவியாளர்,**
**பிரதேச செயலகம், துணுக்காய்.**



# கல்விப்பாதையில் உங்களோடும் சில வரிகள்...

மல்லாவியைப் பிறப்பிடமாகக் கொண்டு விவசாயக் குடும்பத்தில் வசித்துவரும் செல்வி நிரோஜா விஜயபாலன் ஆகிய நான் எனது இளமைக்கல்வியை அணிஞ்சியன்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தொடர்ந்து கற்றுக் கொண்டிருந்த வேளையில் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இப்பிரதேசத்தை விட்டு இந்தியாவிற்குச் சென்று அங்கே எனது இடைநிலைக் கல்வியைச் சிறப்பாகத் தொடர்ந்தேன். மீண்டும் வன்னி மண்ணிற்கு வந்து மல்லாவி மத்திய கல்லூரியில் க.பொ.த சாதாரண தரத்திற்கு அனுமதி கோரியபோது இன்முகத்துடன் அனுமதிதந்து எனக்குக் கல்வியூட்டிய ஆசிரியர்களின் அர்ப்பணிப்பாலும் இந்தியக் கல்வித்திட்டத்திற்கும் இலங்கைக் கல்வித்திட்டத்திற்கும் இடையில் பலமாறுபாடுகள் காணப்பட்ட போதிலும் எனது இயல்பான திறமையாலும் முயற்சியின் பயனாகவும் க.பொ.த. சாதாரணதரப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

நான் இப்பெறுபேறுகளைப் பெற்று வர்த்தக பிரிவினைத் தேர்ந்தெடுத்த பொழுது பலரும் பல்கலைக்கழக அனுமதி தவறும்சந்தர்ப்பத்தில் வேறுசந்தர்ப்பங்கள் குறைவெனக் கருத்துத் தெரிவித்த போதும் எனது விருப்பமும் பெற்றோரின் அதிக ஒத்துழைப்பும் என்னை, இத் துறையில் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கைக்குரியவளாக மாற்றியது. வுர்த்தகத்துறைக்கு போதியளவு ஆசிரியர்கள் இல்லாமையும் பிரத்தியேகமாகக் கல்வி கற்பதற்கான வசதி வாய்ப்புக்கள் மிகவும் அரிதாக இருந்த பொழுதும் பாடசாலை ஆசிரியர்களான திருமதி. சி. நல்லைநாதன், திருமதி. சு. கிருஷ்ணதாஸ், திருமதி ச. இராசலிங்கம் இவர்களின் ஒத்துழைப்பும், ஊக்குவிப்பும் தொடர்ந்து அன்றாடம் கற்றவற்றை உடனுக்குடன் மீட்டும் சிலபாடநூல்களின் உதவியும் எனக்குத் துணைபுரிந்தன. இந்த சந்தேகங் களைத் தீர்ப்பதற்கு ஆசிரியர்களும் பல்கலைகழகத்திற்கு அனுமதிக்கப்பட்டவர்களதும் உதவியுடன் பொருளியற்பாடத்தைப் பிரத்தியேகமாகதச் சிறந்தமுறையில் கற்பதற்கு உதவிய எமது பாடசாலையின் பழையமாணவனும் கல்விளான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் அதிபருமான அமரர் திரு.பொ. இரஞ்சன் அவரது ஊக்குவிப்பும் இப்பிரதேசத்தில் நான் நல்லதொரு பெறுபேற்றினைப் பெறவேண்டும். என்ற எனது அபிலாசையையும், எனது பெற்றோரின் விருப்பையும் நிறைவுசெய்யத் தூண்டியது.

இதன் விளைவாக எமது பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்த வேளை நாட்டின் அசாதாரணசூழல் மீண்டும் இடம்பெயரவைத்து அதன் பின்பு கிளி/ அக்கராயன் மகா வித்தியாலயத்துடன் எமது பாடசாலை இணைந்து இயங்கிய போது அங்கும் கல்வியைத் தொடர்ந்தேன். இப்படிப் பல பாடசாலைகளில் ஓரிரு நாட்களெனக் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கும் போது எறிகணைகளும், விமானங்களும் சரமாரியாகக் குண்டடுகளை வீசியதால் முற்றாகப் பாடசாலைகள் இடைநிறுத்தப்பட்டன. இதன் விளைவாகப் பதுங்கு குழிகளினுள் இருந்து கல்வி கற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கல்வி கற்பதற்கான மனநிலையைக் கூட சூழலிலிருந்து பெறமுடியாமல் இருந்தேன். காரணம் கண்ணெதிரே உறவுகளின் உயிர்ப்பிரிவுகளும், இரத்தவெள்ளங்கள், மரணஓலங்களே அதிகமாகக் காணப்பட்டது. இது மட்டுமன்றி எமது உயிர்கூட எந்நிலையிலும் பிரிந்துவிடும் என்ற அச்சத்துடனும் கல்வியைத் தொடர்ந்தேன். அதன் பின்பு மீண்டும் வவுனியா பூந்தோட்ட கல்வியற்கல்லூரி நலன்புரி நிலையத்திற்தங்கி கல்வியைக் கற்றுக் கொண்டதுடன் அந்நிலையத்திலேயே, க.பொ.த உயர்தரத் தேர்வினையும் 2009ம் ஆண்டு எழுதி முல்லைத்தீவு மாவட்டத்தில் வர்த்தகப் பிரிவில் முதல் மாணவியாக 2A, B பெறுபேற்றைப் பெற்று, சாதிக்க முடிந்தது.

இன்று நான் ஸ்ரீஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தில் பொது முகாமைத்துவம் (சிறப்பு) கற்கைநெறியைச் சிறப்பாகத் தொடர்கிறேன் இதற்கு என்னிடமுள்ள ஆங்கில அறிவும், அன்றாடம் கற்றுக்கொள்ளும் அவாவும் என்னை மென்மேலும் சாதிக்க வேண்டும் என்ற நம்பிக்கையூட்டி உள்ளது.

இறுதியாக நாம். எமக்குக் கிடைக்கின்ற வாய்ப்புக்களையும் ஆசிரியர்களையும் புத்தகங்களையும் கொண்டு சுயகற்றறியும் அதீத தேடல் ஆர்வமும் இருக்குமாயின் சாதிக்க முடியும் என்பதையே அனைவருக்கும் கூறிக்கொள்வதோடு நாம் கற்கிறோம் என்று அலைபாய்ந்து திரிவதனால் நேரத்தையும் உடலலுழைப்பையும் போக்கி உடலுக்கு ஓய் தேட முனைகின்றோமே தவிர தேடியதைக் கற்கவோ, மீட்கவோ விளையமாட்டோம். எனவே நாம் அனைவரும் இந்தக் கல்லூரியின் பெருமைக்காகவும் இப்பிரதேசத்தின் பெருமைக்காகவும் உழைக்க வேண்டுமென அனைவரையும் வேண்டிக் கொள்வதோடு எனது கல்வியில் அனுபவப் பகிர்வுகளை பகிர்வதற்குச் சந்தர்ப்பம் தந்த கல்லூரிச் சமுகத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

பழைய மாணவி,
நிரோசா விஜயபாலன்.

# வாழ்த்துச் செய்தி

மல்லாவி மத்தியகல்லூரியின் பொன் விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் விழாமலருக்கு இவ்வாழ்த்துச் செய்தியை அனுப்புவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இக்கல்லூரியில் நான் கல்வி கற்ற காலத்தில் என் மனதில் பதிந்த பசுமையான நினைவுகளை மீண்டும் மீட்டிப் பார்க்கின்றேன். ஏறக்குறைய 30 ஆண்டுகளாக இக்கல்லூரியின் வளர்ச்சியை நான் அவதானித்து வந்துள்ளேன். இந்த நீண்டகால எல்லையில் அரைவாசிக்காலம் மிக அண்மையில் இருந்தும் மீதமுள்ள் அரைவாசிக்காலம் கனடாவின் றொறண்டோ நகரில் இருந்தும் பார்த்தும் கேட்டும் மகிழ்ந்துள்ளேன். என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையோடு மட்டுமல்லாது வன்னிப்பிராந்தியத்தில் மல்லாவியை அண்டியுள்ள பிரதேச மக்களின் வாழ்வோடும் இக்கல்லூரியின் வளர்ச்சி பின்னிப்பிணைந்துள்ளது. 1970 காலப்பகுதியில் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் சில முக்கிய இடங்களைச் சார்ந்து சிறந்த பாடசாலைகள் பல தோற்றம் பெற்றன. முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் அமைந்த கல்லூரிகள் அக்காலத்தில் முன்னணிக்கு வந்து கொண்டிருந்தன. ஆவற்றனைப் பின் தொடர்ந்து முன்னிலைக்கு வந்த கல்லூரிகளில் மல்லாவி மத்தியகல்லூரி தனியிடத்தை பெற்ற ஒன்றாக இன்று விளங்குகின்றது. இன்று கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகளில் இருந்தும்எமது மாணவர்கள் தொடர்ச்சியாக பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று வாழ்க்கையில் உயர்ச்சி பெறுவதை காணும் பொழுது நாம் பெருமிதமும், மகிழ்ச்சியும் கொள்கிறோம். எமது மத்தியகல்லூரியின் பழைய மாணவர்கள் பலர் எமது பகுதியிலே ஆசிரியர்களாகவும், பல்வேறு அரச திணைக்களங்களில் உத்தியோகத்தர்களாகவும் பணிபுரிக்னறனர். புடித்த விவசாயிகள் பலரையும் எமது கல்லூரி உருவாக்கியுள்ளது. வேறு பலர் பல்வேறு சுய தொழில் முயற்சிகளில் சிறப்பெய்தி வாழ்க்கையை நன்முறையில் அமைத்துக் கொண்டுள்ளனர். ஐரோப்பா; வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய இடங்களிலும் பரவியுள்ள புலம்பெயர் தமிழர்களிடையே எமது கல்லூரியின் மாணவர்கள் கணிசமான அளவு பிரசன்னம் இருப்பதையும் காணலாம்.

வறுமையின் காரணமாக ஒருவர் கல்வியைத் தொடர முடியாமல் போகுமானால் புலம்பெயர்ந்த பழைய மாணவர் உதவியுடன் அவர்களுக்கு உதவுவதற்கு நாம் தயாராக உள்ளோம்.ஏதிர்காலத்தில் எமது சமூகம் எதிர்நோக்கும் சவால்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தனது கல்விப்பணியை எமது கல்லூரி தொடர்ந்து வழங்கும் என்பது எனது நம்பிக்கை. ஒளிமிகுந்த எதிர்காலத்தை நோக்கி கல்லூரஸ வீறுநடை பயில வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

த. சுதாபரன்
பழைய மாணவன்
கனடா

# மத்திய கல்லூரிக்கு இன்று பொன்விழா

முல்லை மாவட்ட கல்வி வரலாற்றில் ஆயிரக்கணக்கான மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கும் கல்வியியற் கல்லூரிகளுக்கும் வேறு உயர் நிறுவனங்களுக்கும் அனுப்பிய பெருமைமிகு கல்லூரியாக மல்லாவி மத்திய கல்லூரி விளங்குகின்றது. இக் கல்லூரியில் உயர் கல்வி கற்ற மாணவன் என்பதனால் நான் கல்வி பயின்ற கல்லூரியன்னை ஐம்பதாவது ஆண்டினை சிறப்பாக கொண்டாடும் இந்நாளில் அன்னையின் நினைவுகள் சிலவற்றை மீள நினைக்கின்றேன்.

திருவருளும் முல்லை நகர் சேர்ந்த துணுக்காயில்
மருதநிலம் மல்லாவி தந்த திருமகளே
பெருமைமிகு அறிஞர் தமைப்பெற்ற பெருந்தாயே
கருணை தரு கற்பகமே கவினுறவே நீ வாழி!

கள்ளமிலாப் பிஞ்சுகளை கட்டி வளர்ப்பவளே
காலம் தவறாது கடமையில் திளைக்கின்றாய்
பேரறிஞர் தம்மைப் பொக்கிசமாய்க் கொண்டவளே
பேராளர் வளர்த்த பொற்கோயில் நீவாழி!

செந்தமிழும் ஆங்கிலமும் சேர்ந்தே அறிந்தவளாம்
ஓவியம் வரையும் இவள் ஒப்பில்லா இசைமகள்
நாட்டியம் காட்டுவாள் நற்சமய நெறி தருவாள்
விஞ்ஞானம் கணிதத்தில் விண்ணுயர்ந்தாய் நீவாழி!

ஆண்டு ஐம்பது ஆன நிறைவுகண்டு
பூண்டு பொன்விழாக் காணும் பொன்மகளே
நீண்ட பல நூற்றாண்டு வாழ்ந்து விழாக்காண
வேண்டுகின்றேன் நின் மகனும் வித்தகியே நீ வாழி!

காவியத் தலைவியே எம் கல்லவித் திருமகளே
பார் போற்றும் வித்தகரை படைத்த பிரம்மணியே
ஈரேழு ஜென்மத்தும் அழியாத செல்வத்ததை
பௌவியமாய் வழங்கிவரும் பத்தினியே நீவாழி !

**சண்முகநாதன் கஜேந்திரன்,**
**ஆசிரியர்,**
**(கனடா).**

# பொன் விழாக் காணும் மல்லாவி மத்திய கல்லூரி

## (1961-2011)

மல்லாவி மத்திய கல்லூரி ஆரம்பித்து ஐம்பது வருடங்களை நிறைவு செய்து நிற்கின்றது. பொன் விழாக்காணும் கல்லூரி சிறப்புறவும் தடைகள் பல தாண்டி தளைத்து நின்று கல்விச் செல்வத்தை அள்ளிக்கொடுக்கவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

மலை நாட்டில் ஆசிரியப்பணிபுரிந்த எனக்கு 1966ம் ஆண்டு ஆசிரியனாகப் பணிபரியும் வாய்ப்பு கிடைத்தது. கடமை ஏற்ற காலத்தில் ஆங்கில ஆசிரியராக திரு.செல்வரத்தினம் அவர்கள் சேவை ஆற்ற இருவரும் சில காலம் கடமையாற்றினோம். அக்காலம் ஆண்டு நான்கு வரை அறுபது மாணவர்களே கல்வி கற்றார்கள். மல்லாவியில் வாழ்ந்த பழங்குடி மக்களின் பிள்ளைகளே சேர்ந்து கல்வி பெற்றார்கள். குடியேற்றத்திட்டம் ஆரம்பமாகி வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்ட நிலையிலும் மக்கள் வந்து குடியிருப்பதற்கு வேண்டிய வசதிகள் இருக்கவில்லை. அதனால் மக்கள் வந்து குடியேறத் தயங்கினர்.

அக்காலத்து துணுக்காயில் திரு.மு.தம்பிமுத்து அவர்கள் உதவி அரசாங்க அதிபராகக் கடமை ஆற்றினார். அவரின் விடாமுயற்சியினால் திரு.செ.மயில்வாகனம் அவர்கள் அதிபராக இப்பாடசாலைக்கு மாற்றப்பட்டார் அன்னாரின் சேவை கல்லூரியின் வளர்ச்சியில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. பாடசாலை சமுகத்தின் அயராத முயற்சியில் பாடசாலை நிரந்தரக்கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டதும். சுமார் 20 ஏக்கர் காணி நன்கொடையாகப் பெறப்பட்டது. அக்காலம் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு.கா.பொ.இரத்தினம் அவர்கள் முன்னின்று பாடசாலை கட்டடத்திற்குத் தேவையான நிதியை ஒதுக்கித்தந்து கட்டடம் கட்ட வழிவகத்தார் பாடசாலைக்குத் தேவையான காணியை அக்காலம் மன்னார் கச்சேரியில் முய ஆகப்பணிபுரிந்த திரு.சிதம்பரப்பிள்ளை அவர்கள் வழங்க பாடசாலை வயர்ச்சிப்பாதையில் முன்னேற்றம் கண்பது மல்லாவி அரசினர் தமிழ் கலவன் பாடசபலை மத்திய மகாவித்தியாலயமாக உயர்ந்து சிறப்பு இவர்களின் உதவி கிடைத்து பொன் காண்பதற்கு வழிகட்டியாக அமைந்தவர்கள் இவர்கள் பாடசாலை சமுகம் இவர்களை அன்று போல் இன்றும் என்றும் நினைவுகூறவழிகாண வேண்டும் இப்பாடசாலையிலன் கல்லூரி வளர்ந்து விட்ட மாணவர்கள் அறிவெளி பரப்பிப் பரந்து வாழ்கின்றார்கள். வாழ்வில் உயர்ந்து பலராலும் போற்றப்படுகின்றார்கள் எனது கல்லூரி மாவட்ட மாட்டத்தில் உள்ள சிறந்த கல்லூரிகளில ஒன்றாக வளர்ச்சி அடைய வேண்டும். பொன்விழாக் கொண்டாடும் இந்நாளில் அதிபர்,ஆசிரியர்,மாணவர் ஒன்றிணைந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு வழிவகுத்து வாழ வேண்டும்.

**சி.சந்திரசேகரம்**
**இலகடிவீதி,**
**கரவெட்டிமத்தி**
**கரவெட்டி.**

# மத்திய கல்லூரியே வாழி

பொன்விழாக் கண்டுஉவக்கும் பொற்றாயுன் பதத்தே
பொன் தமிழ் மலர் தூவி போற்றுகிறேன் நின்னை-போதைமிகும்
வன்னி மண்ணாள் புகழோங்க வளர்கலைகள் திக்கெட்ட
நன் மல்லை மத்தியகல்லூரி நீ வாழி

செந்தமிழை வித்தாக்கி செம்மொழியைப் பயிராக்கி
முத்தமிழின் கதிர்க்கிற்றை மாணாக்கர் உளம் பாய்ச்சி
சந்தனமாய் உளந்திட்டும் சமூகத்தின்சிற்பியர்கள்
சப்த்திக்கும் கல்வியலை நித்தம் மத்தியகல்லூரியிலே
சிந்தையெல்லாம் நுகமாக்கி சித்திரம் போல் செயலாக்கி
சித்தியுவம் வரலாற்றை சிருங்காரத் தமிழாக்கி
எந்தாய் பொன்மலராய்பூத்தொளிரும் நன்னாளில்

எங்கள் தாய்மண்ணாள் வளம்நாட்டி எழிலூட்டி
முல்லையும் மருதமுமே முறுவலித்து நினை வாழ்த்த
தங்கத் தமிழ் வீணயிலே கலைவாணி இசைவார்க்க
வண்ணமாய் வரலாறு வாயிலெல்லாம் கோலமிட
சங்கத்தமிழ் பொழிய ஆன்றோர் சான்றோர் ஆசியுற
நீடநந்த சுவடெல்லாம் தீபங்கள் ஒளிசிந்த
எங்கணும் நின்புகழே வையம் உளநாள் வரையும்

வந்தே மாதரம் என்றுனை வாழ்த்தோமோ
அன்பும் பண்பு ஆளுமை சமத்துவம் உறுபொக்கிஸங்கள்
வந்தனையும் சிறுவருக்கு உளம் வருடி ஊட்டுகிறாய்
நன்னெறிகள் சோலையுற நல் உளங்கள்மலர்ந்து சிந்த
பல்கலையின் வித்தகராய் கல்லூரிச் சொத்ததுவாய்
மன்னு பல்கலைக்கழக புகழ் பட்டங்கள்சூடி வந்து

மருத்துவம்பொறியியல் விஞ்ஞானம் என பல்துறையும்
முன்னி யொளிர் மகுடங்கள் உந்தனுக்கேதான் சூட்டி
வந்தே மாதரம் என்றுனை வாழ்த்தோமா!
வளர்ந்த நின் பாதையிலே அழியாச் சுவடு கண்டாய்
நீ அணைத்துஅருகே பாலகரக்கு பள்ளிதந்தாய்
விளம்பினாயம்மா மயில்வாகனம்தமிழ் வித்தியாலயமென
போற்றியுற ஒடிவந்தேன் சொற்கள் இல்லையம்மா

களம்தந்த தியாகராசாசெம்மலும் வானிலங்கே
வாழ்த்தும் அதிர்வுகள் தீபமாய் ஏற்றியிங்கே
பளபளக்கும் தமிழொழுக தரணியில் தேயாதநிலவாய்
வந்தே மாதரம் என்றுனை வாழ்த்திடுவோமே
வானிருந்து வாழ்த்துகின்றார் மயில்வாகனந்தானும்
வாழிய அன்னையென தமிழ்மகள் தூது மடல் தந்தாள்
தானிதுவே இலட்சியத்தின் கோபுக் கலசம் கண்டாய்
பெற்றோர் ஆசிரியர் பொங்கு தமிழால் ஆராத்தி சுத்திவிட
நானிலமும் மெருகேறி அவையெல்லாம் தமை மறக்க
வன்னிமண்ணாள் உன்னை ஏந்தி வாழியென முத்தமிட
மானிடம் மாண்பொளிரும் நீ சிந்தும் இரத்தினங்கள்
பாரினில் பல்லாண்டு வாழி நீ வாழியவே.

திரு.மதியாபரணம் சுதன்,
பழைய மாணவன்.



# மத்திய கல்லூரியும் விளையாட்டுத் துறையும்

விளையாட்டு என்பது ஒரு மனிதனை உடல், உள, சமூக நன்னிலைப்படுத்துவதில் பெரும் பங்காற்றுகின்றது. சமூகமொன்றில் வாழும் ஒவ்வொரு பிரஜைக்கும் கல்வி, விளையாட்டு என்பன அவருடைய இரு கண்களுக்கும் ஒப்பிடப்படுகிறது. இவ்விரு விடயங்களிலும் சிறந்து விளங்கும் ஒருவன் ஆளுமையுள்ள பூரணமான மனிதனாக விளங்குகின்றான். விளையாட்டுக்கள் ஏட்டுவடிவக் கல்வியுடன் செயற்பாட்டுக் கல்வியாக அமைவதாலே அநேகமான மாணவர் மத்தியில் பதிகின்றது. இதனால் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் உடற்கல்விப் பாடத்தைக் கற்கும் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெறுகின்றனர். விளையாட்டுக்களில் குழு விளையாட்டுக்கள், தனிவிளையாட்டுக்கள் என்ற வகையில் பங்குகொள்ள முடியும். குழுவிளையாட்டுக்களில் ஈடுபடுகின்ற எமது கல்லூரி மாணவர்களிடம் ஒற்றுமை, கூட்டுணர்வு, வெற்றிபெறும் இலக்கு, பணிவு என்பன காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு நல்ல விடயங்கள் காணப்படினும் பல்வேறுபட்ட குழுவிளையாட்டுக்களில் ஈடுபடும் மாணவர்கள் அடிக்கடி போட்டியின் நிமித்தம் பாடசாலையில் இருந்து வெளியே செல்வதால் வகுப்பாசியர்கள், பாட ஆசிரியர்கள் , பெற்றோர்களின் சலிப்பிற்குக் காரணமாகின்றனர். இவ்வாறான நிலையில் குழுவிளையாட்டுகளாக எமது மாணவர்கள் வொலிபோல். காற்பந்து, கிறிக்கட், எல்லே,பற்மின்ரன், செஸ், கரம், ஆகிய போட்டிகளில் கலந்துகொண்டாலும் மாகாண ரீதியில் பற்மின்ரன், வொலிபோல், செஸ், கரம், ஆகியன இவ்வாண்டில் பங்குபற்றியிருந்தன. இவற்றிலும் ஆண் பிள்ளைகளின் அணிகள் தரம் வாய்ந்தவையாகக் காணப்பட்டபோதும் வெற்றி பெறமுடியவில்லை. பெண்பிள்ளைகளின் செஸ் அணியினரும் சிறப்பாக ஐந்து சுற்றுக்களிலும் விளையாடினர். ஆனாலும் பெருவிளையாட்டுக்களில் மாகாணமட்டத்தில் வெற்றிபெறாதது வருத்தத்திற்குரியதே. இது மட்டுமன்றி கடந்த காலங்களில் மல்லாவி மத்திய கல்லூரியின் உடற்பயிற்சிக் குழுக்கள் ஆண், பெண் இருபாலாரும் தரம் வாய்ந்த அணியாகத் திகழ்ந்தனர். அக்காலத்தில் மாகாண மட்டத்தில் இவ்வணிகள் பங்குபற்ற நாட்டின் சூழல் இடங் கொடுக்கவில்லை. ஆனால் மீள் குடியேற்றத்தின் பின்னர் உடற்பயிற்சிக் குழுக்களை உருவாக்குவதில் இரண்டு ஆண்டுகளாக பலத்த சிரமமாக உள்ளது. ஏனெனில் இச்செயற்பாடுகளில் மாணவர்களுக்கு அக்கறையின்மை காணப்படுதலாகும். இந்தவகையில் எமது மாணவர்கள் "முயற்சி திருவினையாக்கும்" என்ற முதுமொழியை சற்றுக் கடைப்பிடிப்பதன் ஊடாக மாகாணத்தில் மட்டுமன்றி தேசியத்திலும் வெற்றிபெறமுடியும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

"ஓடி விளையாடு பாப்பா" என்ற பண்டைய பாரதியின் கூற்றுக்கூட ஒருவனுடைய சுறுசுறுப்பை வளர்ப்பதற்கு விளையாட்டு என்ற செயற்பாடு அவசியம் என்பதைப் புலப்படுத்துகின்றது. இவ்வாறான நிலையில் பாடசாலைகளில் பிள்ளைகள் ஏன் படிக்கிறார்கள்? என்ற வினாவை வினாவுகின்ற போது இது தொடர்பாக பொதுவான கருத்து 90% ஆன பெற்றோர்களிடம் காணப்படுவது யாதெனில் நல்ல பரீட்சைப்பெறுபேறுகளைப் பெறுவதே என்பதைப் பதிலாகக்கொண்டுள்ளனர். எனவேதான் இதிலிருந்து நாம் விளங்கிக்கொள்ள முடிவது, பெற்றோர் மட்டத்திலே கல்வியை ஒரு திணிப்புப் பொருளாகவே கருதுகின்றனர். இதனாலேதான் இன்றைய சமூகத்தில் குதூகலத்தைத் தொலைத்து நிற்கும் குழந்தைகள் ஏராளமாகக் காணப்படுகின்றனர்.

இவ்வாறான நிலையில் விளையாட்டில் ஆர்வமுள்ள சில மாணவர்களைக் கொண்டு மத்தியகல்லூரியும் மெய்வல்லுநர் விளையாட்டில் தேசிய மட்டத்தில் பங்குகொண்டுள்ளது. 2004 ஆம் ஆண்டில் இரண்டு மாணவர்களும், 2010 ஆம் ஆண்டில் ஐந்து மாணவர்களும் 2011 ஆம் ஆண்டில் நான்கு மாணவர்களும் எமது கல்லூரியைப் பிரதிபலிக்கும் வகையில் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து

கொண்டனர். இந்த வகையில் கலந்து கொண்ட மாணவர்களை கல்லூரியின் உடற்கல்வித் துறைசார்பாகப் பாராட்டுகின்றேன். ஆனாலும், அதிகளவில் மாணவர்கள் விளையாட்டுத்துறையை ஒரு தரக்குறைவான ஓர் துறையாகவே எண்ணுகின்றனர். உதாரணமாக பாடசாலை இல்ல விளையாட்டுப்போட்டி தொடங்கினால் பல மாணவர்கள் பாடசாலைக்குச் சமூகந்தரமாட்டார்கள். ஏனெனில் பாடசாலையில் பாடங்கள் நடைபெறமாட்டாது. ஏன் வீணாக நீங்கள் வெயில் காயவேண்டும் என்ற எண்ணப்போக்கே காணப்படுகின்றது. இதற்கு ஒத்து ஊதுவது போல அவர்களுடைய பெற்றோரும் "ஓம் பிள்ளை, நீயேன் வெயிலில் நின்று கறுத்துப்போவான்" என்று கூறும் கருத்து. இவற்றை நினைக்கும் போது கவலையாகவுள்ள அதே நேரம் தற்போது பாடசாலை நேரத்தில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம் பெற்று மாலைநேரங்களில் இல்ல விளையாட்டுபோட்டிச் செயற்பாடுகள் நடைபெறுவது பல பெற்றோருக்குத் தெரியாமல் தங்களுடைய பிள்ளைகளின் கல்வியில் தாமே மண்ணை அள்ளி போடுகின்றனர்.

அதாவது முன்னொரு காலத்தில் விளையாட்டு ஒரு பொழுதுபோக்காகக் காணப்பட்டதேயன்றி, தொழில் ரீதியாக ஓர் எதிர்காலத்தைக் காட்டுவதாக அமையவில்லை. இன்று அத்தகைய நிலைமை மாறிவிட்டது. இன்று விளையாட்டு என்பது தொழிலைப்பெற வழிகாட்டுவதாகவும் எதிர்காலத்திற்கு வித்திடுவதாகவும் பணமீட்டும் தொழிலாகவும் காணப்படுவதை எமது பகுதிப் பெற்றோரும் மாணவர்களும் புரியமறுப்பதேன்? பாடசாலைக்கல்விக் காலம் முடியும் போது அனைத்து மாணவர்களும் பல்கலைக்கழகம் செல்வதில்லை. ஆனால், விளையாட்டுத்துறையில் சாதனை புரிந்த மாணவர்களுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்புக்கள் விளையாட்டுத் துறைக்கான பல்கலைக்கழகத்தெரிவு, கல்வியியற் கல்லூரியின் உடற்கல்வித் துறைக்கான தெரிவு, வங்கிகளில் வேலை வாய்ப்பின்போது கல்வித் தகைமையுடன் மேலதிக தகைமையாக விளையாட்டைச் சேர்த்துக்கொள்ளல் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளை அறிந்தும் அறியாதது போலிருத்தல் சமூகத்தின் மடமையல்லவா? எனவே, அன்பான பெற்றோர்களே மாணவர்களே எமது கல்லூரியின் விளையாட்டுத்துறை சிறக்க பலவழியில் ஒத்துழைப்பும் நல்கிடுவீர். கல்லூரியின் மாணவர்களுக்கு வளங்கள் நிறையவே காணப்படுகின்றன. உதாரணமாக பொன்விழாக் காணும் மத்திய கல்லூரியில் உள்ளக விளையாட்டை மேம்படுத்த அதற்கான இட ஒழுங்கு செய்யப்பட்டு செஸ், கரம், மேசைப்பந்து போன்ற விளையாட்டுக்களில் பயிற்சிகள் இடம்பெறுகின்றன. அத்தோடு மைதானத்தில் கூடைப்பந்தாட்டப் பயிற்சியும் தொடர்ந்து இடம்பெறுகின்றது. இவற்றில் மாணவர்கள் பயிற்சி பெறுவதன் ஊடாக மாவட்டத்தில் சிறந்த அணிகள் என்ற நிலையை முதலில் அடைய முடியும். எதிர்வரும் ஆண்டுகளில் மேசைப்பந்து, கூடைப்பந்து ஆகியவற்றில் மாகாண இலக்கைப் பெறமுடியும். எனவே, இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்துவது மாணவர்களின் கடமையாகும்.

இது இவ்வாறு இருக்க விளையாட்டில் ஈடுபடும் சில மாணவர்கள் கல்வியில் கோட்டைவிடுகின்றனர். இங்கே மாணவர்களின் தவறு சுட்டிக்காட்டவேண்டியதாகிறது. அதாவது விளையாட்டில் ஈடுபட்ட பின், களைப்பு என்ற வகையில் இரவில் வீட்டுப்பாடங்களைப் படிக்காது நித்திரை கொள்வோம். அதனால் கல்விக்கு முழுக்குப் போடவேண்டியதுதான். உண்மையிலேயே விளையாட்டில் ஈடுபடும் பிள்ளைக்குக் குருதிச்சுற்றோட்டச் செயற்பாடு விரைவுபடுத்தப்படுகின்றது. இந்த நிலையில் மூளைக்குச் செல்லும் ஒட்சிசன் ஏற்றப்பட்ட குருதியின் அளவு அதிகரிக்கின்றது. எனவே, பயிற்சியில் உள்ள மாணவர்களுக்கு எந்த நிலையிலும் மந்தபுத்தி ஏற்பட வாய்ப்பில்லை. இருப்பினும், அவர்களுடைய கவனக்குறைவால் விளையாட்டுத்துறை மீது எல்லோரையும் கரி பூசவைத்து விடுகின்றார்கள். உண்மையிலேயே ஆரோக்கியமான உடலினைக் கொண்ட மாணவர்களுக்கு இலகுவான முறையில் கற்றலில் ஈடுபடமுடியுமென்று உளவியலாளர்கள் கூறுகின்றார்கள். எனவே, எமது மாணவர்களும் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும் என்பதே எனது ஆசையாகும்.

பொன்விழாக்காணும் எமது கல்லூரியில் முன்னுதாரணமாக இவ்வாண்டு மாகாண மட்டத்தில் **செல்வி.விக்னேஸ்வரன் டிலக்சனா** மூன்று வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.


MICROZIP
மைக்றோசிப் கணினிக் கல்லூரி
சகலவிதமான கணினி கற்கை நெறிகள்
ICT,GIT வகுப்புக்கள்,
ஆங்கில வகுப்புக்கள்
(Spoken English & Grammar.)
எமது சேவைகள்
E-mail,
Internet,
Skype,
Scanning&Printing,
Type Setting.
Director Mr. P-Ketheeswaran
NO : 742,
Yogapuram,
Center,
Yogapurm.
Tel-024 2343595,
M -077 2832106,
E-mail


கணபதி காட்வெயார்
GANAPATHI HARD WARE
வெல்டிங், மர வேலைகள்,
அலுமினிய பிந்திங், கம்மாலை வேலைகள்.
மற்றும் சகலவிதமான கட்டிட பொருட்களையும் ஒரே
பெற்றுக்கொள்ள கணபதி காட்வெயார்.
துணுக்காய் வீதி மல்லாவி
THUNUKKAI ROAD MALLAVI



LG
Life's Good
தரமான இலத்திரனியல் பொருட்களுடன் வளமான வாழ்த்துக்கள்
SANYO
JVC
TOSHIBA
Leading Innovation
DELL
JIALING
Panasonic
ideas for life
PHILIPS
SAMSUNG
Haier
hp
invent
என்றும் உங்களுடன்
Mallavi Abans

அவ்வாறே அகில இலங்கை ரீதியில் ஆசிரியர்களுக்கான மெய்வல்லுநர்ப் போட்டியில் எமது கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் திரு எஸ்.செல்வச்சந்திரன் அவர்கள், ஒரு தங்கப்பதக்கம், இரண்டு வெள்ளிப்பதக்கம், ஒரு வெண்கலப்பதக்கம் ஆகியவற்றைப் பெற்று பெரும் சாதனைகளைப் படைத்துள்ளமை மத்திய கல்லூரியின் விளையாட்டுத்துறைக்கு பெருமை சேர்க்கின்றன.

எனவே, ஒட்டுமொத்தமாக எமது கல்லூரியின் விளையாட்டுதுறையில் சாதக பாதக நிலைமைகளை நான் சீர்தூக்கி ஆராய்ந்துள்ளேன். எனவே, மனிதனைப் பூரணமாக்குவதில் சிறந்த பங்காற்றும் விளையாட்டுத்துறையை வளர்க்க கல்லூரிச்சமூகத்தினர் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் மாணவர்களை வழிப்படுத்தமுடியும் என்று கூறின் அது மிகையாகாது.

தொடர்பாக பொதுவான கருத்து 90% ஆன பெற்றோர்களிடம் காணப்படுவது யாதெனில் நல்ல பரீட்சைப்பெறுபேறுகளைப் பெறுவதே என்பதைப் பதிலாகக்கொண்டுள்ளனர். எனவேதான் இதிலிருந்து நாம் விளங்கிக்கொள்ள முடிவது, பெற்றோர் மட்டத்திலே கல்வியை ஒரு திணிப்புப் பொருளாகவே கருதுகின்றனர். இதனாலேதான் இன்றைய சமூகத்தில் குதூகலத்தைத் தொலைத்து நிற்கும் குழந்தைகள் ஏராளமாகக் காணப்படுகின்றனர்.

**திருமதி சுகுணா இராசேந்திரம்,**
**உடற்கல்வி ஆசிரியர்,**
**மல்லாவி மத்திய கல்லூரி.**



# அழியாப் புகழ் படைத்த கம்பன் பற்றிய கதைகள்

சோழப் பேரரசின் பயனாகத் தமிழகத்தில் காவியமும் ஓவியமும், கற்சிலையும் பொற்சிலையும், ஆடலும் பாடலும், அன்பும் அறிவும், அழகும் பெருக்கெடுத்தோடிய காலத்தில் வாழ்ந்தவன் கம்பன். புலவர்களாலே கவிச்சக்கரவர்த்தி எனப்போற்றப்பட்ட கம்பன், உலகப் பேரிலக்கியமான இராமாயணத்தை யார்த்து அழியாப் புகழ்பெற்று விளங்கினான் என்பதை இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், அறிஞர்களின் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம். மேலும், கர்ணபரம்பரைக் கதைகளினூடாகவும் கம்பன் பற்றி எவ்வாறு அறிந்து கொள்ள முடியும் என்பதை நோக்குவோம்.

கம்பநாடன் என்ற அரசனை எதிரிகள் தாக்கி அழிக்க கருவுற்ற அவன் மனைவியானவள் தமது வாரிசை எவ்வாறேனும் காக்கவேண்டும் எனக்கருதி அஞ்சித் திருவழுந்தூருக்குச் சென்றாள். அங்கு ஓர் உவச்சன் வீட்டில் தஞ்சமடைந்தாள் என்றும், பின்னர் அங்கேயே கம்பனைப் பெற்றெடுத்தாள் என்றும் அறியலாம். உவச்சன் ஒரு பூசாரி என்றும், கம்பன் ஏழுவயது வரைக்கும் அவருடனேயே இருந்தான் என்றும் அறிய முடிகிறது. சிறுவனாகிய கம்பனின் கவியாற்றலைக் கண்ட திருவழுந்தூர் சடையப்ப வள்ளல் அவனை எடுத்து ஆதரித்தார் என்றும் அறிய முடிகிறது. சடையப்ப வள்ளலின் இல்லத்தில் இருந்து வளருங் காலை ஒருசமயம் வயற்காவலில் ஈடுபட நேர்ந்தது. அவ்வேளை சிறுவனாகிய கம்பன் அசதியில் தூங்கிவிடுகின்றான். அப்போது வயலுக்கு வந்த குதிரை வயலை நாசஞ் செய்தது. கண்விழித்துப் பார்த்த கம்பன், குதிரை வயலை நாசஞ் செய்ததை எண்ணி காளியை நினைத்துப் பாடலொன்றைப் பாடக் குதிரை இறந்தது என்றும், குதிரை இறந்ததை அறிந்தால் மன்னன் சினங்கொள்வானே எனச் சடையப்ப வள்ளல் வருந்தும் வேளை, முன்னர் பாடிய பாடலின் முதல் மூன்று வரியைக் காளியை நினைத்துக் கம்பன் பாட, குதிரை உயிர்த்தெழுந்தது என்றும் அறியமுடிகின்றது. இக்கதை ஊரெங்கும் காட்டுத்தீ போல் பரவியது. இத்தகைய அதிசயத்தை சோழ மன்னனும் அறிந்தான்.

மன்னன், கம்பனை அழைத்தான். கம்பனைக் கண்ட மன்னன் இச்சிறுவனா அவன்? எங்கிருந்து வருகிறாய்? என்று கேட்டான். அதற்கு விடையாகப் பாடிய பாடலே

"மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று."

எனத் தொடங்கும் பாடலாகும். அத்தகைய சிறுவனின் பாடலைக் கேட்டு வியந்து மகிழ்ந்த சோழ மன்னன் கம்பனைத் தன்னுடைய அரண்மனையிலே வசிக்குமாறு வேண்டினான் என்றும், அங்கு அரசசபையில் இருந்த புலவர்களுடன் இருந்து நூல் விடயங்களை ஆய்ந்துகொள்ளுமாறும் வேண்டுகின்றான். அரசசபையின் ஆஸ்தானக் கவியாக இருந்தவர் ஒட்டக்கூத்தர். இவருக்குச் சமமாக மதித்துக் கம்பனை அங்கே அமர்த்துகின்றான் சோழன். இதேவேளை சடையப்ப வள்ளல் கம்பருக்கு விவாகம் செய்துவைத்தாரென்றும்; கம்பருக்கு அம்பிகாபதி என்ற மகனும் உள்ளான் என்றும் அறியமுடிகிறது.

சோழமன்னன் கூத்தர்பெருமானே, "நீண்டநாட்களாகவே என் மனதில் ஒரு விருப்பம் இருந்து வருகிறது. அதைத் தாங்கள் தான் நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணியிருந்தேன். இப்போது இரட்டிப்பு இன்பத்தை அடையவேண்டும் என்ற பேராசையால் உங்கள் இருவரையும் கேட்டுக் கொள்கின்றேன். எனது ஆட்சிக் காலத்திலேயே இராமாயணம் எனும் பெருங் காப்பியத்தை தமிழில் யாத்து அரங்கேற்ற வேண்டும் என்ற என் விருப்பத்தை பூர்த்தி செய்வீர்களா?" என்று கேட்கிறான். ஒட்டக்கூத்தரும் கம்பரும் மூன்று மாதங்களில் தனித்தனியாக இராமாயணத்தை இயற்றி அரங்கேற்றுவதாக வாக்குக் கொடுக்கின்றனர். மன்னன் மீளாமகிழ்ச்சியுடன் எப்போது அந்த இன்ப நாளென்று ஆவலுடன் காத்திருக்கிறான்.

சோழன் ஆர்வமேலீட்டால் இருவரையும் mi oj ;J "இராமாயணம் எந்த அளவில் உள்ளது?" என்று கேட்கின்றான். அதற்கு ஒட்டக்கூத்தர் உத்தரமாக "ஐந்து காண்டமும் பாடி ஆறாவது காண்டத்திற் கடல்காண் படலம் வரையும் பாடினேன்" என்றார். கம்பர் அது கேட்டுத் தாம் கூத்தரிலும் அதிகம் பாடியதாக காண்பிக்க விரும்பிச் "சேதுபந்தனப் படலம் பாடுகின்றேன்" என்றார். அது கேட்ட சோழன் "நீர் இறுதியாகப் பாடிய பாடலைச் சற்றே பிரசங்கியும் கேட்போம்" எனக் கேட்க, கம்பர் உடனே

"குமுதனிட்ட குலவரை கூத்தரிற்
திமிதமிட்டுத் திரியுந்திரைகடற்
துமித மூர்புக வானவர் துள்ளினார்
அமுதமின்னுமெழுமென மாசையால்"

என்று பாடுகிறார்.

இங்கே 'துமி' என்ற சொல்லினால் ஒட்டக்கூத்தருக்கும் கம்பருக்குமிடையே விவாதம் நடைபெறுகிறது. அதனை நிருபிக்குமாறு கூத்தர் வேண்டுகின்றார். இவர்கள் இருவரும் சோழனுடன் சேர்ந்து ஊரெங்கும் அலைகின்றனர். விடை கிடைக்கவில்லை; கம்பர் சலிக்கவில்லை. இறுதியாக ஆயர் சேரிக்குச் செல்கின்றார்கள். அங்கே தயிர்கடையும் பெண் ஒருத்தி; விளையாடிய சிறுவர்கள் கிட்ட ஓடிவந்ததும் "இங்கே வராதீர்கள் துமி பறக்கும்" என்று கூறுகின்றாள் இதனைக் கேட்ட கம்பனும் சோழனும் மகிழ்; கூத்தர் மனம் கறுவுகிறார். இது அந்தக் கலைவாணியின் விளையாட்டு என்பதைக் கூத்தர் அறிந்து கொள்கின்றார். கோபமுற்ற கூத்தர் தாம் தோற்றுப் போய் விட்டதாக நினைத்து தாம் இயற்றிய இராமாயண ஓலைச்சுவடிகளைக் கிழித்தெறிந்தார் என்றும் ஈற்றில் கம்பர் கண்டு "கூத்தரே இது என்ன செயல்?" எனத் தடுத்து உத்தர காண்டத்தைக் காப்பாற்றினார் என்றும் அதனைத் தனது இராமாயணத்தின் ஆறாவது காண்டத்திற் சேர்த்துக் கொள்ளப் போவதாகவும் வேண்டுகிறார் என்றும் அறிய முடிகிறது. மேலும்,

"கழுந்தராயுனகழல் பணியாதவர்
கதிர்மணிமுடிமீதே
அழுந்தவாளிகடொடுசிலை ராகவ வபிநய
கவிநாதன்
விழுந்த ஞாயிறு வெழுதன் முன்னரே
வேதியருடனாராய்ந்
தெழுந்த ஞாயிறு விழுவதன் முன் கவை
பாடின தெழுநூறே"

என்ற பாடல் மூலம் கம்பனின் கவி இயற்றும் அபார திறமைகளைக் கண்டுகொள்ளமுடியும்.

கம்பர் இப்படியாக இராமாயணம் இயற்றிமுடிந்த பின்னர் அரங்கேற்ற வேளை மிகுந்த பல சிரமங்களை எதிர்நோக்கினார். ஒவ்வொன்றிலும் படிப்படியாக வெற்றியீட்டிச் சிறப்பான முறையில் நூல் அரங்கேற்றப்பட்டது எனலாம். அதன்மூலம் கம்பன் "கவிச்சக்கரவர்த்தி" எனும் பட்டப்பெயரையும் பெற்றுக் கொள்கின்றான்.

தன்னை வளர்த்து ஆளாக்கிய நன்றிக்கடனுக்காக கம்பன், சடையப்பவள்ளலை ஆயிரத்திற்கு ஒரு பாடலில் வைத்து தனது நன்றிக்கடனைத் தெரிவித்து மகிழ்கின்றான். உதாரணமாக

"மழையென்று ஆசங்கை கொண்ட
கொடை மீளி அண்ணல்"

என நாகபாசப் படலத்திலும் பாடியுள்ளான். இத்தகைய தன்மைகள் நன்றிமறவாமைக்குச் சிறந்த எடுத்துகாட்டுகளாகும்.

இராமாயணம் இயற்றியதன் மூலம் கம்பனை யாவரும் புகழ்ந்து பரிசில் பலகொடுத்து மகிழ்ந்தனர். கம்பனைப் பலவாறு உயர்த்திய மன்னனுக்கும், கம்பனுக்கும் பிற்காலத்தில் மனக்கசப்புக்கள் வரலாயின. அதற்கான கால்கோளான விடயம் "இந்த இராச்சியம் உமக்கைக்கியம், நீர் எமக்கைக்கியம்" என்று ஒருமுறை இராசாவோடு தம்மைச் சரிக்கட்டி, ஒப்பிட்டுப் பேசியதால் அரசன் உடன் பேசாது, சினங்கொண்டு கம்பனை அங்கிருந்து வெளியேற்றுகிறான். மன்னனின் நிலைகண்ட தவித்த அரசி அவனது தாசியாகிய பொன்னிக்கு உணர்த்தினாள். அவள் "கம்பனின் ஆணவத்தை அடக்குவேன்" என்றுகூறி, "அவரை எனக்கு அடிமையாக்கி விடுகின்றேன்" என்றாள். கம்பனும் உபாயமொன்றால் "தாசி பொன்னிக்குக் கம்பனடிமை" என்று ஓர் நறுக்கில் எழுதுவித்துக் கையொப்பமும் வாங்கி அரசனிடம் கொடுத்தாள். இதனால் மகிழ்ந்த

அரசனும், அவை கூட்டிக் கம்பனை எள்ளி நகையாட, தனது கவித்திறத்தால் தான் "இலக்குமிக்குக் கம்பன் அடிமை" என்று விளக்குகின்றான். இதனாற் சினம் கொண்ட மன்னன், நான் கொடுத்த விருதுகளை வைத்து நீர் எங்கேனும் போகலாம் என்று கூற கம்பர்,

"காத மிருபத்து நான் கொழிய காசினியை
ஓதல் கடல் கொண் டொளித்ததோ- மேனியிற்
கொல்லி மலைத் தேன் சொரியும் கொற்றவா
நீ முனிந்தால்
இல்லையோ வெங்கட் கிடம்"
என்ற பாடலையும்

"மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதுவோ...."

என்றும் பாடி வீட்டுக்கும் போகாது, மனைவிக்கும் அறிவியாது, செலவுக்குப் பணமும் எடாது, நீண்ட தூரம் சென்று பசிப்பிணி கொள்ள 'வேலிக்கு' (வேலி - பெண்ணின் பெயர்) சுவர் வைத்துக் கூலி பெற்றான் என்றும், மேலும் பசி எடுக்க கோமுட்டி கடையிலே அவல் கேட்டுப் பெறாமலும், பிராமணனிடம் நீர் கேட்டு வாயாமலும், பின்னும் மனமுடைந்து களைப்புற்று அப்பாற்போகும் போது உழுகின்ற வேளாளன் ஒருவனுக்குப் பழஞ்சோறு வரக்கண்டார். முந்தி வாங்கி உண்டார். அவர் உண்ட மீதியை உழவன் உண்டான். இவர் பசியாறிய பின்னர் இச்சம்பவத்தைச் சுட்டி,

"செட்டி மக்கள் வாசல்வழிச் செல்லோமே
சொக்காரப்
பொட்டி மக்கள் வாசல் வழிப் போகோமே-
முட்டிப்போகும்
பார்ப்பா ரகத்தை யெட்டிப் பாரோமே
யெந்நாளும்
காப்பாரே வேளாளர் காண்"
"மேழி பிடிக்குங்கை வேல்வேந்தர்
நோக்குங்கை
ஆழி தரித்தே யருளுங்கை - சூழ்வினையை
நீக்குங்கை யென்று நிலைக்குங்கை நீடுழி
காக்குங்கை காராளன் கை"

என்று பாடினார். ஏனைய புலவர்கள் அரசர்களை அல்லது ஆண்டவனைப் பாடுவது வழக்கம். ஆனால் கம்பன், உழவரையும் புகழ்ந்து "ஏரெழுபது பாடிப்" பெருமைப்படுத்தியுள்ளான். பெருமை பெற்றுள்ளான். இதற்கு மேற்கூறிய சம்பவங்கள் காரணமாக அமையலாம். மேற்குறித்த வேளாளன் பசியாறி மீளவும் உழவே அவ் உழவுசாலிற் தபலை ஒன்றோடு புதையல் தோன்ற அதுகண்ட உழவன் மகிழ்ந்து கம்பனை வீட்டில் இருத்தி தன்னுடன் தங்குமாறு கேட்கின்றான். கம்பன் மறுத்து "நன்னான்கு முழச் சீலை மாத்திரம் இரண்டு கொடு" என்று வாங்கிப்போய் ஓர் சீமானின் உதவியுடன் சேரனுக்கு அடைப்பக்காரனாயினார்.

ஓர்நாள் அரசபையில் புலவர்கள் இராமாயணப் பிரசங்கம் செய்யக் கம்பன் தலைகாட்டவே சேரன் "உனக்கு, இப்பிரசங்கம் வருமா?" எனக் கேட்க, இவர் உத்தரமாய் நான் கம்பருக்கு அடைப்பக் காரனாய் இருந்தபோது கேட்டிருந்தேன். ஆதலால் வரும் என்றார். "எங்கே பிரசங்கி கேட்போம்" என்று கூற இவர் நவரசலங்காரத்தோடு பிரசங்கித்து முழங்கினார். இதனால் மகிழ்ந்த மன்னன் இவரது வித்துவத்தைக் கண்டு அடைப்பக்கார வேலையால் மாற்றித் தனது வித்துவான்களுள் ஒருவராய் ஆக்கியதுடன், தனது பந்தி போசனத்திலும் சேர்த்துக் கொண்டான். இதனால் அவைப் புலவர்கள் வெறுப்புக் கொண்டு, சூழ்ச்சி செய்து கம்பரை வெளியேற்ற முனைந்து, ஈற்றில் தோற்றுப் போய் மன்னனால் தண்டனையும் பெறுகிறார்கள். சேரன் கம்பனையும் முற்றாக அறிகிறான். முன்னிலும் பன்மடங்கு அன்புகொண்டு கம்பனை மதிக்கிறான்.

இவ்வாறிருக்க சோழன், கம்பன் இல்லாத் தன்சபை "சந்திரன் இல்லா வானம், தாமரை இல்லாத் தடாகம்" என்று வருந்தி திருமுகம் எழுதிக் கம்பனை அழைக்கின்றான். சோழனின் விருப்பப்படி கம்பன் தன்னை விட்டுப் பிரியப்போகிறான் என்று சோழராசன் துக்கித்து இருந்தபோது கம்பன்,

"பாலுக்குச் சக்கரையில்லை யென்பார்க்கும்
பருகையற்ற
கூழுக்குப் போடவுப்பில்லை யென்பார்க்குங்
குற்றித்தைத்த
காலுக்குத் தோற்செருப்பில்லை யென்பார்க்கும்
கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணையில்லை யென்பார்க்கும்
விதனமொன்றே"

என்று பாடி அவனை ஆற்றுகின்றார். இராச பவனியோடு சேரனால் அனுப்பப்பட்ட கம்பனை சோழன் எதிர்வந்து ஏற்று சிங்காசனத்தில் அமர்த்தி இதுகாலும் நடந்தது கேட்டு மகிழ்ந்து ஈற்றிலே பரிகாசமாய் எல்லாம் சரி புலவரே, "இராசன் ஒருவன் அடைப்பக்காரனாய் உம்முடன் வரத்தக்க வகையிற்

திரும்புவேன் என்றீரே! என்ன மாதிரி? எனக் கேட்க, கம்பன் எட்டு நாளில் நிறைவேற்றுவதாக கூறுகின்றான். அதேபோல மன்னனுக்குத் தெரியாது சேரன் வந்து வெற்றிலை மடித்துக் கொடுத்தான் என்றும். பின்னரே மன்னன் சோழனுக்குத் தெரியவந்தது என்றும் அறியமுடிகிறது. இவ்வாறு பிரபல்யம் பெற்று விளங்கிய கம்பன் வாழ்வு பின்னர் பெரும் துன்பமாயிற்று எனலாம்.

கம்பனின் மகனும் வித்துவானுமாகிய அம்பிகாபதிக்கு சோழ்ன் மகள் அமராபதி மீது காதல். இதனை அறிந்த மன்னன் உண்மைதானா? எனச் சோதிக்க, கம்பரையும் அம்பிகாபதியையும் விருந்திற்கு அழைத்து, அமராபதியை விருந்து பரிமாறவிட்டு அவதாகின்றான். அமராபதியைக் கண்டதும் அம்பிகாபதிக்கு காதல் கட்டுமீறி மேலிட,

"இட்டடி நோவ எடுத்தடி கொப்பளிக்க

வட்டில் சுமந்து மருங்கு அசைய...

என்று பாட இதனை உணர்ந்துகொண்ட கம்பன் அவசரமாகப் மிகுதியைப் பாடி முடிக்கின்றான். அதாவது

"கொட்டிக் கிழங்கோகிழங்கு என்று கூறுவாள் நாவில்

வழங்கு ஓசை வையம் பெறும்"

..

(வீதியிலே கிழங்கு விற்கும் பெண்ணாக கலைவாணி செல்கிறாள். அவளைப் பார்த்துப் பாடுவதாக) அப்போதும் கம்பருக்கு கலைவாணியே அருள்பாலித்துக் காக்கிறாள். எனினும், மன்னன் அம்பிகாபதிக்கு நிபந்தனை விதிக்க, காதல் மேலீட்டால் அது தவற, மன்னன் அம்பிகாபதிக்கு மரணதண்டனை அளிக்கிறான். இதனால் மிகவும் நொந்துபோய் இருந்த கம்பன், ஒரு சமயம் இளவரசன் வீதியால் வரும்போது யானையைக் கண்டு பயந்து, கம்பன் இல்லம் ஏக, புத்திர சோகத்தில் இருந்த கம்பன், இளவரசனை எழுத்தாணியாற் குத்திக்கொன்றான் என்றும் அறியமுடிகிறது. கம்பனது புத்திரசோகமே தசரதமன்னனின் நிலையில் இருந்து பாடமுடிந்தது என்றும் அறிஞர்கள் கூறுவார்கள். மேலும், கம்பன் தமது அறுபதாவது வயதில் வறுமையுற்று இறந்தான் என்றும் அறிய முடிகிறது.

சமூகக் காப்பியம் ஒன்றைச் சித்திரித்து, நடைமுறை வாழ்க்கையில் அனைவருக்கும் பயன்படும் விதத்தில் இராமாயணத்தை வடித்து, அழியாப் புகழ்படைத்த கம்பனிற்கு கலைவாணியின் அருட்கடாட்சம் கிடைத்ததை சில சம்பவங்கள் வாயிலாக அறியமுடிகிறது. மேலும், "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்", "கல்வியிற் பெரியன் கம்பன்" எனும் கூற்றுக்கள் அவனது கவியாற்றலைப் பறைசாற்றி நிற்கின்றன எனலாம்.


**திரு.சி.டிகுகுமார் (B.A. Dip.in.Ed),**
**ஆசிரியர்,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி.**

# பள்ளி வாழ்க்கை

மீண்டும் ஒரு மழைக்காலம்
கண்களின் ஓரம் கரைகின்றது
ஓடிவந்த வார்த்தைகள்
உதடுகளுக்குள்ளே சிறைப்படுகின்றன
உள்ளத்தில் மீண்டும் ஒரு நெருஞ்சிமுள்
இன்றோடு முடிந்துவிட்டது
பதின்மூன்று வருடப்பள்ளி வாழ்க்கை
வாய்விட்டுப் பேசமுடியாது
போய்விட்டது உள்ளம்
வெறும் கதிரை மேசைகளைப்போல
காற்றோடு கலந்து வந்த கல்லூரிக்கீதம் மட்டும்
வெகுதூரத்தில் மெதுவாக
பிரியாவிடை...... விடை தெரியாத கேள்விகளாய்

எதைக் கொண்டு வந்தோம்
எதைக் கொண்டு போகின்றோம்
என்பதெல்லாம் பொய்யாகிவிட்ட கணங்கள்
வெறும் கையோடு காலடி எடுத்து வைத்தும்
அறிவை மட்டுமல்லாது
அன்பு பாசம் நட்பினையும்
ஊட்டி வளர்த்த கல்லூரி
இன்று கவலையையும் கூடவே
தந்து வழியனுப்புகிறது
ஒரு உலகம் தனது
கதவுகளை மூடிவிடுகின்றது - அன்று
கல்லூரி றெயிலில் ஏறிய நாம்
இன்று ஒரு ஸ்ரேசனில் இறங்கிவிட்டோம்
அடுத்த றெயிலில் ஏறுவதற்காக
இது எம் கல்லூரிக் கதையின்
இறுதி அத்தியாயங்கள்
முடிந்து போகின்ற கணங்களாக
பாடத்திட்டங்களைப் போல...

கூடிக் கும்மாளமடித்த வகுப்பறைக் கட்டிடங்கள்
'ஓ' எனக் கதறி அழுகின்றன
காலை ஒன்றுகூடல் மைதானம்
எங்களைக் காணாத சோகத்தில்
கண்ணீர் வடிக்கிறது
சிற்றுண்டிச் சாலைக்கும் இனி நட்டம்தான்
பேனாக்கள் மட்டும் வரைகின்ற முகவரிகளை
ஒவ்வொரு முகங்களும் ஒவ்வொரு
ஓட்டோகிறாப்பைப்போல்
நினைவுகளைப் பதிவாக்குகின்றன.
உள்ளம் ஊமையாய் அழுகிறது
பட்டமளிப்பு விழாவும் வைத்து வழியனுப்புகின்றது
எங்கள் உலகம்.
கைகொண்டு கண்களின்
கண்ணீரைத்துடைத்தாலும்
உள்ளம் ஏற்பதாக இல்லை.
மௌனங்கள் மட்டும் மனதுகளை
மெதுவாக வருடிச் செல்கின்றன
வானம்கூட வார்த்தைக்குள்
வசப்பட்டுக் கொள்கிறது
விடுமுறைவந்து விட்டால்
விரல்கள் எண்ணும் நாட்களை
மீண்டும் பாடசாலை மணி எப்போது ஒலிக்கும் என,


பொன் விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்
Thanoos
Digital Art & Video
Out Door Photography, Videography
Album Making & Binding,
Video Editing &
All Kind of Name Boards.
T.P : 0776679450, 0727679450, 0214916685. Inuvil Emil : thanoosdigital@gmail.com


பொன் விழா சிறக்க வாழ்த்துகின்றோம்
Dulux
வேழவேந்தன்
பல்பொருள் வாணீயம் (கமல்)
Velaventhan Palporull Vanipam
சகல வ விதமான கட்டடப் பொருள்கள் மின்சார மின்னியல் பொருட்கள்
எஸ்லோன் பைப் பிற்றிங்ஸ் வகைகள் சகலவிதமான வர்ணப்பூச்சு வகைகள்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்.
உரிமையாளர்:- ச.காந்தரூபன்
பிரதான சாலை, மல்லாவி
தொ.பே:-0773592265


பொன் விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்
சாலினி
குளிரூற்று
அன்
சுவையகம்
உரிமையாளர்:- இ.சண்முகராசா
பிரதான சாலை, மல்லாவி

கூட்டுமுறைக்குச் சண்டைகள்
தேர்வுப்பேப்பரில் புள்ளி கூட்டுவதற்குச் சண்டைகள்
கதிரை மேசைகளுக்காகவும் போட்டுக் கொண்ட
குட்டிச் சண்டைகளும்
இனிமேல் எட்டமாகப்போய்விடும்.
கின்னஸ் புத்தகத்தில் தான் எங்களின் பெயரில்லை
ஆனால் சுற்றியுள்ள
வகுப்புச் சுவர்களில் எல்லாம்
எங்களின் பெயர் நிறைந்திருக்கும்.
வாங்கு மேசைகளிலும் பெயர் எழுதிவைத்துவிட்டு
இது என்னுடையது என்று உரிமை கொண்டாடும் வழக்கம்......

பக்கத்து வகுப்புடன் அரட்டை அடிப்பதற்காய்
மெயின்கோல் தான் வேண்டும் என்று
ரீச்சரிடம் அடம்பிடித்து ஜெயித்த நாட்கள்
கதிரையில் இருந்து குதிரையாடி விழுந்த நாளும்
பக்கத்து வகுப்பைப் பார்த்து இரசிப்பதற்காக
உடைத்து வைத்திருந்த கண்ணாடி ஜன்னல்களும்
இனிமேல் கண்ணீர் வடிக்கும்
குறும்புத்தனமாய் வரும்கோபம்
குட்டியாய் வெளிப்படுத்த ஓர் சண்டை
கும்பலாகப்பாடும் இசைக்கச்சேரிகளுமாக........
குதூகலமான ஓர் வாழ்க்கை
இத்தனைக்கும் மேலாக தவணை முடிவு என்றாலே
படபடப்பும் பயமும்
ஏன்........ஏன்.......என்ன காரணம்
"பரீட்சை" ஐயோ அதுதானே எங்கள் எதிரி
கசப்பான மாத்திரை போட்டால்தானே நோய்குணமாகும்
இதைப்போலத்தான் ப்ரீட்சை எழுதினால் தானே பாஸ் ஆகலாம்!
இப்படிச் சில்லறை சில்லறையாகச்
சேர்த்து வைத்த சந்தோசங்கள் எல்லாம்
இன்றோடு சின்னா பின்னமாகச் சிதறுகின்றன.

இன்று A/L party
இனிமேல் Admission card
அதற்குப் பிறகு A/L Exam
பின்னர்; Result வரும்
பல்கலைக்கழகம் வரும்
பட்டப்படிப்பு வரும்
பட்டமளிப்பு விழாவும் வரும் - ஆனால்
பள்ளி வாழ்க்கை வந்திடுமா?......
பழகிச்சென்ற முகங்கள் ஞாபகத்தில் இருந்திடுமா?
அல்லது புகைப்படம்தான்
ஞாபகப்படுத்துமா?
ஆட்டோகிராப்பின் ஒற்றைக்குள்ளே
ஒளிந்திருக்கும் சோகங்களின் பின்
நமது நட்பு மீண்டும் கண் சிமிட்டுமா?
இதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும்
அது வரைக்கும் காத்திருப்போம்
பள்ளி வாழ்க்கை தந்து சென்ற
இனிமையான நினைவுகளை மட்டும்
நெஞ்சில் சுமந்த படி.....

**2011 க.பொ.த (உயர்தர) மாணவர்கள்.**



# சனத்தொகை

"சனத்தொகை என்பது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் உலகில் அல்லது ஒரு நாட்டில் அல்லது ஒரு பிரதேசத்தில் வாழும் மொத்த மக்களின் எண்ணிக்கையாகும்." இச் சனத்தொகை ஒரு நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் மிக முக்கிய இடம் வகிக்கின்றது. இச் சனத்தொகை சார்ந்த புள்ளி விபரங்களைத் துல்லியமாக எடுத்து திட்டமிடல்களை மேற்கொண்ட நாடுகள் உலகின் முன்னணியில் திகழ்வதனைக் காணலாம்.

எல்லா வளங்களையும் விட மனிதவளம் உன்னதமானதாகும். ஏனெனில் ஏனைய எல்லா வளங்களையும் சிறந்த முறையில் கையாண்டு பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதற்கு இவ்வளமே பிரதானமாக விளங்குகின்றது. இன்று உலக சனத்தொகை 7000 மில்லியனை தாண்டிவிட்டது. ஒரு குடும்பத்திலோ அன்றி நாட்டிலோ சனத்தொகை தொடர்பான திட்டமிடல்கள் இன்றியமையாதவை. 1871 ஆம் ஆண்டிலிருந்து 10ஆண்டுகளுக்கு ஒருமுறை இலங்கை குடிசனப்புள்ளி விபரத்திணைக்களம் சனத்தொகைக் கணக்கெடுப்பை மேற்கொண்டு வருகின்றது. 2011 ஆம் ஆண்டும் இச் சனத்தொகைக் கணக்கெடுப்பு இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உலகில் சனத்தொகை கூடிய நாடாக சீனா விளங்கினாலும் 2050 ஆம் ஆண்டளவில் இச் சனத்தொகை இந்தியாவிலேயே அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உலக சனத்தொகையை எடுத்து நோக்கும் போது சனத்தொகையின் பருமன், வளர்ச்சி, பரம்பல், அடர்த்தி என்ற வகையில் பல்வேறு கோணங்களில் ஆராயலாம். இச்சனத்தொகை விரைவாக அதிகரித்தல் அல்லது வீழ்ச்சியடைதல் நெருக்கடி நிலையைத் தோற்றுவிக்கும். சனத்தொகைப் பருமன் என்பது சனத்தொகையின் மொத்த அளவைக் குறிக்கின்றது. இன்று 7000 மில்லியனாக உள்ளது. இச் சனத்தொகை தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகின்றது.

ஒவ்வொரு நாடும் நிலைத்துநிற்கும் அபிவிருத்தி (Sustainable Development) நோக்கி முன்னேறுவதே இன்றியமையாததாகும். நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்பது நீண்டகாலம் பயன் தரக் கூடியதாகவும் சூழலை மாசுபடுத்தாத வகையிலும் சுற்றாடலிலுள்ள வளங்களை பயன்படுத்தக் கூடியதாகவும் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகும். தற்கால பூகோள மயமாதலுக்கு ஈடுகொடுத்து பன்மைக் கலாசாரத்திலும் எமது பாரம்பரியங்கள், கலாசாரங்கள், நாகரிகங்களை பேணக்கூடிய வகையில் வாழ்ந்து எதிர்கால சந்ததியினருக்கும் அவற்றைக் கடத்த வேண்டியது தற்காலத்தவரின் தலையாய கடமையாகும்.

## சனத்தொகை வளர்ச்சி

சனத்தொகை வளர்ச்சி என்பது ஒரு வருட காலப்பகுதியில் ஒரு நாட்டில் சனத்தொகையில் ஏற்படும் அதிகரிப்பாகும். இதனை 100% இல் குறிப்பிடுவதே சனத்தொகை வளர்ச்சி வீதம் ஆகும்.

சனத்தொகை வளர்ச்சியை இயற்கை வளர்ச்சி, தேறிய குடிப்பெயர்வு ஆகிய இரண்டு பிரதான காரணிகள் தீர்மானிக்கின்றன. இயற்கை வளர்ச்சி என்பது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒரு நாட்டில் நிகழ்ந்த பிறப்புக்களுக்கும், இறப்புக்களுக்கும் இடையிலான வேறுபாடு ஆகும்.

தேறிய குடிப்பெயர்வு என்பது ஒரு நாட்டில் ஒரு குறிப்பிட்ட வருட காலப்பகுதியில் நிகழ்ந்த குடிவரவுக்கும் குடியகல்வுக்கும் இடையிலான வேறுபாடு ஆகும்.

சனத்தொகை வளர்ச்சி = இயற்கை வளர்ச்சி + தேறிய குடிப்பெயர்வு

இயற்கை வளர்ச்சி = பிறப்புக்கள் – இறப்புக்கள்

சனத்தொகை வளர்ச்சி வீதம் = சனத்தொகை வளர்ச்சி X 100

நடு ஆண்டு சனத்தொகை

தேறிய குடிப்பெயர்வு = குடிவரவு – குடியகல்வு

சனத்தொகை வளர்ச்சிக் கால கட்டங்களை இரண்டு வகைகளில் நோக்கலாம்.

1) வரலாற்றுக் கால கட்டம்.

இது உயிர்கள் தோற்றம் பெற்றதிலிருந்து கி.பி.1650 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியாகும்.

2) அண்மைக் காலகட்டம்.

தற்காலத்தின் சனத்தொகையின் வளர்ச்சிக் காலகட்டத்தினை இது குறிக்கின்றது.

### சனத்தொகை இரட்டிப்புக் காலம்

ஒரு நாட்டில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் காணப்படும் சனத்தொகை இரண்டு மடங்கு ஆவதற்கு எடுக்கும் காலப்பகுதியை சனத்தொகை இரட்டிப்புக் காலம் என அழைப்பர். இதனை பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிப்பிடலாம்.

சனத்தொகை இரட்டிப்புக் காலம் = 70/சனத்தொகை வளர்ச்சி வீதம்.

கி.பி.2025 – 2030 காலப்பகுதியில் சனத்தொகை வளர்ச்சி வீதம் ஒரு நிலையான மட்டத்திற்குள் வரலாமென ஐக்கிய நாடுகள் சபை தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளது. கி.பி.2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளே சனத்தொகைப் பிரச்சினையை பெரிதும் கொண்டிருக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

### குடிப்பரம்பல்

ஒரு நாட்டில் சனத்தொகை பரம்பிக் காணப்படும் முறை குடிப்பரம்பல் எனப்படும். பௌதிக, மானிடக் காரணிகள் சாதகமாக இருக்கும் பிரதேசங்களில் சனத்தொகை அதிகமாகவும், பாதகமாகவும் இருக்கம் பிரதேசங்களில் சனத்தொகை குறைவாகவும் காணப்படும். பாலைவனப்பகுதிகள், கரடுமுரடான மலைப்பகுதிகள், கடுங்குளிர்ப் பிரதேசங்கள், அடர்ந்த காட்டுப்பகுதிகளில் சனத்தொகை மிகக் குறைவாகக் காணப்படுவதனை நாம் காணலாம். உலகில் தென்னாசியா, தென்கிழக்காசியா, கிழக்காசியா, வடமேல் ஐரோப்பா ஆகிய பகுதிகளில் சனத்தொகை மிக அதிகமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இவை உலகின் மொத்த நிலப்பரப்பில் 10% ஆக உள்ளது. 64%ஆன பகுதிகளில் மிகக்குறைந்த சனத்தொகை காணப்படுகிறது. 26% ஆன நிலப்பரப்பில் நடுத்தரமான சனத்தொகை காணப்படுகிறது. சனதொகைப் பரம்பலை தீர்மானிக்கும் காரணிகள் கால, இட அடிப்படையில் மாற்றம் அடைகின்றன. உதாரணமாக பிறேயறீஸ் புல்நிலப் பிரதேசம் ஆதிகாலத்தில் சனத்தொகை அற்ற பிரதேசமாகக் காணப்பட்டபோதும் தற்போது ஐதான மக்கள் தொகை கொண்ட பிரதேசமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

சனத்தொகையின் சமமற்ற பரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகளை

1) பௌதீகக் காரணிகள்

2) மானிடக்காரணிகள்

3) குடி விவரணவியல் காரணிகள் என பாகுபடுத்தலாம்.

பௌதீக காரணிகளில் காலநிலை, தரைத்தோற்றம், நீர், மண், இயற்கை வளங்கள் போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

மானிடக் காரணிகளில் போக்குவரத்து, வர்த்தகம், நகராக்கம், ஊழிய அசைவு, தொடர்பாடல் தொழில்நுட்பம், அரசியல், நாகரிகம் போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

குடி விவரணவியற் காரணிகளில் பிறப்பு, இறப்பு, குடிப்பெயர்வு ஆகிய காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

### சனத்தொகைக் கட்டமைப்பு

சனத்தொகையை வயது, பால், சமயம், இனம், கல்வி, பொருளாதாரம், பண்பாடு போன்றவற்றின் கட்டமைப்பைப் பற்றி நோக்குவதே சனத்தொகைக் கட்டமைப்பு ஆகும்.

சனத்தொகையின் வயது, பால் கட்டமைப்பினைச் சனத்தொகைக் கூம்பகத்தில் நாம் அவதானிக்கலாம். சனத்தொகைக் கூம்பகத்தினை மூன்று வகைக் கூம்பகங்களாக வகைப்படுத்தியுள்ளனர்.

1) ஆதிகரிக்கும் சனத்தொகைக் கூம்பகம்

2) நிலையான சனத்தொகைக் கூம்பகம்

3) குறைந்து செல்லும் சனத்தொகைக் கூம்பகம்

சனத்தொகை சுமையென்று கூறுவோரும் உளர். மாறாக சனத்தொகை ஒரு சுமையல்ல அது ஒரு வளம் எனக் கூறுவோரும் காணப்படுகின்றனர். மனிதன் தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி வளங்களைக் கண்டுபிடித்தல், அவற்றைத் தேவைக்கேற்ப மாற்றியமைத்தல் மூலம் முக்கியத்துவம் பெறுகின்றான். எதிர்கால உலகினை நிலைபெறச் செய்வது தற்கால மனித வளம் ஆகும். இந்த வகையில் இளவயதுச் சனத்தொகை எதிர்கால வளம் ஆகும்.

## சனத்தொகை தொடர்பான எண்ணக்கருக்கள்

### பிறப்பு வீதம்

ஒரு நாட்டில் ஒரு வருட காலப்பகுதியில் நிகழ்ந்த பிறப்புகளின் எண்ணிக்கையினை மொத்த சனத்தொகையின் 1000இற்குக் கூறுவதாகும்.

### இறப்பு வீதம்

ஒரு நாட்டில் ஒரு வருட காலப்பகுதியில் நிகழ்ந்த இறப்புகளின் எண்ணிக்கையினை மொத்த சனத்தொகையின் 1000இற்குக் கூறுவதாகும்.

### சிசு மரண வீதம்

ஒரு நாட்டில் ஒரு வருட காலப்பகுதியில் நிகழ்ந்த சிசு மரணத்தினை மொத்த உயிர்ப்பிறப்புகள் எண்ணிக்கையின் 1000இற்குக் கூறுவதாகும். சிசு என்பது ஒரு வயதிற்குட்பட்ட குழந்தை ஆகும்.

### எழுத்தறிவு வீதம்

ஒரு நாட்டில் உள்ள எழுத்தறிவுடையோரின் எண்ணிக்கையினை மொத்த சனத்தொகையின் 100% ஆகக் கூறுவதாகும். எழுத்தறிவுடையோர் என்பது ஒரு நாட்டில் உள்ள மொத்த சனத்தொகையில் எழுத வாசிக்கத்தெரிந்தோரின் எண்ணிக்கையாகும்.

## ஆயுட் காலம்

ஒரு நாட்டில் பிறந்த நபர் ஒருவர் எவ்வளவு காலம் சராசரியாக உயிர் வாழ்வார் எனக் கூறுவதே ஆயுட்காலம் ஆகும்.

## சனத்தொகை அடர்த்தி

சனத்தொகை அடர்த்தி என்பது ஒரு நாட்டில் ஒரு சதுர கிலோமீற்றரில் வாழும் மக்களின் சராசரி எண்ணிக்கை ஆகும்.

## ஆண் பெண் பால்நிலை

ஒரு நாட்டில் 100பெண்களுடைய விகிதாசாரத்திற்கு இருக்கும் ஆண்களின் எண்ணிக்கை ஆகும்.

## சராசரி கருவளவீதம்

குறித்த வருடமொன்றில் 15 – 49 வயதிற்கிடையில் உள்ள 1000 பெண்களிற்கு ஏற்படும் மகப்பேற்று வீதம் ஆகும். அதிக பட்ச கருவள விகிதம் 25 – 29 வயதிற்கிடைப்பட்டவர்கள் ஆவர். இவ் எல்லை நாட்டுக்கு நாடு வேறுபடும்.

## தாய் மரண வீதம்

ஒரு வருட காலப்பகுதியில் கர்ப்பிணியான காலத்திலிருந்து பிரசவத்தின் பின் ஆறு வாரங்கள் வரையான காலத்திற்குள் இறக்கும் தாய்மாரின் எண்ணிக்கையினை மொத்த பிறப்புகளின் எண்ணிக்கையினை 1000 இற்குக் கூறுவதாகும்.

## வயதுக் கட்டமைப்பு

0 – 14 – 23.3.% (சிறுவர் பிரிவு)
15 – 65 – 69.1% (உழைப்போர் படை)
65 வயதிற்கு அதிகமானோர் - 7.6% (முதியோர்)

வருடாந்தம் சிறுவர் பிரிவு குறைவடைந்து வர முதியோர் தொகை அதிகரித்து வருகின்றது. இதனால் நாட்டின் சமூக நல சேவைகளுக்கான செலவினங்கள் அதிகரிக்கின்றன.

## வேலை செய்யும் வயதிலான சனத்தொகை

ஒரு நாட்டிலுள்ள 14 வயதிற்கும் 64 வயதிற்கும் இடைப்பட்ட சனத்தொகையே வேலை செய்யும் வயதிலான சனத்தொகை ஆகும்.

## ஊழியப்படை

ஒரு நாட்டில் வேலை செய்யும் வயதிலான சனத்தொகையிலிருந்து தங்கி வாழ்வோரை கழிக்க வரும் எண்ணிக்கை ஆகும். அதாவது வேலை செய்ய விருப்பமும், ஆற்றலுமுடைய சனத்தொகை ஆகும்.

ஊழியப்படை = வேலை செய்யும் வயதிலான சனத்தொகை – தங்கி வாழ்வோர்.

**தங்கி வாழ்வோர்** என்போர் பொருளாதாரத்திற்கு எதுவித காரணிச் சேவையையும் வழங்காது பிறருடைய உழைப்பில் தங்கியிருப்போராவர்.

உதாரணம் - முழுநேரக் கல்வி கற்கும் மாணவர்கள். உடல் உள ரீதியாக ஊனமுற்றோர்.

**வேலையற்றோர்**

வேலை செய்ய விருப்பமும் ஆற்றலும் இருந்தும் வேலையின்றி இருப்போர் அல்லது தமது தரம் தகுதியிலும் பார்க்க குறைவான வேலையில் ஈடுபட்டிருப்போரைக் குறிக்கின்றது.

## இலங்கை தொடர்பான முக்கிய புள்ளி விபரங்கள்

| | | |
|---|---|---|
| நடுவாண்டுக் குடித்தொகை | | 20653 (1000 ஆட்கள்) |
| குடித்தொகை வளர்ச்சி வீதம் | | 1.0% |
| குடித்தொகை அடர்த்தி | | 329 |
| தொழிற்படை | | 8108 (1000 ஆட்கள்) |
| தொழிலற்றோர் வீதம் | | 4.9% |
| பிறப்பு வீதம் | | 17.6 |
| இறப்பு வீதம் | | 6.2 |
| இயற்கை அதிகரிப்பு வீதம் | | 11.4 |
| சிசு மரண வீதம் | | 8.5 |
| தங்கியிருப்போர் வீதம் | | 48.4% |
| சராசரி குடும்ப அளவு | | 4.0 |
| பிறப்பில் ஆயுள் எதிர்பார்ப்பு | | |
| | ஆண் | 70.3 |
| | பெண் | 77.9 |
| சராசரி கல்வியறிவு வீதம் | | 91.4% |
| | ஆண் | 92.8% |
| | பெண் | 90.0% |
| குடும்ப அலகுகளின் வருமான கினி குணகம் | | 0.47 (2009/2010) |
| சராசரி குடும்ப அலகு வருமானம் (மாதத்திற்கு) | | 35495 (2009/2010) |
| நடுத்தர குடும்ப அலகு வருமானம் (மாதத்திற்கு) | | 24106 (2009/2010) |
| நாளாந்தம் உட்கொள்ளும் கலோரி அளவு | | 2118 (2006/2007) |
| தலைக்குரிய வறுமைச்சுட்டெண் | | 7.6 (2009/2010) |
| மனித அபிவிருத்திச் சுட்டெண் | | 0.658 (2010) |
| | (169 நாடுகளிடையே 91ஆவது நிலை) | |
| சுபீட்ச சுட்டெண் | | 52.7 (2007) |
| தொழிலிலுள்ள ஆட்கள் | | 7707 (1000 ஆட்கள்) |
| | வேளாண்மை | 32.7% |
| | கைத்தொழில் | 24.2% |
| | பணிகள் | 43.1% |
| பாதுகாப்பான குடிநீரைப் பெறுவோர் | | 87.3% |
| வைத்தியர் ஒருவருக்கான ஆட்கள் | | 1462 |
| மாணவர் ஆசிரியர் விகிதம் | | 1 |

**திரு. சி. சிவகுமார் (B.A),**
**ஆசிரியர்,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி.**

# எமது கல்லூரியின் விளையாட்டுக் குழுக்கள்.



மென்பந்து துடுப்பாட்ட அணி 19 வயதின் கீழ் பெண்கள்



எல்லே அணி 19 வயதின் கீழ் பெண்கள்




வலைப்பந்தாட்ட அணி 19 வயதின் கீழ் பெண்கள்



வலைப்பந்தாட்ட அணி 15 வயதின் கீழ் பெண்கள்






# எமது கல்லூரியின் விளையாட்டுக் குழுக்கள்.



சதுரங்க அணி பெண்கள்



கரப்பந்தாட்ட அணி 19 வயதின் கீழ் பெண்கள்



பூப்பந்தாட்ட அணி 19 வயதின் கீழ் பெண்கள்



கரப்பந்தாட்ட அணி 17 வயதின் கீழ் பெண்கள்









# எமது கல்லூரியின் சாதனைப்பதிவுகள் - 2011



அகில இலங்கை ஆசிரியர்களுக்கான மெய்வல்லுநர் போட்டியில் பதக்கங்கள் பெற்ற
ஆசிரியர் திரு. வ. செல்வச்சந்திரன்



தமிழ்த்தினப் போட்டியில் திறனாய்வு பிரிவில்
வெண்கலப்பதக்கம் வென்ற செல்வன். வெ. ஜனார்த்தனன்



தேசியமட்ட போட்டிகளில் பங்குபற்றிய மெய்வல்லுநர் அணி



மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டியில் 03 வெள்ளிப்பதக்கங்களை வென்ற
செல்வி. வி. துலக்சனா



மாகாணமட்ட தமிழ்த்தின போட்டியில் பங்குபற்றிய நாடகக்குழுவினர்



மாகாணமட்ட தமிழ்த்தின போட்டியில் பங்குபற்றிய மாணவர்கள்



மாகாணமட்ட ஆங்கிலதின போட்டியில் இசை நிகழ்வில் பங்குபற்றிய கனிஷ்ட மாணவர்கள்



மாகாணமட்ட ஆங்கிலதின போட்டியில் இசை நிகழ்வில் பங்குபற்றிய சிரேஷ்ட மாணவர்கள்













## பல்கலைக்கழகம் சென்றோர் - 2010

**கலைப்பிரிவு**

நா.சுரேஸ்
மா.கிசோ
த.யாழினி
இ.தேவனா
ரா.சிவாஜினி
ச.பிரபா
ஜெ.நந்தகுமார்
சி.வாசுகி

**வர்த்தகப்பிரிவு**

கி.கரோசாந்
வா.பிருந்தன்
சி.சிந்துஜன்
சூ.புவிதர்சன்
அ.துசாந்தன்

**விஞ்ஞானப்பிரிவு**

பா.ஊர்மிளா
ச.சண்சயன்
த.சிந்துஷா

## பல்கலைக்கழகம் சென்றோர் - 2009

**கலைப்பிரிவு**

இ.பாமினி
வி.ரவிச்சந்திரன்
ர.கம்சா
இ.நிரோஜனா

**வர்த்தகப்பிரிவு**

வி.நிரோஜா
மு.கோகேஸ்வரி
உ.கிருபாகரன்

**விஞ்ஞானப்பிரிவு**

பா.சந்தியா
த.பிரசன்னா
த.பிரதரசன்னா

# எமக்குத் தெரியாத சூரியனின் பக்கம்

நம்மைச் சுற்றியுள்ள, உயிர்வாழ்வதற்கு அத்தியாவசியமான இயற்கை, அதிசயங்களின் பெட்டகம் என்று கூறலாம். வியப்பிலாழ்த்தும் பல தகவல்கள் தினம் தினம் இந்த இயற்கையைப்பற்றி வந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் இந்த ஒரே ஒரு விடயத்தை மாத்திரம் ஒவ்வொருவரும் மனதில் கொள்ள வேண்டும். இயற்கை என்பது ஓர் அட்சய பாத்திரம் அல்ல. அதன் வளங்கள் எடுக்க எடுக்க குறைந்து கொண்டுதான் உள்ளன. அதனால் வளங்களைத் தேவைக்கேற்ப பயன்படுத்தல், சேமித்தல் என்பன முக்கியம் ஆகின்றன. சூரியனும் கூட இந்தப்பட்டியலில் அடங்கும்.

சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை 6000°C. சூரியனில் பல வாயுக்களின் கலவைதான் இருக்கின்றன. எரிபொருளாக இருப்பது ஐதரசன் வாயுவாகும்.அது எரிந்து கீலியமாக மாறுகிறது. ஒரு செக்கனுக்கு எரிந்து முடியும் ஐதரசனின் அளவு 70 கோடி தொன்கள் என்றால் வியப்பாகவுள்ளதல்லவா? இந்த எரிதலின் போது உண்டாகும் வெப்பத்தில் ஒரு பகுதியே நமது நாடு இயங்குவதற்கு ஆதாரமாக இருகின்றது. சூரியன் உருவான நாளிலிருந்து இன்றுவரை சூரியன் விடுமுறை எடுத்துக்கொண்டதில்லை. அதாவது இந்த எரிதல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

எரிபொருளான ஐதரசன் தீர்ந்து விட்டதா என்ன? என்ற கேள்வி நமக்குள் இயல்பாகவே எழுவதுதானே! இந்தக் கேள்வி விஞ்ஞானிகளிடமும் உதிக்கவே ஆராய்ச்சியில் இறங்கி பல உண்மைகளைக் கண்டுபிடித்தனர். அதில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய உண்மை "சூரியனும் ஓர் அட்சய பாத்திரம் அல்ல" என்பதுதான். சூரியனில் ஆயிரங்கோடி வருடங்கள் எரியத்தக்க ஐதரசன் இருந்திருக்கின்றது. ஆனாலும். இப்போது உள்ளது அதன் பாதியளவுதானா? அந்தப் பாதியும் எரிந்து முடிந்துவிட்டால் சூரியன் தனது சக்தியை இழந்துவிடும்.

எனவே பூமியின் கதையும் அவ்வளவுதான். வெளிச்சம் கிடைக்காமையால் உணவு தரும் தாவரங்கள் அழிய, அதனை நம்பிய உணவுச்சங்கிலி சீர்குலைய, வெப்பம் முற்றிலும் இன்மையால் தாங்கமுடியாத குளிர் சூழ்ந்துகொள்ள, தாவரங்கள் இறப்பதால் வளிமண்டலத்தில் ஒட்சிசனின் அளவு குறைவடைந்து சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட மொத்தத்தில் சூரியனின் முடிவு வெகுசில நாளுக்குப் பின் பூமியும் உயிரற்ற கிரகமாகிவிடும். அதுவே பூமியின் நிரந்தர முடிவாகவிருக்கும் இதற்கு முன்னரும் பல்வேறு காரணங்களால் பல தடவைகள் பூமியில் முழுவதுமாக அழிந்து பூகோளவியல் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பினும் அவை தற்காலிக அழிவுகளாகவே கருதப்படுகின்றன. ஆனால் சூரியனின் சக்தி இன்னும் 500கோடி ஆண்டுகளுக்குத் தாக்குப்பிடிக்க வல்லது. இன்னும் சொல்லப்போனால் மனிதனின் இயற்கைக்கு விரோதமான செயல்களால் சூரியன் இருக்கும் போதே பூமி இன்னமும் சில நூற்றாண்டுகளில் சிதைந்து விடும் அபாயம் தான் உள்ளது

**ல. இந்துசா**

**(2012 - விஞ்ஞானம்)**

பொன் விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்

BOC

ලංකා බැංකුව இலங்கை வங்கி

பொன் விழாக் காணும் மு/மல்லாவி மத்திய கல்லூரிக்கு
இலங்கை வங்கி மாங்குளம் கிளை சார்பாக வாழ்த்துக்கள்...

## எமது இலங்கை வங்கி கிளையில்

- சிறுவர்களுக்கான விசேட ரண் கெகுளு கினும் RKG சேமிப்புக் கணக்கு
- மகளிர்களுக்கான விசேட பொற்கணக்கு காந்தா ரண் கினும் KRG
- பாடசாலை மாணவர்களுக்கான 18+, 14+ சேமிப்புக்கணக்குகள் விசேட புலமைப்பரிசில் திட்டங்களுடன்
- 24 மணி நேர ATM சேவைகள்
- தங்கப் பவுண் ஒன்றுக்கு அதிகூடிய அடகுப்பெறுமதியுடன் கூடிய துரித தங்க நகை அடகுச் சேவை.

உங்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் புத்தி சாதுர்யமான படிப்படியான முதலீடு SMART INVESTER

-உயர்ந்த வட்டி
-அரச வங்கியின் பாதுகாப்பு

-முகாமையாளர்-


பொன் விழா சிறக்க வாழ்த்துகின்றோம்
லேனு கொட்டேஜ்
Lenu Cottage
குளிர்பானம் மற்றும் உணவுவகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
துணுக்காய் சாலை மல்லாவி.


பொன் விழா சிறக்க வாழ்த்துகின்றோம்
நியூ மைந்தன்
தையலகம்
ஆண்கள், பெண்களுக்கான ஆடைகளை
சிறந்த முறையில் தைத்துப் பெற்றிடலாம்.
உரிமையாளர்:– செ.சுவேந்திரன்.
பஸ்தரிப்பிடம் முன்பாக, மல்லாவி
தொ.பே:–0779400419


அருட்பிள்ளையார்
அழகுமாடம்
சகலவிதமான அழகுசாதனப்பொருட்களையும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
துணுக்காய் சாலை மல்லாவி.


ஜெமினி அழககம்
நீங்கள் விரும்பும் வடிவத்தில் சிகை அலங்காரத்தை
நவீன முறையில் வடிவமைத்திட நாடுங்கள்.
உரிமையாளர்:– செ.சுவேந்
பஸ்தரிப்பிடம் முன்பாக, மல்லாவி
தொ.பே:–0779400419

# என் கல்லூரித் தாயின் மடியில் கைக்குழந்தை நான்!

பொன்விழாக்காணும் புனிதத்தாயே!

உன் ஐம்பது வயது அனுபவத்தில் ஆயிரம் ஆயிரம் அறிவாளிகளை
உருவாக்கிய உன் மடியில் நானும்- உன்
சேலைத் தலைப்பைப் பிடித்து வழி நடக்கும் ஒரு சிறியேன்
என்னையும் கரை சேர்ப்பாய் என்றெண்ணித் தொடர்கின்றேன்

மல்லாவி மண்ணின் மகத்தான மங்கை நீ தானே...
மங்களமான உன் நெற்றியில் மத்திய கல்லூரி என்னும் நாமம்
மூன்றாம் பிறை நெற்றியில் குங்குமம் இட்டது போல் ஒரு பாவம்

அன்பிற்கு மரியன்னை என்றால் அறிவிற்கு நீ அன்னை
உன்னை அறியாதோர் அறிவிலர்கள் அன்றோ- புவிதனிலே
புகழ்பூத்த மாந்தர்களை உருவாக்கிய புதுமைப்பெண்ணும் நீயன்றோ

உன் கரம் பற்றி நடந்தவர்கள் கணக்கிட முடியவில்லை
உன் காலடி பதித்தவர்கள் களைத்தொதுங்கி நின்றதில்லை
நீ ஊட்டிய சோற்றில் உயிர்வாழ்வோர் பலர்
நீ காட்டிய பாதையில் கரை கண்டோர் மேலும் பலரன்றோ!

மீட்டும் வீணையுடன் வீற்றிருப்பாள் கலைமகள்
நாம் மீட்டும் வீணையாக இருப்பவள் நீ தானே - தாயே
கல்வியும் விளையாட்டும், கலைகளும் ஓங்க – நீ
பரிவுடனே பாலூட்டும் தாயாகி நின்றாய்

கணிதம் நீ எனக்களித்த கரும்பு
விஞ்ஞானம் எனக்களித்த விளையாட்டுப்பொருள்
இவ்விரண்டோடும் நான் இன்று உன்மடியில கதை பயிலும் கைக்குழந்தை
நான் காலசைத்து தடம்பதிக்க உன்கரம்கொடுக்கும்- நீமேதை
திக்கெட்டும் புகழ் பரப்பும் திருமகள் - நீ
கதைகளைக் கவிபாடும் கலைமகளும் - நீ
வெற்றியுடன் நடைபோடும் மலைமகளும் நீ தானே!

முல்லைக்குத்தேர் கொடுத்தான் பாரி – எம்
முல்லைத்தீவிற்கு புகழ் சேர்த்தாய் தேவி – உன்
வயதம்பதாயினும் வயோதிபத் தாயல்ல நீ – நிச்சயமாக
வழி நடத்தும் வற்றாத நதி நீ
என்றென்றும் வாழி நீ!

**மகாலிங்கம் கோட்வின்,**
**2012 கணிதப்பிரிவு.**

# திரை இசைப்பாடல்களில் சமூகக்கருத்துக்கள்

21ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாகவும் மகிழ்ச்சி தரக்கூடியதாகவும் மாற்றிக் கொள்வது மிகவும் முக்கியமானது. இவ்வகையில் மனிதனுக்கு ஆறுதலளிப்பது திரையிசைப்பாடல்களாகும்.

சமூகத்தில் நிகழும் அனைத்து விடயங்களையும் திரைப்பாடல்கள் கொண்டுள்ளன. சமத்துவம் காதல் (தூதுப்பாடல் , சோகப்பாடல், மகிழ்ச்சிப்பாடல்) பக்தி, நகைச்சுவை, வீரம், மற்றும் தவறுகளை தட்டிக்கேட்கும் பாடல்கள் என்பவற்றைக் கூறலாம்.

பழம் பெரும் இலக்கியப் புலவர்களைத்தொடர்ந்து காலத்திற்குக் காலம் பல்வேறுபட்ட புலவர்களும் சமத்துவத்தை இழையோடச் செய்கின்ற பாடல்களையும் இயற்றியுள்ளார்கள் என்றே கூறலாம். இப்படிப்பட்ட ஒரு சில திரைப்படங்களில் இடம்பெற்ற சமத்துவம் உணரப்படும் பாங்கினைப்பார்ப்போம்.

"சூரிய காந்தி" என்னும் திரைப்படத்திற்காக கவிஞர் கண்ணதாசன் இயற்றிய

"பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா?
யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே"

என்னும் பாடல் சமூகத்தில் நிலவும் உயர்வு தாழ்வு என்ற பேதங்களையும் பாகுபாடுகளையும் நம்முன்னே காட்டுகின்றது. பட்டம் பதவிகளோ, சொத்துக்களோ நாம் உயர்ந்து நிற்கும் போது கிடைக்கும் மரியாதைகள் எல்லாம் இந்த நிலையை விட்டு இறங்கிய பின்பு கிடைப்பதில்லை என்ற உண்மையை

"உயர்ந்த இடத்தில் இருக்கும் போது
உலகம் உன்னை மதிக்கும் - உன்
நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால்
நிழலும் கூட மிதிக்கும்"

என்றவரிகளிலே அழகாகத் தெளிவு படுத்துகின்றார்.

"படகோட்டி" என்ற திரைப்படத்தில் இடம் பெற்றுள்ள வாலியின் பாடல் ஒன்றை நோக்குவோமானால்

"கொடுத்ததெல்லாம் கொடுத்தான் - அவன்
யாருக்காகக் கொடுத்தான்
ஒருத்தருக்கா கொடுத்தான் -இல்லை
ஊருக்காகக் கொடுத்தான்"

என்றவரிகளிலே தெய்வத்தின் கொடைகள் யாவும் பொதுவானவை, பாரபட்சம் அற்றவை. தன் படைப்புக்களுக்கு இறை கருணை காட்டும் பொருட்டு பொதுவாகவே அருள் பாலிக்கின்றான். எல்லா உயிர்களும் அனுபவிக்க வேண்டும் என்றே இறைவன் வழங்குகின்றான் என்ற உண்மை புலப்படுகின்றது.

இலக்கியங்களிலே சிட்டுக்குருவி, கிளி, நாரை, அன்னப்பறவை, மேகங்கள் என்பவற்றைத் தலைவி, தலைவனைப்பற்றி அறிய தூது விடுவதாக அமைந்துள்ளது. இளையராஜாவின் இசையில் உருவான, கவிஞர் பஞ்சு அருணாசலம் இயற்றியுள்ள "அன்னகிளி" என்ற திரைப்படப் பாடல் ஒன்று நினைவுக்கு வருகின்றது இந்தப்பாடல்

" மச்சானப் பாத்தீங்களா மலை வாழைத்
தோப்புக்குள்ளே
குயிலக்கா கொஞ்சம் நீ பார்த்துச் சொல்லு
வந்தாரா காணலியே – அவர்
வந்தாரா காணலியே"

என்ற வரிகளிலே ஒரு நாயகி குயிலிடம் மலைவாழைத்தோப்புக்குள் என் மச்சானைத் தேடிப்பார்த்துக் கண்டு பிடிக்குமாறு மன்றாடுவதைப் பார்க்கலாம்.

"குறவஞ்சி" திரைப்படத்திற்காக சிதம்பரம் ஜெயராமன் பாடிய

" யார் சொல்லுவார் நிலவே
நீ சொல்லாவிட்டால் - யார் சொல்லுவார் நிலவே
நேரில் நடந்ததெல்லாம் வேடிக்கை பார்த்திட்ட!"

என்று தலைவியைப் பிரிந்த தலைவன் தூது விடுகின்றான்.

"ஒரு பெண்ணைப்பார்த்து நிலவை
பார்த்தேன் நிலவில் குளிரில்லை அவள்
கண்ணைப்பார்த்து மலரைப் பார்த்தேன்
மலரில் குளிரில்லை"

என நாயகன் நாயகியின் அழகை இயற்கைக்கு ஒப்பிட்டு வர்ணித்துக் கூறுகின்றான்.

"சபாஷ் மீனா" என்ற திரைப்படத்தில் T.M. சௌந்தர்ராயன் பாடியுள்ள பாடல் ஒன்றிலும் நாயகன் தனது காதலியை வர்ணித்துப் பாடியுள்ளான்.

"சித்திரம் பேசுதடி – உன்
சித்திரம் பேசுதடி எந்தன் சிந்தை மயங்குதடி
முத்துச் சரங்களைப்போல் - மோகனப்
புன்னகை மின்னுதடி

தாவும் கொடி மேலே ஒளிர் தங்கக்குடம் போலே" என்று அவளின் அழகு புன்னகை போன்றவற்றை உவமிக்கும் விதத்தினைப் பாடலைப் பாடிய குரல்வளம் பாடலை மேலும் மெருகூட்டிநிற்கின்றது. " அவள் பேசும் போது எனது சிந்தை மயங்கி அவளின் மடியில் விழுகின்றது" என்று இன்னொரு பாடலை " தெய்வத்தாய்" என்ற

படத்தில் T.M. சௌந்தர்ராயன் பாடியுள்ளார். அப்பொழுதும் இப்பொழுதும் மக்களிடையே இரண்டு அம்சங்கள் இணைபிரியாது காணப்படுகின்றது. காதல் பக்தி என்பனவே அவை. இதில் காதலைப்பற்றி முதலிலே பார்த்து விட்டோம். இப்பொழுது பக்தியை வெளிப்படுத்தும் திரைப்படப் பாடல்களைப் பார்ப்போம். " மருதமலை" படத்தில் T.M. சௌந்தர்ராயனால் பாடப்பட்ட " மருதமலைக்கு இங்கு வந்து பாருங்க அந்த அழகன் முருகனை வணங்குங்க" என்ற பாடல் முழுவதையும் நோக்கும் போது தெய்வம் மனிதனுக்கு எல்லாவிடயங்களையும் கொடுத்துள்ளான். இறைவன் தனக்கு விருப்பமான பக்தர்களையே சோதனை செய்வான். இறுதியில் காப்பாற்றுவான். இப்படியாயினும் இறைவனை நாம் வழிபட்டால் இறைவன் எமக்கு அருள்புரிவான் என்ற கருத்து வெளிப்படுகிறது. சமூகத்தில் தாயின் சிறப்பினை

"அம்மா என்றழைக்காத உயிரில்லையே"

என்னும்பாடலும்

"தாய் மனசு தங்கம் நான் அறிந்த தெய்வம், நன்றி சொல்லப் போதாதம்மா ஏழேழு ஜென்மம்"

எனும் பாடலும் எடுத்தியம்புகிறது.

"வாழக்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல் தோறும் வேதனை இருக்கும்
வந்த துன்பம் எதுவென்றாலும்
வாடி நின்றால் ஓடுவதில்லை"
"உளிதாங்கும் கற்கள் தானே மண்மீது
சிலையாகும்
வலிதாங்கும் உள்ளம்தானே நிலையான சுகம்
காணும்"
"ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே

வாழ்வென்றால் போராடும் போரக்களமே"

போன்ற பாடல்கள் வாழ்க்கை என்பது போராட்டம் மிக்கது. அதைப்போராடி வென்று சிறப்பாக்குவது உங்கள் கைகளிலேயுள்ளது என்னும் கருத்தினை ஏற்படுத்தியுள்ளது.

'உழைப்பாளி' என்ற படத்திலே S.P. பாலசுப்பிரமணியத்தின் குரலில்,

"உழைப்பாளி இல்லாத நாடுதான் எங்குமில்லை
அட ஓயா
அட சாமியோ சாமி அதை நம்பித்தான் -பூமி"

"சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க
வாழ்ந்திடாதே
உழைத்து வாழ வேண்டும் பிறர் உழைப்பில்
வாழ்ந்திடாதே"

" தூங்காதே தம்பி தூங்காதே
சோம்பேறி என்று பெயர் வாங்காதே"

போன்ற பாடல்களும் உழைப்பின் பெருமையை உழைக்கும் மக்களின் கருத்துக்களையும் சமூகத்தில் அவர்களின் நிலையையும் எடுத்துக்காட்டுகின்றன.

" அழகிய தமிழ் மகன்" படத்தில் A.R ரகுமானின் இசையில முயற்சியின் சிறப்பினைத் தெளிவாகக் காட்டுகிறது.

"முன்னால் முன்னால் முன்னால்
முன்னால் – வாடா
உன்னால் முடியும் உன்னால் முடியும்
-தோழா

நாளை நாளை நாளை என்று- இன்றே
நினைக்காதே

நீ இன்றே நினைக்காதே" என்று ஒருவன் தனது திறமைகளை சமூகத்திற்கு முன்னால் கொண்டு வருகின்றானோ அப்பொழுது அவன் திறமைகளை உலகம் ஏற்கும். நாளை செய்வோம் என பிற்போடப்படும் விடயங்கள் எல்லாவற்றையும் நாம் உடனே செய்தால் பலன் உண்டு.

"நல்ல நல்ல பிள்ளைகளை – நம்பி

இந்த நாடே இருக்குது தம்பி"

என்னும் பாடல் நாட்டில் நல்லவர்களின் தேவையை வேண்டி நிற்கிறது.

"தோல்வி நிலையென நினைத்தால்

மனிதன் வாழ்வை நினைக்கலாமா?

வாழ்வை சுமை என நினைத்து

தாயின் கனவை மறக்கலாமா"

என்பது சிந்திக்கும் ஆற்றலையும் போராட்ட உணர்வையும் ஏற்படுத்தும் பாடலாகும்.

இப்படிப் பலநூறு பாடல்கள் சமூகத்திற்கான பலகருத்துக்களை வழங்குவதால் தான் அவை காலத்தால் அழியாத கானங்களாக விளங்குகின்றன.

**சி. கிரிசாந்தன்,**
**2012- விஞ்ஞானம்.**



# அகர வரியிலே...

அழகிய உலகிற்கு அமைதியில்லை – அந்த
ஆழ்கடல் அலைககளிற்கு அழிவு இல்லை
இழந்திட செல்வம் எதுவும் இல்லை-நாம்
ஈட்டிய பொருட்களில் பெறுமதியில்லை
உலகினில் வாழ உதவியில்லை-ஆனாலும்
ஊன்று கோல் எதையும் நாம் விரும்பவில்லை
எது வந்த போதும் தயங்கவில்லை – எம்
ஏற்றத்தை இறக்கங்கள் தடுக்கவில்லை
ஐம்புலன்கள் இன்னும் ஓயவில்லை - இன்று
ஒரு மணி நேரமும் உறங்கவில்லை
ஓடிய கால் வலி தீரவில்லை –ஆனால்
ஔடதம் இடவுமில்லை................

**S. Winson,**
**English teacher,**
**M/Mallavi Central College.**

# கல்லூரிப் பயணம்

ஆறு வயதினில்
அடியெடுத்து வைத்த அந்நாள்
ஆம் அது எம் கல்லூரி
வாழ்க்கையின் முதல்நாள்

கொஞ்சு தமிழ் பேசும்
பிஞ்சு மழலைகளை
அச்சத்துடன் அடம் பிடித்த
சின்னஞ் சிறார் எம்மை
அன்புடனே அரவணைத்து எம்
அறிவுப்பசிதனைப் போக்கி
ஆற்றலுள்ள பிரஜைகளாய்
ஆக்கியவள் எம் கல்லூரித்தாய்

புதிய நட்புக்கள்
புதிய சூழலுடன்
இனிமையாகத் தொடர்ந்தது
எம் கல்லூரிப்பயணம்

96 இடப்பெயர்வின்
இன்னல்களிற்கிடையில்
சிக்கித்தவித்த எம் மக்கள்
தங்குவதற்கு இடமளித்ததனால்
எம் கற்றலும் இடம்மாறின
மாஞ்சோலைக்கு

இனிய கனவுடனே
இயற்கையான சூழலிலே கல்வி
பயின்றிட்ட எம்முடனே

இணைபிரியா நண்பர் பலர்
சேர்ந்திட்டார் எம்முடனே
2002இல் பாதை திறந்ததுமே
பல நண்பர் பிரிந்திட்டார்

பள்ளிப் பருவத்தில்
பட்டாம் பூச்சிகளாய்
பறந்திட்ட தருணங்கள்
என்றுமே பசுமை நினைவுகளாய்
சகோதரர்களாய், நண்பர்களாய்
நாம் இருந்து கல்வி பயின்றோம்
போர் என்னும் கொடிய நோயால்
எம் நண்பர் பலரை இழந்தோம்
அவர்கள் எம்மை விட்டு சென்றாலும்
அவர் தம் நினைவுகள் என்றும்
நிலைத்திருக்கும் எம் மனதில்

எவ்விடர் வந்திடினும்
எம்பயணம் தொடர்ந்திடுவோம்
எம் க்ல்லூரியின் புகழ் தனை
உலகறியச் செய்திடுவோம்

முல்லை மாவட்டத்தின்
முதன்மை முத்து - அவள் எமக்கு
வழங்கியதோர் கல்வி எனும்
இணை பிரியாச் சொத்து
எம் கல்லூரித் தாயவளின்
பொன்விழா நாளினிலே
அவள் தாழ் பணிந்து நிற்கின்றோம்.

**2001 (O/L) மாணவர்கள்.**

## Science and Technology

Science and Technology has helped people to control over nature. Early man lived in caves in the jungle and ate raw meat and vegetables. The first scientific invention of man was the fire. Then he learnt cook and lives in small groups. He raised animal and rear plants for his food. In the process he discovers the use of wheels. There after he did not look back in his march towards civilization.

He gradually freed himself from dependence on nature for his needs. he built houses to live and made some tools to fulfill his needs. Then he discovered new methods to make his work easier. Human needs are unlimited but resources are limited. Many Changes are brought in the human life by science and technology. Communication transports and industry have brought change in human life. Industrial technology began with the invention of the steam-engine. The industries helped to make production faster and working hours reduced. Communication Medias introduced in human life and totally changed the life style. The media entertainment becomes a part in his life. Technology helps man to live ingrate comfort and security in the past. Agriculture medicine and the mode of transport have brought many benefits to man. Birds sound and fire were the early form of communication. There were replaced by letters, telephone mobile phone, fox, internet and e-mail and etc. likewise modern transport facilities replaced the all methods. Car, van, lorry, train, bicycle, motor cycle and aeroplane occupied the places of animals, carts, and carriages etc. Many changes are in our food, trees and shelter.

People live in modern houses, flats and skyscraper sand enjoys the technological benefits. Science and technology not only brought changes in the living standard, but also in languages arts and culture as well. We can say that the whole world has come together which is named the global village.

**S. Ajeevitha,**
**9B.**

## Source of Knowledge

In today's world we have a lot of sources of knowledge. There are books, newspapers, dictionaries, encyclopedias, internet, historical ruins and telephone directories.

Books are the most important source of knowledge. We can get knowledge of scientifically invention, stories, poems, reports and biography and a culture. When we find the free time, I go to library to read books. When we are ill or bed. We can't spend our time without books. So we can say knowledge and books are inseparable in our life.

From the newspapers, we can get the news of what happen in our country and other country and through the middle page articles in the newspapers. We got immersive knowledge of politics, sports, business, science and technology. Now it has correspondence in all parts of the world and the send the news items to the newspaper office over the air through states within seconds.

The encyclopedias is a book, which has a lot of knowledge in all subjects. This has developed from the dictionary. We can get a clear description about any subjects from encyclopedia. Historical runs are also one of the sources of knowledge, about the country their culture arts and craft of the time.

Internet is a very recent source of knowledge. It was started as research project of department of defense of USA. But it is now randomly used by more people to get knowledge and latest news. So these sources of knowledge are gone to the students live us living in this age.

**J. Akilaginy**
**Grade 11B**


பொன் விழா சிறக்க வாழ்த்துகின்றோம்
சிலம்பரசன் ரெயிலர்ஸ்
Selambarasan Tailaring
சேட்டிங்,சூட்டிங், துணிகளையும் மற்றும் அனைத்து விதமான தையல் பொருட்களையும்
பெற்றுக்கொள்ளலாம். 10 வருட காலமாக மல்லாவி நகரில் இயங்கி வரும் எமது
ஸ்தாபனத்தில் நீங்கள் விரும்பிய டிசைன்களில் தைத்தும் பெற்றுக்கோள்ளலயம்.
உரிமையாளர்:- T.குட்டி
பிரதான சாலை, மல்லாவி
தொ.பே:-0773580978


பொன் விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்
கூழாவடிப் பிள்ளையார் அரைக்கும் ஆலை
அனைத்து வகையான தானிய வகைகளையும்
அரைத்துப்பெற்றுக் கொள்ளலாம்
பிரதான சாலை, மல்லாவி
T.P:-0779821307


தரமான இலத்திரனியல் பொருட்களுடன் வளமான வாழ்த்துக்கள்
LG
Life's Good
JVC
TOSHIBA
Leading Innovation
DELL
JIALING
PHILIPS
SANYO
Haier
hp
invent
காட்சியறை மல்லாவி.
பிரதான சாலை மல்லாவி.
என்றும் உங்களுடன் Abans

# நம்பியிரு தாயே!

வெளுத்த தாளெடுத்து
எழுத்தாணி கொண்டு – கவி
வடித்திடத்துடிக்கின்றதென்
வடுவேந்திய பிஞ்சுள்ளம்
ஆனாலும் வார்த்தைகள்தான்
அசைந்து வர மறுக்கிறதே...
எதைச் சொல்ல?.......... எதைச்சொல்லாது விட?
ஏக்கத்துடன் என் மனது ஏம்பலிக்கினறதே!

பட்டாம் பூச்சியாய்ப் பறந்திட்டபாலரெம்மை
கட்டியரவணைத்த தாயவள்
நான் ஏடறிந்த நாள்முதலாய்
நீ என்னை சுமந்து விட்டாய்
பன்னிரண்டு ஆண்டுகள்
பறந்து போய் விட்டது
ஆனாலும் உன்னினைவுகள்
என்னுள் அழியாத ஆணவமாய்.....

இறந்தகாலங்கள் இறந்து போவதாய் - சிலர்
இறங்கிப்பாராது பறந்து போனாலும்
சில நிகழ்வுகள் என்றும் இறப்பதில்லை.
பயணித்து வந்த பாதச்சுவடுகள்
அழியாமல் இன்றும் நிறைந்துள்ளன
மல்லாவி மண்ணீன்ற
மத்திய கல்லூரி புகழ்......
எப்படித்தான் வெந்தழலில்வெந்துபோம்?

பத்துமாதம் சுமந்தவள் என்அன்னை
பன்னிரண்டு ஆண்டுகள் சுமந்தவள்
பக்குவமாய்க் கல்லூரி அன்னை
பொன்னான பொழுதுகள்........
பூமியில் உருண்டோடிப்போனாலும்
விடியாத பொழுதுகள் - நாளை
விடிந்து போனாலும் - முடியாது
உன்புகழ் இச்சரித்திரத்தில்

அறுபத்தொன்றில் அவதரித்த அன்னையிவள்
புளியமரத்தடியில் வளர்ந்து இன்று
பூஞ்சோலைக்குள் பூத்துக்கிடக்கின்றாள்

மகாவித்தியாலயம் கல்லூரியாய்.....
உயர்வு கண்டிட உயர்ந்தது
சாதனைகளும்.......... புகழும்...........
சரித்திரத்தில் நிலையான உன்
சரித்திரப்புகழ் என்றும் அழியாது!

அன்புடன் பண்பும், அறிவும், ஒழுக்கமும்
அணுகியெம்மை ஊட்டிய ஆசான்கள்
கோபத்திலும் நேசமாய்...
கோபிக்காத நேசமணிகள் இவர்கள்
அழியாத அத்திவாரமதை
இட்டு வைத்த தெய்வங்கள்
இவர்கள் எல்லோரையும்
ஊட்டி வளர்த்திட்ட தாயவள்

பொன் விழாக்காணும் தாயே – உன்னை
போற்றிடுவதுதான் எப்படியோ?
ஆடிப்பாடி கூடிக்கூத்தடித்த - நான்
அன்னையிவள் மடியை விட்டு
அகன்று செல்வதுதான் எப்படியோ?
ஏணியாய் நின்று ஏற்றிய தாயிவளை......
ஏக்கத்துடன் விட்டுப் பிரிவதுதான் எப்படியோ?

அரை நூற்றாண்டுகள்
அணைந்து, போனாலும்
அழியாத உன்நினைவுகள்
என் மனதிலும் அழியாது
மங்கிடாப் புகழுடன்உயரும்
மத்திய கல்லூரித் தாயே
மறந்திட முடியாத நினைவுகளை - எனக்கு
மந்தரித்து விட்டாயே..........

செடிகளாய் இருந்த எம்மை...........
பெரு விருட்சமாக உயரவைத்தாய்
அடர்ந்த கிளை பரப்பி ஆலமரமானேன்...........
என்னிலிருந்து கீழிறங்கும் விழுதுகள்
உன்மடியில் நிச்சயம் ஒளி பரப்பும்
விருட்சமாய் நாளை மலரும்..............
இந்த நாட்கள் வெகு தொலைவிலில்லை
நாளை மலரும் நம்பியிரு தாயே...............

**அ. கஜன்,**
**2018 கலை.**

ச.நிலானி,

# குடி குடியை கெடுக்கும்

பாத்திரங்கள் :- (பார்வதி, ரமேஸ், குமார்)

பார்வதி :- தம்பி குமார் இன்டைக்கு பள்ளிக்கூடம் போகவில்லையா? கெதியாய் எழும்பு மேன

குமார் :- ஓம் அம்மா எழும்புறன்.

பார்வதி :- முகம் கழுவிவிட்டு கெதியாய் வாப்பு, தேத்தண்ணி வைத்திருக்கிறன் குடி மேன.

குமார் :- அம்மா ரமேஸ் எங்க?

பார்வதி :- அவன் கிணத்தடியில் நிக்கிறான்.

குமார் :- என்ன செய்யிறான்?

ரமேஸ் :- அம்மா, நான் கிணத்தடிக்குப் பின்னால பயிற்றம் வித்து நட்டனான் கோழி கிண்டிப்போடும் கவனமாய்ப் பாருங்கோ

பார்வதி :- சரி மேனே, பள்ளிக்கூடம் போக நேரம்போனாலும் கெதியாய் வெளிக்கிட்டுச் சாப்பிடுங்கோ

குமார் :- அம்மா பசிக்குது

பார்வதி :- இதோ கொண்டு வாறன்( சாப்பாட்டை கொண்டு போதல்)

ரமேஸ் :- அம்மா ஏன் இண்டைக்கு சோறுசமைச்சனீங்கள். எனக்கு சோறு விடிய பிடிக்காது தெரியும்தானே!

பார்வதி :- அது தம்பி இன்றைக்கு மங்கைஅக்கா வீட்டை அரிசி இடிக்கப்போறன்.அதுதான் மத்தியானத்துக்கும் சேர்த்து ஒரே சமையலாய்ச் செய்தனான். இண்டைக்கு மட்டும் ஒரு மாதிரி சாப்பிட்டுவிட்டு போப்பு. பள்ளிக்கூடம் பசிக்கப்போகக்கூடாது( என்றவாறு ரமேஸின் முதுகைத் தடவி விடுதல்)

குமார் :- சரி அம்மா, பள்ளிக்கூடம் நேரமாச்சு நாங்கள் போயிற்று வாறம். கதவை சாத்திவிடுங்கோ.

பார்வதி :- சரி இரண்டு பேரும் கரையாய் போக வேண்டும்

ரமேஸ் :- ஓம் அம்மா போயிற்று வாறோம்(என்றவாறு வீட்டை விட்டு வெளியேறி வீதியை அடைதல்)

காட்சி 11

பாத்திரங்கள் (மோகன் ஆசிரியர், குமார், ரமேஸ், சாந்தி,விமலா)

விமலா :- குமார், ஏன் இண்டைக்கு பள்ளிக்கூடம் வாறதுக்கு நேரம் போயிற்று

குமார் :- இண்டைக்கு நடந்து வந்ததனால் நேரம்போயிட்டுது. மழை பெய்து ரோட்டு கூடாமல் இருக்கிறது அது தான்

விமலா :- குமார் இண்டைக்குப் பள்ளிக்கூடத்தில் அப்பா, அம்மா இல்லாத பிள்ளைக்கும் கஸ்ரப்பட்ட குடும்பத்தில் உள்ள பிள்ளைகளுக்கும் சைக்கிள் குடுக்கப் போகிறாங்களாம். உனக்கும் சைக்கிள் கிடைககும் என்று நினைக்கிறேன்.

குமார் :- ஆர் இந்தப் பெரிய உதவியைச் செய்யிறது.

சாந்தி :- ஆர் என்று தெரியாது.

மோ.சேர் :- ரமேஸ் இண்டைக்கு பள்ளிக்கூடத்திற்கு 30 சைக்கிள் வருகிறது. இந்த ஒற்றையில் இருக்கின்ற பிள்ளைகளை பிரதான மண்டபத்திற்கு வரச்சொல்லும். (என்றவாறு வகுப்பை விட்டு வெளியேறினார்)

குமார் :- சரி சேர்.

ரமேஸ் :- குமார் என்னுடைய பெயரும் வந்திருக்கின்றது. இண்டைக்கு எங்களுக்கு சைக்கிள் கிடைத்தால் சைக்கிளில் போகலாம் என்னடா.

குமார் :- ஓமடா

சாந்தி :- எத்தனை மணிக்கு இண்டைக்கு சைக்கிள் குடுபடும்

ரமேஸ் :- எட்டாம் பாடம் சைக்கிள் குடுக்கிறது என்றுதான் சேர் சொன்னவர்.

விமலா :- எட்டாம் பாடத்திற்கா?

குமார் :- கதையை விட்டிட்டு மண்டபத்திற்கு எல்லோரும் போங்கோ(என்று கூறியவாறு மண்டபத்திற்கு நுழைதல்)

மோ.சேர் :- ரமேஸ் 30 பேரும் வந்தாச்சா?

ரமேஸ் :- ஓம் சேர்

மோ.சேர் :- அப்படி என்றால் ஒழுங்கின்படி வந்து சைக்கிளை வாங்கிக் கொண்டு போங்க. முதலாவது விமலா ( என்று தொடங்கி30பேருக்கும் சைக்கிளை கொடுத்து முடித்தார்)

குமார் :- சாந்தி இண்டைக்கு எவ்வளவு சந்தோசமாக இருக்குது தெரியுமா? இண்டைக்கு அம்மா சந்தோசப்படுவா நானும் சைக்கிளில் போக.

சாந்தி :- உன்ர அம்மா மட்டுமா? எங்கன்ர அம்மாவும் சந்தோசப்படுவாதானே.

ரமேஸ் :- நேரம்போட்டுது நாங்கள் போயிற்றுவாறம்.

விமலா :- சரி சரி போயிற்று வாங்கோ.

## காட்சி 111

பாத்திரங்கள் பார்வதி, குமார், ரமேஸ்ஈசந்திரன்

ரமேஸ் :- அம்மா... அம்மா... வெளியிலே வந்து பாருங்கோவன்

பார்வதி :- என்னமோன ஏன் சத்தம் போடுறாய் அப்பா வீட்டுக்குள் நித்திரை

குமார் :- அம்மா, அப்பாவிற்கு என்ன வெறியா குடிச்சுவிட்டா வீட்டுக்கு வந்தவர்.

பார்வதி :- எப்பான் ஒரு நாள் தவற விட்டாரா? குடிக்காமல் ... இண்டைக்கு சரியான வெறிதான் (என்று கூறிக்கொண்டு வெளியே வருதல்)

குமார் :- அம்மா இண்டைக்குப் புதுச் கைக்கிள் தந்தது. 30 பேருக்கு தந்தவையள் அம்மா

ரமேஸ் :- அம்மா அப்பாவுக்குத் தெரியாமல் சைக்கிளைக் கொண்டுபோய் மகேஸ் அக்கா வீட்டை விட்டுவிட்டு வாறேன்.

பார்வதி :- ஓம்மேன அப்பாவுக்குத் தெரிந்தால் கொண்டுபோய் வித்திட்டு குடித்திட்டு கூத்தடிப்பார். சத்தம் போட வேண்டாம் எழும்பினாலும்.

குமார் :- அம்மா நாளைக்கு ரெஸ்ற் காசு கட்டவேண்டும்.

பார்வதி :- அப்பாவிடம் கேட்டு வாங்குங்கோ( என்று கூறிக்கொண்டு குசினுக்குள் சென்றாள்)

சந்திரன் :- ரெஸ்ற் காசு நான் குடுக்கிறதோ? ஏன்எண்டா எங்கால காசு நானே இப்ப குடிக்கிறதுக்கு காசில்லாமல் இருக்கிறேன் அதுக்குள்ள அவைக்கு ரெஸ்ற் காசாம் காசு. உழையுங்கோ உழைத்து ரெஸ்ற் காசைக் கட்டுங்கோ ஏலும் என்றால் எனக்கும் தாங்கோ.நான் இப்ப கடைக்கு போயிற்று வாறன்.ஒரு அரை அல்லது கால் அடித்தால் தான் சரி. (என்று கூறிக்கொண்டு வெளியேறல்)

குமார் :- அம்மா இப்ப ரெஸ்ற் காசுக்கு என்ன செய்யிறது( காசு கேட்டுக் கொண்டே விம்மி விம்மி அழுதல்)

பார்வதி :- மங்கை அக்கா மா இடிச்ச காசும் தரமாட்டா. அவவிட்ட முதல கடன் வாங்கினதால கடன்காசு கழிக்கிறது என்று சொன்னவா. கடவுளே! நான் என்ன செய்யிறது.

ரமேஸ் :- அம்மா நான் மணிக்கூடு வாங்கிறதுக்கு என்று காசு கொஞ்சம் சேத்தனான் அந்தக் காசை இப்ப கட்டுவோம்.

பார்வதி :- சரி அப்பு பிள்ளைக்கு நான் பிறகு மணிக்கூடு வாங்க காசு தாறன் (என்றவாறு ரமேஸ் முதுகைத் தடவுதல்)

சந்திரன் :- அடியே பார்வதி எனக்கு நீயும் பிள்ளையளும் சேர்ந்து ஒரு உண்மையை மறைச்சிட்டியள் ரமேஸ், குமாருக்கு குடுத்த சைக்கிள் எங்க

பார்வதி :- என்ன புதுக்கதை அவங்களுக்கு சைக்கிளும் கொடுக்கல்ல. ஒன்றும் கொடுக்கல்ல.

சந்திரன் :- என்னடி பொய் சொல்லுறாய் பக்கத்து வீட்டில சைக்கிளை கொண்டுபோய் விட்டுவிட்டு இங்க வந்து நாடகமா நடிக்கிறியள். என்னை என்ன விசரன் என்றா நினைத்து விட்டியள். கெதியாய்ச் சைக்கிளைக் கொண்டு வாடி (என்றவாறு பார்வதிக்கு அடித்தல் )

ரமேஸ் :- அப்பா, அம்மாவுக்கு அடிக்காதேங்கோ நான் சைக்கிளைக் கொண்டு வந்து தாறேன் அம்மாவுக்கு அடிக்காதேங்கோ!

பார்வதி :- ஐயோ! கடவுளே என்ன செய்யப்போறான். இந்தாள் சைக்கிளை கொண்டு போய் வித்திட்டு குடிக்கப்போகுது. (பெரிதாகத் தலையில் அடித்து விம்மி விம்மி பார்வதிஅழுதல்

சந்திரன் :- இண்டைக்கு எனக்குப் பிரச்சனை இல்லை. அரை அடிக்கிறது என்று நினைத்தனான் முழுசாய் மூன்றடிக்கலாம். நானும் என்ர நண்பர்களும் சந்தோசமாய் இருக்கலாம்.

## காட்சிIV

பாத்திரம் (பார்வதி, ரமேஸ், குமார், சந்திரன்)

குமார் :- அம்மா மேகம் கறுத்துக் கொண்டு வருகிறது மழை வரப்போகுதோ தெரியாது.

பார்வதி :- வீட்டுக்குள் நின்று பார்த்தாலே தெரியும் இன்றைக்கு மழை வந்தால் என்ன செய்யிறது எண்டு தெரியாது கடவுளே! மழை வரக்கூடாது.

ரமேஸ் :- அம்மா அப்பா சைக்கிள் இல்லாமல் வாரார்.

பார்வதி :- எந்தக் கடையிலே கொண்டு போய் வித்திட்டு வருகுதோ தெரியாது கடவுளே இந்த மனிசனோட என்ன செய்யிறது என்று தெரியாமல் இருக்கிறது.

குமார் :- மழை துமிக்குது

ரமேஸ் :- அம்மா மழை பெரிசா வந்திட்டுது.

பார்வதி :- ஐயோ வீட்டுக்குள் வெள்ளம் வந்து விட்டது ரமேஸ், ரமேஸ் புத்தகங்களைக் கெதியாய் எடு, நனையப்போகுது.

குமார் :- அம்மா அரிசிப்பை நனைந்து போட்டுது

ரமேஸ் :- அம்மா பின்பக்க சுவர் விழுந்து போச்சுது

பார்வதி :- ஐயோ கடவுளே உனக்கு கண்ணில்லையோ? எல்லாம் நனைந்து போட்டுது இந்த மனுசன் ஒழுங்கானவன் என்றால் ஏன் இந்தக் கஸ்ரம் கடவுளே. நானும் பிள்ளையளும் தான் மிச்சம் இப்ப இருக்கிற எங்களையும் சாக்காட்டி விடு (என்றவாறு தலையில் கைவைத்து அழுதல்)

குமார் :- அப்பா என்ன செய்யிறது இப்ப எல்லாம் நனைந்து போட்டுது ஐயோ என்ன செய்யிறது

சந்திரன் :- (மௌனமாய் இருத்தல்)

பார்வதி :- குடிச்சு குடிச்சு வருத்தம்தான் மிச்சம் வேற ஒன்றும் உங்களிடம் இல்லை. குடி குடியை கெடுக்கும் என்று சொல்லுறது உண்மைதான்.

சந்திரன் :- பார்வதி, என்னை மன்னித்துவிடு நான் இனி சத்தியமாய்ப் பிள்ளைகள் மீது ஆணையாகக் குடிக்க மாட்டேன். குடி குடியைக் கெடுக்கும் என்பதனை அறிந்து விட்டேன். இனி குடிக்கவே மாட்டேன.

பார்வதி :- இந்தளவும் காணும் நீங்கள் திருந்தினதே கடவுள் சித்தம் இனியாவது ஒழுங்காய் இருங்க

சந்திரன் :- ரமேஸ், இந்தா உனக்கும் குமாருக்கும் சோதனைக்காசு இனிப்பிள்ளையளை நல்லா, அப்பா படிப்பிப்பேன்.

**ச.நிலானி,**


பொன் விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்
துணுக்காய்ப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
நுகரச்சிப்பொருட்கள் கொள்வனவு, விற்பனை
விவசாய உள்ளீடுகள் கொள்வனவு, விற்பனை
கிராமிய வங்கிச்சேவை
நெல்,உப உணவுப்பொருட்கள் கொள்வனவு, விற்பனை
எரிபொருள் கொள்வனவு, விற்பனை
உலக உணவுத்திட்ட வினியோக சேவை
வாகன சேவை
கல்வி விரிவாக்கமும் சேவைகளும்
ஒப்பந்த சேவை


பொன் விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்
e.net
Professional IT Studies
e.net Computer Studies
Professional IT Studies
Available Courses @ e.net
DiCA
DiMW
DiEn
DiveD
CiCA
Enest Kids
Yagapuram, Mallavi.
Hotline : 0094 773 113 685


பொன் விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்
தாரணி தேன்சுவையகம்
Tharany Cream Hous
துணுக்காய் சாலை, மல்லாவி
தொ.பே:-0213208572



# நித்தியத் தாயே நீ வாழி

தாயே தமிழ் மகளே முது தமிழன் பெற்றெடுத்த
சேயே முத்துத் திரவியமே என்றும் நின்னை
வாயாரப் பாடுதற்கு வார்த்தை இல்லை
காயாத நிந்தன் கன்னிச் சொல்லால்
கடையேனைத் தாலாட்டு தாயே

முத்தமிழ் என்று நீயும் முழங்கியே நாளும் நின்று
வித்தகம் செய்வாய் நாமும் விருப்பொடு ஏற்றுகின்ற
உத்தம சீலர் தம்மை உலகிற்கு தந்த எங்கள்
சத்தியத் தாயும் நீயே சரித்திரம் தன்னில் வாழ்க

கடிந்திடும் வார்த்தை உந்தன் கனிமொழி தன்னில் இல்லை
இடிந்து நாம் போகும் போது இதமான இன்சொல் சொல்லி
படிந்துமே போகச் செய்யும் பண்மொழித் தாயே நீயும்
விடிந்திடும் நாளில் நின்று விண்ணுற வாழி வாழி

வெந்துயர் தீய்க்கும் போதும் வெறுமையில் வாடும்போதும்
நொந்து நாம் சோரும்போதும் நொடிந்துமே போகும்போதும்
எந்தையாய் அருகிருந்து எம்மனம் ஆற்றுகின்ற
பந்தமே பாசத் தாயே பணிகின்றோம் என்றும் வாழி

**திரு. தில்லையம்பலம் சாந்தகுமார்** (Dip.in.Teach.),
**ஆசிரியர்,**
**மல்லாவி மத்திய கல்லூரி.**

# எனது சிறிய நாடு

இந்துமா கடல் பொங்கிக்காணப்படும் எங்கள் தீவாம் இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளது. இது இயற்கை வளம் நிறைந்த ஆசியாவில் அமையப்பெற்றுள்ளது. வற்றாத பெரு நதியாம் மகாவலியை தன்னகத்தே கொண்டு மாறாமல் மக்களுக்கு சேவையாற்றி வருகிறதாம். அதன் விளைவால் ப்ச்சைப்பசேல் என வயல்வெளிகள் நிறைந்து எம்நாட்டை அழகுபடச்செய்கிறதாம்.

இயற்கை அரண் துறைமுகமாம் திருகோணமலை இலங்குகின்ற தலைநகராம் கொழும்புதனைக்கொண்டு உலகநாட்டின் மத்தியமாய் அமைந்து காணப்படுகின்றது. இருபத்தைந்து மாவட்டங்களையும் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கி உலகிற்கு சவாலாக உயர்ந்து நிற்கிறது எமது நாடு.

எமது நாட்டின் சிகரமாம் கொழும்பு தன்னில் எண்ணிக்கை அளவிலான மக்கள் தாம் இசைந்தபடி வாழ்கிறார்கள். கண்ணிற்கு எட்டாத அளவு உயர மாடிகளும் கதை பேசிமகிழ்கின்ற அழகான இடங்களும் பட்டம் பறக்கவிடும் வான்வெளியைத்தொட்டு வரும் விமானநிலையமும் சுற்றுவட்ட வீதியும் போக்குவரத்துத்துறையிலே முன்னேறி விளங்குகிறதாம். தரை கடல் வான் என ரெயில் தொடங்கி விமானம் வரை எமது நாட்டில் உள்ளனவாம்.

மத்திய மலைநாடாம் கண்டி தன்னில் மக்கள் அதிசயிக்கும் வான வெளி உயர மலைகளும் அதைமிஞ்சி நிற்கின்ற தேயிலை இறப்பர் தென்னை என பெருந்தோட்டப்பயிர்களையும் சொல்லவா வேண்டும் ஆகா! என்ன அழகான எமது நாடு.

உலக அதிசயத்தில் பொறிக்கப்பட்ட சிங்கராஜவனத்தையுமே தன்னகத்தே கொண்டுள்ளது. கைத்தொழில்கள் தன்னை மேற்கொள்வதற்காக நிறுவுகிறார்கள் சாலைகளை சீமெந்து, ஓடு, பீங்கான், காகிதம், சீனி, மீன்பிடி,என எண்ணில் அடங்காததொழிற்சாலைகளைக் கொண்டுமிக வருமானத்தை ஈட்டும் நாடாகவும் விளங்குகிறது. சுற்றுலாத்துறையில் ஆர்வம் கொண்டுமிக வருமானத்தினை ஈட்டும் நாடாக விளங்குகிறது.

சுற்றுலாத்துறையில் ஆர்வம் கொண்டு எமது நாடு அன்னியச் செலாவணியைப் அரசாங்கத்திற்குப் பெற்றுக் கொடுக்கின்றது." முத்துக்குளிப்பதற்கு மன்னாராம்" என கண்ணைப்பறிக்கிறது. ஏழில் கொஞ்சும் எம் இலங்கைத்திரு நாட்டில் தமிழர், சிங்களவர்,முஸ்லீம்கள், பறங்கியர், என சமபேதம் கொண்ட இனங்களும் ஒற்றுமையாக வாழ்கிறார்கள். அவர்கள் வழிபாடாற்றவென புகழ்பெற்ற தலதாமாளிகை, தீருக்கேதீச்சரம், மடுதேவாலயம், பள்ளிவாசல்கள் என ஆலயங்கள் எழுச்சியாக காணப்படுகிறது.

ஆழியாத ஓவியமாம் சிகிரியாவையும், அழகுபெற விளங்கும் மிருகக் காட்சிச் சாலையும்அமைதியின்றி உறங்கும் கடலலையும் ஆர்வமாக வாழும் மக்களையும் அம்சமாக கொண்டுள்ளது எமது இலங்கை.

அபிவிருத்தி என்னும் பெயரில் அரசாங்கப் பாடசாலைகள், வைத்தியசாலைகள்,தபாற்கந்தோர் என மக்களுக்கு மாறாமல் சேவையாற்றும் எமது சிறிய இலங்கை நாட்டிலே தேசியக்கொடி , தேசிய கீதம் என வரலாறு சொல்லும் தன்மைக்கேற்ப " ஒருதாய் மக்கள் நாடாவோம்" என " ஓரே குலம், சமயம், இனம் என வாழ்ந்து எமது நாட்டிற்குப் பெருமை ஈட்டிக்கொடுக்க வேண்டும் என சிறுவர்களாகிய நாம் எண்ணிக் கொள்ள வேண்டும்.

**S. கௌசல்யா,**
**தரம் 9.**

# மணல்வீடுகள்

துள்ளும் கடலலைகள் தொட்டு விளையாடும்
வெள்ளை மணற்பரப்பில் வீடுகள் பலகட்டி
அள்ளிச்செல்லும் அலை ஆற்றுப்பரப்பில் கைகொட்டி
பள்ளிச் சிறுவர் நாம் பலர் கூடி மகிழ்ந்திருந்தோம்

புலர்கின்ற விடியலிலேபொழிகின்ற பனி மழையிலே
சிலிர்கிற செடியினிலே மலர்கின்ற பூக்களிலே
துளிர்க்கின்ற தேனருந்தத் துடிக்கின்ற வண்டினமாயக்
குளிப்புற்று வாழ்ந்திருந்த காலமது தொலைந்ததெங்கோ?

வலைவீசும் நம்மவரின் வாழ்வினிலே சோகங்கள்
விலைபேசும் மீன் வகையில் விளையாத இலாபங்கள்
அலைபாயும் நெஞ்சினிலே அடங்காத தாபங்கள்
நிலையான வறுமையின் நிஜமான கோலங்கள்

நள்ளிரவில் நடுநிசியில் நித்திரையைத் தொலைத்துவிட்டு
பள்ளிகொள்ளும் நமையெழுப்பிப் பாசமுடன் முத்தமிட்டு –மீன்
அள்ளி வரும் ஆவலிலே அலை கடலில் ஓலமிட்டு விடி
வெள்ளி முளைக்கையிலே வீடு வரும் தந்தை எங்கே?

பள்ளிக்கு போகும் எம்மைப் பழஞ்சோறு உண்ண வைத்து – அப்பா
அள்ளிவரும் மீன் வகைகள் அத்தனையும் விலை பேசி
கள்ளி உந்தன் காதுக்கு கம்மலொ ஒன்று வாங்கிடுவேன் என்று
சொல்லி என்னைச் சிரிக்க வைத்த செல்ல அன்னை எங்கே?

பாற்சோறு நாம் உண்டதில்லை பட்டாடைகள் கண்டதில்லை
நீர்ச்சோறு ஊட்டும் அன்னை நிழல் தன்னில் மகிழ்ந்திருந்தோம்
பார்த்தோர்கள் வியந்திருக்கப் பாசமுடன் தந்தையெம்மை
சேரந்தணைக்கும் போதினிலே ஜென்ம பலன் உணர்ந்திருந்தோம்

இல்லாமல் ஒருநாள் இல்லாமல் போகலாம்
அல்லல்கள் ஒருபோதில் அகன்றேதான் போய்விடலாம்
பொல்லாத சுனாமி என்னும் பேய் வந்து சேர்ந்ததனால்
சொல்லாமல் கொள்ளாமல் அன்னை தந்தை போயினரோ?
மின்னாமல் முழங்காமல் சுனாமி என்ற பெயர் கொண்டு
ஏண்ணாமல் எதிர்பாராமல் பொல்லாத காலனவன் - நம்
கண்ணான பெற்றோரைக் கணப்பொழுதில் கவர்ந்ததனால்
மண்ணாகிப் போன எங்கள் வாழ்வில்இனி வசந்த முண்டோ?

பிஞ்சுப் பாலகனாய் ஐந்து வயதில் எந்தம்பி
கொஞ்சும் விழிகளிலே கொடிய பயம் நிரம்பி
அஞ்சும் நெஞ்சினிலே அரவணைப்புத் தேடி – என்னைக்
கெஞ்சியே பார்க்கையிலே கோர நினைவு கொல்கிறதே

அன்னை தந்தை இல்லாத அனாதைச் சிறுவர் நாம்- இந்த
மண்ணுக்குப் பாரமாய் வாழ்வதுதான் நம் விதியா?
பொன் வேண்டாம் பொருள் வேண்டாம் போராடும் புகழ் வேண்டாம்
கண்ணான தாய் தந்தை காலடியில் சேர்ந்திடுவோம்

**ச.குணாளினி,**
**தரம் 11.**



# பச்சைவீட்டு விளைவு

நாம் வாழும் இந்தப் பூமியைப் படைத்த இறைவன், இதனைப் பாதுகாக்கும் பொறிமுறைகளையும் படைத்துள்ளான். ஆனால் மனிதர்களாகிய எமது செயற்பாட்டின் காரணமாக இப்பாதுகாப்புப் பொறிமுறை உடைந்து பூமியானது பேரழிவினை நோக்கி தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறது. இவ்வகையில் இயற்கையான பச்சைவீட்டு விளைவில் ஏற்படும் தாக்கமும் ஒன்றாகும்.

சூரியனிலிருந்து பூமிக்குக் கிடைக்கும் ஒளி மூலம் பூமி தனக்குத் தேவையான வெப்பத்தைப் பெற்றுக் கொள்கின்றது. பூமி தான் பெற்றுக் கொண்ட வெப்பத்தின் ஒரு பகுதியை மீண்டும் செந்நிறக் கதிர்களாக விண்வெளியை நோக்கி வீசுகின்றது. இவற்றின் ஒரு பகுதி மேகம், நீராவி ,காபனீரொட்சைட்டு வாயு போன்றவற்றின் மீது படுகின்றது. அவை இந்தக் கதிர்களை வெளியே விட்டு விடாமல் தம்மகத்தே அடக்கி வைத்து விடுகின்றன. இவ்வாறு தேக்கி வைக்கப்பட்ட கதிர்கள்தான் பூமியைச் சூடாக வைத்திருக்கின்றன. இதுவே பச்சைவீட்டு விளைவு அல்லது பசுமை இல்ல விளைவு என அழைக்கப்படுகின்றது. இதேபோன்ற நிகழ்வு பூமியில் நடைபெறாமல் இருப்பின் பூமி குளிர்ந்து நீர்முழுவதும் உறைந்து விடும்.

“ஜீன் பாப்டிஸ்ட் போரியர்” என்ற பிரெஞ் நாட்டு விஞ்ஞானி இந்த பச்சைவீட்டு விளைவை முதன் முதலாக அடையாளம் கண்டவராவார். அவர் வளிமண்டலத்தின் நிகழ்வுடன் இப் பச்சைவீட்டு விளைவின் ஒற்றுமையைச் சுட்டிக் காட்டினார்.

பச்சைவீட்டு வாயுக்கள் அளவுக்கதிகமாக வளி மண்டலத்தினுள் விடப்படுகின்றன. இதன் விளைவாக இந்தப் போர்வை தடிப்பாகிக் கொண்டிருக்கின்றது. இது இயற்கையான பச்சைவீட்டு விளைவினைப் பாதிக்கின்றது. நிலக்கரி எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு போன்ற எரி பொருட்களினால் எரிக்கும்போது காபனீரொட்சைட்டு வெளியேற்றப்படுகின்றது.

நாம் காடுகளை அழிக்கும் போது மரங்களில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் காபன் வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டாகக் கலக்கின்றது. அதிகரித்துவரும் விவசாய நடவடிக்கைகள் நிலத்தைப் பயன்படுத்தும் முறையில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வேறு சில நடவடிக்கைகள் இவை அனைத்தும் மெதேன் மற்றும், நைதரஸ் ஒட்சைட்டு வாயுக்களின் அளவுகளை அதிகரிக்கச் செய்கின்றன.

தொழிற்சாலைகளின் நடவடிக்கைகளும் செயற்கையான மற்றும் புதிய பச்சைவீட்டு வாயுக்கள் அதாவது குளோரோ புளோரோ காபன் (ஊகுஊ) போன்றவற்றை வெளியேற்றுகின்றன. மோட்டார் வாகனங்கள் வெளியேற்றும் புகையானது ஓசோனின் அளவை அதிகரிக்கச் செய்கின்றன. அதிகரித்து வரும் பச்சைவீட்டு வாயுக்கள் பூமியின் வெப்ப நிலையை அதிகரிக்கின்றன.

வெப்பநிலை மாற்றம் மனித குலத்திற்கு அபாயகரமானது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து பூமியில் சராசரி வெப்பநிலை 0.3 - 0.60C வரை உயர்ந்துள்ளது. இந்த வெப்பநிலை உயர்வு எமக்கு மிகவும் குறைந்தளவாகத் தோன்றலாம். ஆனால் கீழே குறிப்பிடப்படும் பேரழிவிற்கு இது காரணமாக இருக்கின்றது.

- உயர்ந்து வரும் வெப்பநிலை மழை பெய்யும் நிலைமைகளை மாற்றக் கூடியது. வரட்சி மற்றும் வெள்ளம் ஏற்படுதலை அதிகரிக்கச் செய்கின்றது. கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்து வரும் புயல், சூறாவளி போன்றவற்றிற்கும் வெப்பநிலை மாற்றங்களின் விளைவுகளே காரணம் எனக் கருதப்படுகின்றது.

- வெப்பநிலை மாற்றத்தின் விளைவுகளில் அடுத்துப் பனிப்பாறைகள் உருகுதல், கடல்நீர்மட்ட உயர்வு, கடல் நீர் வெப்பமடைதல் என்பனவும் உள்ளடங்குகின்றன. அடுத்த நூற்றாண்டுக்குள் சுமார் ½m அளவுக்கு கடல்மட்டம் உயர்வதால் மண்ணரிப்பு ஏற்பட்டு, நிலப்பகுதிகள் கடலில் மூழ்குதல், வெள்ளப்பெருக்கு ஏற்படுதல், நீர்நிலைகள் உயர்வாக மாறுதல் போன்ற பாதிப்புக்கள் ஏற்படும்.

- பூமி வெப்பமடைவதன் காரணமாக மனிதனின் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு வெப்பம் தொடர்பான நோய்கள் ஏற்படும். உடலில் நீரிழப்பு, தொற்றுநோய் பரவல், ஊட்டச்சத்துக் குறைபாடு, உயிரிழப்புக்கள் என்பனவும் இவற்றுள் அடங்கும்.

எனவே பச்சை வீட்டு விளைவின் அளவுக்கதிகமான பாதிப்புக்களைக் குறைத்து பூமியின் வெப்பநிலையைத் தக்க அளவில் பேணுவதே எம் எதிர்கால வாழ்வின் ஆரோக்கியத்திற்கு நன்மை பயப்பதாகும்.

**திரு.த.ஜீவானந்தன்** (B.Sc Dip.in.Edu.),
**ஆசிரியர்,**
**மு/மல்லாவி ம.கல்லூரி.**



# ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளுக்குமான உறவு

பாடசாலைக்கு ஒரு பிள்ளை காலையில் மிக விருப்பத்தோடு புறப்பட வேண்டும். பாடசாலை விட்டுச் சென்றதும் மறுநாள் பாடசாலைக்கு மிகுந்த உற்சாகமாக வரவேண்டும். பாடசாலை எப்போதும் பிள்ளைக்கு விருப்புடையதாக அமையவேண்டும். பிள்ளையின் மனநிலை எப்போதும் விருப்பின் பக்கமே செல்லக்கூடியது. வெறுப்பின் பக்கத்தில் இருந்து விலகியே இருப்பார்கள்.

ஒரு பிள்ளை தனது வாழ்வு பற்றிக் கவலை கொள்ளும் பருவத்துக்கு முந்திய பொழுதுகளை பாடசாலையிலேயே கழிக்கின்றது. வாழ்வு பற்றிய கவலை ஒரு பிள்ளைக்கு பதினமப் பருவத்தில்(TEEN-AGE) இருந்தே ஆரம்பிக்கின்றது. வறுமை, பசி, வாழ்வின் நெருக்கடி, பணமின்மை, வீட்டில் இருந்தாலும் பிள்ளை பாடசாலைவரும். இவை பிள்ளையைப் பாதித்தாலும் பிள்ளையின் மனதைப் பாதிப்பதில்லை.

ஆரம்பத்தில் பிள்ளை தனது முதற் கல்வியை வீட்டிலேயே பெற்றுக் கொள்கிறது. அதன் பின்னர்தான் பாடசாலையில் பெற்றுக் கொள்கிறது. ஆரம்ப காலங்களில் திண்ணைப் பள்ளிக் கூடங்களே மாணவர்களுக்கு கல்வியறிவூட்டின. திண்ணைப் பள்ளிக் கூடங்கள் பயம் மிகுந்ததும் பக்தி மிகுந்ததாகவும் இருந்தன. அங்கு ஆசிரியர்கள் கடவுளர்களாகவும் மாணவர்கள் பக்தியுடையவர்களாகவும் வாவென்றால் வந்து, போவென்றால் சென்று அச்சம் கலந்த மரியாதை உணர்வோடு கல்வி கற்றனர். இதனை அந்தக் காலத்தில் உள்ள பெற்றோரும் மாணவரும் ஆசிரியரும் விரும்பினர்.

காலப் போக்கில் இந்த முறை மாற்றமடைந்து விட்டது. ஆசிரிய மையக்கல்வி மேற்கத்தையவர்களின் வருகையைத் தொடர்ந்து பொதுவான கலைத்திட்டத்திற்கு அமைவாகக் கற்பிக்கப்படுவதுடன், மாணவரின் அடைவுமட்டத்தை அளவிடுவதற்கான பரீட்சைமுறை அறிமுகமாகியது. ஆசிரியரின் இருப்பிடத்தை மாணவன் தேடிச்சென்ற காலம் மாறி, மாணவரின் இருப்பிடத்திற்கு ஆசிரியர் தேடிச் சென்று சம்பளப் பட்டியலில் சம்பளம்பெறும் நடைமுறை வரத்தொடங்கியது. உலக நடைமுறைக்கும், உலகத்தினுடைய தேவைக்குமான அறிவாளிகளை உருவாக்கும் முறையின் கீழ் கல்வி வந்து நிற்கிறது.

உலக வங்கிதான் உலகக் கல்வி முறையைத் தீர்மானிக்கின்றது. இப்பொழுது ஒரு மனிதனைப் பற்றித் தீர்மானம் எடுக்கும் சக்தியாக உலக வங்கி இருக்கின்றது. உலக மயமாக்கற் சிந்தனை எனக் கூறிக் கொண்டு புதிய பாடத் திட்டம், புதிய கற்பித்தல் உத்தி, புதிய அணுகுமுறை எனக் கூறிச் சுயமாகச் சிந்திக்க வைக்க முடியாத வடிவமைப்புக் கல்வியே உள்ளது. பழைய கல்வி முறை ஏட்டுக் கல்வியாக இருந்த போதும், அறநெறிக்குட்பட்ட ஒழுக்க விழுமியமிக்க சீரிய சமூகத்தை உருவாக்கும் கல்வியாகவே இருந்தது. அக் கல்வியில் மனனம் செய்வதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததன் மூலம் அவர்களின் உள்ளார்ந்த திறன்களை கட்டியெழுப்ப வழிப்பட்டது. ஆனால் இன்று தொலைநோக்கு கல்வி அறிவியற் கல்வியாக இருப்பதனால் சமூக விழுமியங்களை மதிக்கும் பண்பு , அன்பு, கருணை, இரக்கம், தலைமைக்கு கட்டுப்படல் போன்ற விழுமியங்கள் அற்ற முகஸ்துதி பாடும் கல்வி முறையாகவே மாறி வருகின்றது.

மாணவர்களுக்கு அதிக சுதந்திரத்தை இன்று கல்வி வழங்கியுள்ளதால் கடினமான பகுதிகளைத் தவிர்த்து இலகுவான பாடப் பரப்புக்களையும், துறைகளையும் தெரிவு செய்வதில் அநேகமானவர்கள் விருப்புக் காட்டுகிறார்கள். எடுத்துக்காட்டாக உயர் தரத்தில் கணித விஞ்ஞானத் துறைகளை தெரிவு செய்வதைக் காட்டிலும், கலைத்துறையைத் தெரிவு செய்யும் மாணவர்களே அதிகமாக உள்ளனர். அதிலும் அவர்கள் தெரிவு செய்யும் பாடங்கள், அவர்கள் வார்த்தையில் கூறுவதாயின் சுகமான பாடங்களையே தெரிவுசெய்கிறார்கள். இதனால் கல்வித்தரமிக்க ஆனால் சமூகத்திற்குப் பயன்படாத சமுதாயமே இன்று கல்விமுறையில் உருவாக்கப்படுகின்றது.

ஆசிரியர் மாணவர்களுக்கிடையேயான அன்னியோன்னிய நிலை இன்று நெருக்கமாக உள்ளது உண்மையானது. ஆனால், மாணவன் அந்த ஆசிரியரிடம் இருந்து எவ்வளவு பயனைப் பெற்றுக்கொள்கிறான். ஆசிரியர் எந்தளவிற்கு அந்த மாணவனுக்கு விடயத்தைக் கொடுக்கிறார் என்பது விளங்காத புதிராகவே உள்ளது. அண்மையில் உயர்தர மாணவர் ஒருவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தும்போது "சேர், நாங்கள் எவ்வளவு கஸ்ரப்பட்டு கண் விழித்துப் பரீட்சைக்குத் தயாரானபோதும் எங்களால் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வது கடினமாகவே உள்ளது. ஆனால் பணம் படைத்த மாணவர்கள் பாடசாலைக் காலத்தில் நன்றாக ஜொலி பண்ணிவிட்டு பரீட்சை தொடங்கும் காலத்தில் பிரபல ஆசிரியர்கள் எனக்கூறப்படும் ஆசிரியர்களிடம் சென்று அவர்கள் கொடுக்கும் "சொய்ஸ்" (தெரிவு வினாக்கள்) வினாக்களை மாத்திரமே கற்பதன் மூலம் உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்று உயர்கல்வி வாய்ப்பினையும், உத்தியோகங்களையும்

பெற்றுவிடுகின்றனர். நாங்கள் பாடசாலை விழுமியங்களை மதித்து நடந்தபோதும் எமக்கு சமூக அந்தஸ்து அவர்களுக்கப் பின்னேதான் உள்ளது. என தனது மனக்குமுறல்களை வெளிப்படுத்தினார். இன்றைய கல்விநிலை இவ்விதம் தரக்குறைவாகச் செல்வதற்கு ஆசிரியர் சமூகமா? உலகமயமாக்கலா? .. காரணம்.

மேற்கத்தைய சமூக அமைப்பு வேறு, கீழைத்தேய சமூக அமைப்பு வேறு. மேற்கத்தைய சமூகக் கல்வியை கீழைத்தேயக் கல்வியில் புகுத்துவதன் விளைவே கல்வி பணத்திற்காக விற்கப்படும் நிலைக்குக் காரணமாகும். கல்வி அரசுக்குரியது. ஆயினும் அக்கல்வியை இன்று அரசு தனியார் துறைக்கு வழங்குவதன் விளைவே ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளுக்குமான உறவில் விரிசல்களும் மனநெருடல்களும் உருவாக காரணமாகின்றது.

முன்னைய காலத்தில் வாழ்ந்த ஆசிரியர் ஒருவர் சாகும்வரையும் ஆசிரியராகவே வாழ்ந்து காட்டினார். இன்று அவ்வாறு வாழ்பவர்கள் சிலரே. முன்னைய ஆசிரியர்களைக் கண்டால் மாணவர்கள் அடக்கமான பணிவுடன் மரியாதை செலுத்தினார்கள். அசிரியர்களும் அவ்வாறே நடந்தார்கள். இன்று ஆசிரியர்களில் சிலர், மாணவர்களைக் கண்டு பயப்படுவது அவர்களுக்குப் பயந்து ஒளிந்து செல்லும் நிலை உள்ளது. இதற்கு ஒரு கதை உள்ளது. ஓர் நாள் வீதியால் சென்ற முதியவரொருவர் திடீரென வீதியின் அருகே நின்ற மரத்தருகே தன்னை ஒருவர் கடந்து செல்லும்வரை மறைந்திருந்துவிட்டு வெளியே வந்தார். இவரைப்போன்று நடுத்தர வயதுடைய ஒருவரும் மறைந்திருந்துவிட்டு வெளியே வந்தார். அவ்விருவரும் ஒருவரையொருவர் பார்த்தனர். நடுத்தர வயதினையுடையவர் "ஐயா. நீங்கள் எதற்காக மறைந்தீர்கள்?" என முதியவரைக் கேட்டபோது எனக்குக் கற்பித்த ஆசிரியரைக் கண்டேன். அப்போது இருந்த பக்தி காரணமாக என்னையறியாது அவர் எதிரில் செல்ல தைரியமில்லாது மறைவாக இருந்து, அவர் என்னைக் கடந்ததும் செல்வதற்காகக் காத்திருந்தேன் என்றார். அப்பெரியவர் அவனை ஏறிட்டுப் பார்த்தபோது அதனைப் புரிந்துகொண்ட நடுத்தர வயதுக்காரர் ஐயா, நான் ஒரு ஆசிரியர். என்னிடம் கல்வி கற்ற மாணவன் என் எதிரில் வந்தான். அதனால் தான் இங்கு ஒளிந்துகொண்டேன் என்றார். எதற்கென வினவியபோது அம்மாணவன் என்னைக் கண்டால், ஒன்றில் பட்டப்பெயர் சொல்வான் அல்லது என்னிடம் பீடிக்கு, சாராயத்துக்கு பணம் கேட்பான் எனக்கூறித் தலைகவிழ்ந்தார். இது உண்மையாக நடந்ததோ இல்லையோ இன்றைய மாணவர் ஆசிரியர் உறவு இப்படித்தான் உள்ளது.

பிள்ளையைப் பிள்ளையின் போக்கில் அவனுடைய மனநிலையில் இருந்து பார்க்கும் பயிற்சி ஆசிரியர்களுக்கு உண்டு. எத்தனை ஆசிரியர்கள் இதனைக் கைக்கொள்கின்றனர். பிள்ளை தனக்கு ஏற்ற சூழலில் தனது மனதிற்கு இசைவான இடத்திலுமே பிள்ளை தனது வாழ்வை கொண்டுபோக விரும்புகிறது. அதற்குப் பெற்றோரும் ஆசிரியரும் மதிப்பளிக்காமல் இருக்கும்போது பிள்ளை கடமைக்காகவும், பெற்றோரின் நச்சரிப்புக்காகவும் பாடசாலைக்குச் செல்கிறது. பிள்ளை தான் விரும்பும் பாடசாலைக்குச் செல்லும் போது அதனுடைய மூளையின் செயற்பாடுகள் விருத்தியடைவதோடு இயல்பாகவே கல்விகற்க ஆரம்பிக்கிறது. எமது ஆசிரியர்கள் கற்பித்தல். ஓப்புவித்தல் முறைகளை மாற்றவேண்டும். தனக்குச் சம்பந்தமில்லாத ஒன்றை வெறுப்போடு கற்பிப்பதன் மூலம் பிள்ளை எதனையும் சாதித்துக் காட்டமுடியாது. ஓவியத்தில் ஆர்வமில்லாத பிள்ளையை அவ் ஓவியத்தில் ஆர்வம் வரக்கூடிய விதத்தில் அதன் முக்கியத்துவம், இரசனை அமைப்பினை முறைப்படி கற்பிப்பதன் மூலம் அதில் ஆர்வத்தைத் தூண்டி உள்ளார்ந்த திறன்களை விளக்க ஆசிரியரால் முடியுமெனின், பாடசாலைகளை நந்தவனமாகவோ, பூஞ்சோலைகளாகவோ ஆக்கமுடியாதா? பாடசாலைகள் இரம்மியமானதாகவும், மனதிற்கு இனியதாகவும் இருக்கும்போது ஒவ்வொரு பிள்ளையும் அதற்குரிய மதிப்பையும் மரியாதையினையும் வழங்கும்.

ஒரு பிள்ளை விரும்புகின்ற எல்லாவற்றையும் ஆசிரியரோடு பகிர்ந்து பேசச் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும். அப்பொழுது பிள்ளை தனது மனதில் உள்ளவற்றைத் தெளிவாகக் கூறும். இவ்விதம் அனைத்துப் பிள்ளைகளும் எதனை நினைக்கின்றார்கள், எதனை விரும்புகின்றார்கள். நான் என்ன செய்ய வேண்டும் என ஆசிரியர் புரிந்துகொள்ள முடியும். இதனை எத்தனை ஆசிரியர்கள் செய்கின்றார்கள்? மாணவர்களின் குறைகளை இனங்கண்டு இவற்றைக் களைந்து தட்டிக்கொடுப்பதற்குப் பதிலாக அவனது குறைகளை பலரது முன்னிலையில் பகிரங்கப் படுத்தி, அவனது மனதை நோகடிப்பதை அறியாமற் கைக்கொள்கின்றனர். "எனக்கென்ன சம்பளம்" வருகிறதுதானே என்னும் போக்கை முழுமையாக மாற்றவேண்டும். பிள்ளை கலந்து பேசவும் அருகில் இருக்கவும் விரும்புகின்றது. ஒரு பிள்ளையை சாதாரணமாக அவதானியுங்கள், தனக்குள் பேசிக்கொண்டு தானாக ஏதாவது செய்துகொண்டிருக்கிறது. பிள்ளைகள் செய்கின்ற சின்னச்சின்ன விடயங்கள் எல்லாவற்றையும் வாயாரப் பாராட்டுங்கள். கெட்டிக்காரன், உன்னால் முடியும், நல்லது எனும் வார்த்தைகளை உளமாரக் கூறுங்கள். தேவையில்லாமல் பிள்ளைகளோடு கோபம் கொள்வதனைத் தவிருங்கள். கோபம் அவர்களுக்கும் எங்களுக்கும் உள்ள உறவை விரிசலாக்கிவிடும். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற நற்பண்புகளை பாடசாலையினுள் வரவழைத்து வாழ்க்கையை மகிழ்வாகவும் மனித நேயத்தையும் கல்வியுடன் ஒன்றுகலக்கச் செய்யத்தக்கவிதம் எமது என்பதனை நாம் எல்லோரும் உணர்ந்துகொள்ளவேண்டும். "நல்லாசிரியர்கள் உலகை உருவாக்கும் சிற்பிகள், வருங்கால சமூகத்தின் ஆணிவேர்கள்" ஆசிரியர்கள் என்பதை மறுப்பதற்கில்லை.


இ.நிக்சன்,
அதிபர்,
படிவம் 4 அ.த.க.பாடசாலை.



பொன் விழாக்காணும் கல்லூரியை வாழ்த்துகின்றோம்
புவனேஸ்வரி புத்தகசாலை
17.3"
Pavilion
பிரதான சாலை, மல்லாவி
தொ.பே:-0778175116




முருகனடி
பல்பொருள் வாணிபம்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
துணுக்காய் சாலை, மல்லாவி தொ.பே:-0770774092

பொன் விழா சிறக்க வாழ்த்துகின்றோம்
S.T.S.ASSOCIATES
Managment Accounting and tex Consultant
S.Navanedarajah
Propietor
37,Sivankovil Road,
Sinnaputhukulam, Vavuniya.
Reg No:W82582
Tel: +94243243453
+94775151761



# துள்ளித் திரிந்திடும் பள்ளி நாட்கள்..

மறக்கமுடியுமா? மகிழ்வான அந்நாளை
ஆறு வயதினில் அன்னை நடையுடன்
பள்ளி வளாகத்தில் துள்ளிக்குதித்ததை
மறக்கமுடியுமா? மறக்கமுடியுமா?

அன்புடன் பெற்றேர். அரவணைத்துமே
ஆசான் சொல்லை நேசமாயக் கேட்டு
ஆகிலம் தன்னிலே அன்புடன் வாழ....
வழிகாட்டியதை மறக்கமுடியுமா?

நட்புக்களுடனே நயமாயப் பேசி
நன்மை தீமைகள் இரண்டிலும் கலந்து
செல்லமாய் சன்டைகள் சிறிதாய் பிடித்ததை
மறக்க முடியுமா? மறுக்க முடியுமா?

கல்வியுடனே அறிவுரைகள் கூறி
கலைகள் யாவையும் கவினுற வழங்கி
புவிதனில் நாமும் மனிதராய் வாழ
அறிவொளி தந்த ஆசான்களை – நாம்
மறக்க முடியுமா? மறக்க முடியுமா?

பள்ளிப்பருவத்தின் இறுதி நாளில்
பரீட்சை முடிந்த கடைசி நாளில்
இனி இந்தச் சீருடை அணிவது எப்போ?
ஏன ஏங்கியதை மறக்க முடியுமா?

மீண்டும் வேண்டம் மிக நல்ல அந்நாட்கள்
தொலைந்து விட்ட அந்நாளை
துன்பமுடன் தேடுகின்றேன்
துன்பமுடன் தேடுகின்றேன்

ஆனாலும் அந்நாட்கள்
வுந்திடாது இப்பிறப்பில்
வுரமொன்று தந்திடையா!
வரும்பிறப்பில் செல்வதற்கு பள்ளி செல்வதற்கு

**செல்வி தமிழினி இரத்தினம்,**
**ஆசிரியை,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி.**

# தன்னியக்க ரெல்லர் பொறி ATM / தன்னியக்க வங்கிச்சேவை

1986ல் இலங்கையில் அறிமுகமான ATM மிக விரைவாக புழக்கப் பண முறையின் ஓர் அங்கமாக மாறியுள்ளது. நவீன தொழில்நுட்ப முறை பயன்பாட்டின் காரணமாக இப்போது வங்கிச் சேவைகளில் பெரும் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. விசேடமாக இலத்திரனியல் தொழில்நுட்பம் காரணமாகவும் கணினி தொழில்நுட்பம் காரணமாகவும் வங்கிச்சேவைகளில் பல புதுமைகளை ஏற்படுத்தியுள்ளன. தன்னியக்க வங்கிப் பொறி (AUTOMATED BANKING MACHINE) பயன்பாடு காரணமாக பணக் கொடுக்கல் வாங்கல்கள், வங்கிகளுக்கு இடையிலான கொடுக்கல் வாங்கல்கள், கணக்குப் பதிவிடல், கணக்கு கூற்று வழங்குதல் போன்ற கருமங்கள் இலகுவான கருமங்கள் ஆகியுள்ளன. இது தன்னியக்க பொறி (AUTOMATED TELLER MACHINE) என அழைக்கப்படும்.

இலத்திரனியல் நிதிப்பயன்பாட்டின் காரணமாக கொடுக்கல் வாங்கல்கள் விரிவடைந்துள்ளன. வாடிக்கையாளர்களுடைய வீட்டில் அல்லது வியாபார நிலையத்தில் இருந்து கணிணி மூலமாக அல்லது தொலைபேசி மூலமாக வங்கிக் கொடுக்கல் வாங்கல்களை நிகழ்த்தக்கூடிய வாய்ப்பு உருவாகியுள்ளது.

தன்னியக்க வங்கிச்சேவைப் பொறி இப்பொழுது ஓர் அத்தியாவசியமான ஒன்றாக மாறியுள்ளது. இது உண்மையில் கணினி ரேமினல் (Computer terminal) ஒன்றாகும். இவ்வியந்திரத்தின் மூலம் வாடிக்கையாளர் பணத்தை வைப்புச் செய்தல், பணத்தை மீளப்பெறுதல், பட்டியல் தொகைகளை செலுத்தல், ஒரு கணக்கில் இருந்து மற்றொரு கணக்குக்கு பணத்தை மாற்றுதல் போன்ற கருமங்களைச் செய்யமுடிகிறது. சில நாடுகளில் ATM/ABM மூலமாக பயணிகள் காசோலைகள், வைப்புச்சான்றுகள் போன்றவற்றையும் பெறமுடிகிறது. வாடிக்கையாளருடைய நேர விரயம் இதனால் தடுக்கப்படுகிறது. 24 மணித்தியாலயமும் ATM/ ABM மூலமாக கொடுக்கல் வாங்கல்களை நிகழ்த்த முடிகிறது. ABM மூலமாகக் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கான கணக்கு உரிமையாளருக்கு விசேடமான காந்த திரை (MAGNETICAL STCRIPED CARD) கொண்ட அட்டையும் தனிப்பட்ட இனங்காணும் இலக்கமும் ( PIN-PERSONAL IDENTIFICATION NUMBER) குறித்த வங்கியில் வழங்கப்படும். Pin என்பது வாடிக்கையாளரது இலத்திரனியல் ஒப்பமாகும். ABM மூலமாக கொடுக்கல் வாங்கல் செய்யும் எல்லாவேளைகளிலும் PIN இலக்கத்தைப் பொறித்தல் வேண்டும். அப்போது பொறி கணினி PIN இலக்கத்தின் திருத்தமான தன்மையைப் பரிசோதிக்கும். அதில் ஏதாவது தவறு காணப்படுமாயின் அதனை திரையில் வெளிப்படுத்தி நிராகரிக்கும் தவறு இல்லையெனில் முன் செல்வதற்கான ஆலோசனைகளை கணணித்திரையில் காட்டும். வாடிக்கையாளர் அந்த ஆலோசனைப்படி தனது தேவைக்கான கொடுக்கல் வாங்கல்களைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். கொடுக்கல் வாங்கல் பூர்த்தியானதும் பொறி கொடுக்கல் வாங்கலின் பொழிப்படங்கிய பத்திரத்தை பிறப்பிக்கும் அத்துடன் அட்டையை மீளக்கொடுக்கும்.

ABM மூலமாக கொடுக்கல் வாங்கல் நிகழ்வது இலகுவாகவும் விரைவாகும். அத்தோடு பாதுகாப்பாகவும் அமையும் இதன்முழுமையான பாதுகாப்புச் செயற்பாடுகளும் PIN என்னும் தனிப்பட்ட இனங்காணும் சரியான தன்மையில் தங்கியுள்ளது. குறித்த வாடிக்கையாளர் தவிர்ந்த வேறு நபர் இந்த அட்டையை பயன்படுத்தி ABM மூலமாக கொடுக்கல் வாங்கல் செய்வதனால் அவரிடம் சரியான இலக்கம் இருத்தல் வேண்டும். இல்லாவிடில் இதனைப்பயன்படுத்த முடியாது. ஆகையால் PIN இலக்கத்தை தனக்கு மட்டும் உரிய இரகசியமான ஒன்றாக வைத்திருத்தல் வேண்டும். அதனை நினைவில் மட்டுமே வைத்துக் கொள்ள வேண்டும் என்று வங்கி ஆலோசனை வழங்கும்.

யாராவது ஒருவருடைய அட்டையை களவெடுத்தவர் அல்லது பொறுக்கி எடுத்தவர் சரியான இலக்கம் தெரியாமல் அந்த அட்டையைப் பயன்படுத்த முயற்சித்தால் பொறி அட்டையை வைத்துக் கொள்ளும் மீள வழங்க மாட்டாது. அதனால் சரியான உரிமையாளர் வங்கியிலிருந்து அட்டையை பெற்றுக் கொள்ள முடியும்.

நிதி நிறுவனங்களின் விசேடமான இலத்திரனியல் கொடுக்கல். வாங்கல்களுக்கான அட்டை அந்தந்த நிதி நிறுவனத்தின் பெயரில் பிறப்பிக்கப்படும். அதனை இனங்காட்டுவதற்குச் சுருக்கமான பெயர் பயன்படுத்தப்படும். ரெல்லர் அட்டை, வரவு அட்டை, கடன் அட்டை போன்ற பெயர்களில் அழைக்கப்படும்.

இந்த அட்டை மூலமாக சில நிறுவனங்களில் இருந்து பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்யும் வசதி தோன்றியுள்ளது. INTERACT கணினி TERMINAL வசதியுள்ள வணிகநிறுவனங்களில் இருந்து மட்டும் அவ்வாறு கொள்வனவு செய்ய முடியும்.

**ந. கஜனி,**
**2011 வர்த்தகப்பிரிவு.**

# மரணம்...... வரம்...

மனிதா! ஏன்? மரங்களை அழிக்கின்றாய்
புரியவில்லையா உனக்கு"ஜனனம்" என்ற சொல்லை
அகராதியில் அழித்துவிட்டு, - ஏன்?
"மரணம்" என்ற சொல்லை
மனப்பாடம் செய்கிறாய்
சுற்றும் பார்!
உன் சுற்றாடல் என்ன இங்கு சுகமாய் இருக்கிறதா?
ஓவ்வொரு மரமும் தாய்
ஓவ்வொரு மரமும் கடவுள்
நீ! வந்த பாதைகளை அழித்துவிட்டு
போவதற்கு வழிதேடுகின்றாய்
புரியவில்லையா? –உனக்கு

ஓட்சிசனை நிராகரித்தவனே!
காபனீர் ஒட்சைட்டின் கருணையைப் பார் -அதோ!
இமய மலையை காணவில்லை
ஆசியா கண்டமே! ஆற்றுப்பள்ளத்தில்
அந்தாட்டிக்கா எங்கே?
உன்னவர் வாழும் கண்டங்கள் எல்லாம்
கடலில் மூழ்கிறதே காணவில்லையா – நீ!
இனி எஸ்கிமோவர் மட்டுமா உயிர் வாழப் போகிறார்கள்
ஐயகோ! அவர்கள்
இல்லம் எல்லாம் கரைந்து விட்டது
அவர்கள் அங்கமெல்லாம் உருகுகின்றதே! பார்!
ஓவ்வொரு மரத்தின் வீழ்ச்சியிலும் - பூமி
முகாரி இசைப்பது கேட்கவில்லையா!
அதோ! உன் தங்கை
கண்கள் தெரியாத நடைபிணம்
இதோ!- உன் தந்தை தோல் புற்று நோயால்,
துவள்கிறார் கவனி! காரணம் நீ!!! – உனக்கு
கொதி நீர் வேண்டுமா? சுலபம்
ஏதாவது ஒரு ஆற்றில் போய் அள்ளி வரலாம்
சிறிது நேரம் உன் வயல்களை பாரடா!!
பிரசவிக்கும் நேரத்தில்
தாயும் சிசுவும் கருகுகின்றதே!! – பார்!

இனி உனக்கு குளிர்காலமில்லை
பூபாளம் பூப்பெய்தும் வசந்தகாலமும் இல்லை
இறந்த தாய் முலையில் பால் தேடும்,
குழந்தை போல் நீ!
மரித்த மரங்களில் நிழல் தேடப் போகிறாயா?
உனக்கென்ன – நீ!
விசிறிகளின் மடியில் படுத்துறங்குவாயே!
வேண்டுமென்றால் பார்!
அவற்றிற்கும் ஒரு நாள் கைவலித்துப் போகும்.

இனி நீ! காதல் செய்ய நந்தவனமோ!
பூங்காவோ! இல்லை.
வேண்டுமென்றால் பிளந்து கிடக்கும்
பூமி இடுக்குகளில் காதல் செய்து பார்!
நீ! புதுமைகளை விரும்புபவனாச்சே!

பூமியின் அழகை புதைகுழியில் இட்டவனே!
அருகில் பார் தன் நிறப்பூச்சு சேலைகள்,
உரிந்த கவலையில் உன் வீடுகள்
உன் மனைவியின் தலைமுடியைப் பார்!
மல்லிகைப் பூவை யாசித்து அழுகின்றது
இனியுன் உடைகளுக்கு நிறமில்லை
இனியுன் பூமியில்......
மழை நீர் பிரசவிக்கும் மண்வாசமுமில்லை!
கொதிக்கும் புவித்தரைகளில்
புழுவென நெளிவாய் நீ!!!

பசுமையைத் தின்ற பூமியிலும்
ஜனங்களைத் தொலைத்த நகரங்களிலும்
எங்கு தேடப் போகிறாய் "அழகை"
மழைத்துளியால் கூடப்,
புறக்கணிக்கப்பட்டவனே! – நீ
ஒரு வினாவிற்கு மட்டும் விடை (அறிவாய்) அறியப்போகிறாய்!
"டைனோசரும் இப்படித்தான்
இறந்திருக்கும் என்று"
எந்திர உலகைப்படைக்கும் அவசரத்தில் - நீ!
இறைவனிடம் யாசிப்பது.........?
மரணம்..... வரம்!!!

**ஜெ ஜனாத்தகன்,**
**2011 கலைப்பிரிவு.**



# MALLAVI CENTRAL COLLEGE

**M** – Marvelous

**A** – Assiduous

**L** – Literacy

**L** – Legitimate

**A** – Aesthetic

**V** – Victory

**I** – Innovative

**C** –Creativity

**E** – Egalitarian

**N** – Novel

**T** – Talented

**R** – Respect

**A** – Absorbing

**L** – Lively

**C** – Communication

**O** – Obedient

**L** – Loyalty

**L** – Leadership

**E** – Enthusiasm

**G** – Gratitude

**E** – Encouragement

**S. Tharanginy (Dip.in.Teach.),**
**Mallavi Central College.**

# வாழ்க எம் கல்லூரித்தாய்

ஈழமணித் திருநாடாம் இலங்கை நாட்டின்
முத்தாக விளங்கும் முல்லை மாவட்ட
மாண்பு மிகு மல்லாவி நகர் தனிலே
தடம் பதித்து உயர்ந்து நிற்கின்றாள்
எம் மல்லாவி மத்திய கல்லூரி

அகவை ஐம்பது எம் அன்னைக்கு இன்று
அவள் ஆற்றிய பணிகள் அதனிலும் பல்மடங்கு
எழில் மிகு வனப்புடன் கம்பீரமாய் நின்று
எம் கல்விப்பசி தீர்க்கின்றாள் இன்று
எத்தனை எத்தனையோ புத்தி ஜீவிகளை
எண்ணுதற்கு அரிய கல்வி மான்களை
உருவாக்கி பெருமிதமடைகின்றாள்.

பத்து மாதம் தான் அன்னை சுமக்கின்றாள்
பதின்மூன்று வருடங்களாய் கல்லூரித்தாய் வளர்க்கின்றாள்
எங்கள் ஒவ்வொரு சாதனையிலும் அன்னையிவள் பெருமிதம்
எங்களிற்குள் ஊட்டிடும் மிகுந்த உற்சாகம்.

நம்பிக்கை ஒளி ஊட்டி நல்வழி காட்டி
பல்கழைக்கழகம் செல்ல பாதை வகுத்துத்தரும்
வல்ல பல ஆசான்களை தன்னகத்தே கொண்டு
நல்லதொரு பிரஜைகளாய் எமை ஆளாக்கி மகிழ்கிறாள்

இத்தனை நாள் படைத்திட்ட சாதனைகள்
இசுறு பாடசாலையாய் உயர்ந்து நிற்கும் எம் கல்லூரி
இனிவரும் காலங்களில் மென்மேலும்
இளமையுடன் சாதனை புரிந்திட வாழ்த்தகிறேன்

பொன் விழாக் காணும் எம் கல்லூரித் தாயே!
பொன்னான உன் சேவை இனிதே தொடர்ந்திட....
உந்தன் மழலை நான் இறையருள் வேண்டுகின்றேன்
வாழ்க வாழ்கவென என்றென்றும் வாழ்த்துகிறேன்.

**மிதுஷா புஸ்பராஜா,**
**தரம் 12 (2018),**
**உயிரியல் பிரிவு.**



# பாடசாலையும் சமூகமும்

பல்வேறுபட்ட ஆளுமைகளைக் கொண்ட ஆன்மீகத் துடிப்புள்ள ஒரு சமூகமையமாக விளங்குவது பாடசாலை. பாடசாலையின் முக்கிய வளம் சமூகமாகும். இச்சமூகமானது பெற்றோர்களை, நலன் விரும்பிகளை, தொண்டர் நிறுவனங்களை, ஆசிரியர்களை, மாணவர்களை உள்ளடக்கி நிற்கின்றது.

சமூகத்தினதும், பாடசாலையினதும் உறவுமுறை சமூகத்தினது விருத்திக்கும், பாடசாலையின் விருத்திக்கும் அவசியமாகின்றது. இவ்விரு நிறுவனங்களும் ஒன்றுக்கொன்று ஒவ்வொரு செயற்பாட்டிலும் அவ்வவற்றின் நடவடிக்கைகளில் மாறிமாறிப் பங்குகொண்டு உறவாடும் போது சமூக உறவு மேலும் வளர்ச்சி அடைகின்றது.

பாடசாலையானது சமூக உறவின் முக்கிய களமாகும். இந்நிறுவன ஆதரவுகள் அக்களத்தில் பின்வரும் விதத்தில் விருத்தியாக்கும். பாடசாலைக் கல்வி விருத்திக்குரிய நிதித்தேவை சமூகம் பங்கு கொள்வதால் பூர்த்தியாக்கப்படும். கிராமப்புறப் பாடசாலைகளில் பெற்றோர் உதவிகள் அவற்றை விருத்தியாக்கும் கலைத்திட்ட செயற்பாடு ரீதியாக மாற்றியமைக்கப்படும். இணைபாடவிதானச் செயற்பாடுகளில் ஆசிரியர் மாணவர் மட்டுமன்றி பெற்றோர்களும் பங்குபற்றி தங்கள் பாடசாலை என்ற பொறுப்புணர்வை பெறுவார்.

ஒரு நாட்டிலோ அல்லது ஒரு குறிப்பிடப்பட்ட பிரதேசத்திலோ ஒன்றுகூடி வாழும் மக்கள், சமூகம் என்ற கணிப்பினைப் பெறுவர். இச்சமூகத்தின் மையம் பாடசாலையே ஆகும். சமூகங்கள் அனைத்தும் தமக்குரிய கட்டமைப்பு, செயன்முறை என்பவற்றைப் பேணுவதற்கு வேண்டிய வழிகாட்டலையும், ஊக்குவிப்புக்களையும் வழங்கக்கூடிய நிறுவனமாகப் பாடசாலைகள் பயன்படுகின்றன.

பாடசாலைகள் பல்வேறுபட்ட மொழி, கலாசாரம், நம்பிக்கை, பொருளாதாரத் தொடர்பு கொண்ட பலரையும் ஒருங்கிணைத்து அவர்கள் தத்தம் இலக்குகளையும், எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்ற உதவும் நிறுவனமாகவும் செயற்படுகின்றன. இன்று நாடுகளில் அரசாங்கம், தனியார்துறை என்பன போன்று எண்ணற்ற அரச சார்பற்ற நிறுவனங்களும் தோன்றி முனைப்பு அடைந்து வருகின்ற போதிலும் அனைத்தையும் ஒருங்கிணைத்து வழிகாட்டி, செயற்படுத்த வேண்டிய பொறுப்பும் பாடசாலைகளுக்கே உண்டு.

ஒரு சமூகத்தில் பல்வேறுபட்ட நிறுவனங்கள் காணப்படலாம். அவற்றுக்கெல்லாம் தலையாய சமூக நிறுவனமாக விளங்குவது பாடசாலையே ஆகும். பாடசாலை என்ற சமூக நிறுவனத்தின் வளர்ச்சியே அச்சமூகத்தின் ஏனைய நிறுவனங்களின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமெனில் அது மிகையல்ல. சிறந்த சமூக அமைப்பினுள் இருக்கும் பாடசாலை சிறந்த பாடசாலையாக விளங்கும். கல்வியைப் போற்றும், மதிக்கும் சமூகத்தில் பாடசாலைகள் தலைநிமிர்ந்து நிற்கும். அத்தகைய பாடசாலைகளினால் அச்சமூகம் தலை நிமர்ந்து நிற்கும்.

சகல சமூக மக்களும் சிறந்த அறிவாளிகளாகவும் நற்பிரஜைகளாகவும் திகழவேண்டும் என்பதில் அரசு அதிக அக்கறை காட்டி வருகின்றது. எமது நாட்டினைப் பொறுத்தவரையில் பத்தாயிரத்துக்கும் அதிகமான பாடசாலைகள் உளளன. இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான ஆசிரியர்கள் நாற்பது இலட்சத்துக்கும் அதிகமான மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக உள்ளனர். அது தவிர இலவசக் கல்வி, இலவச சீருடை, இலவச நூல்கள், இலவச மதிய உணவு எனப் பல்வேறு சலுகைகளும் அரசினால் வழங்கப்படுகின்றது. எனினும் மாணவர்களை அறிவாளிகளாகவும், நற்பிரஜைகளாகவும் ஆக்குவது பாடசாலைக்கும் சமூகத்திற்கிடையேயும் உள்ள தொடர்பிலேயே தங்கியுள்ளது. சமூகத்தின் நடவடிக்கைகளைப் பாடசாலையும், பாடசாலையின் நடவடிக்கைகளைச் சமூகமும் மிக உன்னிப்பாக அவதானித்து வருதல் இரு நிறுவனங்களினதும் வளர்ச்சிக்கு உறுதியான அடி அத்திவாரமாக அமையும்.

இன்று பெரும்பாலான பாடசாலைகளில் சமூகத்தின் பங்களிப்பு, தொடர்புகள், அவதானிப்புக்கள் குறைவடைந்து செல்வது கண்கூடு. நாட்டு யுத்தசூழல், இடப்பெயர்வுகள், உயிர், சொத்து இழப்புக்கள், வறுமை போன்ற காரணிகளினாலும், இது அரசாங்கப் பாடசாலை. இதனை கண்காணிப்பதும், வளர்ப்பதும் அரசின் கடமை என்ற தவறான சிந்தனைகளும் இதற்குக் காரணங்களாகக் கூறப்படலாம். எனினும் ஓர்

சமூகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் அச்சமூகத்தின் இளஞ் சந்ததியினரிடமே உள்ளது. அத்தகைய சந்ததியினரை நாட்டுக்கு ஏற்ற நற்பிரஜைகளாகவும், அறிவாளிகளாகவும் உருவாக்க எத்தகைய சூழ்நிலையிலும் சமூகம் பாடசாலைக்கும் பாடசாலை சமூகத்திற்கும் உறுதுணையாக நிற்றல் வேண்டும்.

பாடசாலைக்கும் சமூகத்திற்கும் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்த இலங்கை அரசும் பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. கிராம சமூக பாடசாலை உறவு முறையில் விருத்தியை ஏற்படுத்த 1979ம் ஆண்டில் கல்விச்சட்டக்குழு அறிக்கை முன்வைக்கப்பட்டது. சமூக சேவையில் மாணவர்களை ஈடுபடுத்துவதற்கு கல்வி அமைச்சு அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களை சமூக மயமாக்க வேண்டும் எனவும், சமூக அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறியது.

இதன் அடிப்படையில் 1979ம் ஆண்டு பெற்றோர் பட்டயம் வெளியிடப்பட்டது. பட்டயத்தின் முக்கிய உருவாக்கமே பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகும். 1981ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட வெள்ளை அறிக்கையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கததினூடாக சமூக உறவை மேலும் விருத்தியாக்க அரசாங்கம் எண்ணியது. 1984ம் ஆண்டு வெளியிடப்பட்ட பாடசாலை முகாமைத்துவக் குழு அறிக்கையின் பிரகாரம் பாடசாலை அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டது. இத்தகைய அமைப்புக்கள் சட்டரீதியாக சமூகமும் பாடசாலையும் இணையும் வாய்ப்பை ஏற்படுத்தி இருந்தன. எனினும் இவை அமைக்கப்பட்டதன் நோக்கம் நிறைவடைவது சமூகத்திற்கும் பாடசாலைக்குமிடையே உள்ள இடைத்தொடர்பினை பொறுத்தே ஆகும்.

கல்வியூடாக சமூகத்தில் மாற்றத்தைக் கண்ட கல்வி, அதனூடாகவே சமூக வளர்ச்சியினையும் காண்கின்றது. சமூக வளர்ச்சி என்ற நிறுவனத்தினைத் தான் கையளித்த அறிவினூடாகப் பகுப்பாய்வு செய்ய இடமளிக்கின்றது. பகுப்பாய்வு உண்மை நிலையை உணர்த்தும். அறிய வைக்கும். அவற்றினூடாக சமூக வளர்ச்சிக்குரிய செயற்பாட்டைச் செயற்படுத்தும். சமூக வளர்ச்சியை அறிவு ஏற்படுத்துகின்றது என்று கூறும்போது அறிவு சிந்திக்க வைக்கும். சிந்தனைக்கூடாக வளர்ச்சிப்படிகள் கட்டி எழுப்பப்படும்.

**திரு. க. சரவணபவன் (B.Sc, Dip.in.Edu),**
**ஆசிரியர்,**
**மல்லாவி மத்திய கல்லூரி.**

# காலநிலை மாற்றம்

**(Climate change)**

**அறிமுகம் (Introduction)**

மனித வாழ்க்கையின் ஒவ்வொரு விடயங்களும் காலநிலை காரணிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டதாகவே அமைகின்றன. மனிதனின் தோற்றம் ,நிறம், உடலமைப்பு, மொழி ,பண்பாடு, உணவு, உடை அவனது பொருளாதார நடவடிக்கைகள் , சமூக , அரசியல் நடவடிக்கைகள் என ஒவ்வொன்றிலும் வானிலை மூலக்கூறுகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. வானிலை மூலக்கூறுகளான மழை வீழ்ச்சி (Rain fall) வெப்பநிலை (Temparature) வளிமண்டல அமுக்கம் (Atmospheric pressure) ஈரப்பதன் (Humidity) காற்று (wind) சூரியக் கதிர் வீசல் (Solar radiation) ஆவியாக்கம் (Evaporation) ஆவியுயிர்ப்பு (Transpiration) போன்றன மனிதனின் அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதிகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

புவியில் மனிதன் மட்டுமன்றி ஏனைய உயிரினங்களினதும் இருப்பினைத் தீர்மானித்த முக்கியமான காரணிகளில் ஒன்றான காலநிலை மாற்றமடைந்து செல்வது அண்மைக்காலத்தில் உலக நாடுகளை விழிப்படைய வைத்துள்ளது.ஏனெனில் இதனுடைய விளைவுகள் மிகக் கடுமையாக இருக்கும் என எதிர்வு கூறப்படுவதனால் உலகின் பெரும்பாலான நாடுகள் அக்கறை காட்டி வருகின்றன. தீவிரவாதம், பயங்கரவாதத்திற்கு அடுத்து உலக நாடுகள் எல்லாம் அக்கறை காட்டி வருகின்றன. ஓரணியில் நின்று எதிர்க்கும் விடயமாக காலநிலை மாற்றம் அமைந்துள்ளது எனலாம்.

**காலநிலை மாற்றத்துக்கான வரைவிலக்கணம் (Definition for the Climate Change)**

காலநிலை மாற்றம் என்பது வானிலை மூலக் கூறுகளான மழை வீழ்ச்சி , வெப்பநிலை , ஈரப்பதன் ,அமுக்கம் , காற்று, ஆவியாக்கம் , ஆவியுயீர்ப்பு , சூரியக் கதிர் வீசல் என்பனவற்றில் ஏற்படுகின்ற நீண்டகாலமாற்றம் காலநிலை மாற்றம் ஆகும். இவற்றின் குறுகிய கால மாற்றம் வானிலை மாற்றம் ஆகும். காலநிலை மாற்றத்துக்கு நீண்டகாலம் எடுக்கும். ஒரு பிரதேசத்தில் காலநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளதா? என்பதனை அறிவதற்கு ஆகக்குறைந்தது 30 ஆண்டு காலத் தரவுகள் அவசியம். ஏனெனில் 30 ஆண்டு காலமாகப் பெறப்பட்ட வானிலைத்தரவுகளை ஆராய்வு செய்வதன் மூலமே காலநிலை மாற்றத்தினையோ,காலநிலைப்போக்குகளையோ அறிந்து கொள்ள முடியும்.

புவி தோன்றிய காலத்திலிருந்தே காலநிலை மாற்றம் ஏற்பட்டு வந்துள்ளது. புவிச்சரித காலங்களில் மிகப்பழைய காலமாகிய பிறிக்கேம்பிறியன் (Precamprian) காலத்திலிருந்து அதன் பின் வந்த ஒவ்வொரு காலப்பகுதிகளிலும் காலநிலை மாற்றம் ஏற்பட்டு வந்துள்ளதைப் பனிப்பாறைகளை துளையிட்டு ஆய்வு செய்ததன் மூலமாகவும், காபன் தரவுமுறை மூலமும் (Carbon Dating)அறியப்பட்டுள்ளது. எனவே காலநிலை மாற்றம் என்பது புவிதோன்றிய காலத்திலிருந்தே ஏற்பட்டு வந்துள்ளது.

ஆனால் இக்காலநிலை மாற்றங்கள் ஒவ்வொன்றுக்கும் முன்பு எடுத்துக் கொண்ட காலம் என்பது நீண்டதாகக் காணப்பட்டது.புவியின் வரலாற்றில் ஒவ்வொரு காலநிலை மாற்றத்துக்கும் ஆயிரக்கணக்கான வருடங்கள் எடுத்துள்ளது.

# எமது கல்லூரியின் விளையாட்டுக் குழுக்கள்.



கரம் அணி 15 வயதின் கீழ் ஆண்கள்



பூப்பந்தாட்ட அணி 19 வயதின் கீழ் ஆண்கள்



சதுரங்க அணி 15 வயதின் கீழ் ஆண்கள்



சதுரங்க அணி 19 வயதின் கீழ் ஆண்கள்

# எமது கல்லூரியின் விளையாட்டுக் குழுக்கள்.



எல்லே அணி 19 வயதின் கீழ் ஆண்கள்



கரப்பந்தாட்ட அணி 15 வயதின் கீழ் ஆண்கள்



கரப்பந்தாட்ட அணி 17 வயதின் கீழ் ஆண்கள்



கரப்பந்தாட்ட அணி 19 வயதின் கீழ் ஆண்கள்



கரப்பந்தாட்ட அணி 17 வயதின் கீழ் பெண்கள்



மாகாணமட்டப் போட்டியில் பங்குபற்றிய மெய்வன்மை அணி



கிரீடாசக்தி நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தெரிவான மாணவர்கள்



மாகாணவிளையாட்டுப் பயிற்சி பட்டறையின்போது

ஆனால் அண்மைக்காலத்தில் காலநிலை மாற்றங்களுக்கு மிகக்குறுகிய காலமே எடுத்துள்ளது, எடுத்துவருகின்றது. சாதாரணமாக புவியின் வரலாற்றில்,புவியின் சராசரி வெப்பநிலை 01பாகை செல்சியஸ் அதிகரிக்க கிட்டத்தட்ட 900 வருடங்கள் எடுத்துள்ளது.தற்போது 01பாகை செல்சியஸ் அதிகரிக்க வெறுமனே 40 ஆண்டுகள் எடுக்கின்றது. இது வழமையான ஒன்று அல்ல. புவியின் காலநிலை வரலாற்றில் அசாதாரணமானது.இந்நிலை தொடருமானால் புவியின் அதிகரித்த வெப்பநிலை காரணமாக உயிரின இருப்பு என்பது கேள்விக்குறியாக மாறிவிடும். இது போலவே காலநிலையின் ஒவ்வொரு கூறுகளும் மாற்றமடைந்து புவியின் காலநிலையின் சமநிலையைக் குழப்பிவிடும். இதனால் காலநிலை மாற்றம் என்பது புவியில் உயிரின வாழ்வை அச்சுறுத்தும் ஒரு முக்கியமான விடயமாக மாறியுள்ளது.

**காலநிலை மாற்றக் காரணிகள்( Climate Change factors)**

காலநிலை மாற்றத்தினைப் பௌதீக, சமூக, பொருளாதார, அரசியல் காரணிகள் எனப் பல்வேறு காரணிகள் தூண்டியுள்ளன. அந்தவகையில் பின்வரும் காரணிகள் முக்கியத்துவம் பெற்றனவாகக் காணப்படுகின்றன.

**1.பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரிப்பு. (Increasing of green house gases)**

பச்சை வீட்டு வாயுக்களான (Green House Gases) காபனீரொட்சைட் ($CO_2$), மெதன் ($CH_4$) கந்தகவீரொட்சைட(NH4), நீராவி(H2O) போன்றவற்றின் அதிகரிப்பே காலநிலை மாற்றத்துக்கான பிரதான காரணியாகக் காணப்படுகின்றது. 1750இல் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சியை அடுத்து இவ்வாயுக்களின் வெளியீடு அதிகமானதாகக் காணப்படுகின்றது. பச்சை வீட்டு வாயுக்கள் கைத்தொழில் புரட்சிக்குப் பின்னரே அதிக அளவில் அதிகரித்துள்ளன. இதனைப் பின்வரும் அட்டவணை குறிப்பிடுகின்றது.

| வாயு | கைத்தொழில்புரட்சிக்குமுன் | கைத்தொழில்புரட்சிக்குப்பின் | அதிகரிப்பு 1750-இன்றுவரை |
|---|---|---|---|
| காபனீரொட்சைட் | 280 ppm | 387 ppm | 104 ppm |
| மெதென் | 700 ppb | 1745 ppb | 1045 ppb |
| கந்தகவீரொட்சைட் | 270 ppb | 314 ppb | 44 ppb |
| ,ளோரோபுளோரோகாபன் | 0 | 533 ppt | 533 ppt |

Ppm - parts per million

Ppb - parts per billion

Ppt - parts per trillion

வீட்டு வாயுக்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு துறைகளும் வேறுபட்ட அளவில் பச்சை வீட்டு வாயுக்களை வெளியிடுகின்றன. அந்த வகையில் ஒவ்வொரு துறைசார்ந்த ரீதியிலும் வெளியேற்றப்படும்பச்சை வீட்டு வாயுக்களின் அளவினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| துறைகள் (Sectors) | வீதம் (%) |
|---|---|

| | |
|---|---|
| கைத்தொழில் நடவடிக்கைகள் (Industrial process) | 16.8% |
| வலுநிலையங்கள் (power stations) | 21.3% |
| போக்குவரத்து எரிபொருள் (Transport Fuel) | 14.0% |
| விவசாய உற்பத்தி (Agriculture Products) | 12.5% |
| உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் தரப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் (fossile fuel retrivel processing and distribution) | 11.3% |
| நிலப்பயன்பாடு மற்றும் உயர்த்திணிவு எரிவு (land use and biomass burning) | 10.0% |
| கழிவகற்றல் நடவடிக்கை (waste disposal treatment) | 3.4% |
| வதிவிட வர்த்தக மற்றும் ஏனைய மூலங்கள் (Residential commercial and other sources) | 10.3% |

ஒவ்வொரு துறை சார்ந்த ரீதியாகவும் பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றம் இவ்வாறு காணப்பட நாடுகளைப் பொறுத்த வரையில் விருத்தியடைந்த விருத்தியடைந்துவரும். நாடுகளிற்கிடையில் அவை வெளியிடுகின்ற பச்சை வீட்டு வாயுக்களின் அளவில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

1995ம் ஆண்டு பச்சைவீட்டு வாயுக்களைப் பொறுத்தவரை, அபிவிருத்தியடைந்த நாடுகள் 73% மும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் 27% மும் வெளியிட்டுள்ளன விருத்தியடைந்த நாடுகள் அமெரிக்கா 23% மும், விருத்தியடைந்து வரும் நாடுகளில் சீனா 14% மும் வெளியிட்டுள்ளன. ஆனால் 2025இல் ஆண்டில் விருத்தியடைந்த நாடுகள் 50% மும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் 50% மும் வெளியிடும் எனவும் இதில் அமெரிக்கா 17% மும், சீனா 15% மும் வெளியிடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

பச்சை வீட்டு வாயுக்கள் வெளியேற்றத்துக்கான காரணிகளாக.

- உயிர்ச் சுவட்டு எரிபொருட்களின் பாவனை
- உரப்பாவனை
- காடழிப்பு
- அலுமினிய, சீமெந்து தயாரிப்பு
- கழிவகற்றல் நடவடிக்கை
- கால்நடை வளர்ப்பு
- தொழிற்சாலைக் கழிவுகள்

போன்றன காணப்படுகின்றன. இப் பச்சைவீட்டு வாயுக்களின் அதிகரித்த வெளியேற்றமானது வளிமண்டலத்தின் பச்சைவீட்டு வாயுக்களின் அளவை அதிகரித்து விடுகின்றன. பச்சை வீட்டு வாயுக்கள் வெப்பத்தை உறிஞ்சி வைத்திருக்கும் ஆற்றல் மிக்கவையாகக் காணப்படுகின்றன. இதனால் வாயுக்கள் அதிகரிக்க அதிகரிக்க அவை உறிஞ்சி வைத்திருக்கும் வெப்பத்தின் அளவும் அதிகரிக்கின்றது. இது வளிமண்டல

வெப்பநிலையின் அதிகரிப்புக்கு அடிப்படையாக அமைகின்றது. வளிமண்டல வெப்பநிலை அதிகரிப்பு புவியின் வெப்பநிலை அதிகரிப்பையும் காலநிலை மாற்றத்தையும் ஏற்படுத்துகின்றது. எனவே காலநிலை மாற்றத்துக்கான பிரதான காரணியாக பச்சைவீட்டு வாயுக்களின் அதிகரிப்பினைக் குறிப்பிடலாம்.

02. எரிமலை வெடிப்பு **(Volcanic eruption)**

காலநிலை மாற்றத்துக்கான இன்னொரு காரணியாக எரிமலை வெடிப்பினைக் குறிப்பிடலாம். எரிமலை வெடிப்பின் போது நைதரசன், காபனீரொட்சைட், கந்தகவீரொட்சைட் என்பன வெளியிடப்படுகின்றன. எரிமலை வெடிப்பின் போது வெளிவிடப்படும் மேற்படி பச்சை வீட்டு வாயுக்கள் வளிமண்டல வாயுக்களின் கூட்டில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன. இது காலநிலை மாற்றத்தினைத் தூண்டுகின்றது. எரிமலை வெடிப்பின் போது உடனடியாகவே எரிமலை வெடித்த பிரதேசத்தின் வானிலை நிலைமைகள் மாற்றமடைகின்றன. உதாரணமாக 1912ம் ஆண்டு நொவருப்டா (Novarupta) எரிமலை வெடித்த போதும், 1991ல் மௌன்ற் பினருபா (mount pinatuba) எரிமலை வெடிப்பின் போதும் அப்பிரதேச வானிலை நிலைமைகள் மாற்றமடைந்தன. எரிமலை வெடிப்பு ஏற்பட்டு 6 மணித்தியாலங்கள் வரை வெப்பநிலை மிகஉயர்வாகக் காணப்பட்டதுடன், பின்னர் 13நாட்கள் தொடர்ச்சியான கனமழை கிடைத்தது. இதன்பின்னர் இப்பிரதேசங்களின் சராசரி வெப்பநிலையில் 1.4°Cஅதிகரிப்பு அறியப்பட்டது.

03. மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிப்பு **(Increasing the surface temperature)**

காலநிலை மாற்றத்துக்கான இன்னொரு பிரதான காரணியாக சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிப்பினைக் குறிப்பிடலாம். 1925ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது உலகின் பல சமுத்திரங்களின் மேற்பரப்பு வெப்பநிலை மாற்றமடைந்து வருகின்றது. அத்திலாந்திக் சமுத்திரத்தின் மேற்பரப்பு வெப்பநிலை 1.4°C இனாலும், இந்து சமுத்திரத்தின் மேற்பரப்பு வெப்பநிலை 1.3°C இனாலும், பசுபிக் சமுத்திரத்தின் மேற்பரப்பு வெப்பநிலை 1.25°C இனாலும் அதிகரித்துள்ளதாக அறியப்பட்டுள்ளது. இத்தகைய சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலை மாற்றம் காரணமாக

1. சமுத்திர நீரோட்டங்களில் மாற்றம் ஏற்படலாம் குறிப்பாக இவற்றின் நகர்ச்சித் திசை, வெப்ப, குளிர் நீரோட்ட மாற்றம் ஏற்படலாம்.
2. சமுத்திர வெப்பநிலை அதிகரிப்பதனால் அவற்றின் அடர்த்தி அதிகரிக்கும்.
3. அதிகரிக்கும் வெப்பம் காரணமாக ஆவியாக்கம் அதிகளவில் ஏற்பட்டு சமுத்திரங்களின் உவர்ச் செறிவு அதிகரிக்கும்.
4. அதிகரித்துள்ள சமுத்திர மேற்பரப்பு வெப்பம் காரணமாக, சமுத்திர உயிர்ச் சூழலில் மாற்றங்கள் ஏற்படலாம்.
5. ஓரிடக் காற்றுக்களில் மாற்றங்கள் ஏற்படலாம். குறிப்பாக ஓரிடக் காற்றுக்களில் முக்கியமானவையான, கடல், தரைக் காற்றுக்களின் செயற்பாட்டிற்கும், நகர்ச்சிக்கும் அடிப்படைக் காரணியான வெப்பநிலை வேறுபாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டு கடற்தரைக் காற்றுக்களில் மாற்றம் ஏற்படும்.

04.சூரியக் கதிர் வீசலில் காணப்படுகின்ற வேறுபாடுகள் **(Variations in the Solar Radiation)**

காலநிலை மாற்றத்துக்கான இன்னொரு பிரதான காரணியாகக் காணப்படுவது சூரியக் கதிர் வீசலில் காணப்படுகின்ற வேறுபாடாகும். புவியின் ஒரேயொரு சக்தி மூலாதாரம் சூரியன் ஆகும். சூரியனில் இருந்து பூமிக்கு

1. Infrared (அகச்சிவப்புக் கதிர்கள்)
2. Ultraviolet (புற ஊதாக் கதிர்கள்)
3. Visible (கட்புலனாகும் கதிர்கள்)

என 03 வகையான கதிர் வீச்சுக்கள் இடம்பெறுகின்றன.

இதில் அகச் சிவப்புக்கதிர்களையும், புற ஊதாக் கதிர்களையும், பூமி பெறும் அளவு மிகக் குறைவாகும். இவை பூமிக்கு அதிக அளவில் வந்தால் பூமியின் வெப்பம் பல மடங்கு அதிகரிக்கும். இவற்றைத் தடுத்து வரவிடாது செய்வதில் ஒசோன்படை (Ozone layer) முக்கியமானது. ஒசோன்படையில் ஏற்பட்டுள்ள துளை காரணமாக இவை சிறியளவில் பூமிக்கு வருகின்றன. இதனால் பூமியின், பெற்ற வெயிலில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பூமிக்கு சூரியக் கதிர் வீச்சு வரும் போது

1. உறிஞ்சல்
2. சிதறல்
3. தெறித்தல்

என்ற மூன்று வகையான செய்ற்பாட்டிற்கு உள்ளாகின்றது. பூமி தனக்குத் தேவையான அளவை எடுத்துக் கொண்டு மிகுதியை வெளிக்குத் திருப்பி அனுப்புகின்றது. ஆனால் சூரியனில இருந்து பூமிக்குள் வரும் குற்றலைக் கதிர்வீச்சின் ஒரு பகுதியும் அகச்சிவப்புக்கதிர்கள, புற ஊதாக்கதிர்களும் பூமியை விட்டு வெளியேறாமல் (புவியின் எல்லையை) இருந்து புவியை வெப்பமூட்டுகின்றன. இதனை விட புவியின் சில பொருட்கள் குறிப்பாக ..துருவப் பகுதியில் உள்ள பனிக் கட்டிகள்; இப்புற ஊதாக் கதிர்களையும், அகச் சிவப்புக் கதிர்களையும் சிறிய அளவில் உறிஞ்சி வைத்துள்ளன. அகச் சிவப்புக் கதிர்களை உறிஞ்சி வைத்திருக்கும் சில பொருட்கள் தமது தேவைக்கு மேலதிகமான வகையில் அதிக அளவான வெப்பநிலையைத் தம்முள் உறிஞ்சி வைத்து இருப்பதனால் புவியின் வெப்பநிலை அதிகரித்து காலநிலை மாற்றம் ஏற்படுகின்றது.

05.எல்நினோ **(El-Nino)**லாநினோ **(La-Nino):**

காலநிலை மாற்றத்தை ஏற்படுத்துகின்ற இன்னொரு காரணியாக எல்நினோ (El-nino)லாநினோ (La-nino) செயற்பாடுகளையும் குறிப்பிடலாம். எல்நினோ என்பது சமுத்திரப் பகுதிகளிலும், கண்டப் பகுதிகளிலும் ஏற்படுகின்ற வழமைக்கு மாறான வெப்பநிலை அதிகரிப்பையும், லாநினோ என்பது கண்டப்பகுதிகளிலும், சமுத்திரப் பகுதிகளிலும் ஏற்படுகின்ற வழமைக்கு மாறான குளிரையும் குறிக்கும். இத்தகைய சடுதியான வெப்ப குளிர் மாற்றங்கள் காலநிலை மாற்றத்தினைத் தூண்டுகின்றன எனக் கூறப்படுகின்றது.

06. காடழிப்பு ( **Deforestation**)

காலநிலை மாற்றத்திற்கான இன்னொரு பிரதான காரணி காடழிப்பாகும். தாவரங்கள் புவியின் வெப்பநிலையைச் சமநிலையில் பேணுவதில் முதன்மை வகிக்கின்றன. இவை காபனீரொட்சைட்டினை உள்ளெடுத்து ஒட்சிசனை வெளியிட்டு வளிமண்டல வாயுக்களின் கூட்டுச் சராசரி நிலையைப் பேணுவதிலும், வெப்பநிலையை ஒரு கட்டுப்பாட்டில் வைத்திருப்பதிலும் முதன்மை வகிக்கின்றன. 1950ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2008ம் ஆண்டு உலகக் காடுகளில் 39% மானவையும், அயனமண்டலக் காடுகளில் 60% மானவையும் அழிந்துள்ளதாக UNEP தெரிவித்துள்ளது. "உலகின் நுரையீரல்" என வர்ணிக்கப்படும் அமேசன் காடுகள் 2000ம் ஆண்டிலிருந்து 2008ம் ஆண்டுக்கிடைப்பட்ட 8 ஆண்டுகளில் 4% அழிக்கப்பட்டுள்ளன. இத்தகைய காடழிப்புச் செயற்பாடுகள் புவியின் பசுமைப் போர்வை (Green cover) இனைக் குறைப்பதுடன் புவி வெப்பமடைதல் (Global warming) செயற்பாட்டிற்கும் அடிப்படையாக உள்ளன.

6. உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் பாவனை ( **Usage the Fossile fuels**)

உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் பாவனையும் காலநிலை மாற்றத்தினைத் தூண்டுகின்றது. உயிர்ச்சுவட்டு எரிபொருட்களான பெற்றோலியம், நிலக்கரி, இயற்கை வாயு என்பனவற்றின் எரிதலின் போது காபனீரொட்சைட்டும் மெதேனும் வெளிவிடப்படுகின்றது. இவ் வாயுக்கள் வளிமண்டல வெப்பநிலையை அதிகரித்து, புவி வெப்பமடைதலை ஊக்குவிக்கின்றன. இவற்றை விட கால்நடை வளர்ப்பு, சீமெந்து தயாரிப்பு, தொழிற்சாலைக் கழிவுகளின் தன்னிச்சையான வெளியேற்றம், நைதரசன், அணுகுண்டுப் பரிசோதனைகள், விண்வெளி விபத்துக்கள் போன்றனவும் காலநிலை மாற்றத்தினைத் தூண்டியுள்ளன. கால் நடைவளர்ப்பின் காரணமாக 18% மான பச்சை வீட்டு வாயுக்கள் (மெதேன், நைதரசன் ஒக்சைட்) வெளியிடப்படுவதாக ஐ.நா. சுற்றுச் சூழல் அமைப்புக் குறிப்பிடுகின்றது. மேற்படிக் காரணிகள் காலநிலை மாற்றத்தினை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஊக்குவிக்கின்றன எனலாம்

காலநிலை மாற்றப் பாதிப்புக்கள் ( **Impacts of the Climate change**)

உலகில் ஏற்படுகின்ற காலநிலை மாற்றம் காரணமாகப் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இப் பாதிப்புக்கள் சிலவற்றை தற்போது உலகம் உணர்ந்துள்ளது. சிலவற்றை உணரவுள்ளது. இப்பாதிப்புக்கள் அதிகரிக்கும் பட்சத்தில் இப் பூமியில் மனிதனின் வாழ்க்கை கேள்விக்குரியதாகிவிடும். இக்காலநிலை மாற்றப் பாதிப்புக்களை பின்வரும் மூன்று பிரதான வகைகளினூடாகப் பார்க்கலாம்.

1. பௌதிக ரீதியான பாதிப்புக்கள்.
2. பொருளாதாரப் பாதிப்புக்கள்.
3. சமூகப் பாதிப்புக்கள் எனப் பிரிக்கலாம்.

பௌதிக ரீதியான பாதிப்புக்கள் **(Physical Impacts)**

1. வெப்பநிலை உயர்வடைதல் :- காலநிலை மாற்றத்தினால் ஏற்படுகின்ற மிக முக்கியமான பாதிப்பாக வெப்பநிலை உயர்வினைக் கருதலாம். 1950ம் ஆண்டுடன் ஒப்பிட்டால் 2008ம் ஆண்டு உலகின்

வெப்பநிலை 2.1°C இனால் அதிகரித்துள்ளதாக ஐ.பி.சி.சி குறிப்பிடுகின்றது. 1975 உடன் ஒப்பிடும்போது 1.6°C அதிகரித்துள்ளது. ஆசியாவின் வெப்பநிலை 2040ம் ஆண்டு 3.4°C இனாலும், 2100ம் ஆண்டு 5.3°C இனாலும் அதிகரிக்குமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. பூமியின் வெப்பநிலை 1950 உடன் ஒப்பிடும்போது 2.1°C இனால் அதிகரித்ததென்பது சாதாரண விடயமல்ல. ஏனெனில் புவியின் வரலாற்றில், அதன் வெப்பநிலை 1°C இனால் அதிகரிக்க கிட்டத்தட்ட 1000 வருடங்கள் எடுத்துள்ளது. ஆனால் தற்போது 58 ஆண்டுகளில் 2.1°C இனால் அதிகரித்துள்ளது. இவ்வாறு வெப்பநிலை அதிகரித்துக் கொண்டு சென்றால் மனிதனின் வாழ்க்கையினைத் தீர்மானிக்கும் பொருத்தமான காலநிலை (Comfort Climate) என்பது மாறிவிடும். மனிதனுக்கு இது பல அசௌகரியங்களை வழங்கும். மனிதன் வெளியில் நடமாட முடியாத சூழ்நிலை ஏற்படும். விவசாய நடவடிக்கைகளும், கடற்றொழில், விலங்கு வளர்ப்பு என்பனவும் பாதிக்கப்படும்.


2. கடல் நீர் மட்ட உயர்வு :- காலநிலை மாற்றத்தினால் கடல்மட்ட உயர்வு ஏற்படும். அதிகரிக்கும் வெப்பநிலையினாலும் துருவப் பனிக்கட்டி உருவாகுவதனாலும், பனிச்சிகரங்கள் உருவாகுவதனாலும், சில குளிர்ந்த சமுத்திரங்கள் வெப்பமடைந்து நீர் விரிவடைவதாலும், கடல் மட்ட உயர்வு ஏற்படும். உலகின் பல கோடி மக்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள். உலகின் 10 கோடி மக்களுக்கு மேற்பட்டவர்கள் கடல்மட்டத்தில் இருந்து 3 அடி உயரத்திற்குள்ளேயே வாழுகின்றனர். உலகின் கடல் மட்டம்.


01. கடல் மட்டம் ஒருஅடி உயர்ந்தால் உலகின் 03 கோடி மக்களும்.
02. கடல் மட்டம் இரண்டடி உயர்ந்தால் 07 கோடி மக்களும்.
03. கடல் மட்டம் மூன்றடி உயர்ந்தால் 10 கோடி மக்களும்

பாதிக்கப்படுவார்கள். இதனை விட பல தீவுகள் நீரினுள் மூழ்கிவிடும் ஏனெனில் உலகின் பல தீவுகள் கடல் மட்டத்திலிருந்து மிகக் குறைந்த உயரத்திலேயே அமைந்துள்ளன. உதாரணமாக மாலைதீவு 8 அடி உயரத்திலும், துவாளு தீவு 16 அடி உயரத்திலும் அமைந்துள்ளன. எனவே கடல் நீர்மட்ட உயர்வு உலகின் கடற்கரைப் பிரதேசங்கள் பலவற்றை விழுங்குவதுடன், பல தீவுகளையும் மூழ்கச் செய்துவிடும். பல கோடி மக்கள் இடம் பெயரவோ இறக்கவோ நேரிடும். 1900ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2009ம் ஆண்டு ஜனவரி மாதம் உலகின் கடல் நீர்மட்டம் 0.9 அடியால் உயர்ந்துள்ளது

3. பனிப்படிவுகளும், பனிச் சிகரங்களும் உருகுதல் :- காலநிலை மாற்றம் காரணமாக வெப்பநிலை அதிகரிப்பதனால் பனிப்பகுதிகள் உருகும். சில பகுதிகள் தற்போது உருகி வருகின்றன. உலகின் வெப்பநிலை அதிகரிப்புக்கு மிகச் சிறந்த சான்றாக 2002ம் ஆண்டிலிருந்து லார்சன் (Larson) பனி அடுக்கு உருகிவருவதனையும், 1978ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆட்டிக் பனிப்படலங்களில் 9% மானவை உருகிவிட்டதாகக் கூறப்படுகின்றது. இதனை விட ஆபிரிக்காவிலுள்ள கிளிமஞ்சாரோ மலை இன்னும் 15 ஆண்டுகளில் அழிந்துவிடும் எனவும், இன்னும் 25 ஆண்டுகளில் இமயமலையின் எவரெஸ்ட் சிகரம் 2.54 அடி குறையும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. இவ்வாறு பனிப் பகுதிகள் உருகினால் உலகின் கடல்மட்ட உயர்வு இன்னும் அதிகரிக்கும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கடல் மட்ட உயர்வால் நீரில் மூழ்கிய “துவாளு” தீவின் ஒரு நகரம் - 1990 ம் ஆண்டும், 2008 ம் ஆண்டும்.





4. வரட்சி, வெள்ளப்பெருக்கு ஏற்படும்:- அதிகரித்து வருகின்ற வெப்பநிலை காரணமாகப் பல பகுதிகள் வரட்சியால் பாதிக்கப்படக்கூடும். உலகின் பலபகுதிகளில் வரட்சி காரணமாகக் குடிநீர்ப் பிரச்சினை ஏற்படும். ஐ.பி.சி.சி ன் அறிக்கைப்படி 2050ம் ஆண்டு உலகின் பாலைவனங்கள் 0.7% இனால் அதிகரிக்கும் எனக் கூறப்படுகின்றது. ஆபிரிக்காவின் சாகேல் பிரதேசத்தில் பாலைபரவுதல் (Disertification) இதற்கு மிகச்சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம். அதிகரித்து வரும் மண் வெப்பநிலையும், வளி வெப்பநிலையும்

பல பகுதிகளின் தாவரப் போர்வையை நீக்கி பாலை பரவுதலை ஊக்குவிக்கும். இதனைவிட அதிகரிக்கும் பனிப்பகுதிகளின் உருகுதல் செயற்பாட்டினால், ஆறுகள், குளங்கள், ஏரிகள் என்பவற்றினது நீர்மட்டம் அதிகரிப்பதுடன் கனமழைப் பொழிவு காரணமாகவும், வெள்ளப்பெருக்குகளும் ஏற்படலாம்.

5. பவளப்பாறைகள் அழிவடைதல்:- சமுத்திரங்களின் வெப்பநிலை மாற்றத்தினாலும், வளிமண்டல வெப்பநிலை மாற்றத்தினாலும், பவளப்பாறைகள் பாதிக்கப்படும், வெளிறல் நோய் ஏற்பட்டு இவை அழிவடையலாம். கடல் நீரின் வெப்பநிலை 3°C அதிகரித்தால் ஆசியாவின் 88% மான பவளப்பாறைகள் அழிவடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

6. சீரற்ற வானிலை நிலைம்மைகள் ஏற்படல்:- காலநிலை மாற்றம் காரணமாக வானிலை நிலைமைகள் மாற்றமடையலாம். வானிலை நிலைமைகள் அடிக்கடி மாற்றமடையும், பருவ காலங்களில் வேறுபாடுகள் தோன்றும், பருவகாலங்களின் கால அளவுகளிலும் மாற்றங்கள் ஏற்படும். மாரிப்பருவங்கள் வரட்சியானதாகவும், கோடைப்பருவங்களில் கனமழையும் இடம் பெறலாம். இதனால் பருவகாலங்களை வரையறை செய்வது கடினமாக மாறிவிடும். வானிலை மூலக்கூறுகளின் தன்மைகள் அடிக்கடி மாற்றமடைவதால் ஒரு தெளிவான வானிலைப் பிரிப்பு காணப்படாது. இதனை விட, காட்டுத்தீ, புயல், சூறாவளி என்பனவும் ஏற்படும். இவ்வாறு காலநிலை மாற்றத்தினுடைய பௌதிகப் பாதிப்புக்கள் காணப்படுகின்றன.

## பொருளாதாரப் பாதிப்புக்கள் (Economical Impact)

காலநிலை மாற்றத்தின் விளைவாக பொருளாதாரப் பரதிப்புக்களும் ஏற்படும். அந்த வகையில் பின்வரும் பொருளாதாரப் பாதிப்புக்களைக் குறிப்பிடலாம்.

1. விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படல் :-

வானிலை நிலைமைகள் அடிக்கடி மாற்றமடைவதனாலும், எதிர்பராத காலநிலை அனர்த்தங்களாலும் (வெள்ளம், வரட்சி, புயல், சூறாவளி) என்பனவற்றாலும் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படலாம். சில பயிர்கள் உத்தம வெப்பநிலை (Optimun Tempareture) உத்தம மழைவீழ்ச்சி. (Optimum Rainfall) என்பவற்றிலேயே வளரும் தன்மை கொண்டுள்ளன.இப்பயிர்கள் காலநிலை மாற்றத்தின் விளைவினால் பயிரிட முடியாது போகும். இதனால் விவசாய உணவுப் பொருட்கள் குறிப்பாக உணவுத் தானியங்கள், பழங்கள், மரக்கறிகள் என்பவற்றிற்குத தட்டுப்பாடு ஏற்படலாம்.

2. கடல் உணவுத்தட்டுப்பாடு :-

சமுத்திர நீரின்வெப்பநிலை அதிகரிப்பினாலும், பவளப்பாறைகள் அழிவதனாலும், சமுத்திரச்சூழல் மாற்றமடையலாம். இதனால் உணவு வலையிலும் உணவுச்சங்கிலியிலும் மாற்றங்கள் ஏற்படும். இதனால் சில கடல் வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படும்.எனவே கடல் உணவுகளைப் பெறமுடியாது போகும்.

3. கால்நடை வளர்ப்பு பாதிக்கப்படும் :-

கால்நடைகளுக்குத் தேவையான உணவுப்பொருட்கள் (புல் போன்றன) அழிவடைவதால் கால்நடை வளர்ப்பு பாதிக்கப்படும். இதனால் விலங்கு உணவுப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படக்கூடும்.

4. **சில கைத்தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்படும்**

இயற்கையை அடிப்படையாகக் கொண்ட சில கைத்தொழில்கள் ,குறிப்பாக வெட்டுமரக் கைத்தொழில், சுரங்கமறுத்தல், அகழ்வு போன்ற கைத்தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்படலாம். இவ்வாறு காலநிலை மாற்றத்தினால் சில பொருளாதாரப் பாதிப்புக்களும் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

**சமூக ரீதியான பாதிப்புக்கள் (Social Impact)**

பௌதிக, பொருளாதாரப் பாதிப்புக்கள் மட்டுமன்றி சமூக ரீதியான பாதிப்புக்களும் ஏற்படக்கூடும். அந்த வகையில் பின்வரும் பாதிப்புக்களை அவதானிக்கலாம்.

1. நோய்கள் :- காலநிலை மாற்றத்தினால் மனிதனுக்கு உடல், உளம் சார்ந்த நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உடல் நோய்கள் என்ற வகையில் தோல் சார்ந்த நோய்கள், தோல் புற்றுநோய், சிரங்கு, தேமல், சொறி, சரும உலர்ச்சி, தலைமயிர் சார்ந்த நோய்கள் (முடிகொட்டுதல், இளநரை) என்பனவும் ஏற்படக் கூடும் என விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். இதனை விட அதீத கோபம், எரிச்சல், போன்ற உளநோய்களும் ஏற்படும் எனக் கூறப்படுகின்றது.

2. பஞ்சம் :- விவசாய, கடல் உணவு மற்றும் விலங்கு வளர்ப்பு நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதனால் பஞ்சம் ஏற்படும் வாய்ப்புள்ளது. உலகின் தானிய நெருக்கடி காரணமாக 2020ம் ஆண்டு 100 கோடிக்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்படுவர் என ஐ.நா.சபை தெரிவித்துள்ளது.

3. இடப்பெயர்வு :- கடல் மட்ட உயர்வு மற்றும் பஞ்சம் காரணமாக பல கோடி மக்கள் இடம் பெயர நேரிடும். சூழல் அகதிகள் (Envioronmental refugees) என்பது பெரும் பிரச்சினைக்குரிய விடயமாக மாறிவிடும். இடப்பெயர்வு மற்றும், பஞ்சம் காரணமாக கலவரங்கள், யுத்தங்கள் என்பன ஏற்படலாம்.

காலநிலை மாற்றப் பாதிப்புக்கள் காரணமாக உலகம் முழுவதும் மேற்படிப் பாதிப்புக்கள் ஏற்பட நமது நாட்டிலும் இதனால் பல பாதிப்புக்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

**இலங்கையில் காலநிலை மாற்றப் பாதிப்புக்கள் (Climate Change impacts in Sri Lanka)**

1. இலங்கை ஒரு தீவாக இருப்பதனால் கடல் மட்ட உயர்வு பாதிப்பை ஏற்படுத்தலாம்.
2. இலங்கையின் கடற்பரப்புக்குள் காணப்படுகின்ற பவளப்பாறைகள் அழிவடையலாம்
3. காட்டு உயிர்ச்சூழல் மாற்றமடைந்து வன உயிரினங்கள் குடியிருப்புக்களுக்குள் உட்புகுந்த பாதிப்பை ஏற்படுத்தலாம்.
4. இலங்கையின் மழைவீழ்ச்சி, வெப்பநிலையின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட கோடை, மாரிப்பருவங்கள் மாற்றமடையும் நிலை தோன்றலாம்.
5. ஆறுகள், மற்றும் நீர்த்தேக்கங்களில் நீரற்றுப் போய்விடும் இதனால் விவசாயம் , நீர் மின்சாரம் போன்ற நடவடிக்கைகள் பாதிக்கப்படலாம்.
6. வரட்சி, வெள்ளப் பெருக்குகளினால் பல ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர நேரிடலாம்.
7. விவசாய உற்பத்திகள் பாதிக்கப்படுவதனால் தானிய உற்பத்தி குறைவடைந்து பஞ்சம் ஏற்படும்.
8. மனிதர்களுக்க புதிய வகை நோய்கள் தோன்றலாம்.

இவற்றின் பாதிப்புக்கள் எதிர்காலத்தில் தான் தோன்றலாம் என்றில்லை. தற்போது கூட இதன் பாதிப்புக்கள் உணரப்படுகின்றன.

**காலநிலை மாற்றத்திற்கெதிரான உலகளாவிய நடவடிக்கைகள்**
**(World wise activities against the Climate Change)**

1979 ஆம் ஆண்டு முதலாவது வானிலை மாநாடு நடைபெற்றது. அதன் பின்னர் 1988ஆம் ஆண்டு உலக வளிமண்டல அமைப்பும் (WMO) ஐ.நா சுற்றுச்சூழல் அமைப்பு (UNEP) உம் இணைந்து காலநிலை மாற்றம் தொடர்பான பன்னாட்டு அரச குழுவை உருவாக்கியது. (I.P.C.C Inter Govemmental panel on Climate Change) 1990ஆம் ஆண்டு ஐ.பி.சி.சி தனது முதலாவது மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டது. இது புதிய ஆராய்ச்சிகள் எதனையும் மேற்கொள்வதில்லை. காலநிலை மாற்றம் தொடர்பான அறிவியல், தொழில்நுட்ப, சமூக, பொருளாதாரக் கூறுகள் தொடர்பாக சர்வதேச அளவில் முன்னணி ஆராய்ச்சிகளை மதிப்பிட்டு நடவடிக்கை எடுக்கத்தக்க வகையில் அறிக்கையாகத் தொகுப்பதே இந்த அமைப்பின் பணியாகும். ஐ.பி.சி.சி யின் முதலாவது மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 1992ஆம் ஆண்டு ஐ.நாவின் காலநிலை மாற்ற பணித்திட்டப்பேரவை (UNFCCC – United Nations Framework Convention on Climate Change) உருவாக்கப்பட்டது. இவ்வாண்டிலே ஜுன் மாதத்தில் இடம்பெற்ற ரியோ புவியுச்சி மாநாட்டில் யு.என்.எப்.சி.சி.சி இல் உலக நாடுகள் கையெழுத்திட்டன. 1994 மார்ச் 21ஆம் திகதி யு.என்.எப்.சி.சி.சி நடைமுறைக்கு வந்தது. 2002 ஜுலை மாதம் உலகின் 186 நாடுகள் இதனை ஏற்றுக்கொண்டன.

யு.என்.எப்.சி.சி.சி இன் காலநிலை தொடர்பான முதலாவது மாநாடு 1995 ஏப்பிரலில் ஜேர்மன் தலைநகர் பேர்ளினில் நடைபெற்றது. பின்னர் 1996 ஜுலையில் ஜெனிவா நகரில் இரண்டாவது மாநாடு நடைபெற்றது. இதில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டதுடன், பச்சை வீட்டு வாயுக்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை உலகம் விரைந்து மேற்கொள்ள வேண்டும் எனவும் கூறப்பட்டது. அதன் பின்னர் இதனுடைய மூன்றாவதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான மாநாடு 1997ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜப்பானின் நகரமான கியோட்டோவில் நடைபெற்றது. இதில் கியோட்டோ உடன்படிக்கை உருவாக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கை ஐ.நாவின் தலைமையகமான நியூயோர்க்கில் வைக்கப்பட்டு ஓராண்டிற்குள் 84 நாடுகள் இதில் கையெழுத்திட்டன.

ஐ.பி.சி.சி இன் நான்காவது மாநாடு புவனஸ் அயர்சில் கூடியது. இதில் கியோட்டோ உடன்படிக்கையைச் செயற்படுத்துவதற்கான விபரங்களும், தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் முறைகளும் உருவாக்கப்பட்டன. இதன் முடிவுகளை 6வது மாநாட்டுக்கு முன்னர் முடிவுக்கு கொண்டு வருதல் வேண்டும் எனவும் கூறப்பட்டது. இதன் பின்னர் பொன்நகரத்தில் நடைபெற்ற ஐந்தாவது மாநாடு எவ்வித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இதன்பின்னர் 6வது மாநாடு நெதர்லாந்தின் ஹேக்நகரில் கூடியது. இம்மாநாடும் முன்னைய மாநாட்டினைப் போல எவ்வித முக்கியத்துவமும் கொண்டிருக்கவில்லை. அதன் பின்னர் 7வது மாநாடு மாரக்கேஷில் நடைபெற்றது. பின்னர் 8வது மாநாடு புதுடில்லியில் நடைபெற்றது.



பொன்விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்
பாண்டியன்குளம் துணுக்காய்
பனை தென்னை வள அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்கம். வ/து
பதிவு இல:- M/4
அங்கத்தவர் ஓய்வூதியம்
விபத்து நிதி
அங்கத்தவர் மரணக்கொடை
அங்கத்தவர் சேமநலநிதி
பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் நிதி
பல்கலைக்கழக மாணவர் புலமைப்பரிசில்
பணியாளர் சேமநலநிதி
பணியாளர் ஊக்குவிப்பு நிதி
கள் உற்பத்தி விற்பனை
போத்தல் கள் அடைப்பு விற்பனை
வெல்ல உற்பத்தி விற்பனை
பனம் கைப்பணிப்பொருள் உற்பத்தி விற்பனை
மகளிருக்கான பனங்கைப்பணிப்பொருள் உற்பத்திப் பயிற்சி
குறைந்த செலவிலான பந்தல் கதிரை வாடகைச்சேவை
குளக்கட்டு, வவுனிக்குளம்.
T.P: - 0243248507




பிள்ளையார் ஸ்ரோஸ்
பலசரக்கு, மொத்த சில்லறைப்பொருட்கள்
அழகுசாதனப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள்,
சைக்கிள் உதிரிப்பாகங்கள்
அனைத்தையும் பெற்றிட நாடுங்கள்.
Puredale
துணுக்காய் சாலை மல்லாவி.
T.P: -0213208001

இவ்வாறு IPCC இன் மாநாடுகள் நடைபெற்ற வந்தாலும், முதன்மையானதும், முக்கியத்தும் வாய்ந்ததுமான 13வது மாநாடாக 2007ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தோனேசியாவின் பாலித்தீவில் நடைபெற்ற மாநாட்டினைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். உலகின் 190 நாடுகளைச் சேர்ந்த 10000க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் பங்குபற்றினர். இம்மாநாட்டில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான திட்டவரைப்படம் ஒன்று உருவானது. இத்திட்ட வரைபடம் உருவாக்குவதற்கு அனைத்து நாடுகளும் ஒருமித்த கருத்தினைக் கொண்டிருந்தவேளை அமெரிக்கா மட்டும் இதிலிருந்து விலகி இருந்தது. இம்மாநாட்டில் பச்சை வீட்டு வாயுக்களைக் குறைப்பது, காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்வதற்கு வளரும் நாடுகளுக்கு உதவுவது, காலநிலைத் தன்மைகளுக்கு அமைவாகத் தொழில் நுட்பங்களை வடிவமைத்துக் கொள்வது போன்ற பல தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும் கடந்த பல ஆண்டுகளில் காலநிலை மாற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சிறந்த ஒரு நடவடிக்கையாக பாலித்தீவு மாநாட்டினைக் கருதலாம்.

**கொபன் கேகன் மாநாடு (Copen hagen Conference)**

காலநிலை மாற்றத்துக்கு எதிரான உலகளாவிய நடவடிக்கைகளில் UNFCCC இன் ஏற்பாட்டில் உலகின் 15வது காலநிலை மாநாடு டிசம்பர் 7 ம் திகதி தொடக்கம் 18 ம் திகதி வரை நடைபெற்றது. டென்மார்க்கின் தலைநகர் கொபன் கேகன் (copen hagen) இல் Bella Center ல் இம் மாநாடு நடைபெறுகின்றது. ஜப்பானின் கியோட்டோ நகரில் நடைபெற்ற கியோட்டோ மாநாட்டின் தீர்மானத்திற்கு அமையவே (Kyoto Protocol) இது நடைபெற்றது. இம் மாநாட்டில் தொழில்நுட்ப செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டமும் Technology Action Programme (Taps) தேசிய தடுப்புச் செயன்முறையும் (National Appropriate Mitigation Actions (NAPAS) உம் UNFCCC முக்கிய விடயங்களாக வலியுறுத்தவுள்ளது. இம்மாநாட்டில் அமெரிக்கா உள்ளிட்ட முக்கியமான நாடுகளின் அரசுத் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் வழமையான காலநிலை மாற்ற மாநாடுகள் போல இம் மாநாடும் வெறும் தீர்மானங்கள், உடன்படிக்கைகளுடன் மட்டுமே முடிவடைந்தது என சில காலநிலையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏனெனில் விருத்தியடைந்த நாடுகளுக்கும், விருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் இடையிலான போட்டியே இதற்கான பிரதான காரணமாகும். இன்றைய காலநிலை மாற்ற, புவி வெப்பமடைதற் செயற்பாட்டிற்கு இன்று காணப்படும் அபிவிருத்தி அடைந்த நாடுகளே பிரதானமான காரணமாவார்கள் என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது இந்நாடுகள் தமது பொருளாதார விருத்திக்கு கட்டுப்பாடின்றிய செயற்பாடுகளை மேற்கொண்டனர். சூழல் தொடர்பான எவ்வித அக்கறைகளும் இல்லாமல் தமது விருத்தி ஒன்றையே கருத்தில் கொண்டு செயற்பட்டனர். காலநிலை மாற்றத்துக்கான பிரதான காரணியாக இருக்கின்ற பச்சை வீட்டு வாயுக்களை அபிவிருத்தி அடைந்த அமெரிக்கா, ஜரோப்பா நாடுகளே அதிகம் வெளியிட்டன. ஆனால் இவற்றின் பாதிப்பு பச்சை வீட்டு வாயுக்களைக் குறைந்த அளவில் வெளியிட்ட, இன்னமும் வறுமை நிலையில் உள்ள பல நாடுகளுக்கும் ஏற்பட்டுள்ளது.

எனவே உலகம் முழுவதும் காலநிலை மாற்றத்தினைத் தடுக்க வேண்டுமாயின் ஒவ்வொரு நாடுகளும் வெளியிடுகின்ற பச்சைவீட்டு வாயுக்களின் அளவைக் குறைக்க வேண்டும் என்ற பாலித்தீவு மாநாட்டுத்

தீர்மானத்தையும் கியோட்டோ மாநாட்டுத் தீர்மானத்தையும் நடைமுறைப்படுத்தல் மிகவும் கடினமானதாகும். ஏனெனில் விருத்தியடைந்து வரும் நாடுகள் இதற்குக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன. உலகின் சூழல் பாதிப்புக்கள் எல்லாவற்றிற்கும் காரணமான அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் தமக்கும் ஒரே மாதிரியான தடையை UNFCCC, IPCC உம் விதித்து இருப்பதாக அவை குற்றம் சாட்டி வருகின்றன. அண்மையில் பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ள விருத்தி அடைந்த நாடுகள் தமது நாடான இந்தியாவின் சுமைகளைக் குறைக்க முன்வந்தால் இந்தியா தான் வெளியிடும் பச்சைவீட்டு வாயுக்களின் அளவைக் குறைக்கும் என்ற சாரப்பட தெரிவித்திருந்த கருத்து கவனிக்கத்தக்கது. எனினும் இன்றைய உலகில் விருத்தியடைந்து வரும் நாடுகளான இந்தியாவும், சீனாவுமே அதிகளவான பச்சை வீட்டு வாயுக்களை வெளியேற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறெனினும் இந்நாடுகளுக்கிடையிலான போட்டியும் , முரண்பாடுகளும் கொபன்கேகன் மாநாட்டையும் பயனற்ற வெறும் தீர்மானம் நிறைவேற்றும் மாநாடாகவே மாற்றும் என காலநிலையாளர்கள் எதிர்வுகூறியுள்ளனர்.

**நாடுகள் ரீதியாக... (Countries wise.....)**

இதேவேளை காலநிலை மாற்றத்திற்கெதிரான நடவடிக்கைகளை இதனால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களை அதிகம் கொண்டுள்ள சில நாடுகளும் மேற்கொண்டு வருகின்றன. இவர்கள் பல்வேறு வகையான விழிப்புணர்வுச் செயற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றனர். உதாரணமாக கடல்மட்ட உயர்வினால் பாதிக்கக்கூடிய மாலைதீவு, தன்னுடைய அமைச்சரவைக் கூட்டத்தில் கடலுக்கடியில் நடத்தியமையும் பனிச்சிகரங்கள் உருவாகுவதனால் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புக்களைக் கொண்டுள்ள நேபாளம், தன்னுடைய அமைச்சரவைக் கூட்டத்தில் எவரெஸ்ற் சிகரத்தில் நட்த்தியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

**நோபல் பரிசு.**

காலநிலை மாற்றம் உலகை அச்சுறுத்தும் ஒரு பிரச்சினை என்று கருதி அதற்காகப் பல நடவடிக்கைகளை எடுத்த ஐ.பி.சி.சி அமைப்புக்கும், தனிமனிதனாகக் காலநிலை மாற்றத்திற்கெதிராக தன்னால் இயன்றவரை முயற்சி எடுத்து “ஒரு தர்மசங்கடமான உண்மை”(An Inconvenient Truth) என்ற விவரணப்படத்தினூடாகவும் காலநிலை மாற்றத்திற்கெதிராகப் பிரச்சாரம் செய்த முன்னாள் அமெரிக்கத் துணை ஜனாதிபதி டேவிட் அலகோரும் 2007ஆம் ஆண்டின் அமைதிக்காக நோபல் பரிசை வென்றுள்ளமை, காலநிலை மாற்றம் தொடர்பான நடவடிக்கைகளில் உலகளாவிய பரிணமத்தினை விளக்கி நிற்கின்றது.

ஒப்பீட்டுரீதியில் உலக நாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் காலநிலை மாற்றத்திற்கெதிரான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுத்து வருகின்றன. காலநிலை மாற்றத்துக்கான பிரதான காரணிகளாகவும் இந்நாடுகளே திகழ்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எனினும் ஏனைய நாடுகளைவிட இவையே இதற்காகப் பாடுபடுகின்றன. தென்னாசிய நாடுகள் ஒப்பீட்டளவில் காலநிலை மாற்றம் தொடர்பான எவ்வித அக்கறையும் அற்று உள்ளனர். ஆனால் காலநிலை மாற்றத்தினால் அதிகம் பாதிக்கப்படும் பிராந்தியமாக தென்னாசியப் பிராந்தியமே திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. ஏனெனில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட தானிய நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் இந்நாடுகள் திண்டாடியமை குறிப்பிடத்தக்கது.

**இலங்கையின் செயற்பாடுகள் (Activities of Sri lanka)**

காலநிலை மாற்றத்திற்கெதிராக உலகநாடுகள் பல நடவடிக்கைகளை எடுத்துவரும் நிலையில் இலங்கை தனிப்பட்ட ரீதியில் மிகவும் குறைந்தளவான அக்கறையையே காட்டிவருகின்றது. இலங்கை ஒரு தீவாக மட்டுமன்றி இலங்கையின் காலநிலை அம்சங்கள் மாறிவரும் நிலையில் இலங்கை இது தொடர்பாக பூரண விழிப்புணர்வை அடையாதிருப்பது வியப்பான ஒன்றாகும்.

இலங்கையின் சுற்றாடல் அமைச்சு காலநிலை மாற்றத்திற்கு எதிராக பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இலங்கையின் பல்வேறு பிரிவினரிடமும் காலநிலை மாற்றம் தொடர்பான விழிப்பணர்வை ஏற்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.இதற்காக பல்வேறு வகையான நூல்களை வெளியிட்டுள்ளது. அண்மையில் கூட Kyoto Protocol இன் அடிப்படையில் காலநிலை மாற்றம் தொடர்பான தேசியக் கொள்கை ஒன்றை வகுத்துள்ளது.

இலங்கை வளிமண்டலவியற் திணைக்களமும் காலநிலை மாற்றம் தொடர்பாக ஓரளவுக்கு அக்றை காட்டி வருகின்றது. இது காலநிலை மாற்றத்துக்கான நிலையம் (Center for the Climate Change) ஒன்றினை நிறுவி அதன் மூலம் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இவற்றின் பணிகளாக காலநிலை மாற்றம் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், காலநிலை மாற்றத்தினை அவதானித்தல், மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல், காலநிலை மாற்றம் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல், காலநிலை மாற்ற மாதிரிகளை அவதானித்தல், காலநிலை மாற்றம் தொடர்பான விடயங்களை ஆவணப்படுத்தல், காலநிலை மாற்றத்தினை தடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவிபுரிதல் எனப்பல நடவடிக்கைகளை இந்நிலையம் மேற்கொண்டு வருகின்றது. இலங்கையில் காலநிலை மாற்றம் தொடர்பாக இந்நிலையம் ஓரளவுக்கு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. ஏனெனில் இந்நிலையத்தின் நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் ஒரளவு வீழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

இதனைவிட பிளனெற் அக்சன் (Planet Action) எனும் அமைப்பு காலநிலை மாற்றத்துக்கு எதிரான செயற்றிட்டம் ஒன்றினை இலங்கை வளிமண்டலவியற் திணைக்களத்துடன் இணைத்து செயற்படுத்தி வருகின்றது. இவ்வமைப்பு இலங்கை வனவாழ் உயிரிகளின் பாதுகாப்புச் சங்கம் SriLanka Wildlife Conservation Socifety (SLWCS) உடன் இணைத்தும் இச்செயற்பாட்டினை முன்னெடுத்து வருகின்றதெனலாம். இதனைவிட ஐ.நாவின் UNDP யும் இலங்கை இயற்கை வளங்கள் சுற்றாடல் அமைச்சும் இணைந்து காலநிலை மாற்றத்திற்கு எதிரான செயற்றிட்டம் ஒன்றினை செயற்படுத்தி வருகின்றன. 405000 அமெரிக்க டொலர் செலவில் மேற்கொள்ளப்படும் இச்செயற்றிட்டம் காலநிலை மாற்றத்திற்கெதிரான நடவடிக்கைகளில் இலங்கையின் பங்கினை ஒரளவுக்கு சிறப்பாக வெளிக்கொணர்ந்துள்ளது எனலாம். இதனைவிட இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபை பல செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது எனலாம்.

**முடிவுரை (Conclusion)**

உலக நாடுகள் காலநிலை மாற்றத்திற்கெதிராக மாநாடுகள் நடத்துவதனையும் அறிக்கைகள் வெளியிடுவதனையும் மட்டும் செய்யாமல் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தாத, பச்சைவீட்டு

வாயுக்களை வெளியிடாத புதிய தொழினுட்பங்களினூடான கைத்தொழில் நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். உயர்ச்சுவட்டு எரிபொருட்களின் பாவனைகளைக் குறைத்து சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத சூரியசக்தி கடலலை, காற்று, புவிவெப்பம் போன்றவற்றைப் பயன்படுத்துதல் வேண்டும். காடு அழித்தல் நடவடிக்கைகளை தவிர்த்து உலக காடுகளின் பரப்பளவை அதிகரித்தல் வேண்டும். இதற்காக எவ்வித பேதமுமின்றி உலகின் அனைத்து நாடுகளும் ஓரணியில் திரள வேண்டும்.

எங்களது பிரதேசத்திலும் காலநிலை மாற்றத்திற்கெதிரான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தல் வேண்டும். அரச, அரசார்பற்ற நிறுவனங்கள் மட்டுமன்றி தனிமனிதர்களும் இதில் அக்கறை செலுத்தல் வேண்டும். பாடசாலை மட்டங்களிலும், ஏனைய அளவிலும் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல் வேண்டும். ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் ரீதியதாக இது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்கலாம். இதற்கு அவ்வப்பிரதேச செயலகங்களின் பிராந்திய சுற்றாடல் அதிகாரிகள் காத்திரமான பங்களிப்பினை வழங்குதல் வேண்டும். அத்துடன் மாவட்ட ரீதியாகவும் பல செயற்பாடுகளை முன்னெடுக்கலாம். அந்தவகையில் மரநடுகைத் திட்டங்களை அறிமுகப்படுத்தலாம். அத்துடன் மரங்களை வெட்டுதலை இயலுமான அளவு குறைத்துக்கொள்ளலாம். மேலும் பிளாஸ்டிக் பொருட்களினதும், உயிர்ச்சுவட்டு எரிபொருட்களினதும் பாவனையைக் குறைத்துக்கொள்ள வேண்டும். அத்துடன் இயற்கையுடன் இயைந்ததான வாழ்க்கையை மேற்கொள்ளுதல் வேண்டும். எவரேனும் எத் தேவைக்காகவேனும் ஒரு மரத்தை வெட்டும் போது அதற்காக இரண்டு புதிய மரத்தை நடுதல் வேண்டும். எனும் கொள்கையை மனதில் ஏற்படுத்துதல் வேண்டும். அதுமட்டுமன்றி கருத்தரங்குகள், விழிப்புணர்வுப் படக்காட்சிகள், அச்சு, இலத்திரனியல் ஊடகங்களினூடான பிரச்சாரங்கள் என்பவற்றின் மூலம் மக்கள் மத்தியில் இது தொடர்பான அறிவினை ஏற்படுத்துதல் வேண்டும். அத்துடன் மாவட்ட ரீதியாக மட்டுமன்றி, தேசிய, சர்வதேச ரீதியாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்குதல் வேண்டும். அத்துடன் தேவையற்ற விதத்தில் பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றத்தை தவிர்த்துக்கொள்வோம்.

எங்களது பிரதேசத்தில் காலநிலை மாற்றம் தொடர்பான நடவடிக்கை எடுக்க பல்வேறு தரப்புக்களும் முன்வருதல் வேண்டும். குறிப்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிராந்திய அலுவலகம், மாவட்டச் செயலகம், உள்ளூர் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள், உள்ளூராட்சி சபைகள், கல்வி சார்ந்த நிறுவனங்கள் போன்ற பலவும் உடனடியாகவே இது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதற்கான செயற்பாடுகளை தனித்தும் கூட்டாகவும் இன்றிலிருந்தே முன்னெடுப்போம் என அனைவரும் உறுதியெடுத்துக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் எங்கள் பிரதேசத்தில் இன்னும் சில ஆண்டுகளில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகள் மோசமானவையாகவும், எதிர்கொள்ள முடியாததாகவும் இருக்கும் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

**நா.பிரதீபராஜா**

**சிரேஷ்ட மாணவர் முதல்வன் (1999/2000),**

**மு/மல்லாவி மத்திய கல்லூரி,**

**சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியற்துறை,**

**யாழ்.பல்கலைக்கழகம்.**

# செம்மொழியாம் தமிழ்மொழி

பெற்ற தாயையும் பிறந்த பொன்நாட்டையும் உயிரினும் மேலாக மதித்து எம்மொழி எம்மினம் தனித்துவம் மிக்கது என எடுத்துக்காட்டவேண்டும். எம் தமிழினமானது கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த இனமாகும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவன் தமிழ்த்தாயின் மகனாவான்.

"தமிழை அமுதென நினைத்து வாழ்வோம்
ஊரறிய உலகறிய வைப்போம்
தமிழினம் என்று ஓர் இனமுண்டு
தனியே அவ்வினத்துக்கோர் குணமுண்டு
அமுதம் அவ்வினத்தின் மொழியாகும்"

எனும் வரிகள் தமிழர், தமிழினத்தின் பெருமைகளை எடுத்தியம்பி நிற்கின்றது.

எம்தமிழை கன்னித்தமிழ், முத்தமிழ், பைந்தமிழ், பிள்ளைத்தமிழ், சங்கத்தமிழ், காதல்தமிழ், வண்டமிழ், தேன்தமிழ், கற்கண்டுத்தமிழ், நற்றமிழ், தீந்தமிழ், எனத் தமிழின் புலமையும் திறமையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தனக்கெனத் தனியிடம்பெற்று உலக மொழிகளிலே ஒப்பற்ற மொழியாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இவ் உண்மையை, எம் தமிழினம் மகுடம் சூடிநிற்பதை எண்ணுமிடத்து எம் எல்லோரின் நெஞ்சமும் நெகிழ்கின்றது அல்லவா.

தமிழினமானது தமிழைத் தாய் மொழியாகக்கொண்டது. உலகினுடைய எப்பாகங்களிலும் மூலை முடுக்கெல்லாம் பரந்து விரிந்து தன்னுடைய தமிழ்ப்பண்பாட்டை வளர்க்கின்றது. காதல், வீரம், அறம், கொடை, பண்பு, நட்பு, புலமை எனப் பல குணங்களையும் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கும்தமிழினம் தனித்துவமான இனம் என்று உலக ஒப்பனையில் உறவாடி வருகின்றது. எம் தமிழ் மொழியிலே வேற்று மொழிக் கலப்பு எதுவுமின்றிப் பெறுகின்ற ஆற்றல்தான் தமிழனைத் தமிழனாக தலை நிமிர்ந்து நின்று

"தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா"

என்று சொல்லவைக்கும் எனக்கூறினால் மிகையாகாது. தமிழ்மொழி தொன்மையானது. தெய்வ மணம் கமழ்வது. இதற்கு நிகராக எதையும் கூறிவிட முடியாது. எங்கள் தமிழை எங்களுடைய உயிருக்குத்தான் நிகராகக் கூற முடியும். இதனைத்தான் பாரதிதாசன்

" தமிழுக்கு அமுதென்று பேர்

அந்தத் தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

என்று பாடியுள்ளார்.

பண்டைத்தமிழ் இலக்கியங்களும் பாவலர்களும் தமிழின் பெருமைகளை, தமிழினத்தின் பெருமைகளை பறைசாற்றப் பின்நிற்கவில்லை. சேர சோழ பாண்டிய மூவேந்தர்களும் முடிசூடிநின்று வெற்றிச் செருக்குடனும் இந்துமா சமுத்திரத்தின் இந்துக்கடல், வங்கக் கடல் உள்ளடங்கலாக எட்டுத் திசையிலும் வீரத்திற்கும் இனிமைக்கும் புகழ் சேர்த்து நிற்கின்றது என்பதை தமிழர்களாகிய நாம் எண்ணும் போது எம்முடைய மனங்கள் உளப்பூரிப்படைகின்றது அல்லவா!

நம் முன்னோர்கள் காட்டிய வீர வரலாறு, அந்நிய ஆதிக்க விரட்டல் என்பன எம் சரித்திரப் பதிவேட்டில் நீங்காத இடம் பிடித்துள்ளமை, பண்டைக்காலச் சின்னங்களும் தமிழ் மன்னர்களின் சமாதிகளும் தமிழுக்கும் தமிழினத்துக்கும் இருந்த தனித்துவமான ஆளுமையின் சிறப்பை வெளிக்கொணர்ந்து நிற்கின்றது என்று கூறுவதில் எந்தவித தப்புமில்லை.

எம் உயிரினும் மேலான தாய்மொழி தமிழ் உலக மொழிகளிலே ஒப்பற்றமொழி, பாவலன் சுவைத்த மொழி, மூவேந்தர் முடிசூடிய மொழி, காவலன் வீரமொழி, அதுவே எம் உயிராகும். பாரதி, கம்பன், வள்ளுவன், இளங்கோ போன்ற பாவலர்கள் பல மொழிகழில் தேர்ச்சி பெற்றிருப்பினும் தமிழ்மொழியையே உலக மொழிகளிலே தனித்துவமான இனிமையான மொழியாக காட்டிச் சென்றுள்ளனர். இக்கருத்தை பாரதியார்

"யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்"

என்று மிக அழகாக வர்ணித்துப் பாடியுள்ளார்.

எனவே எம் தாய்மொழியாகிய தமிழ்மொழியை நாங்கள் அனைவரும் எம் உயிரிலும் மேலாக மதித்து துதித்து அதைச் சுவைத்து எம்முடைய அன்னையவள் எவ்வாறு கண்ணும் கருத்துமாக காத்து நிற்கின்றாளோ அவ்வாறே எம் தமிழினத்தையும் தமிழ் மொழியையும் உயிருக்கு உயிராக மதிப்போம். பாலூட்டிச் சீராட்டி வளர்த்த தமிழ்த்தாய் எம் வீரப்பரம்பரையின் வெற்றித்தாய் அவ் வெற்றித்தாயின் வழித்தோன்றலாகிய நாம் அனைவரும் எம்மொழி தமிழ்மொழி என்ற பெருமையுடன் புகழ் சேர்ப்போம்.

*" வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழினம்*

*வளர்க தமிழ்மொழி வளர்க தமிழினம் - வாழிய நீடூழி"*

**சு. கஜீபன்,**
**தரம் 13 (2012 கலை),**
**மு/மல்லாவி மத்திய கலலூரி.**

# இசுறுவின் இளமைக் காலம்

கல்வி என்னும் கடலில்
கல்லூரித் தாயின் மடியில்
அலையாக நாம் திரள
அரவணைத்த கல்லூரியே
ஒரு வருடமா? ஒன்பது வருடமா?
ஐம்பது வருடமல்லவா? உன் சேவை
பொன் விழா காணும்
பொன்னான வருடத்தில்
காரிருள் விலக கதிரவன் ஒளி வீச
கண்சிமிட்டும் நட்சத்திரங்கள் நாங்கள்
கனவுடனும் இலட்சியத்துடனும்
கல்லூரியில் கால் பதிக்க
ஆலமரம் விழுது விட
ஆசிரியர்கள் துளிர்விட
மாணவர் திரண்டு வர
மலர்ந்தது புத்தாண்டு
"இசுறு" எனும் பெயரெடுத்து
இடையறாத சேவையாற்ற
ஆளுமை வளர அறிவு பெருக
தொழில்நுட்பம் புகுத்த
தொகுத்தது ஒரு தொகுப்பை
கலை என்ன வர்த்தகம் என்ன
கணிதமென்ன விஞ்ஞானமென்ன
கட்டங்கள் அமைக்க
கம்பஸ்சின் கதவுகள் திறந்து விட
ஊர் உலகில் உத்தியோகமும்
உச்சியில் இருப்பதும் உன்பிள்ளை
விந்தையான விளையாட்டுக்களில்
வீரனைத் தேசியமல்லவா காணவைக்கிறாய்
செப்பிடவா உன் செய்தியை!
செதுக்கிடவா உன் திறமையை!
வார்த்தைகள் போதவில்லை
வர்ணமும் காணவில்லை
50 வது அகவையில்
அத்திவாரம் நாம் அமைக்கிறோம்
அச்சம் எதுவுமின்றி
அடைகிறோம் உன் இலட்சியத்தை
சாதனையாளராய்
சவால்களை எதிர்கொண்டு
சன்நிதியில் நாம் வாழ
சத்தியம் செய்கிறோம்

**A.Nirojini,**
**2012 com,**

# கல்லூரி அன்னை

முக்கனி சாறெடுத்து
முத்தமிழ் தேனெடுத்து
உன் தாழ் பணிவேன்
கல்லூரி அன்னையே வணக்கம்!
தங்கத் தாமரையாய் விரிந்திருக்கும்
என் இதயக் கோயிலில்
வைரமாக ஜொலிக்கின்றாய்
தலை பணிந்தேன் தாயே!
உன் தேன் சிந்தும் இதயத்தில்
உன் மழலையாகிய என்னை
அன்போடு காக்கின்றாய்
அறிவு தந்து வளர்க்கின்றாய்!
அறிவென்னும் உணவெடுத்து
என்னை அன்போடு தூக்கி
பசிக்குணவு தருவது போல்
என் அறிவுப் பசிக்கு அறிவு தருகிறாய்!
தலைக்கு மேலே வளர்ந்தால் கூட
தாய்க்கு தனையன் பிள்ளை தான்
உன்னை விட்டுப் பிரிந்தால் கூட
நீ எனக்கு தாய் தானே!
பத்து மாதம் சுமந்து என்னை
அன்போடு பெற்றெடுத்தாள் அன்னை
பன்னிரண்டு வருடம் என்னைத் தாங்கி
அறிவு தந்து வளர்த்தெடுத்தாய் நீ!
வளர்த்தெடுத்த என் தாயே உன் துணையில்
வளர்ந்து நிற்கின்றேன் உயர்நிலையில்மேலும்
புதுமைகள் பல படைத்து சிறப்புடன் வாழ்க என
சிரம்தாழ்த்தி வாழ்த்துகின்றேன் உன்னை

**அ. அருந்ததி,**
**12 கலைப்பிரிவு**



# பொன்விழா காணும் மல்லாவி மத்திய கல்லூரி

வன்னி வள நாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்கே வளமிகு கிராமமாக திகழும் மல்லாவி கிராமத்தில் 26.11.1951 ம் ஆண்டு 9 மாணவர்களுடன் செல்லமுத்தாச்சியின் காணியில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை 10.02.1961ல் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டது. அதீதவளர்ச்சி அடைந்து இன்று "இசுறு" 1000 பாடசாலை திட்டங்களின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளது. 1995ம்ஆண்டு ஏற்பட்ட யாழ்ப்பாண இடப்பெயர்வின் போது பெருமளவு மக்கள் மல்லாவிப் பகுதிக்கு வந்தனர். அந்த இக்கட்டான நேரத்தில் இடம்பெயர்ந்து வந்த யாழ்ப்பாண மக்களையும் அரவணைத்து கல்வியறிவூட்டி பல்கலைக்கழகம் வரை செல்லவைத்த பெருமை இக்கல்லூரியையே சாரும்.

தொடர்ந்து அரச அலுவலர்கள் ஆசிரியர்களுக்கான சில விடயங்களை தரலாம் என நினைக்கிறேன். லீவு அரச அலுவலர்களுக்கான ஒரு சலுகையே அன்றி உரிமையல்ல. ஒரு அரச அலவலர் அல்லது ஆசிரியர் முன் அனுமதி பெற்றே லீவில் நிற்க வேண்டும். தவிர்க்கமுடியாத சந்தர்ப்பத்தில் சுகயீனக்குறிப்பு அல்லது தந்தி மூலம் அறிவித்து 2 நாட்கள் லீவு எடுக்கலாம்.

**கடமை நேரங்கள்**

| அரசஊழியர்கள் | ஆசிரியர்கள் | சிற்றூழியர்கள் | சாரதிகள் |
|---|---|---|---|
| காலை8.30-4.15 மணிவரை | காலை8.00-2.15 மணிவரை | காலை8.00-4.45 மணிவரை | காலை8.00-5.00 மணிவரை |

ஒரு நாளில் மூன்றரை மணித்தியாலங்கள் கடமையாற்றினால் ½ நாள் வேலைசெய்ததாகக் கருதப்படும்.

| | அமையம் | சுகயீகம் |
|---|---|---|
| அரச ஊழியர்கள் | 21 | 24 |
| ஆசிரியர்கள் | 21 | 20 |
| சிற்றூழியர்கள் | 21 | 24 |
| சாரதிகள் | 21 | 24 |

ஒரு வருடத்திற்கு வழங்கப்படக்கூடிய லீவு

**குறுகியகால லீவு:-** அரச அலுவலர்களுக்கு மாதம் இருமுறை 1½ மணித்தியாலங்கள் ஆசிரியர்களுக்கு மாதம் இருமுறை 1 மணித்தியாலங்கள் இதனை ஒரு நாளில் எந்த வேளையிலும் பயன்படுத்தலாம்.

**சுகயீன லீவு:-** ஒரு உத்தயோகத்தர் அல்லாத அசிரியர்கள் சுகயீனம் காரணமாக கடமைக்குச் சமுகமளிக்காது இருந்தால் 2 நாட்களுக்கு மேற்படின் வைத்தியச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அரச, ஆயள்வேத அல்லது தனிப்பட்ட வைத்தியச் சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ளலாம்.

**விபத்து லீவு:-** கடமையிலே செல்லுகிற போது விபத்துக்கள் நிகழ்ந்தால் அலுவலர்களுக்கு விபத்து விடுமுறை வழங்கப்படும். வேறு தமது வீட்டிலிருந்துகடமைக்காக கடமை நிலையத்திற்குச் செல்லும்போது அல்லது கடமை நிலையத்திலிருந்து வீட்டுக்குச் செல்லும் போது விபத்து ஏற்படலாம். இதற்கான லீவு அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் வழங்கலாம்.ஆனால் அலுவலரின் தவறு காரணமின்றி அரச கடமையை நிறைவேற்றும் போது ஏற்பட்ட விபத்து என வைத்தியர் அதை உறுதிசெய்தல் வேண்டும்.

**கட்டாய லீவு:-** வைத்திய காரணங்களுக்காகவோ அல்லது குற்வியல் நடவடிக்கையின் போது உத்தியோகத்தர்களுக்கு கட்டாய விடுமுறை வழங்கப்படலாம்.

**பதில் விடுமுறை:-** அலுவலர் ஒருவர் பொது விடுமுறை நாட்களில் அல்லது இறுதி நாட்களில் வேலைசெய்யுமாறு திணைக்களத்தலைவரால் கோரப்பட்டால் முன் அனுமதி பெற்றே வேலைசெய்யப்பட வேண்டும். அந்த நாட்களுக்கான பதில் லீவை வேலைசெய்த நாட்களிலிருந்து ஒரு வருடத்திற்குள் பெறப்படல் வேண்டும்.

**நோய்களுக்கான சலுகைகள்**

1. **கயரோகம்:-** நான்கு மாதங்கள் முழுச்சம்பள விடுமுறையும் நான்கு வருடங்களின் பின் மீண்டும் ஒரு முறை நான்கு மாதங்கள் முழுச்சம்பள விடுமுறையும் வழங்கப்படும்.
2. வைத்தியசாலையின் சிபார்சுடன் ஆறு மாதங்கள் முழுச்சம்பள விடுமுறை 2 தடவைகள் வழங்கப்படுகிறது. மொத்த சேவைக்காலத்தில் 12 மாதங்கள் வழங்கமுடியும்.
3. **புற்றுநோய்** வைத்தியசாலையின் சிபார்சுடன் 6 மாதங்கள் முழுச்சம்பளம் வழங்கப்படுகிறது. மருத்துவ சபையினர் பரிசீலிப்கபடும் வேறு எந்த நோய் தொடர்பாகவும் (எயிட்ஸ்) அல்லது மருத்துவ சபையின் சிபார்சு செய்யப்படும் சத்திரசிகிச்சைகளுக்குப் பின்பு தேவைப்படும் கவனிப்புக் காலத்தின் பொருட்டு 6 மாத காலம் முழுச்சம்பள விடுமுறை வழங்கப்படும்.

**விசேட விடுமுறை**

இஸ்லாமிய மத உத்தியோகத்தர்களுக்கு சமய அனுட்டானங்களுக்காக வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் 1.00 பின் இரண்டு மணித்தியாலங்கள் வழங்கலாம். முஸ்லிம் பெண்கள் இத்தா அனுட்டிப்பதற்காக (கணவனை இழந்த பெண்கள்) 4 மாதமும் 10 நாட்களும் முழுச்சம்பளத்துடன் விடுமுறை வழங்கப்படும். இவ்விடுமுறை அவருக்கு உரித்தான லீவு கழிக்கப்பட்டு மிகுதி விசேட லீவாகக் கணிக்கப்படும்.

**பிரசவ லீவு**

அரச பெண் அலுவலர் ஒருவர் பிரசவிக்கும் ஒவ்வொரு உயிருள்ள குழந்தைகளுக்கும் 84 வேலை நாட்கள் வழங்கப்படும்.

**அ)** குழந்தை இறந்து பிறந்தால் அல்லது 6 வாரங்களுக்கு முன்பு இறந்தால் 42 நாட்காட்டி நாட்கள்

**ஆ)** 84 வேலை நாட்கள் முடிந்ததும் குழந்தையின் பராமரிப்புக்காக 84 நாட்காட்டி நாட்கள் அரைச்சம்பள விடுமுறையும் 84 வேலை நாட்கள் சம்பளமற்ற விடுமுறையும் வழங்கலாம்.

**இ)** கருத்தரித்து 5 ஆம் மாத முடிவில் இருந்து குழந்தை பிறக்கும் வரை அரை மணித்தியாலம் பிந்தி வரவும், அரை மணித்தியாலம் முந்திச் செல்லவும் அனுமதிக்கலாம்.

**ஈ)** குழந்தைகள் 6 மாதங்கள் வரை பாலூட்டுவதற்கு 1 மணித்தியாலம் விடுமுறை வழங்கப்படும்.

**உ)** குழந்தைப் பேற்றிற்காக வாழ்க்கைத் துணைவர் 3 நாட்கள் விடுமுறை வழங்கப்படும். குழந்தை பெற்றுக்கொண்டதிலிருந்து 3 மாதத்திற்குள் பெற்றுக்கொள்ள முடியும்.

**ஊ)** கருச்சதைவுக்கு விசேட விடுமுறை இல்லை. அலுவலகரின் சொந்த லீவில் ஈடுசெய்யப்படும்.

**ஒன்று திரட்டிய லீவு**

நடப்பாண்டிற்கு முன்னைய ஆண்டில் எஞ்சியுள்ள ஓய்வு அல்லது சுகவீன லீவு 01.01.2007 தொடக்கம் அமைய லீவும் கணிக்கப்படலாம்.

**காலங்கடந்த விடுமுறை**

நடப்பாண்டிற்கு முன்பே ஏதாவது ஒரு சோடி வருடங்களில் சேமித்த ஓய்வு அல்லது பிணி லீவு 01.01.2007 தொடக்கம் அமைய லீவும் கணிக்கப்படலாம். 2005/4 சுற்றுநிருபத்திற்கு அமைய 31.12.2004 வரை புள்ளியிடப்பட்டு பதவி உயர்வு வழங்கப்பட்டது. தொடர்ந்து 31.12.2008 வரை 2009/4 சுற்றுநிருபப்படி நீடிக்கப்பட்டு பதவியுயர்வு வழங்கப்பட்டது. 2004/45 சுற்றுநிருபம் 06.10.1994 முன்ன பயிற்றுனர் அல்லது பட்டதாரி நியமனம் பெற்ற ஆசிரியர்கள் பட்டப்பின் படிப்பு சித்தியடையாதிருந்தாலும் சிதித்தியடைந்ததாகக் கருதி பதவியுயர்வு வழங்கப்பட்டது. அதிபர் சேவை 1/1/97 இற்கு முதல் உள்வாங்கப்பட்டது. 95/5 சுற்றுநிருபத்திற்கு அமைய அதிபர் சேவை

SLPS - III
SLPS - 2 II
SLPS - 2 I
SLPS - I என 4 வகைக்குள் அடக்கப்பட்டுள்ளது. காலத்திற்குக் காலம் சேவை மூப்பின் அடிப்படையில் பதவியுயர்வு வழங்கப்படுகிறது.

மல்லாவி மத்திய கல்லூரியின் பொன் விழாவிற்கு வாழ்த்துரை வழங்குவதற்கு சந்தர்ப்பம் அளித்த விழாக் குழுவிற்கு நன்றிகளைக் கூறுவதுடன் மு/மல்லாவி மத்திய கல்லூரி மென்மேலும் மலர்ந்து வன்னிப் பெருநிலப்பரப்பின் கல்வி விருட்சமாக நிலைத்து நிற்க இறையருளை வேண்டி என் நல்லாசிகளை வழங்குகின்றேன்.

*திரு. மா. கதிரமலைப்பிள்ளை,*
*நிர்வாக உத்தியோகத்தர்,*
*துணுக்காய வலயம்*



# பாடசாலை வழிகாட்டல்
# ஆலோசனைச் சேவையின் வகிபங்கு

ஒரு பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைச் சேவை எவ்வகையைச் சேர்ந்ததாக இருந்தாலும் பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும் நிறைவேற்றவேண்டிய முக்கியமான வகிபங்குகளும் பொறுப்புக்களும் உள்ளன. எனினும் இவை அச்சேவையின் ஒழுங்கமைப்பு முறையைப் பொறுத்து வேறுபடக்கூடும்.

## பாடசாலை அதிபரினது வகிபங்குகளும் பொறுப்புக்களும்

பாடசாலையில் மாணவர்களது நன்மைகருதி செயற்படும் எல்லாவிதமான செயற்பாடுகளுக்கும் பாடசாலை அதிபர் தலைமைத்துவம் வழங்க வேண்டும். இது பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைச் சேவையைப் பொறுத்தளவிலும் பொருந்தும். எனவே பாடசாலை ஆலோசனைச் சேவையைப் பொறுத்தளவில் திபரின் கடமை தலைமைத்துவம் வழங்குவதாகும். அதைவிட அவர் வேறுசில கடமைகளையும் செய்யவேண்டியுள்ளது. உதாரணமாக அவர்,

- செயற்பாடுகளை ஒன்றிணைத்தல்
- பல்வேறு அதிகாரிகளுக்கிடையில் இணைப்பை ஏற்படுத்தல்.
- வளங்களை தேடுதலும் வழங்குதலும் .
- சேவை தொடர்பான தீர்மானங்களை எடுத்தல்.
- செயற்பாடுகளைத் திட்டமிடுதல்..
- இச்சேவை பற்றி மாணவர், ஆசிரியர், பெற்றோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

என்பவற்றைச் செய்வார். பரவலாக்கப்பட்ட ஒழுங்கமைப்புச் சேவையைப் பொறுத்தளவில் அதிபர் அச்சேவையின் ஒருங்கிணைப்பாளராகவும் செயற்படக்கூடும். ஆகவே, ஒருங்கிணைத்தலும் அதிபரது பொறுப்பாக அமையும்.

## ஆசிரியர்களின் வகிபங்கும் பொறுப்புக்களும்

சேவையின் ஒழுங்கமைப்பு மாதிரியைப் பொறுத்து ஆசிரியரது வகிபங்கு ஓரளவு வேறுபடக்கூடும். ஒருங்கிணைக்கப்பட்ட ஒழுங்கமைப்பிலும் ஆசிரியரே பாடசாலை ஆலோசகரது வகிபங்கை ஏற்பார். ஆலோசகர் என்ற முறையில் ஆசிரியர் பின்வரும் கடமைகளைச் செய்வார்.

- ஆலோசனை தேவைப்படும் மாணவரை இனங்காணல்
- அம்மாணவர்கள் பற்றிய விபரங்களைச் சேர்த்தல் ஆலோசனை வழங்கல்.
- பதிவேடுகளைப் பேணல்.
- அதிபர், ஆசிரியர், பெற்றோர், வெளியிலுள்ள வாண்மையாளர்கள்

  என்போருக்கிடையில் தொடர்பைப் பேணல்.

ஒருங்கிணைக்கப்பட்ட பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைச் சேவை ஒன்றில் ஆசிரியரின் வகிபங்கு பற்றிக் கருதினீர்களா? அவர் எளிதுபடுத்துபவர் என நீங்கள் இனங்கண்டிருந்தால் அது சரியானதே. அவருடைய பொறுப்பு பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

- ஆலோசனை தேவைப்படும் மாணவரை இனங்காணல்.
- தேவையான தகவல்களை ஆலோசகருக்கு வழங்குதல்
- பிரச்சினையுடைய மாணவர்களை ஆலோசனை பெறுவதற்கு ஊக்குவித்தல்.
- பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவை பற்றிய விழிப்புணர்வை ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் செயற்படுத்தல்.
- பாடசாலையில் வான்மைத்துவப் பயிற்சி பெற்ற ஆலோசகர்களிடம் மாணவர்களை அனுப்புதல்.
- பின்னூட்டல் வழங்குதல்.

மாணவர்களை நிபுணத்துவம் பெற்ற ஆலோசகர்களிடம் அனுப்பும் போது ஆலோசனைக்குப் பொருத்தமான அணுகுமுறையை ஆலோசகர் திட்டமிடுவதற்காக ஆசிரியர் மாணவர்களது பிரச்சினை பற்றிய சகல தகவல்களையும் வழங்கவேண்டும். இது முக்கியமானது. ஏனெனில் மாணவர்களுடன் நேரடியான தொடர்பு உடையவரும், அவர்களை நெருக்கமாக அவதானிப்பதற்குச் சந்தர்ப்பம் உடையவரும் ஆசிரியர் மட்டுமேயாவார்.

அதிபரதும் ஆசிரியரதும் பொறுப்புக்கள் சம்பந்தமாகக் கலந்துரையாடும் போது பெற்றோரிடையில் பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது முக்கியமானது. ஏனெனில் பெற்றோர், பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைச் சேவையில் பல வகைகளில் ஈடுபடவேண்டியுள்ளது. பொதுவாக இச்சேவை பற்றிய எதிர்மறையான கருத்தே பெற்றோரிடம் காணப்படுகின்றது. இதனால் தம் பிள்ளைகள் ஆலோசனையை நாடுவதை இவர்கள் தடுப்பதுடன் சேவைக்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்குத் தயங்கவும் கூடும். மேலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஆலோசனைச் சேவை வினைத்திறனுடையதாக அமைய வேண்டுமாயின் பெற்றோர் அதில் பிரதான பங்கு வகிக்க நேரிடுகின்றது. குறை நீக்கல் (Cremedical Action) செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டால் அவற்றைத் தொடர வேண்டியுள்ளதுடன் பின்தொடர் நடவடிக்கை (Follow up) தேவைப்படுகின்றது. எனவே பாடசாலை எதிர்கால சமுதாயத்தின் உயிர் நாடியாக விளங்கும் மாணவர்களை நல்வழிப்படுத்த பாடசாலையில் அதிபர், ஆயிரியர்கள் பல்வேறு வகிபாகங்களை எடுத்து வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**செல்வி. சி. சுஜிதா,**
**ஆசிரியை.**

# உலகின் புகழ்பெற்ற நூல்களும் ஆசிரியர்களும்

| | |
|---|---|
| ➢ மகாபாரதம் | :- வேதவியாசர் |
| ➢ இராமாயணம் | :- வான்மீகி |
| ➢ ஆர்த்தமுள்ள இந்துமதம் | :- கவிஞர் கண்ணதாசன் |
| ➢ கீதாஞ்சலி | :- இரவீந்திரநாத் தாகூர் |
| ➢ சாகுந்தலம் | :- காளிதாசன் |
| ➢ மேகதூதம் | :- காளிதாசன் |
| ➢ சத்தியசோதனை | :- மகாத்மா காந்தி |
| ➢ 1800 ஆண்டுகளுக்குமுன் தமிழூர் | :- கனகசபைப்பிள்ளை |
| ➢ ஆர்த்தசாஸ்த்திரம் | :- சாணக்கியன் |
| ➢ குடியரசு | :- பிளாற்றோ |
| ➢ மகாவம்சம் | :- மகாநாம தேரர் |
| ➢ வெனிஸ் வணிகன் | :- வில்லியம் சேக்ஸ்பியர் |
| ➢ பகவத்கீதை | :- வேதவியாசர் |
| ➢ திருக்குறள் | :- திருவள்ளுவர் |
| ➢ சிலப்பதிகாரம் | :- இளங்கோவடிகள் |
| ➢ கந்தபுராணம் | :- கச்சியப்பச் சிவாச்சாரியார் |
| ➢ சீறாப்புராணம் | :- உமறுப்புலவர் |
| ➢ யேசுகாவியம் | :- கவிஞர் கண்ணதாசன் |
| ➢ அரிச்சந்திர புராணம் | :- வீரக்கவிராயர் |
| ➢ நளவெண்பா | :- புகழேந்திப்புலவர் |
| ➢ ஆசாரக் கோவை | :- அப்துல் மஜிக் புலவர் |
| ➢ ஆசிய ஜோதி | :- தேசிய விநாயகம் பிள்ளை |

# பதினாறு பேறுகள்

- அறிவு
- அழகு
- ஆயள்
- இன்ப நுகர்ச்சி
- கல்வி
- வீரம்
- வெற்றி
- பணம்
- மக்கள்
- தானியம்
- சௌபாக்கியம்
- பெருமை
- தர்மம்
- துணிவு
- தேக ஆரோக்கியம்
- நுல்ல குடிப்பிறப்பு

# மூன்றின் பெருமை

| | |
|---|---|
| ➢ முத்தமிழ் | :- இயற்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் |
| ➢ முக்கனி | :- மா, பலா, வாழை |
| ➢ முச்சித்தர் | :- பிரம்மா, விஸ்ணு, உரத்திரன் |
| ➢ முத்தொழில் | :- படைத்தல், காத்தல், அழித்தல் |

# எமது கல்லூரி மாணவ தலைவர்கள்.




2005 ம் ஆண்டு தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கலிபோட்டி
ஸ்கிராப்போட்டி (SBA) ஜிலே தேசிய விருதினை பரீட்சை ஆணையாளர்
நாயகம் அநுர எதிரிசிங்க அவர்களிடம் பரிசினைப் பெறுதல்



நடன நிகழ்வின் போது




மகிழ்ச்சி இல்ல செயற்பாட்டின் போது



மாணவர்களுக்கான கருத்தரங்கு









# பொன் விழாவை முன்னிட்ட நிகழ்வுகள்



இறுவட்டு வெளியீடு



ரி-சேட் வெளியீடு



பேனா வெளியீடு



மரம் நடுகை



கண்காட்சியின்போது



நூலக வாரக் கண்காட்சி



ஆண்களுக்கான மேலணி உடை ஆரம்ப நிகழ்வு




பெண்களுக்கான மேலணி உடை ஆரம்ப நிகழ்வு

# பொன் விழாவை முன்னிட்ட நிகழ்வுகள்



ஆண்களுக்கான மரதன் ஓட்ட நிகழ்வு



பெண்களுக்கான மரதன் ஓட்ட நிகழ்வு



ஆசிரிய, மாணவர்களுக்கான வலைப்பந்தாட்ட நிகழ்வு



ஆசிரிய, மாணவர்களுக்கான கரப்பந்தாட்ட நிகழ்வு



ஆசிரிய, மாணவர்களுக்கான உதைபந்தாட்ட நிகழ்வு



அயற்பாடசாலை ஆண்களுக்கிடையிலான கால்பந்தாட்ட நிகழ்வு



அயற்பாடசாலை பெண்களுக்கிடையிலான வலைப்பந்தாட்ட நிகழ்வு



பழைய மாணவர்களுக்கும், மாணவர்களுக்குமான துடுப்பாட்ட விளையாட்டின்போது

# கல்லூரியில் நடாத்தப்பட்ட நிகழ்வுகள்


2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆசிரியர் தினத்தின்போது



2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற வாணிவிழாவின் போது


2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற சிறுவர் தினத்தின்போது



2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒளிவிழாவின் போது



விசேட கல்விக் கூடம் அடிக்கல் நாட்டு நிகழ்வின்போது


உள்ளக விளையாட்டரங்கு திறந்துவைத்தலின் போது


2011 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட இல்ல விளையாட்டுப்போட்டியின்போது



பிரிவுபசார நிகழ்வின்போது










- முக்காலம் :- இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்
- முப்பால் :- அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்
- முப்பொறி :- மனம், வாக்கு, காயம்
- மும்முரசு :- வீரமுரசு, கொடைமுரசு, மங்களமுரசு
- மூவேந்தர் :- சேரர், சோளர், பாண்டியர்
- மூவிடம் :- தன்மை, முன்னிலை, படர்க்கை
- முப்பொருள் :- பதி, பசு, பாசம்
- மும்மலம் :- ஆணவம், கன்மம், மாயை
- முப்படை :- தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை
- மூவுலகு :- மண்ணுலகு, விண்ணுலகு, பாதாளவுலகு
- முக்குரவர் :- தாய், தந்தை, குரு
- திரிகடுகம் :- சுக்கு, மிளகு, திப்பிலி

# தமிழ் இலக்கியத்தில் ஐந்து

**ஐந்திணை விரவிய நூல்கள்**

- நுற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநாறு
- கலித்தொகை
- அகநாநாறு

**பாவகை**

- வெண்பா
- கலிப்பா
- வஞ்சிப்பா
- மருட்பா
- ஆசிரியப்பா

**இலக்கணம்**

- சொல்லிணக்கணம்
- எழுத்திலக்கணம்
- பொருளிலக்கணம்
- யாப்பிலக்கணம்
- அணியிலக்கணம்

**ஆற்றுப்படை நூல்கள்**

- திருமுறுகாற்றுப்படை
- பொருணாற்றுப்படை
- சிருபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- தணிகையாற்றுப்படை

**ஐம்பெருங்காப்பியம்**

- சிலப்பதிகாரம்
- மணிமேகலை
- சந்தாமணி
- வளையாபதி
- குண்டலகேசி

**ஐங்குறுகாப்பியம்**

- சூளாமணி
- நீலகேசி
- யசோதர காவியம்
- உதயகுமாரன் ாகவியம்
- நாககுமாரன் காவியம்

**திருமதி ஜெ.தவநேசன்,**
**ஆசிரியை.**

# ஊனம் என்பது குறைபாடல்ல

அதிகாலை 4.30 மணியளவில் பக்கத்து வீட்டு பொன்னம்மாக்காவின் சேவல் கமலனின் தூக்கத்தைக் கலைத்தது. தூக்கத்தை முறித்து கண்விழித்த கமலனுக்கு மீண்டும் தூக்கம் சூழவில்லை அதனால் தலைமாட்டில் இருந்த வானொலியை முறுக்கினான் அதில் ஒலித்த “ ஊனம் ஊனம் ஊனம் யாருங்க உடம்பிலுள்ள குறைகள் எல்லாம் ஊனமில்லைங்க.......” என்ரு பாடல் அவனின் பழைய ஞாபகத்தை தூண்டியது.

கமலன் வீட்டில் ஐந்து சகோதரர்கள் அதில் கமலன் மட்டும் தான் ஆண் பிள்ளையும் மூத்த பிள்ளையும் மற்றைய ஐவரும் பெண்கள். இவர் குடும்பம் சந்தோசமானதும் ஒற்றுமையானதுமானவொரு குடும்பம். இவர்கள் நன்றாக படித்து வருகிறார்கள். ஆனால் சரியான ஏழைக்குடும்பம். ஒருவர் உழைக்கிற காசில எட்டுப்பேர் மொத்தமாக சாப்பிடுவதென்றால் கஸ்ரம் தானே கமலனின் அப்பா ஒரு சிறந்த விவசாயி அவ்வாறு வாழ்ந்து வருகிறார்கள். அன்றொருநாள் வெள்ளிக்கிழமை கோயிலுக்கு போயிற்று வந்து கொண்டிருந்த கமலன் கார் விபத்தொன்றில் காலை இழந்தான். பிழையாக கார் ஓட்டிய கார் ஓட்டுனர் அவர் பிழையை ஒப்புக்கொண்டு ஒரு இலட்சம் ரூபா காசு கொடுத்துவிட்டு சென்றுவிட்டான்..

பின் கமலனுக்கு போலிக்கால் பொருத்தி விட்டார்கள் அவன் இந்த விபத்தை எண்ணி வருந்தினாலும் கல்வியை முயற்சியுடனும் நம்பிக்கையுடனும் கற்றான். விபத்து நடந்த வருடமே சாதாரண தர பரிட்சையும் எழுதி திறமைச்சித்தி எய்தினான். அவன் மனதில் தான் ஊனம் என்ற எண்ணம் வேரூண்றியது இதற்குக்காரணம் இலவசமாக கொடுக்கும் பொருட்கள் என்றால் ஊனமுற்ற பிள்ளைகளுக்குத்தான் என்று எல்லோரும் கூறுவதுதான். இருந்தும் இவன் மருத்துவ பீடத்தை தெரிவு செய்து படிக்கலாம் என எண்ணுகிறான். எனினும் வசதியின்மை என்பதால் தன்னுடைய முயற்சியில் ஆசிரியராகவாவது வரவேண்டும் என்பதற்காக படிக்கிறான். அவ்வாறே சிறந்த மாணவனாகவும் கெட்டிக்காரனாகவும் திகழ்கிறான். போட்டிப்பரீட்சை ஒன்றிலும் தேசியமட்டத்தில் முதலிடத்தைப் பெற்று “தேசிய மாணவன்” என்ற பட்டம் ஜனாதிபதியால் வழங்கப்படுகிறது. சிலர் பொறாமைப் பட்டாலும் இவனது குடும்பம் மிகவும் சந்தோசமடைகின்றது. இதற்குள் ஒரு வருடம் முடிவடைகிறது.

இவ்வாறு வாழ்ந்துகொண்டிருக்கும் போது யுத்தம் ஏற்படுகின்றது. எறிகணைத்தாக்குதல் ஒன்றின் காரணமாக கமலனின் தந்தை இறந்துவிட்ட செய்தியினைக்கேட்ட கமலனுக்கு என்ன செய்வதென்று தெரியாது திகைப்புற்றுநிற்கிறான். மொத்தக்குடும்பமும் சொல்லென்னாத் துயரில் ஆழ்கிறது.

இவ்வாறு கமலனின் தலையில் குடும்பப்பொறுப்பு சுமத்தப்படுகிறது. எனினும் இவனது முயற்சி வீண் போகவில்லை. குடும்பத்தை தன்னால் இயன்றளவு பாதுகாத்து வருகிறான். எல்லாவற்றையும் இழந்தவள் போல கல்யாணி காணப்படுகிறாள் மகனின் ஆறுதல் வார்த்தைகளால் தேற்றப்படுகிறாள். பல மாதங்களின் பின் இராணுவக்கட்டுப்பாட்டை அடைகிறார்கள். அங்குள்ள முகாம் ஒன்றில் இவனுக்கு அடுத்த இரட்டைத்தங்கைகள் சாதாரண தர பரிட்சையில் தோற்றி சிறந்த பெறுபேற்றை அடைகிறார்கள். குடும்பமே மகிழ்ச்சிக்கடலில் மூழ்குகின்றது. அவர்கள் கமலனின் அறிவுரைக்கமைய விஞ்ஞானத் துறையைத்தெரிவு செய்து கல்வியை மேற்கொள்கின்றனர். அவனும் உயர்தரப்பரீட்சையை எழுதுகிறான். அவன் எதிர் பார்த்ததைவிட 3 பாடத்திலும் சிறப்புச்சித்தியடைகிறான். மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப்பெறுகிறான். எனினும் பல்கழைக்கழகம் செல்வது எப்படி என்று வருந்துகிறான். சில மாததுக்குப்பின் சொந்த இடத்தை அடைகிறார்கள். அங்கு சென்று இன்னொரு சகோதரிக்கு சிறப்பாக திருமணத்தை நடாத்தி வைக்கிறான்.

பின்பு தாயையும் மற்றைய சகோதரிகளையும் வீட்டில் விட்டுவிட்டு பல்கழைக்கழகம் செல்கின்றான். அங்கு சென்றும் பகலில் படிப்பதும்இரவில் வேலைக்கு சென்று உழைக்கும் பணத்தை குடும்பத்துக்கு அனுப்பி சகோதரிகளின் படிப்பையும் கவனித்து வந்தான். இவ்வாறே B.A பட்டத்தையும் பெற்றான். பின்பு சொந்த ஊரிலேயே ஆசிரியராகவும் கடமையேற்றான். மற்றைய சகோதரிகளுக்கும் சிறப்பாக திருமணத்தை நடாத்தி வைத்து தனது தாயாரையும் கண்ணை இமை காப்பது போல பாதுகாத்து வருகிறான். இவனது கால் ஊனமாகவிருந்தாலும் மற்றவர்களை வியப்பிலும் சந்தோசத்தில் ஆழ்த்துகின்றான்..

**வ. அருண்யா,**
**தரம் 11.**



ஐயப்பன்
புகைப்படகலையகம்
Digital
மல்லாவி. (பிள்ளையார் ஸ்டோஸ் அருகாமை)
தொ.பேசி இல: 0243247483, 0776859478
Ayyappan Studio & Video - Mallavi
அனைத்து மங்களகரமான நிகழ்வுகளையும் சிறந்தமுறையில்
வீடியோ,புகைப்படம் எடுத்திட நாடவேண்டிய ஒரே இடம்
உரிமையாளர்:- வே உருத்திரகுமார்
A9 வீதி மாங்குளம் A9 வீதி கனராயன் குளம்




பொன் விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்
பிறைவிழி
பல்பொருள் வாணிபம்
பலசரக்குப் பொருட்கள், உள்ளூர் உற்பத்தி
போன்றவற்றை மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதோடு
உள்ளூர் உற்பத்திப் பொருட்கள்
கொள்வனவும் இடம்பெறும்.
உரிமையாளர்:-க.புவனேஸ்வரன்
துணுக்காய் சாலை, மல்லாவி T.P:- 0243247459



# குத்தகைக் கணக்கீடு

## (ACCOUNTING FOR LEASING)

1.0) **அறிமுகம்**

21ம் நூற்றாண்டில் வர்த்தகத்தில் ஏற்பட்ட பாரிய விரிவாக்கம் காரணமாக பாரிய வியாபார ஸ்தாபனங்களில் வளர்ச்சிக்கு வழிகோலியது. இதனால் ஒவ்வொரு நிறுவனங்களும் பாரிய முதலீட்டுடன் உற்பத்தி வர்த்தக முயற்சிகளில் ஈடுபட வேண்டிய தேவை அதிகரித்தது. எனவே உற்பத்தி வர்தத்க முயற்சிக்குத் தேவையான இயந்திர உபகரணங்களைப் பெறுவதற்கு குத்தகை நிறுவனங்களை நாட வேண்டிய தேவைஉருவாகியது. இதனாலேயே குத்தகை அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்களின் வளர்ச்சி காரணமாக குத்தகை கணக்கீட;டிற்கானதேவை உருவாகியது.

2.0) **குத்தகை கணக்கீடு - வரைவிலக்கணம்**

குத்தகை கணக்கீடு தொடர்பான சட்டக்கட்டுப்பாட்டை மேற்கொள்வதாக இலங்கை கணக்கீட்டு நியமம் 19 அமைகிறது. இதற்கு அமைய குத்தகை என்னும் போது வாடிக்கையாளர் ஒருவரினால் யாதேனும் சொத்தொன்றை அல்லது சொத்து தொகுதியொன்றை குத்தகை வழங்குனரின் உடன்பாட்டிற்கு அமைய அக்காலம் முடியும் வரையில் பயன்படுத்துவதற்கான உரிமையினை ஏதேனும் கொடுப்பனவற்றிற்கு அமைய பெற்றுக்கொள்ளப்படுமாயின் அது குத்தகை எனப்படும்.

3.0) குத்தகையுடன் தொடர்புபடுவோர்

குத்தகை தொடர்பாக ஒப்பந்தம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும். குத்தகை ஓப்பந்தம் ஒன்றில் இரு பிரிவினர் தொடர்பு படுகின்றனர்.

1. குத்தகை கொள்வனவாளர்
2. குத்தகை விற்பனையாளர்

3.1) **குத்தகை கொள்வனவாளர்**

குத்தகை கொள்வனவாளர் என்னும் போது குத்தகை நிறுவனங்களிடமிருந்து சொத்துக்களை பெற்றுக் கொள்பவர்களை குறிக்கும். இவர்களை குத்தகை வழங்குனர் என்றும் அழைக்கலாம்.

3.2) **குத்தகை விற்பனையாளர்**

குத்தகை விற்பனையாளர் என்னும் போது குத்தகைக்கு சொத்துக்களை வழங்கும் நிறுனங்களை குறிக்கும்.

4.0) குத்தகையின் வகைகள்

உரிமையின் அடிப்படையில் குத்தகையை இருவகைப்படுத்த முடியும்.

1. நிதிக்குத்தகை
2. செயற்பாட்டுக்குத்தகை

4.1) நிதிக்குத்தகை

சொத்தொன்றின் உரிமையின் அடிப்படையில் உருவாகும் இடர் அனுகூலங்கள் குத்தகை ஒப்பந்த ஆரம்பத்தின்போதே குத்தகை விற்பனையாளரிடமிருந்து குத்தகை கொள்வனவாளருக்கு மகற்றப்படுமாயின அது நிதிக்குத்தகை எனப்படும்.

4.2) செயற்பாட்டுக்குத்தகை

சொத்தொதன்றின் உரிமையின் அடிப்படையில் உருவாகும் இடர், அனுகூலங்கள் குத்தகை ஒப்பந்த இறுதிவரை குத்தகை விற்பனையாளரிடம் இருக்குமாயின் அதனையே செயற்பாட்டுக்குத்தகை எனப்படும்.இங்கு இறுதிக்கட்டணம் செலுத்தப்பட்ட பின்பே சொத்தின் உரிமை கொள்வனவாளருக்கு மாறும்.

5.0) நிதிக்குத்தகை முறையின் நாட்குறிப்புப் பதிவுகள்

1. சொத்துக்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளும்போது குறித்த சொத்துக்கணக்கு வரவு குத்தகை விற்பனையாளர்கணக்கு செலவு
2. ஆரம்ப வைப்புக்கட்டணத்தை செலுத்தல்
   குத்தகை விற்பனையாளர்கணக்கு வரவு
   காசுவங்கிக்கணக்கு செலவு
3. குத்தகை வட்டியை பதிவு செய்தல்
   குத்தகை வட்டிக் கணக்கு வரவு
   குத்தகை விற்பனையாளர்கணக்கு செலவு
4. குத்தகை தவணைகட்டணம் செலுத்தல்
   குத்தகை விற்பனையாளர்கணக்கு வரவு
   காசுக்கணக்கு செலவு

5.1) நிதிக்குத்தகை முறையில் இரு உதாரணக்கணக்குகளை நோக்குவோம்

முறை I

கிரடிட் மேக்கன்ரைல் லீசிங் கம்பனியிடமிருந்து பிரியா கம்பனியானது 01.01.2005ல் இருந்து இயந்திரம் ஒன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்டது. மேலகிக தகவல்கள் வருமாறு

கொள்வனவுக்கிரயம் ரூ 204109
உடன்வைப்புப் பணம் (01.01.2005) ரூ 60000
மூன்று தவணைக்கட்டணங்கள் ரூ 60 000 படி ( வட்டியுட்பட)
மூன்று தவணைக்கட்டணங்களிலும் அடங்கியுள்ள வட்டி முறையை ரூ17293, ரூ12168, ரூ6430 ஆகும்.

வேண்டப்படுவது :- பிரியாகம்பனி ஏட்டில் குத்தகை தொடர்பான கணக்குகள்

இயந்திரக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| கிரடிட்மேக் | 204,109.00 | மீ.செ | 204,109.00 |
| | 204,109.00 | | 204,109.00 |
| k Rகீ/வ | 204,109.00 | | |

குத்தகைக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 2005 | | | |
| கிரடிட் | 17,293.00 | இ.ூ.க | 17,293.00 |
| | 17,293.00 | | 17,293.00 |
| 2006 | | | |
| கிரடிட் | 12,168.00 | இ.ூ.க | 12,168.00 |
| | 12,168.00 | | 12,168.00 |
| 2007 | | | |
| கிரடிட் | 6,430.00 | இ.ூ.க | 6430.00 |
| | 6,430.00 | | 6430.00 |

## இயந்திரக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மல்ரி லீசிங் | 3,000,000.00 | மீ/கீ/செ | 3,000,000.00 |
| | 3,000,000.00 | | 3,000,000.00 |
| மீ/கீ/வ | 3,000,000.00 | | |

## குத்தகைக் கணக்கு 2005

| | | | |
|---|---|---|---|
| 2005 | | | |
| கிரடிட் | 17,293.00 | இ.ற.க | 17,293.00 |
| | 17,293.00 | | 17,293.00 |
| 2006 | | | |
| கிரடிட் | 12,168.00 | இ.ற.க | 12,168.00 |
| | 12,168.00 | | 12,168.00 |
| 2007 | | | |
| கிரடிட் | 6,430.00 | இ.ற.க | 6430.00 |
| | 6,430.00 | | 6430.00 |

## மல்ரி லீசிங் கம்பனி

| | | | |
|---|---|---|---|
| வைப்பு | 500,000.00 | 2006 | |
| வங்கி | 835,949.00 | இயந்திரம் | 3,000,000.00 |
| மீ/செ | 2,164,051.00 | குத்தகை வட்டி | 500,000.00 |
| | 3,500,000.00 | | 3,500,000.00 |
| | | 2007 | |
| வங்கி | 835,949.00 | மீ/கீ/வ | 2,164,051.00 |
| மீ/செ | 1,760,912.00 | குத்தகைவட்டி | 432,810.00 |
| | 2,596,861.00 | | 2,596,861.00 |
| | | 2008 | |
| வங்கி | 835,949.00 | மீ/கீ/வ | 1,760,912.00 |
| மீ/செ | 1,277,146.00 | குத்தகை வட்டி | 352,183.00 |
| | 2,113,095.00 | | 2,113,095.00 |
| | | 2009 | |
| வங்கி | 835,949.00 | மீ/கீ/வ | 1,277,146.00 |
| மீ/செ | 696,626.00 | குத்தகை வட்டி | 255,429.00 |
| | 1,532,575.00 | | 1,532,575.00 |

2010

6.0) முடிவுரை

குத்தகை கணக்கு தொடர்பாக பல்வேறு பட்ட முறைகள் காணப்பட்ட போதிலும் உயர்தர மாணவர்களுக்கு ஏற்ற வகையில் தேவை யானவைகளை கவனத்திற் கொண்டு இலகுவான முறையில் இரு கணக்கீடுகள் ஆராயப்பட்டமை தெளிவாகின்றது


உசாத்துணை நூல்கள்


1. Business Accounting – Frank wood( 1st Edition)
2. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி (தேசிய கல்வி நிறுவகம்
3. யாழ் பல்கலைக்கழகத்தின் கருத்தரங்கு வழிகாட்டி
4. CIMA STUDY PACK



**திரு. ச. வின்சன்ற்**
**ஆசிரியர்,**
**மல்லாவி மத்திய கல்லூரி.**


பொன் விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்
ரூபி நகைமாடம்
Ruby Jewellers
உங்களுக்கானதோர் தங்கநகை வியாபாரம்
22கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடனும்
நம்பிக்கையுடனும் குறித்த தவனையில்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
உரிமையாளர்:- ச.செல்வனேசா (ரூபி ஐயா)
துணுக்காய் சாலை, மல்லாவி
T.P: - 0778718463


பொன் விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்
Pillaiyar Hardware & Motor Stores
Dealers in Hardware & Spare parts
சகல வாகனங்களுக்குமான உதிரிப்பாகங்கள்
விவசாய உள்ளீடுகள்
கட்டடப் பொருட்கள்
சீபாங் இருசக்கர உழவு இயந்திரங்கள்
பெயின்ற் வகைகள்
வீட்டுத்தளபாடப் பொருட்கள்
அனைத்தையும் பெற்றிட நாடுங்கள்
T.P: - 0214925571,0773632879
Thunukai Road Mallavi
Kandy Road Kilinochchi.



# கோளமயமாதல்

எமது காலத்தில் கோளமயமாக்கல் எனும் வலமையான சக்திகளும்; அறிவுப்புத்தாக்கம் என்பவற்றினால் மென்மேலும் உந்தப்படும் பொருளாதாரமும் எமது உலகை தட்டையாக்கிவிட்டது, என்ற கருத்துக்கூறப்படுகின்றது. அதாவது தொலைவிலுள்ள இடங்களை இணைக்கும் உலகளாவிய சமுக உறவானது செறிவடையும் போது பல மைல்களுக்கு அப்பால் நிகழும் நிகழ்வுகள் உள்ளூர் நிகழ்வுகளை வடிவமைக்கின்ற தன்மையினை கோளமயமாக்கல் என்கின்றோம்.

அடுத்து கோளமயமாக்கல், தொழிநுட்பம் ஆகிய ஒன்றிணைந்த சக்திகள் எவ்வாறு இதற்கு முன் உலகில் கண்டிராத அளவில் கல்வி சர்வதேசமயமாக்கப் படுவதற்கு வழிவகுப்பதில் வெறடறி கண்டுள்ளன. கோளமயமாக்கலும் தொழில்நுட்பமும் மிகவும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளதால் கோளமயமாக்கலில் தொழிநுட்பமானது முக்கியமான ஒரு கூறாகிவிட்டதைக் காணக்கூடியதாக உள்ளது.

கோளமயமாக்கல் என்பதற்கு பல்வேறு விதமான கருத்துக்கள் கூறப்படுகின்றது. திறந்த எல்லைகளில்லாத உலக பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக நாடுகளுக்கியைிலான நகர்வுகளைத் தளர்த்துதல் அல்லது அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை நீக்கும் செயன்முறை என்னும் சமுகத்தொடர்புகள், கொடுக்கல்வாங்கல்கள் என்பவற்றிற்கு இடையில் உள்ள ஒழுங்கமைப்பில் மாற்றத்தைச் சேர்க்கின்ற ஓர் செயன்முறை என்றும் கருத்துக்கள் கூறப்படுகின்றது. அதாவது குறுகிய வட்டத்தில் காணப்படுகின்ற சமுக உறவுகள் புவியியல் தடைகளை நீக்கி விடுவதுடன் பொருட்களினதும் மக்களின் அறிவின் அசைவினையும் தாராளமாக்கி விடுகின்ற ஒரு செயற்பாட்டில் கோளமயமாதல் விழங்குகின்றது.

கோளமயமாக்கலை முன்மொழிபவர்கள் பூகோள மாற்றங்களின் காரணமாக ஒன்று சேரும் புதிய பிறப்பு என பரவலாகக் கூறப்படுகின்றது. திறந்த உலகின் சிறந்த தொடர்புகள் காரணமாக புதிய வகையான பொருட்களும் புதிய கருத்துக்களையும் மக்களது வாழ்வில் செம்மைப்படுத்தும் மக்களை மென்மேலும் வலுவூட்டும் ஒரு உந்து சக்தியாக கொள்ளப்படுகின்றது.

பூகோள மயமாக்கலானது உலகின் கல்வி, அரசியல் ,பொருளாதாரம் ,கலை, கலாசாரம் என்பவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. பூகோளமயமாக்கலின் சிந்தனைகள் நவீன போக்குடையதாக உள்ள போதும் எவ்வித மாற்றங்களுமின்றி அதாவது தமது நாட்டிற்குப் பொருந்தக்கூடியவாறு மாற்றாது அப்படியே அந்நாட்டிற்குள் பிரயோகிப்பது அந்நாட்டிற்கு பாரிய எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும். இன்று வளர்ச்சி அடைந்த நாடுகளில் தொழிநுட்பம் சார்ந்த கல்வி முறைமை அதிகளவிலும் வளர்ச்சியடையாத நாட்டில் குறைவான தொழில்நுட்ப கல்வி முறையும் வழங்கப்பட வேண்டும். என்ற காரணத்தால் பூகோளமயமாக்கலில் தொழில் நுட்பம் சார்ந்த கல்வி முறைமை வளர்ந்து வருகின்றது எனலாம்.

**கிருபாறஞ்சினி குணாளன்,**
**ஆசிரியர்,**
**மல்லாவி மத்திய கல்லூரி.**



# நேரத்தின் மகிமை

நேரம் என்பது ஒரு வளம். பெறுமதி மகிக் வளம். நேரத்தின் மதிப்பை உணர்ந்த ஆங்கிலேயர்கள் "ரேம் பொன்னானது" என்று போற்றுகின்றார்கள். (வுஅைந ளை புழடன) இதனை "பருவத்தே பயிர்செய்" என்று அழகாகச் சொல்லிச் சென்றார்கள் எங்கள் மூதாதையர். "நேரமும் கடல் அலையும் எவருக்காகவும் காத்திருப்பதில்லை" என்கிறது இலக்கியத் தமிழ். "நேரத்தை மதிக்காதவன் தன்னையே மதிக்காதவனாகின்றான்." என்கிறது ஓர் அமுதவாக்கு.

ஒரு மணித்தியாலத்தில் 60 நிமிடங்கள், ஒரு நாளுக்கு 1440 நிமிடங்கள், ஒரு மாதத்தில் 43200 நிமிடங்கள், ஒரு வருடத்தில் 518400 நிமிடங்கள் என விரிந்து செல்கிறது காலக் கணக்கு. இந்தக் கணக்க எல்லோருக்கும் பொதுவானது. இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்தது. ஏழை, பணக்காரர் என்ற வர்க்க வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது.

இந் நிமிடங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துபவர்கள் வாழ்க்கையில் வெற்றியடைகின்றார்கள். தங்கள் இலக்குகளை அடைந்து கொள்கிறார்கள். வாழ்வின் உயர்ந்த படிநிலைகளில் மிளிர்கிறார்கள். ஏனையோர் மதிக்கும் வகையில் வாழ்கிறார்கள்.

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்

கருதி இடத்தால் செயின்"

என்பது வள்ளுவர் வாக்கு. கால்த்தால் அழியாத பொய்யாமொழி. இது இதனைப் பின்பற்றி நடப்பவர்கள் வெற்றிக் கனிகைளச் சுவைத்து மகிழ்கிறார்கள்.

மாறாக நேரத்தைச் சரியான முறையில் பயன்படுத்தத் தவறுபவர்கள் அருமையான வாய்ப்புகளையும், சந்தர்ப்பங்களையும் தவறவிடுகிறார்கள். தங்கள் இலக்குகளை இழந்து தவிக்கிறார்கள். தங்களுக்கும், தங்களைச் சார்ந்திருப்பவர்களுக்கும் சங்கடங்களை ஏற்படுத்துகிறார்கள்.

"போர்ப் படைதனில் தூங்கியவன் வெற்றியிழந்தான்

உயர் பள்ளிதனில் தூங்கியவன் கல்வியிழந்தான்

கடைதனில் தூங்கியவன் முதல் இழந்தான் - கொண்ட

கடமையில் தூங்கியவன் புகழ் இழந்தான்"

என காலத்தை உதாசீனம் செய்பவர்கள் படும் அவலத்தை இனிமையாகச் சொல்கின்றன அழியாப் புகழ் பெற்ற இந்தப் பாடல் வரிகள்.

மாணவர்கள் தங்கள் கல்வியின் சிறப்பான விளைவைப் பெறுவதற்கு நேரத்தைச் சரியான முறையில் பயன்படுத்துவது அவசியமாகின்றது. அதற்காகச் சில ஆலோசனைகள்.

1) முன் கூட்டியே திட்டமிடுங்கள், வரும் நாட்களில் படிக்க வேண்டியவை எனைய வேலைகள் பற்றி முன் கூட்டியே சிந்தித்து அதற்கேற்றவாறு நேரங்களை ஒதுக்குங்கள். திட்டமிடுவதற்காக அதிக நேரம் செலவு செய்ய வேண்டாம். கிடைக்கின்ற வாய்ப்புக்களைப் பயன்படுத்துங்கள். உதாரணமாக பாடசாலை நிறைவடையும் முன் கிடைக்கின்ற மௌன நேரம் அன்றிரவு படிக்க வேண்டியவை பற்றித் திட்டமிட சிறந்த சந்தர்ப்பமாக அமையலாம்.

2) உங்கள் திட்டங்கள் மனதில் மட்டும் இருந்தால் போதாது. நாட்குறிப்பில் அல்லது சிறிய குறிப்பு புத்தகமொன்றில் எழுதுங்கள். முடிந்தவரை அதன்படி செயற்படுங்கள். ஒவ்வொரு நாளும் இரவு

தூங்கச் செல்லும் முன் எவ்வளவு தூரதம் அதன்படி உங்களால் செயற்பட முடிகிறது என்பதைச் சுயபரிசோதனை செய்யுங்கள்.

3) எப்போதும் எந்த நிகழ்விற்கும் உரிய நேரத்திற்குச் செல்வது என்பதை உங்கள் கொள்கையாக வைத்திருங்கள். அதன்படி செயற்படுங்கள். "தமிழர்களுக்குப் பிடித்த மதம் தாமதம்" என்ற கருத்தை மாற்ற முடியும். முதலில் நீங்கள் மாறுங்கள்.

4) எந்த இடத்திலும் உங்கள் பணியைச் சிறப்பாகச் செய்யுங்கள். உங்கள் பணி நிறைவடைந்தவுடன் அந்த இடத்திலிருந்து அகன்று விடுங்கள். தேவையில்லாத இடங்களில் நேரத்தை வீணாக்காதீர்கள். தேவையில்லாத சம்பவங்களும் அரட்டை அரங்கங்களும் உங்கள் பொன்னான நேரத்தை விழுங்கிவிடுவது மட்டுமன்றி, படிப்பதற்கான உங்கள் மனநிலையிலும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

5) உங்கள் நேர அட்டவணையைச் சரியாகச் செயற்படுத்துவதற்கு உதவக்கூடிய முன்னேற்பாடுகளில் கவனம் செலுத்துங்கள். உதாரணமாக மறுநாள் பாடசாலை செய்வதற்கு முதல் நாளே சீருடைகளையும் புத்தகங்களையும் ஒழுங்கு செய்து வையுங்கள்.

6) "முடியாது" என்று சொல்லத் தயாராக இருங்கள். உதாரணமாகப் பாடசாலைக்குப் படிக்கின்ற காலத்தில் படம் பார்க்கக் கூப்பிடும் நண்பனிடம் உடனடியாகவே இங்கிதமாக மறுத்து விடலாமே, முதலில் ஒப்புக்கொண்டு பின்னர் ஒழிவதை விட அல்லது வேண்டா வெறுப்பாகக் கலந்து கொள்வதை விட முதலிலேயே மறுப்பது புத்திசாலித்தனமானது. இதனால் உங்கள் மீதான மதிப்பு இன்னும் ஒருபடி உயரும்.

7) இணையத்தையும் தொலைபேசியையும் தேவைக்கேற்ப சிறப்பாகப் பயன்படுத்துங்கள். ஞாபகம் வைத்திருங்கள். தொலைபேசி ஒரு பொழுது போக்கு ஊடகமல்ல. சுருக்கமாகக் கதையுங்கள். இணையம் பற்றிய ஆலோசனை வேண்டாமே! பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக வருகிறதே.

8) மறந்து விடாதீர்கள். நாள் முழுவதும் இடைவிடாது படித்தால் சிறந்த பெறுபேறு வராது. மன அழுத்தம் தான் வரும். இடையிடையே சிறிது நேரம் ஓய்வெடுங்கள். மணித்தியாலத்திற்கு ஒருமுறை பாடலொன்றைக் கேட்கலாம். முடியுமாயின் ஒரு தடைவ காயத்ரீ மந்திரம் கேட்டுப் பாருங்கள்.

9) அதிக நேரம் படிப்பதை விட கருத்தொன்று படிப்பது முக்கியமானது. இரவு பதினொரு மணிவரை படிப்பதென்பது பெரிய விடயமில்லை. ஆனால் நீங்கள் படித்துக்கொண்டிருக்கும் போது பதினொரு மணி வந்தால் அது சிறப்பு. நீங்கள் கருத்தொன்றிப் படிக்க முடியாத நிலையிலிருப்பதை உணர்ந்தால் சிறிது நேரம் படிப்பதை நிறுத்துங்கள். ஒரு தடைவ வீட்டிற்கு வெளியிற் சென்று தூய காற்றின் ஸ்பரிசத்தை அனுபவியுங்கள். உங்கள் மனதுக்குப் பிடித்த செயலொன்றைச் செய்த பின் படிப்பைத் தொடருங்கள்.

10) மேலேயுள்ள 9 விடயங்களுக்கும் அடிப்படையான விடயம் ஒன்றுண்டு. அது ஆரோக்கியம். தேர்வு நேரத்தில் நோய் வருமாயின் அத்தனை உழைப்பும் பாழாகிவிடும். நல்ல உணவு, சிறிது நேரதம் விளையாட்டு, சிறிது நேரம் ஓய்வு, போதியளவு நித்திரை மூலம் உடலையும் மனதையும் ஆரோக்கியமாகப் பேணுங்கள்.

இந்தக் கட்டுரையால் நேரம் தொடர்பான உங்கள் மனப்பாங்கில் சிறிதளவேனும் மாற்றம் ஏற்படுமாயின் இந்தப் பொன்விழா மலர் மேலும் சிறப்புப் பெறும். மல்லாவி மத்திய கல்லூரி அன்னையின் மணி மகுடத்தில் நீங்களும் ஒரு முத்தாக ஒளி வாழ்த்துக்கள்.

**சிவரத்தினம் சிறீலக்ஸ்மன்**
**(முன்னாய் ஆசிரியர்),**
**பிரான்ஸ்.**

# Stress at workplace

Stress is the general term applied to the pressures people feel in life. We can define the stress as "An individual's adaptive response to a situation that is perceived as challenging or threatening to the person's well being". The stress is the excitement, feeling of anxiety, and/ or physical tension that occurs when the demands placed on an individual are through to exceed his ability to cope. Stress plays a very important role in everyday life of an individual.

Stress may be positive or negative. Positive stress is called as Eustress, which is the pleasurable stress that accompanies positive events. For an example when a person gets married, he will affect the eustress. Negative stress is called as distress which is the unpleasant stress that accompanies negative events.

Everyone has the particular level of stress. But someone is only affected by the work stress. Now days, Work stress has become a common and costly problem in the work place. Most of us are aware that employees stress is an increasing problem in organization. Because of the high pressure job with important responsibility and many problems. Because many people are spending their more and more days in the work place. So stress management at work place plays important role in the workers' productivity, physical and emotional health of workers, personality of all human being, and so on.

Therefore all people have to find the ways to reduce the stress at workplace. Causes of stress at the work place are

- Work over load
- Time pressures
- Poor quality of supervision
- Insecure job climate
- Inadequate authority to match responsibilities
- Role conflict
- Differences between company and employee values.
- Long working hours
- Lack of involvement decision

The most stressful jobs and least stressful jobs are

| Most stressful jobs | Least stressful jobs |
|---|---|
| High school Teacher | Forester |
| Police officer | Book binder |
| Miner | Telephone line worker |
| Medical intern | Millwright |
| Stock broker | Repair person |
| Journalist | Civil engineer |

The ways to reduce the stress at workplace are

- Assessing personality types and managing stress levels accordingly.
- Putting balanced work schedules together.

- Implementing an Employee Assistance Program (EAP)
- Breaking project work into smaller pieces.
- Providing time management and stress management courses.
- Offer rewards and incentives.
- Providing opportunities for social events.
- Providing training for gymnastic activities/ sports.
- *Learning better communication skills*
- *Identifying the bad habits and negative attitudes* that add to the stress we experience at work.

***References.***


- Organizational Behavior, Steven L McShane, Mary Ann Von Glinow, Radha R Sharma – 4th edition
- Organizational Behavior, Hellriegel And Slocum
- www.Gmail.com



***K.Sinthuja,***
***3rd year management,***
***University Of Jaffna.***



# வங்கியியல்

நவீன் பொருளாதார தரத்தின் பணம் பொருளாதாரம் என அழைக்கப்படுகின்றது. அதாவது பணத்தினை மையமாகக் கொண்டு பொருளாதாரம் செயற்படுவதால் நவீன பொருளாதாரத்தைப் பணப்பொருளாதாரம் என அழைக்கின்றனர். இதனடிப்படையில் பணத்தோடு தொடர்புடைய நிதி நிறுவனங்களாகிய வங்கிகளின் செயற்பாடு முக்கியத்துவம் பெறுகின்றது. அந்த வகையில் நாம் இங்கு

1) வணிக வங்கியின் செயற்பாடு
2) மத்திய வங்கியின் செயற்பாடு

ஆகிய இரு வங்கிகளின் செயற்பாட்டை விரிவாக நோக்குதல் வேண்டும். அடுத்து நாம் வணிக வங்கியினை நோக்குவோமாயின்

## வணிக வங்கி

வணிக வங்கி என்பது "பொது மக்களிடம் உள்ள மிகையாக உள்ள பணத்தை வைப்புக்களாகத் திரட்டி பணம் தேவைப்படுபவர்களுக்கு அவற்றைக் கடனாக வழங்கும் அதே வேளையில் கேள்வி வைப்புகளை பேணி வரும் நிதிநிறுவனங்கள்" வணிக வங்கி எனப்படும்.

வணிக வங்கி ஒர் இடையீட்டு நிதி நிறுவனங்கள் அல்லாது நிதித் தரகர் தொழில் நிறுவனங்கள் எனவும் அழைக்கப்படும். ஏனெனில் மிகையாகப் பணம் உடையவர்களிடம் இருந்து வைப்புக்களைப் பெற்று பணம் தேவைப்பட உள்ளவர்களுக்கு கடன்களை வழங்குவதன் காரணமாகவே வணிக வங்கிகளை இடையீட்டு நிதி நிறுவனங்கள் என வரையறை செய்யப்படுகின்றன.




வணிக வங்கிகளுக்கும் சேமிப்பு வங்கிக்கும் முதலீட்டு வங்கி போன்ற ஏனைய நிதிநிறுவனங்களுக்கும் இடையேயான வேறுபாட்டை நோக்குமிடத்து வணிக வங்கிகள் கேள்வி வைப்பு, சேமிப்பு, நிலையான வைப்புக்களைப் பேணுகின்றது. ஆனால் தேசிய சேமிப்பு வங்கி போன்ற, நிதி நிறுவனங்கள் கேள்வி வைப்புக்களை பேணுவதில்லை. அவை சேமிப்பு, நிலையான வைப்புக்களைப் பேணுகின்றது.

வணிக வங்கிகள் கேள்வி வைப்பினைப் பேணுவதால் கடனாக்கம் (பணவாக்கம்) செய்யக்கூடிய ஆற்றல்களைக் கொண்டிருக்கின்றன. ஆனால் தேசிய சேமிப்பு வங்கிகள் போன்ற நிதி நிறுவனங்கள் கேள்வி வைப்பினைப் பேணாமையால் கடனாக்கம் செய்யக்கூடிய ஆற்றலைக் கொண்டிருப்பதில்லை. எனவே வணிக வங்கிகளுக்கும், ஏனைய நிதி நிறுவனங்களுக்கும் இடையேயான வேறுபாட்டை நோக்குமிடத்து வணிக வங்கிகளை ஏனைய நிதி நிறுவனங்களிடம் இருந்து வேறுபடுகின்றது.

1) வணிக வங்கிகள் கேள்வி வைப்பைப் பேணுதல்.
2) கேள்வி வைப்பைப் பேணுவதால் கடனாக்க சக்தி உடையது.

போன்றவையே வேறுபடுகின்ற அம்சங்கள் ஆகும்.

### வணிக வங்கிகளின் தொழிற்பாடுகள்

வணிக வங்கிகள் நிதித்தரகர் தொழிலை வினைத்திறன் உடையதாக மேற்கொள்வது வணிக வங்கியின் பிரதான தொழிற்பாடு ஆகும். இந்நிலையில் இத் தொழிற்பாட்டை இரண்டு வகைப்படுத்தி நோக்க முடியும். அவை

01) முதன்மைத் தொழிற்பாடுகள்
02) துணைத் தொழிற்பாடுகள்.

### முதன்மைத் தொழிற்பாடுகள்

1) பொது மக்களிடமிருந்து கேள்வி வைப்புக்களைத் திரட்டுதல்

2) சேமிப்பு வைப்பு, நிலையான வைப்புக்களைத் திரட்டுதல்
3) பொது மக்கள் வைப்புக்களைக் கேட்கும் போது மீள வழங்குதல்
4) கடன் வழங்குதல்
5) முதலீடுகளை மேற்கொள்ளுதல்

**துணைத் தொழிற்பாடுகள்**

1) உண்டியல்களைத் கழிவுசெய்தல்
2) வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளுதல்
3) வாடிக்கையாளர்களின் நிதி நிலைமை தொடர்பான உறுதிப்படுத்தல் கூற்றுக்களை வழங்கும்.
4) வாடிக்கையாளர்களின் பெறுமதி வாய்ந்த சொத்துக்களையும் ஆவணங்களையும் பாதுகாத்துக் கொடுக்கும்.
5) வாடிக்கையாளர் சார்பாக நீதிமன்றம் வரை சென்று வழக்காடும்.
6) நகை அடகு பிடித்தல்.
7) வாடிக்கையாளர்கள் செலுத்த வேண்டிய சென்மதிகளை அவரவர் கணக்கு நிலுவையிலிருந்து கட்டளைப் பெயரில் செலுத்தும்.
8) ஏனைய சேவைகளை வழங்குதல்.

**வணிக வங்கியினால் திரட்டப்படும் வைப்புக்களின் வகைகள்**

வணிக வங்கியினால் திரட்டப்படும் வைப்புக்களை நோக்கும் போது
1) கேள்வி வைப்பு / நடைமுறை வைப்பு (Current Deposite)
2) நிலையான வைப்புகள் (Fixed Deposite)
3) சேமிப்பு வைப்புகள் (Saving Deposite)
4) ஏனைய விசேட வைப்புகள் (சிறுவர் கணக்கு, முதியோர் கணக்கு)

**கேள்வி வைப்பு /நடைமுறை வைப்பு**

கேள்வி வைப்பு என்பது வைப்பாளர்களினால் கேட்டவுடன் காலதாமதமின்றி உடனடியாக வணிக வங்கியினால் திருப்பி செலுத்தப்படவேண்டிய வைப்புகளே கேள்வி வைப்புகள் ஆகும். இவ் வைப்புகளை காசோலை எழுதுவதன் மூலம் மீளப்பெற முடியும். இதற்கு வட்டி வழங்கப்படுவதில்லை.

இவ் வைப்புகளை தன்னியக்க கொடுப்பனவு இயந்திர அட்டைகளை (ATM Cards) பயன்படுத்தியும் கேள்வி வைப்புகளை மீளப்பெறும் வசதிகளை வணிக வங்கிகள் அண்மைய காலத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.

**சேமிப்பு வைப்பு**

சேமிப்பு வைப்புகள் இலகுவாகப் பணத்தை மீளப்பெறக்கூடிய வைப்புக்கள் சேமிப்பு வைப்பு ஆகும். இவ் வைப்புகளை மீளப்பெற வங்கிக்கு சென்று மீளப்பெறும் பத்திரத்தைப் பயன்படுத்தியும் ATM அட்டைகளைப் பயன்படுத்தியும் இவ் வைப்புகளை மீளப்பெற முடியும். இவ் வைப்புக்களுக்கு வட்டு வழங்கப்படும். இவ் வைப்புக்களை காசோலை எழுதுவதன் மூலம் பணமாக மாற்ற முடியாது.

**நிலையான வைப்புகள்**

குறிப்பிட்ட கால முதிர்ச்சியின் பின்னர் திருப்பிச் செலுத்தப்படும். என்ற நிபந்தனையின் பேரில் வணிக வங்கியினால் உருவாக்கப்படும் வைப்புக்களே நிலையான வைப்புக்கள் எனப்படும். இவ் அமைப்புக்கள் 3, 6, 12, 18, 24 மாதங்கள் என முதிர்ச்சிக் காலங்கள் கொண்டதாகக் காணப்படும். இவ் வைப்புக்களுக்கு சேமிப்பு வைப்புக்களிலும் பார்க்க கூடுதலான வட்டி வழங்கப்படும்.

இதனைக் குறிப்பிட்ட முதிர்வுக்கு முன்னர் மாற்றப்பட்டால் சாதாரண சேமிப்புக்கு உரிய வட்டியே வழங்கப்படும்.

**வணிக வங்கியின் நோக்கங்கள் / குறிக்கோள்கள்**

வணிக வங்கியின் நோக்கங்கள் என்பதன் கீழ் பின்வரும் பிரிவுகள் காணப்படுகின்றன.

1) திரவத் தன்மையைப் பேணுதல்
2) இலாபத்தை உழைத்தல்

போன்ற நோக்கங்களைக் கொண்டே வணிக வங்கிகள் செயற்படுகின்றன.

வாடிக்கையாளர்கள் கேட்டவுடன் அவர்களின் வைப்புக்களை முதல் நட்டமின்றியும் காலதாமதமின்றியும் பணமாக மாற்றிக்கொள்ளக்கூடிய ஆற்றலே வணிக வங்கியின் திரவத்தன்மை ஆகும். வாடிக்கையாளர்களின் நம்பிக்கைத்தன்மையைப் பேணுவதற்கு வணிக வங்கிகள் திரவத்தன்மையைப் பேணுதல் வேண்டும்.

வணிக வங்கிகளின் நோக்கங்களில் அடுத்தது இலாபத்தை உழைத்தல் ஆகும். ஏனெனில் ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குதல், பங்குதாரர்களுக்கு வருமானத்தைப் பெற்றுக்கொள்ளுதல் நிர்வாகச் செலவுகளை ஈடுசெய்தல் எதிர்காலத்தில் தம்மை விஸ்தரித்துக் கொள்வதற்கு இலாபத்தை உழைக்க வேண்டியுள்ளது. இவ்விரு நோக்கங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாகும். அதாவது வணிக வங்கிகள் நூறு வீதம் திரவத்தன்மையைப் பேணுமானால் இலாபம் பூச்சியம் ஆகும். மாறாக நூறு வீதம் இலாபத்தைப் பேணுமாயின் திரவத்தன்மை பூச்சியம் ஆகும். எனவே இவ்விரு நோக்கங்களுக்கும் இடையே சமநிலையைப் பேணுவதன் மூலம் வணிக வங்கிகள் நீண்ட காலம் செயற்படக்கூடியதாக இருக்கும். வணிக வங்கிகளின் செயற்பாட்டில் வெற்றி தங்கியுள்ளது எனலாம். இதற்கமைய வணிக வங்கிகள் தமது பொறுப்புக்களை சொத்துக்களாக மாற்றிக்கொள்கின்றது. அதாவது திரவத்தன்மையுடைய சொத்துக்களாகவும் திரவத்தன்மை குறைந்த இலாபகத் தன்மையுடைய சொத்துக்களாகவும் மாற்றிக்கொள்கின்றது.

**வணிக வங்கிகளின் சொத்துக்கள்**

1) கையிருப்பிலுள்ள காசு
2) திறைசேரி உண்டியல்
3) திறைசேரி முறிகள்
4) வர்த்தக உண்டியல்கள்
5) மத்திய வங்கியிலிருந்து வரவேண்டியவை
6) கடன்களும் மேலதிகப் பற்றுக்களும்
   1. கடன்கள்
   2. மேலதிகப் பற்று
7) நிலையான சொத்துக்களும் ஏனைய சொத்துக்களும்.

**வணிக வங்கிகளின் திரவச் சொத்துக்கள்**

1) வங்கியின் கையிலுள்ள காசு
2) வணிக வங்கிகளின் பெயரில் மத்திய வங்கியிலுள்ள காசு
3) வெளிநாட்டுச் செலவாணியும் நிலுவையும்.
4) திறைசேரி உண்டியல்கள்.
5) வர்த்தக உண்டியல்கள்
6) திறைசேரி முறிகள் போன்றவை.

**வணிக வங்கியின் இலாபச் சொத்துக்கள்**

1) திறைசேரி உண்டியல்கள்
2) திறைசேரி முறிகள்
3) ஏனைய அரச பிணைகள்
4) முதலீடுகள்
5) கடன்களும், முற்பணங்களும், மேலதிகப் பற்றும்.
6) நிலையான சொத்துக்கள், நிலம், கட்டடம், இயந்திரம், தளபாடம்.

மேற்காட்டப்பட்ட வணிக வங்கியின் சொத்துக்கட்டமைப்பு வணிக வங்கி திரவத்தன்மையைப் பேணுதல், இலாபத்தை உழைத்தல் போன்ற நேர்களுக்கு இடையே சமநிலையைப் பேணக்கூடிய வகையில் பொறுப்புக்களைச் சொத்துக்களாக மாற்றியமைத்துச் செயற்படும்.

**வணிக வங்கிகளின் பொறுப்புக்கள்**

1) கேள்வி வைப்புக்கள்
2) சேமிப்பு வைப்புக்கள்
3) தவணை வைப்புக்கள்
4) உள்நாட்டுக் கடன்கள்
5) வெளிநாட்டுக் கடன்கள்
6) ஏனைய பொறுப்புக்கள்

**வணிக வங்கிகளின் திரவச் சொத்துக்களும், அவற்றின் முக்கியத்துவங்களும்**

வணிக வங்கிகளின் சொத்துக் கட்டமைப்பில் உள்ள திரவச் சொத்துக்கள் பின்வருமாறு.

1) கையிலுள்ள காசு
2) மத்திய வங்கியின் பெயரிலுள்ள வைப்பு

3) அந்நிய செலாவணியும், நிலுவையும்
4) திறைசேரி உண்டியல்
5) திறைசேரி முறிகள்
6) வர்த்தக உண்டியல்கள் போன்றவை.

திரவச் சொத்துக்கள் என்பது கேட்ட மாத்திரத்தில் கால தாமதமின்றியும் முதல் நட்டமின்றியும் பணமாக மாற்றிக்கொள்ளக்கூடிய சொத்துக்களைக் கூறிக்கும். திரவச் சொத்துக்களின் முக்கியத்துவம்

1) வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பேணக்கூடிய வகையில் திரவச் சொத்துக்களைப் பேணிவருகின்றது.
2) மத்திய வங்கியால் ஒதுக்கப்படும் காசு தேவையைப் பூர்த்தி செய்தல்.
3) வங்கிகள் தமது நாளாந்த தேவையைப் பூர்த்தி செய்தல்.
4) தேவைப்படும்போது வாடிக்கையாளர்களுக்கு அத்தியாவசியமான கடன்களை வழங்குதல். போன்றவகையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

**வணிக வங்கிகளின் கடனாக்கம்/பணவாக்கம்**

வணிக வங்கியில் கடனாக்கம் என்றது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒரு நாட்டினுள்ளே அனைத்து வணிக வங்கிகளும் தம்மிடம் வருகின்ற நடைமுறை வைப்புகளிலும் பார்க்கப் பலமடங்கு கடன்களை வழங்குகின்ற ஆற்றலே கடனாக்கம் எனப்படும். ஒரு வணிக வங்கியிடம் வைப்பாக வருகின்ற தொகையில் ஒரு குறிப்பிட்ட வீதத்தை ஒதுக்காக வைத்துக்கொண்டு மீதித்தொகையை வணிக வங்கி கடனாக வழங்க அக்கடன் இன்னுமொரு வணிக வங்கிக்கு வைப்பாக வருகின்றது. அதுவும் ஒரு குறிப்பிட்ட பணத்தை ஒதுக்காக வைத்துக்கொண்டு மீதித்தொகையைக் கடனாக வழங்க அது இன்னுமொரு வணிக வங்கிக்கு வைப்பாகச் செல்கின்றது. இவ்வாறு வருகின்ற ஆரம்ப வைப்பிலும் பார்க்க அதிகளவு வைப்புகளை கடனாக வழங்கும் ஆற்றலை வணிக வங்கிகள் கொண்டு இருக்கின்றது.

இத்தகைய வணிக வங்கிகளின் கடனாக்கத்தை நோக்குவோம் ஆயின் அதற்குப் பின்வரும் எடுகோள்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

1) நாட்டில் பல வணிக வங்கிகள் இருக்கும்போது அதில் தனியொரு வங்கி மாத்திரம் பணவாக்கத்தில் ஈடுபட முடியாது.
2) நாட்டில் நல்ல வணிக வங்கிகளும் சேர்ந்து பணவாக்கத்தில் ஈடுபடும்.
3) ஒரு நாட்டில் தனியொரு வணிக வங்கி இருப்பின் அது தனித்து நின்று பணவாக்கத்தினை மேற்கொள்ளும்.
4) ஒரு வணிக வங்கி வழங்குகின்ற கடனானது மற்றைய வணிக வங்கிக்கு வைப்பாகச் செல்கின்றது.
5) எல்லா வணிக வங்கிகளும் ஒரே வீதத்தையே காசு ஒதுக்காகப் பேணுகின்றது.
6) வணிக வங்கிகள் மேலதிகமான காசு ஒதுக்குகளை வைத்திருப்பதில்லை.

போன்ற எடுகோள்களின் அடிப்படையில் வணிக வங்கியின் கடனாக்கச் செயற்பாட்டைப் பின்வரும் அட்டவணை மூலம் காட்டலாம்.

ஒரு நாட்டில் A,B,C,D,E.......N வணிக வங்கிகள் இருப்பதாகவும் ஆரம்ப வைப்பு 10,000 ஆகவும் காசு ஒதுக்கு வீதம் 10% எனவும் எடுத்துக்கொண்டால் பணவாக்கத்தைப் பின்வருமாறு காட்டலாம்.

| வங்கிகள் | ஆரம்ப வைப்புக்கள் | காசு ஒதுக்கு வீதம் | தேறிய கடனாக்கம் |
|---|---|---|---|
| A | 10,000 | 1,000 | 9,000 |
| B | 9,000 | 900 | 8,100 |
| C | 8,100 | 810 | 7,290 |
| D | 7,290 | 729 | 6,561 |
| -- | -- | -- | -- |
| -- | -- | -- | -- |
| -- | -- | -- | -- |
| N | -- | -- | -- |
| மொத்தம் | 1,00,000 | 10,000 | 90,000 |

மற்காட்டப்பட்ட அட்டவணையின் படி வணிக வங்கிகளின் தொடர்ச்சியான செயற்பாட்டால் மொத்தக் கடனாக்கம் எவ்வளவு செய்யப்பட்டிருக்கும் என்பது அளவிட முடியும்.

$$\text{கடனாக்கம்} = \frac{\text{ஆரம்ப வைப்பு}}{\text{காசு ஒதுக்கு வீதம்}} \times 100$$

$$= \frac{10{,}000}{10} \times 100$$

$$= 100{,}000$$

**கடனாக்க பெருக்கி / பணவாக்க பெருக்கி**

கடனாக்கப் பெருக்கி என்பது "வணிக வங்கி ஒன்று வைத்திருக்க வேண்டிய ஒதுக்கிற்கும் அதனடிப்படையில் உருவாக்கப்படும் கடன் தொகைக்கும் இடையிலுள்ள விகிதத்தொடர்பு கடன்பெருக்கி எனப்படும். இதனைப் பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிப்பிடலாம்.

$$\text{கடனாக்க பெருக்கி} = \frac{1}{\text{காசு ஒதுக்கு வீதம்}}$$

$$K = \frac{1}{r}$$

இதற்கமைய ஓர் உதாரணம் மூலம் கடனாக்கம் கணிப்பிடுவோமாயின் காசு ஒதுக்கு வீதம் 10வீதம் ஆயின் கடனாக்கப் பெருக்கி

$$K = \frac{1}{2}$$

$$K = \frac{1}{10}$$

$$K = 1 \times \frac{100}{10}$$

$K = 10$ ஆகும்

**வணிக வங்கியின் கடனாக்கத்தைத் தீர்மானிக்கும் காரணிகள்**

1) வணிக வங்கியின் ஆரம்ப வைப்பின் அளவு
2) காசு ஒதுக்கு விகிதம்
3) மத்திய வங்கியின் கடன் கட்டுப்பாடு
4) கடனுக்கான கேள்வியின் அளவு
5) வணிக வங்கிகள் வைத்திருக்க விரும்பும் ஒதுக்குகளின் அளவு
6) மக்களின் விருப்பம் அதாவது வட்டி வருமானம் உழைக்கக்கூடிய சேமிப்பு நிலையான வைப்புக்களுக்கு மாற்றும் அளவு.
7) பணச் சந்தையின் வளர்ச்சியும், மக்களின் வங்கிப் பழக்கமும்.

**வணிக வங்கிகள் கடன்கள் வழங்கும் போதும் முதலீடுகளை மேற்கொள்ளும் போது கவனத்திற் கொள்ள வேண்டியவை**

1) வணிக வங்கியின் திரவத் தன்மை
2) இலாபத் தன்மை
3) பாதுகாப்புத் தன்மை
4) கடன் முதலீடுகளை மேற்கொள்ளும் போது கடைப்பிடிக்கவேண்டிய சட்ட விதிகள்.

**வணிக வங்கிகளினால் வழங்கப்படும் கடன்களின் வகைகள்**

1) குறுங்காலக் கடன்கள். (12 மாதங்களுக்குக் குறைவானவை)
2) நடுத்தரக் காலக் கடன்கள் (12 – 60 மாதங்களுக்கு இடைப்பட்டவை)
3) நீண்ட காலக் கடன்கள். (60 மாதங்களுக்கு மேற்பட்டது.)

**வணிக வங்கிகள் பின்வரும் நோக்கங்களின் அடிப்படையில் கடன்களை வழங்கும்**

1) வர்த்தக நோக்கு
2) நிதியிடல்
3) வேளாண்மை
4) கைத்தொழில்
5) வீடமைப்பு
6) நுகர்வு
7) உயர்கல்வி
8) சுற்றுலா போன்ற துறைகளுக்கு கடன்களை வழங்குகின்றது.

இவ்வாறாகப் பார்க்கின்ற போது வங்கியியல் பற்றிய தகவல்களை முடிந்தளவில் தொகுத்து தந்துள்ளேன். மேற்படி தகவல்களை க.பொத. உயர்தர மாணவர்கள் அனைவரும் கற்று பயன்பெறுவார்கள் என நம்புகின்றேன்.

*உசாத்துணை நூல்கள்:*


01) பொருளியல் அறிமுகம் பாகம் 01

ஆசிரியர் **பேராசிரியர் டினி அத்தப்பத்து**

மொழி பெயர்ப்பு **கலாநிதி அ.சிவநேசராஜா.**

02) பணமும் வங்கியும்

ஆசிரியர் **பரமேஸ்வரன்.**

03) மத்திய வங்கி ஆண்டறிக்கை 2008 – 2010



**திரு. இ. சிவநாதன் (B.A.(Hons),**
**ஆசிரியர்,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி.**

# மல்லாவித் தாய்க்கு இன்று அகவை ஐம்பது

முல்லை மாவட்டத்தின்
முத்தென இலங்கும் மல்லாவித்
தாயவளின் சேய்க்கு இன்று
ஐம்பதாவது பிறந்த தினம்

மல்லாவி மத்திய கல்லூரி
மண்ணில் உதித்து
மாண்புடனே மாணவர்க்கு
அறிவூட்டும் எம் தாய்க்கு இன்று அகவை ஐம்பது

1961இல் மண்ணில் அவதரித்தாள்
மல்லாவி அ.த.க பாடாசலையாக
1983இல் மகாவித்தியாலயமாக உயர்ந்து
1995இல் மத்திய கல்லூரியாக மண்ணில் உயர்ந்தாள்.
அவளுக்கு இன்று அகவை ஐம்பது.

மாணவர்க்கு அறிவூட்டி
மக்களுக்கு நல்வழிகாட்டி
காலச் சக்கரத்தில் சுழன்ற மாணவர் சமுதாயத்தை
மகிழ்வுடனே அரவணைத்து
மண்ணில் உயரவைத்த மல்லாவித் தாயவளுக்கு
இன்று அகவை ஐம்பது.

வன்செயல்கள் வன்னியெங்கும்
இடப்பெயர்வுகள் தமிழர் உள்ளமெங்கும்
வுாரி அணைத்தெடுத்தாள் எம்மை
வாழ்வதற்கு கூடவே இடமளித்தாள் - ஆம்
இன்று மல்லாவித் தாயவளுக்கு அகவை ஐம்பது.

அறிவுக்கு ஒளி கொடுக்க
ஆசிரிய வளம் உண்டு
சோம்பலின்றி விளையாட
மைதானமும் இங்குண்டு.

கல்லூரி வளர்ச்சியிலே
எங்களுக்கும் பங்குண்டு
ஏணிப்படியாய் இருக்கும் பங்குதாரர் - நாம்
வேறுயார் கல்லூரித்தாயின் மணாவர்கள் தாம்

முத்தான முதல்வருண்டு
கணித விஞ்ஞான பிரிவுடனே
கலைப்பிரிவு வர்த்தகமும் - பல்துறை
சார்ந்த மாணவர் குழாமும் இங்குண்டு
இவ்வளவும் ஒருங்கே அமைந்த மல்லாவித்
தாயவளுக்கு இன்று அகவை ஐம்பது.


அகவை ஐம்பதில் தடம்பதிக்கும்
மல்லாவி மத்திய கல்லூரி ஏணிப்படியாய்
இனிவரும் சமுதாயத்திற்கும் இனிதான
அறிவூட்டி இவ்வுலகம் உள்ளவரை
உன் பணி தொடரட்டும்
என்று வாழ்த்துகின்றேன் உளமார
வாழ்க வாழ்க வாழ்கவென்று...

**இரகுநாதன் றஜிந்தன்,**
**தரம் - 08,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி.**


DENU STUDIO
DIGITAL PHOTO & VIDEO
Thunukkai Road, Mallavi.
Our Follwing Services For You
All Digital
Weding.
Birthday parties
Seminars$Any Function
Digital Album Making. Special Wedding
THE FUTURE {High New} TECHOLOGY
PLEASE CONTACT
Hello 0779002483
DENU DIGITAL MEDIA
டேனு ஸ்ருடியோ
மல்லாவி
Digital Studio
Digital Photograph
Digital Videography


பொன் விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்
விதுஷ் அழகுப்பொருள் வாணிபம்
Vithush Fancy Shop
அனைவரும் விரும்பும்
அழகுசாதனப்பொருட்களை
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
உரிமையாளர்:- S.உதயரூபன்
துணுக்காய் சாலை, மல்லாவி
தொ.பே:-0770742690


நிதர்சிகா மோட்டார் சைக்கிள் திருத்தகம்
அனைத்து வகையான மோட்டார் சைக்கிள்களை
திருத்திப்பெறுவதுடன் சுத்திரிப்பும் செய்து தரப்படும்
உரிமையாளர்:- மயூரதன் (குட்டி)
துணுக்காய் சாலை, மல்லாவி
தொ.பே:-0770742690



# மாணவர் பிரச்சினைகளும் தீர்வுகளும்

பாடசாலைகளில் ஏற்படும் பல்வேறுபட்ட பிரச்சினைகளும் விளைவுகளும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதுடன் வேறு பல பாதகமான விளைவுகளும் தோன்றுகின்றன. மாணவர் மத்தியில் குழப்பநிலை, பாடசாலைப்பொருட்களுக்குச் சேதம் மற்றும் வன்முறைகள், பகிடிவதை போன்றவை ஏற்படுகின்றன. இத்தகைய பிரச்சினைகள் கட்டுமீறும்போது பாடசாலையின் முன்னேற்றமும் அமைதியும் குலைகின்றன. இப்பிரச்சினைகளுக்கு அவ்வப் போது தற்காலிகமான தீர்வுகள் காண்பதிலும் பார்க்க நீண்டகால, நிரந்தரமான தீர்வுகள் காண்பதே பயனுள்ளது.

மாணவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆசிரியரும் பெற்றோரும் அப்பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு பெறுதல் முதற்படியாகும். இவற்றை ஆரம்பக் கட்டத்திலேயே இனங்கண்டுகொள்வது முக்கியமானது. என்பதுடன் இவை பெருமளவில் ஆசிரியர்களின் வகுப்பறை முகாமைத்துவம், அதிபரின் முகாமைத்துவம் ஆகியவற்றில் தங்கியுள்ளன. பெரும்பாலான ஆசிரியரும் அதிபரும் பிரச்சினை உருவாக்கக் கூடிய சந்தர்ப்பங்களைக் கண்டும் காணாதவர்போல் இருந்து பிரச்சினைகள் முற்றிய பின்னரே அவற்றைத் தீர்க்க முற்படுகின்றனர்

ஆசிரியர்கள் வகுப்பறையை உன்னிப்பாக அவதானிப்பதன் மூலம் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய அறிகுறிகளை முன்கூட்டியே அறிந்து கொள்ள வாய்ப்புண்டு உதாரணமாக ஒரு நன்நடத்தையுடைய மாணவன் திடீரென ஒரு சிறியவிடயத்தைப் பெரிதுபடுத்தி ஆசிரியரை எதிர்த்துத் தகராறுசெய்தல், ஒழுங்காகப் பாடசாலைக்கு வருகைதந்து சிரத்தையெடுக்கும் மாணவன் முன்னறிவிப்பு எதுவுமின்றி அடிக்கடி பாடசாலைக்கு வராமல்விடுதல் சகமாணவர்களுடன் எதுவிதமான இடைவினையுமின்றி ஒதுங்கி எப்பொழுதும் சோர்வுடன் தனித்துக்காணப்படுதல். ஆக்கிரமிப்புத் தன்மைமிகுந்த மாணவர்கள் தேவையற்ற பொருத்தமற்ற வினாக்களை ஆசிரியரிடம் கேட்டு வகுப்பில் கற்றல்நடவடிக்கைகளைக் குழப்புதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

சில மாணவர்களிடம் ஏற்படும் பிரச்சினைகளை வெற்றிகரமாகச் சமாளித்துக் கொள்வர் வேறுசிலர் பிரச்சினைகளை எதிர் கொண்டு சமாளித்துக் கொள்ள முடியாமல் இடர்படுவர் பிரச்சினைகளைக் கவனிக்காவிட்டால் குறிப்பிட்ட மாணவரும் மற்றைய மாணவரும் பெரும் பாதிப்புக்கு உள்ளாவர். முக்கியமாக மாணவரின் கல்வியையும் திறமையையும் சீர்குலைக்கக்கூடிய நடத்தைகள் போன்றவை ஆசிரியர் கவனத்துக்கு எடுக்க வேண்டிய பிரச்சினைகளாகும். ஒரே வகையான பிரச்சினைகள் அடிக்கடி ஏற்படும்பொழுது அவற்றைக் கவனத்தில் கொண்டு உடனடியாக வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும்.

மாணவர்களில் இவ்வாறான பிரச்சினைகளுக்குரிய நடத்தை ஏற்படுவதற்குக் காரணம் அவர்களின் உடல்உள தேவைகள் முக்கியமாக குழந்தைப் பருவத்தில் திருப்திகரமாக, நிறைவேற்றப்பட்டமை மற்றும் இயல்புகளின் உந்தல்களைப் பூர்த்தி செய்வதற்குச் சமூக நியமங்கள் தடைகளாக அமைவது ஆகியவற்றைக் கூறலாம். தேவைகளையும் உங்களையும் சமாளித்துக் கொள்வதற்கு நவீன நிலையில் தற்காப்பு நுட்ப முறைகள் உள்ளக்கலசங்களாகப் பயன்படுத்த வேண்டும். எனத் தெரிந்தால் பிரச்சினைகளைச் சமாளித்துக் கொள்ளலாம். இத் தற்காப்பு நுட்பமுறைகளை எதிர்த்தல், பிரதியீடு செய்தல் பின்வாங்கல் என வகுக்கலாம். இந்நுட்பமுறைகளில் சில ஒருவரின் ஆளுமைக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாகவோ அமையலாம்.

## பிரச்சினை தீர்த்தல் அணுகுமுறை

மாணவரின் நடத்தைகளை உன்னிப்பாக அவதானிக்கும் ஆசிரியர்கள் பிரச்சினை ஏற்படும் முன்னரே அவற்றைத் தீர்ப்பதற்கான சாத்தியக் கூறுகளை இனங்கண்டு கொள்வர் உளவியல் ஆய்வாளர்கள் பிரச்சினை ஏற்படுவதற்கு மாணவரின் சூழல், முக்கியமாக உள்ளதென அறிந்துள்ளனர்.எனவே ஆசிரியர்கள் பிரச்சினையுள்ள மாணவரையும் மற்றவர்களுக்குப் பிரச்சினை ஏற்படுத்தும் மாணவர்களையும் இனங்கண்டு அவர்களது நடத்தைகளையும் சூழலையும் உற்று நோக்குதல் அவசியமானது. உற்று நோக்கலான,. பக்கசார்பற்றதாகவும், புறவயத்தன்மை உடையதாகவும் திட்டமிட்ட செயன்முறையாகவும் அமைய வேண்டும்.

பிரச்சினை தீர்ப்பதற்குரிய வழிமுறைகளாக

01. பிரச்சினை இனங்காணல்
02. தரவுகளை மேல்வாரியாகச் சேகரித்தல்.
03. கருது கோள் அமைத்தல்
04. தேவையான தரவுகளை இனங்கண்டு அவற்றைச் சேகரித்தல்.
05 பிரச்சினை தீர்பதற்குரிய உத்திகளை நடைமுறைப்படுத்தல்.

பிரச்சினை தீர்க்கப்பட்ட பின்னரும் தொடர்ந்து கண்காணித்தல்.

**இ. காண்டீபன்,**
**ஆசிரியர் (சித்திரம்).**



# Teaching a foreign language

Education is considered the "third eye" of man which gives him an insight into all affairs and teaches him how to act and leads to all round progress and prosperity. Teaching is an essential part of education. Its special function is to imparting of knowledge of 3R's- Reading, writing and Arithmetic –representing various school subjects in addition with 4 more R's that is Rights, Responsibilities and Recreation.

As far as teaching a language is concerned. It is skill based, the four skills listening, speaking, Reading and writing have to be developed in a learner. In the Srilankan context, English being an International language which makes our access into different communities and countries easily, is an ideal choice for the foreign language.

The learner of English has to have the exposture of the skills in real situation. It is the teacher who has to play a very important role to make the English language teaching environment a successful one.

According to albert Einstein – A Swiss physicist

"The supreme art of teaching is to awaken joy in creative expression and knowledge"

A teacher of English is expected to understand the significance of the following to play his role competently in teaching.

1. Who is the teach
2. Whom to teach
3. Why to teach
4. Where to teach
5. What to teach
6. How to teach
7. When to teach


In teaching English language the teachers have to make use of the modern teaching technologies for the following reasons.

a) It is student centered
b) Teaching materials are thoroughly prepared
c) The modern teaching technologies are based on scientific principles and discoveries
d) It uses team teaching
e) Classroom environment reflects freedom and spontaneity.
f) The objectives of instruction are subject to review.


பொன் விழா சிறக்க வாழ்த்துகின்றோம்
அம்மன் காட்வெயார்
கட்டடப்பொருட்கள், மரத்தளபாடங்கள், கூரைத்தகடுகள்,
பெயின்ற் வகைகள், இலத்திரனியல் உபகரணங்கள்,
மற்றும் வாகன உதிரிப்பாகங்கள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
பிரதான சாலை, மல்லாவி


பொன் விழா சிறக்க வாழ்த்துகின்றோம்
ஜீவந்தி சைக்கிள் சொப்
அனைத்து வகையான சைக்கிள் வகைகளையும்
பெற்றுக்கொள்ளலாம்
பிரதான சாலை, மல்லாவி


பொன் விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்
உயர்ச்சி புத்தகசாலை
uyarchi book shop
அறிவுத்தேடலின் சுவர்க்கம் இன்றே நாடுங்கள்!!!
துணுக்காய் சாலை, மல்லாவி
தொ.பே:-0770753670. 0775489923




Globalization is a new abstract concept. World has shrinked and has been brought with in the four walls of a room. Everyoné has the right to move about and communicate with in the world. English is the ideal foreign language to manage ourselves in communication. So let the teachers of English teach it effectively and with interest.

*Integrity without knowledge is weak and useless, and knowledge without integrity is dangerous and dreadful '*

*-Samuel Johnson-*

**Mrs. T. Partheepan,**
**Teacher of English,**
**Mu/mallavi central college.**

# Smoking

Nowadays smoking has become a habit of people irrespective of their age. Children, adult and old people smoke for different purpose. Children to imitate their role models may be a cinema actor they like most in western countries cigarette is described as an idea stick. People believe it brings out new ideas during different times. Some adults smoke to show others that they are fashionable.

We can say that smoking is inhaling the smoke from cigarette, sigar, heroin, brown suyar etc. When a person smokes, the smoke travels through the wind pipe and enters both the lungs. Inside the human body. We naturally have a substance called musus. Which protects the organs when we smoke the damages this muses. This is how cancer is caused in the human body.

Besides smoking causes many problems in the family as well as in the society. Smoking causes economical instability in many families and destroys the bond among the family members. At the same time smoker but also the health of those around the smoker. They become passive smokers.

Smoking related diseases kill one in ten adults globally or cause four million deaths by 2030. If current trends continue smoking will kill one in six people every eight seconds someone dies from tobacco. Use Smoking is on the developed nations. Among Americans smoking rates shrunk by nearly half in three decade (from the mid-1960s to mid-1990s) falling to 23% of adults by 1997.

In the developing world tobacco consumption is rising by 3.4% per year about a billion cigarettes are sold daily or ten million every minute.

It is a need of time to find immediate remedy to this challenging problem. I suggest that the government schools welfare organizations and media take a major role in the compaign.

-P.Thayalini,

Grade-11[B.]

# திருத்தப்படவேண்டிய நிலையிலுள்ள கட்டடங்கள்



ஆசிரியர் விடுதி - I



ஆசிரியர் விடுதி - II



சமையற்கூடம் - I



சமையற்கூடம் - II



கணினி வள நிலையம்



நடன அறை



சிற்றுண்டிச்சாலை



ஒலி, ஒளி அறை




# பாடசாலைகளில் கல்விமுகாமைத்துவச் செயன்முறை

ஒரு நாட்டின் உயிர்நாடியான இளம் சந்ததியினரை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள கல்வி நிறுவனங்களில் முகாமைத்துவம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் முகாமைத்துவம் என்பது "சரியான நோக்கங்களைத் தீர்மானித்துக் கொண்டு அவற்றை உயர்ந்த மட்டத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கு வரையறுக்கப்பட்ட வளங்களைச் சரியாகப் பயன்படுத்தல் முகாமைத்துவம் ஆகும்." இதனைவிட வினைத்திறன், விளைதிறன் என்பனவும் முகாமைத்துவத்துடன் தொடர்புபடுகின்றது. சிறந்த முகாமைத்துவம் காணப்படும் இடத்தில் வினைத்திறனும் விளைதிறனும் உயர்ந்த மட்டத்தில் இருக்கும். முகாமைத்துவம் பலவீனமடைந்தால் இரண்டுமே கீழ்மட்டத்திற்குச் சென்றுவிடும். எனவே முகாமைத்துவம் என்பது வினைத்திறன் விளைதிறன் ஆகிய இரண்டையும் சிறப்பாகவும் உயர் மட்டத்திலும் வைத்துக்கொள்வதற்காக மேற் கொள்ளப்படும் பிரயத்தனமாகும் எனவும் கூறமுடியும்.

பாடசாலைகளில் முகாமைத்துவச் செயன் முறை மேம்படுத்தப்படுவது பாடசாலைக் கல்வியின் விரிவாக்கம் மற்றும் தரமேம்பாட்டிற்கு மிகவும் அவசியமாகவுள்ளது. பொதுவாக முகாமைத்துவம் நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிக்கோள்களை வினைத்திறனுடன் அடைவதற்கு ஏற்றதாக நிறுவன ஒழுங்கமைப்பிலே வளங்களையும் திட்டமிட்டு, ஒழுங்கமைத்து, நெறிப்படுத்தி, கட்டுப்படுத்திக் கொள்ளும் உபாயங்களும் நுட்பங்களுமே முகாமைத்துவச் செயன்முறையாகக் காணப்படுகிறது.

திட்டமிடல்
↓
ஒழுங்கமைத்தல்
↓
நெறிப்படுத்தல்
↓
கட்டுப்படுத்தல்

**எளிய முகாமைத்துவச் செயன்முறை**




### நவீன முகாமைத்துவச் செயன்முறை

பாடசாலை தனது அங்கீகரிக்கப்பட்ட கல்விக் குறிக்கோள்கள் நோக்கங்கள் மற்றும் அடைவதற்குரிய வழிமுறைகளைத் தீர்மானித்தல் பாடசாலை முகாமைத்துவம் எனப்படுகின்றது. பாடசாலைகளின் பொதுவான குறிக்கோள்கள் ஒரேமாதிரியானவையாக இருந்தாலும் குறிப்பாக அல்லது தொழிற்பாட்டிற்காக குறிக்கோள்களிற்கு இடையே வேறுபாடு காணப் படுகின்றது. இதற்கேற்ப முகாமைத்துவச் செயன் முறைகளிலும், பாடசாலைக்குப் பாடசாலை வேறுபாடு காணப்படலாம். பாடசாலைகளில் அதிபர், உப அதிபர், பிரதிஅதிபர், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் எனப் பல்வேறுபட்ட தரப்பினர்கள் பாட சாலையில் முகாமைத்துவச் செயன்முறையில் ஈடுபடுகின்றனர்.

முகாமைத்துவச் செயன்முறையானது சூழ் நிலைப் பகுப்பாய்வு செய்வதிலிருந்து ஆரம்பிக்கப் படுகின்றது. சூழ்நிலைப் பகுப்பாய்வில் பெற்ற தகவல் களைக் கொண்டு குறிக்கோள்கள் நோக்கங்களை தீர்மானிப்பதன் மூலம் திட்டமிடல் செயன்முறை ஆரம்பமாகின்றது. இவ்வாறு தீர்மானித்த விளைவை அடைந்து கொள்வதற்கு என்ன செய்யப்படவேண்டும்? வளங்கள் ஏவ்வாறு வினைத்திறனுடன் பயன்படுத்த வேண்டுமென திட்டமிடலில் தீர்மானம் எடுக்கப்படுகின்றன.

முகாமைத்துவச் செயன்முறையின் அடுத்த கட்டம் ஒழுங்குபடுத்தல் ஆகும். திட்டமிடலின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்குத் தேவையான பின்னணியைத் தயாரித்தல் ஒழுங்கமைத்தலாகும். அத்துடன் திட்டமிடலில் தெரிவு செய்யப்பட்ட வளங்களை ஒன்றிணைத்தலும் இங்கு நடைபெறும்.

அடுத்து நெறிப்படுத்தற் செயன் முறையின்போது முகாமையாளரிடம் எதிர்பார்க்கப்படும் முக்கியமான விடயம் இணைப்பாக்கமாகும். தீர்மானித்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு பெருந்தொகையான ஆளணியினரை இலக்கினை நோக்கிச் செயலில் ஈடுபடுத்துவதற்கு இச்செயன்முறை பெரிதும் உதவுகின்றது. தொடர்பாடல் , ஊக்குவித் தல், தீர்மானம் எடுத்தல், பிரச்சினை தீர்த்தல் போன்ற நுட்பங்கள் மூலம் பாடசாலைகளில் ஆளணியினரை

இயங்கச் செய்ய முகாமையாளர் சிறந்த தலைமைத் துவப் பண்புகளைக் கொண்டிருத்தல் அவசியமாகும். அத்துடன் பாடசாலைகளில் ஆளணியினரையும் விருத்தியடையச் செய்யும் வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டும்.

கட்டுப்படுத்தற் செயற்பாடானது திட்டம் செயற் படுத்தப்படும் முழுக்காலத்திலும் நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றாகும். இங்கு கண்காணிப்பு திட்டம் செயற்படுத்தலின்போதும் திட்டத்தின் இறுதியில் மதிப் பீடும் நடைபெறுகின்றது.

திட்டமிட்டபடி செயற்பாடுகள் நடைபெறுகின்றனவா? கண்காணித்து தவறுகள் இடம் பெறும் போது அதனைத் தவிர்த்துக்கொள்வதிலும் கவனம் செலுத்த வேண்டும். பாடசாலை நோக்கங் களைத் திட்டமிட்டு ஒழுங்கமைத்துக் கட்டுப்படுத்தல் செய்வதுடன் மேற்பார்வைகளும் இடம்பெறுகின்றன. இங்கு உள்ளக மேற்பார்வையானது பாடசாலை மேற்பார்வைக் குழுவினரூடாகவும் வெளியக மேற் பார்வையானது வலயக் கல்வி அலுவலகம், மாகாணக் கல்வி அலுவலகத்தின் ஊடாகவும் மேற்கொள்ளப்படுகின்றன.

முகாமைத்துவச் செயன்முறையின் இறுதிக் கட்டமாக மதிப்பீடு காணப்படுகின்றது. மதிப்பீட்டுச் செயன்முறையை கடைசிவரை ஒத்திப்போடுவது பொருத்தமானது அல்ல. ஒரு நோயாளி இறந்தபின் மரணப்பரிசோதனை செய்வது மரணம் அடைந்த நோயாளிக்குப் பயன் கிட்டாத போதிலும் அத்தகைய வேறு நோயாளிகளுக்கு பயன் உண்டு. அதே போன்று திட்டத்தின் இறுதியில் செய்யும் மதிப்பீடு திட்டத்தை இலக்காகக் கொண்ட குழுவுக்குப் பயன் தராதுவிடினும் அத்தகைய திட்டங்களினால் பலா பலன்களை எதிர்பார்த்திருக்கும் ஏனைய குழுக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். உதாரணமாக ஒரு பாடத்தின் இறுதியில், ஒரு வருடக் கடைசியில் செய்யப்படும் மதிப்பீடு இவ்வாறான மதிப்பீட்டிற்கு எடுத்துக்காட்டாகும்.

எனவே பாடசாலைகளின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றவும், கருத்தையும் நியமங்களையும் மேம்படுத்தவும் பாடசாலை அங்கத்தவர்கள் யாவரும் சிறப்பான முறையில் முகாமைத்துவச் செயற்பாடுகளைப் பின்பற்றுதல் அவசியமாகும்.

**திருமதி. கிஸ்ணதாஸ் சுதாஜினி,**
**பழைய மாணவி, ஆசிரியர்,**
**மு/மல்லாவி மத்திய கல்லூர**

பொன் விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்

PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE

மாணவர்களுக்கான விசேட
சேமிப்பு கணக்கு

மாணவர் மலர்ச்சிக் கணக்கு (சிசு உதான)

கவர்ச்சிகரமான வெகுமதிகளுடன்

தொப்பிகள் (Cap)
அப்பியாசப் புத்தகங்கள் (Exercise Book)
உணவுப் பெட்டிகள் (Lunch Box)
எழுதுகருவிப் பெட்டிகள் (Pencil Box)
புத்தகப் பைகள் (School Bag)
கைக்கடிகாரங்கள் (Wrist Watch)
மின் மேசைவிளக்குகள் (Table Lamp)
கணிவிகள் (Scientific Calculators)
அகராதிகள் (Oxford Dictionary)
ஓகன் (Organ)
துவிச்சக்கர வண்டிகள் (Bicycle)

People's Bank
Sisu Udana

குலுக்கல் முறையில் அல்ல!

பணத்தை வைப்புச் செய்யும் அனைவருக்கும் பரிசுகள்

இன்றே உங்களுக்கென ஒரு சிசு உதான கணக்கு இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

" மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி "

மக்கள் வங்கி மல்லாவி சேவை நிலையம்.

பொன் விழா சிறக்க வாழ்த்துகின்றோம்

பிரியபன் பான்சி

TV, CD பிளேயர், Dis அன்டனாக்கள், அனைத்து வகையான இலத்திரனியல் பொருட்களுடன்,

அழகுசாதனப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

பஸ்தரிப்பிடம் முன்பாக, மல்லாவி

பொன் விழா சிறக்க வாழ்த்துகின்றோம்

அம்மை

பல்பொருள் வாணிபம்.

சகலவிதமான பொருட்களையும் சில்லறையாகப் பெற்றுக்கொள்ள

நாடுங்கள்.

உரிமையாளர்:- க.வரதன்

பஸ்தரிப்பிடம் முன்பாக, மல்லாவி தொ.பே:-0770260390


பொன் விழாக்காணும் கல்லூரியை வாழ்த்துகின்றோம்
Netizen Browsing Center
Internet & E-mail, Net Call, Fax, Photo Copy, Scanning, Computer Printing,Computer Games ,
Dialog Hutch Suntel Airtel Skype msn facebook YAHOO!
e-mail :- kanthan165@yahoo.com
Main Street, Mallavai,Yogapuram TP: 0773454792, 0774131880


பொன் விழா சிறக்க வாழ்த்துகின்றோம்
கலா உணவகம்
சிற்றுண்டி வகைகள் அனைத்தையும்
தரமாகப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
பஸ்தரிப்பிடம் முன்பாக, மல்லாவி
தொ.பே:-0772326098


பொன் விழா சிறக்க வாழ்த்துகின்றோம்
நியூ பொற்பரிதி
ஜுவல்லர்ஸ்
அசல் 22 கரட் தங்க நகைகளை குறித்த
தவணையில் செய்து பெற்றிடலாம்
துணுக்காய் சாலை மல்லாவி.
T.P:- 0772478938.


Prasanth
Phone shop & CD House
Dish T.V, Sundirect,Recharge.
Thunukkai Road Mallavi.
T.P:- 0777225516.

# இலையுதிர் காலம்

"டிங் டிங்"........... "டிங் டிங்" தெருவிலே படலைக்குள் தபாற்காரனின் கடித ஒலி வானொலிப் பெட்டியைக் கூட்டிவைத்துவிட்டு பாடல்களை இனிமையாக இரசித்துக்கொண்டிருந்த வானதி வானொலிப் பெட்டியைக் குறைத்து வைத்துவிட்டு படலையை நோக்கி ஓடினாள். "கம் கம்" என இருமியவாறு ஈஸிச்சியாரிலே முக்கிமுனகியவாறு கிடந்த பாக்கியம் "ஈஸ்வரனே ரதனிடமிருந்து காகிதம் வந்திருக்கவேணும். போய் இவ்வளவு காலத்திற்கும் ஒரு பதிலும் இல்லை." என்று இறைவனை வேண்டிய வண்ணம் இருபை-கககளையும் கூப்பியவாறு கண்ணீர் வடித்தாள். இது தாயுள்ளம்.

"எங்களைப் போல கஸ்ரப்படுகிறவர்களை கடவுள்கூட கண்திறந்து பார்க்கமாட்டான். "சீ என்ன இது ...." என்று தன் வாழ்வை நொந்தபடி

"வானதி .... பிள்ளை வானதி...." என்று கூப்பிட்டார்.

"பதிவுத்தபால் தங்கச்சி டோகாவில. இருந்து வந்திருக்கு" என்றவாறே "இதில கையெழுத்தப் போடுங்கோ" என்று போம் ஒன்றை வானதி பக்கம் நீட்டிய தபால்க்காரன் "ரதனே டோகாவில நிற்கிறான் இனி உங்களைப் பிடிக்கேலாது போல" என்று கூறிக் கொண்டு கடிதத்தைக் கொடுத்து விட்டு வானதியின் பதிலுக்கக் காத்திருக்காமல் மற்றைய கடிதங்களையும் கொடுக்க வேண்டும் என்பதற்காக சற்று நேரம் கூட தாமதிக்காமல் பறந்து விட்டான். இவர்கள் வீட்டுப் பிரச்சினை அவனுக்கு என்னதான் தெரியப்போகிறது.

தமையன் ரதனிடம் இருந்து வந்திருக்கும் முதல்க்கடிதம் அவன் டோகா போய் ஐந்து வருடங்களாகியும் ஒரு கடிதம் கூடப் போடவில்லை. "அங்கு போனதும் பொடியன் தாயையும் தங்கை வானதியையும் மறந்து போட்டான் போல" ஊரவர்கள் அலர் தூற்றினர். "இப்பத்தான் தனக்கு ஒரு தாயும் தங்கச்சியும் இருக்கிறம் எண்டு நினைவு வந்ததாக்கும். போய் ஐந்து வருஷமாகிற்றுது. ஒரு வார்த்தை எழுதி கடிதம் போட்டவனா? இப்ப என்னண்டு தான் மனம் வந்ததோ தெரியாது" என்று முணுமுணுத்தவாறு கடிதத்தைப் படித்துக் கொண்டே தாயை நெருங்கினாள் வானதி. "என்னடி மோனை தம்பியே தபால் போட்டவன் என்ர செல்லம் எத்தனை வருஷம் போனாலும் பெத்த தாயை மறக்காது. என்ன பிள்ளை தம்பி எழுதியிருக்கிறான். என்ன அங்க கிடந்து என்ன செய்யிறானாம்? இஞ்ச வாறன் எண்டு ஏதாச்சும் எழுதியிருக்கிறானா எண்டு பார் பிள்ளை" என்று வினாவுக்கு மேல் வினாவினைத் தொடுத்தக் கொண்டிருந்தாள் பாக்கியம்.

அன்றாடம் கடற்றொழில் செய்து வரும் சம்பளத்தில் குடும்பத்தை நகர்த்திக் கொணடிருந்தான் கந்தசாமி. அவனின் மனைவியான பாக்கியம் கூடவே கணவனுடன் கடலுக்கச் செல்வது வழமை. இவர்களின் மகன்மார்கள் ரதன், ரவி மற்றும் மகள் வானதியையும் கொண்ட அழகிய சிறு குடும்பம். வாழ்க்கை அமைதியாக கடலும் கடல் சார்ந்த பிரதேசமாகிய நெய்தலில் ஓடிக்கொணடிருந்தது. கந்தசாமி, பாக்கியம் ஆகிய இருவரும் உழைத்தாலும் அன்றாட சீவியத்தினை நகர்த்துவது பெரும்பாடாகிற்று. அதனால் மூத்தவனான ரவி படிப்பை நிறுத்தி விட்டு தந்தையுடன் கடலுக்கச் செல்ல ரதன், வானதி ஆகியோர் தொலைதூரத்திலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயின்று கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு எளிமையும், இனிமையுமாக ஓடிக் கொண்டிருந்த வாழ்வில்.......

ஒரு நாள் பாக்கியம் கணவனையும் மகனையும் கடலுக்கு அனுப்பி விட்டு "அவர்கள் திரும்ப எவ்வளவு நேரமெடுக்கிறதோ மீன்கள் அகப்பட்டால் வேளைக்கு வந்துவிடுவார்கள்" என்று பக்கத்து பரிமளத்துக்கு சொல்லிவிட்டு கருவாடு காய வைப்பதில் குறியாக இருந்தாள். அடிக்கொரு தடவை கடலையும் பார்த்துப் பார்த்து சலித்துப் போனாள்.

"நடுக்கடலில சூறாவளி பத்து பதினைந்து படகுவரை அதுக்குள்ள மாட்டியிருக்கனும் போல என்னபாடோ தெரியல முதலாளி ஐயாவிட்ட சொல்லி காப்பாத்த சொல்லுவம்" என்றவாறு கடலுக்குச் சென்ற மாணிக்கம் குதிக்கால் பிடரியில் அடிக்கும்படி கரையை நோக்கி வந்த படகில் இருந்து முதலாளி

ஐயாவை நோக்கி ஓடினான். முதலாளி ஐயாவின் படகில் செல்பவரில் கந்தசாமியுடன் மாணிக்கமும் ஒருவன். பதறிப்போனாள் பாக்கியம். " என்ர ஈஸ்வரனே அவருக்கும் பிள்ளைக்கும் ஒன்றும் நடக்கக்கூடாது" என்று கடவுளை வேண்டிக் கொண்டு வேகமாக வரும் பட்குகள் நிற்கின்ற இடத்தினை நோக்கி ஓடினாள். கடலிலிருந்து சூறாவளியில் அகப்படாமல் தப்பிய மீனவர்களிடம் கந்தசாமியையும் ரவியையும் பற்றி விசாரித்தாள். யாருமே இருவரைம் காணவில்லை எனக் கையை விரித்தனர். வெகு தூரத்தில் வரும் படகுகளை கண்மட்டத்தில் கணவனது படகு என நினைத்து அதனைப் பார்த்திருந்து ஏமாந்தாள்.

படகுக்கு சொந்தக்காரரான முதலாளி சிறிது நேரத்தில் வாடியடிக்கு வந்து சேர்ந்தார். கவலை தோய்ந்த முகத்துடன் பாக்கியத்தை நோக்கி "கந்தசாமி போன படகும் இன்னும் ஏழு பேர் போன படகுகளுமாக எட்டுப் படகளவில் அலையில் தாண்டுட்டாம். அவர்கள் உயிருடன் இருக்கினமா எண்டு இன்னும் தெரியேல்லை" என்றவாறு உறவினரைத் தேற்றும் முகமாக் "நான் எப்பிடியும் அவங்களைக் காப்பாத்திப் போடுவன்" என்று உறுதியுடன் தனது படகுடன் கடலை நோக்கி முதலாளியும் இன்னும் சில மீனவர்களும் சென்றார்கள். அவர்கள் உயிருடன் இருந்தால் தானே மீட்க முடியும்.

முழுவதும் கேட்க முன்னரே மயங்கிய பாக்கியத்திற்கு அதன் பிறகு என்ன நடந்தது என்று கூடத் தெரியாத நிலை. பாடசாலை விட்டு தாயையும் தந்தையையும் கூடவே அண்ணனையும் காணாமல் கடலை நோக்கி ஓடி வந்தவர்கள் தாயின் நிலையினையும் கூடி நின்றவர்கள் கூறிய வார்த்தையினையும் கேட்டு ஓலமிட்டு அழத் தொடங்கினாள்.

மறு நாள்...... "கந்தசாமி, ரவி மற்றும் புயலில் சிக்கிய பத்து மீனவர்களின் சடலங்கள் கரையொதுங்கின. ஊரே சவக்காடானது. சடலங்கள் அனைத்தையும் ஒன்றாக வைத்தே இறுதிக் கடன்களை எல்லாம் முடித்தார் முதலாளி ஐயா. "எம்மை வாழ வைத்த தாய் அநியாயம் செய்து விட்டாள்" என தொங்கிய முகத்தோடு திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தாள் பாக்கியம். இதனைத் தவிர வேறு என்னதான் செய்ய முடியும்.

பாக்கியம் நடைப்பிணமானாள். கணவனும் மகன் ரவியும் ஒரேயடியாக இல்லாமல் போனது அவளுக்குத் தனது இரு கைகளும் ஒடிந்து போனது போல உணர்ந்தாள். சில நாட்கள் அமாவாசையானது வீடு. பின்னர் தனக்காக வாழாது ரதன், வானதி ஆகியோருக்காக மட்டும் வாழ்க்கை நடத்தினாள்.

"கஸ்டப்பட்டாவது பிள்ளைகள் இருவரையும் படிப்பிக்க வேணும். அவர்களாவது எதிர்காலத்தில் புயல் நிறைந்த தொழிலை விட்டு சந்தோசமாக இருக்கட்டும்" என்ற இலட்சியத்துடன் தனது வறுமையை எதிர்த்து எதிர் நீச்சலடித்து பயணித்துக் கொண்டிருந்தாள். கடலிலே நமக்கு இனி என்ன வேண்டிக்கிடக்கிறது என்றவாறு கிராமத்திலுள்ள வயல்களுக்கு வேலைக்குச் செல்லும் பெண்களோடு இணைந்து கொண்டாள். நாற்று நடுதல், மாவிடித்தல்உ போன்ற கூலி வேலைக்குச் சென்று அதில் கிடைக்கும் சம்பளத்தை வீட்டுச் செலவிற்கும் பிள்ளைகளின் கல்விக்காகவும்சிக்கனமாகச் செலவு செய்தாள்.

ரதனும் வானதியும் சற்றே வளர்ந்து விட்டார்கள். வீட்டின் வறுமையும் தாய் படும் கஸ்ரத்தையும் உணர்ந்த ரதன் "அம்மா நீங்க இந்த வயசான காலத்திலையும் எங்களுக்காகக் கஸ்டப்படுறதைப் பார்க்க கவலையா இருக்கு. நான் வேலைக்கு போறேன்", என்றான். பெத்தமனம் பித்தல்லவா? வேண்டாமய்யா பிள்ளையள் படிக்கவேணும் என்று தானே படாத பாடு படுறன் நீ கவனமாக படியனடா. நான் பிறகு நிம்மதியா இருக்கலாம்" என்றாள் பாக்கியம். "இல்லை நான் படிக்கேல. நான் இனிப் பள்ளிக்கூடம் போகேலை" என்று பிடிவாதமாக நின்றவனை "உன்னால என்ன வேலை செய்யேலும் கடலில மீன் பிடிக்கப் போறாய்? எங்களுக்கொண்டொரு படகிருந்தால் செய்யலாம். இல்லாம அப்பா மாதிரி கூலிக்கு மாரடிச்சு சாகப் போறியா? முதலாளி தாற அஞ்சும் பத்தும் கஞ்சித் தண்ணி குடிக்கத்தன்னும் காணாது. சொன்னால் கேள். பள்ளிக்கூடம் போ" என்றாள் பாக்கியம். கடல் தொழில் என்றதும் அவளுக்கு ஏனோ வெறுத்தது. ரதன் தான் திட்டமிருந்த வெளிநாட்ட வேலைவாய்ப்பை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல நாசூக்காக சொன்னான்.

"அம்மா அப்பாவையும் அண்ணாவையும் குடுத்த பிறம் என்னால கடலில இறங்க முடியாது. பரிமனம் மாமியின் பொடியன் வெளிநாடு போய்


பொன் விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்
கிறீன் அக்ரோ
ஹெலீஸ் அக்ரோ நிறுவனத்தினரின்
கிளிநொச்சிக்கான இயந்திம் மற்றும்
உதிரிப்பாகங்களுக்கான
ஏக விநியோகஸ்தர்
GREEN AGRO
Farmtrac Machine Suppliers
machine Parts
Agent in
Kilinochchi
இல, 11, ஆனந்தபுரம் வீதி, கிளிநொச்சி.
தொ.பே:-0212285556, 0772484406
உரிமையாளர்:-S.பகீரதன்


ஐடியல் கல்வி நிலையம்.
மல்லாவி
தரம் 6 முதல் உயர்தரம் கலை, வர்த்தகப் பிரிவு வரை.
அன்றும், இன்றும், என்றும்.
நிர்வாகி:- இ.நிக்சன்
துணுக்காய் சாலை, மல்லாவி
தொ.பே:-0773683376

எப்படி எப்படி வேலை செய்யிறான் தெரியுமோணை என்னையும் அனுப்பணை பெரிய நாடு வேணாம். சின்ன நாட்டுக்காவது என்றான் கெஞ்சியபடி.

பாக்கியம் சிலையாகிப் போனாள். இப்படிக் கேட்பானென்று அவள் கனவில கூட நினைக்கவில்லை. ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு கூட உண்ண முடியாத நிலை. கணவன் இறந்த பின்னர் நகை அனைத்தும் கரைந்து விட்டது. அக்கம்பக்கத்தில் கடன் வேண்டி கடன் சுமை ஒரு பக்கம். பாக்கியம் ஒரு நாள் வேலைக்குப் போகாவிட்டால் அடுத்த நாள் மூவரும் பட்டினிதான். இந்நிலையில் வெளிநாட்டுப் பயணத்தைக் கற்பனை கூடச் செய்ய முடியவில்லை. அவளது ஐம்பொறிகளும் தாம் செய்யும் வேலையினை மறந்தது போல மாறிமாறி இயங்கிக் கொண்டிருந்தன. ரதனை பேச வேண்டும் போலத் தோணுகிறது. அறியாபிள்ளை என நினைத்துக் கொள்கிறாள். ஆனாலும் ரதன் "நான் போனன் எண்டா பிறகு கடன் சுமை எல்லாம் இறக்கீடலாம் தானே யோசிச்சுப் பாரன். இருக்கிற காணியில அரைவாசியினை வில்லணை. புதுக்காணி பிறகு வாங்குவம்" என்றான். இறுதியில் ரதனின் முடிவும் சரியாத்தான் பட்டது.

அடுத்த நாள் சொத்தாக எஞ்சியிருந்த காணியில் அரைவாசி காணித்தரகரிடம் விற்பதற்காக ஒப்படைக்கப்பட்டது. வங்கியிலும் கடன் பட்டு காணிவிற்ற காசினையும் சேர்த்து மகனை டோகாவிற்கு அனுப்பினாள். குறையச் செலவில் செல்லக்கூடிய நாடு என்பதால் அதிக செலவு ஏற்படவில்லை. கணவன் இறந்த பிறகு கை விட்டுப் போன உறவுகளும் இன்பத்தில் பங்குபற்றி துன்பத்தில் கழன்று போன அக்கம்பக்கத்தினரும் பாக்கியத்தினைப் பார்த்து சிரிக்கவும் பின்னர் கதைக்கவும் தொடங்கினர். பலர் நான் முந்தி நீ முந்தியென சொந்தம் கொண்டாட வந்தனர். மகன் அனுப்பும் காசை வைத்து புதிய காணி வாங்கலாம். கடய்களையெல்லாம் கட்டி முடிக்கலாம். வானதியையும் கரை சேர்க்கலாம் என்றெல்லாம் கற்பனை கட்டி இருந்தவளுக்கு உறவினர், அயலவர் பழையபடி சேர்ந்து கொண்டமை தனிமையினைப் போக்கியதோடு மிகவும் சந்தோசமடைந்தாள்.மகன் காசு அனுப்புவான் என்ற நம்பிக்கையில் பாக்கியம் கூலி வேலைக்குக் கூடப் போவதில்லை. வானதிக்குத் தொடர்ந்து படிப்பதற்குப் பரிட்சைப் பெறுபேறுகள் போதாமையால் வீட்டுடனே இருந்து விட்டாள். "அண்ணா காசு அனுப்புவார். அதில நான் பெரிய பங்களாவே கட்டுவன்" என வானதி தனது தோழிகளிடம் பெருமை அடித்துக் கொள்வாள்.

ரதன் பொய் ஒரு மாதத்தில் இவர்களின் நம்பிக்கை வுண்போக வண்ணம் கடிதம் கூட இல்லாமல் காசு மட்டும் கொஞ்சம் அனுப்பினான். காசு கையில் கிடைத்தவுடன் கடிதத்தையே மறந்து பூரித்து போனாள் பாக்கியம். கடிதம் எழுத அண்ணனுக்கு நேரம் போதவில்லைப் போல் என தேற்றிக் கொண்டாள். வானதி ஆனாலும் இவர்களினுடைய சந்தோசம் நிடிக்கவில்லை. பின்னர் வந்த நாட்களில் ரதன் காசு அனுப்பவே இல்லை ஒரு சிறிய கடிதம் கூட இல்லை என்னவோ ஏதோ என பாக்கியம் துடித்துப் போனாள் ஒடி ஒடி விசாரித்தாள். பயன் ஏதும் இல்லை கோயில் குளமென அலைந்தாகள்.ரதனுக்கு என்ன நடந்தத என்ன செய்கிறான் ஏன் கடிதம் போடவில்லை என்ற வினாக்கள் விடை இன்றியே கழிந்த கொண்டிருந்தது. மகனைப் பற்றிய யோசனையில் சாப்பட்டையே மறந்தாள். காசு ஒன்றும் தேவையில்லை கடிதம் மட்டும் போட்டால் போதும் என்ற நிலைக்கு பாக்கியம் உள்ளானாள். முதல் பாக்கியம் கடன் வாங்கியவர்கள் ரதன் வெளிநாட்டில் இருப்பதைச் சாட்டிச் சாட்டிகாசுக்கு' தொல்லை கொடுத்தனா. ரதன் காசு அனுப்புவதாகவும் அதனை இவர்கள் மறைக்கிறார்கள் எனவும் பேசிக் கொண்டனர். வங்கிக் காரர் மறுபுறம் பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது போல ஒட்டி வந்த சொந்தம் விட்டுச் சென்றது.

என்ன செய்வது பாதக்கியத்திற்கு வயசும் போய் விட்டது. ஒரு வேலையும் செய்ய முடியாத நிலை வானதியே ஒரு சிறிய கடையிலே வேலைக்கு சேர்ந்து வாழ்க்கையை நகர்த்தினாள். அவளுடையசம்பளத்தில் அயலவர்களிடம்பெற்ற கடன் மட்டுமேகட்டி முடிக்கக் கூடிய நிலை இராப்பகலாக வேலை செய்து ஐந்து வருட உழைப்பில் வங்கிக் கடனோடு சேர்ந்து முழுக்கடனையும் நிரப்பிவிட்டாள். வானதியினுடைய அயராத உழைப்பினால் இனிதே குடும்பத்தை கவனித்தாள். இடையிடயே தாய்க்குஏற்படும்நோய்களுக்கும் மருத்துவச் செலவு ஒரு புறம் ஆனால் பாக்கியமோ ரதனினதும் அவனத கடிதத்தையும் எதிர் பார்த்து வாசலிலே

அமர்ந்திருப்பாள் காககம் கரையவும் வாசலில் மணி ஒல் கேட்டாலும்ரதன் வருகிறான். இல்லை அவனது கடிதம் வருகிறது எனப் பார்த்து ஏமாந்த நாட்கள் எண்ணிலடங்காது "வானதியை கரை சேர்க்க வேனும் ஒருவன்ர கையில் குடுத்திட்டனென்டா என்ர வேல முடிஞ்சு நிம்மதியாக போய் சேர்ந்திடலாம்" என்று அடிக்கடி பெருமுச்சு விடுவாள்.இது தான் அவளால் முடிந்த ஒன்று.

சில வேளைகளில் ரதனை பேசுவாள் இருந்த சொத்துக்களையும் கரைச்சுக் கொண்டு போயிற்றான். இஞ்ச இருந்தானென்டா எவ்வளவ ஒழைச்சிருக்கலாம் பிள்ளை மட்டும் ஒடிஞ்சு இருக்காளே குடும்பச் சுமையை தலமேல விட்டிட்டு கண்ண மூடிக் கொண்டி இருக்கிறான் பாவி என்பாள் யாரும் பேசினாள் அவன் அங்க என்ன பாடோ தெரியல வீண் கமை வேணாம் என்றுஉ சமாளிச்சிடுவாள். ரதன் மதுவுக்கு அடிமையாகி தீய நண்பர்களின் சகவாசத்தால் நடுத்தெருவில் நிற்பது அறியதவாளான பாக்கியம்.

இவள் தற்பொழுது பல நோய்களுக்கு அடிமை. ஈசிச்சியரில் இருந்தபடி வீதியைப்பார்த்துப்பார்த்து கண்ணீர் வடித்துக்கொண்டிருப்பாள் அன்றும் அவ்வாறு தான் வானதி லீவைப்போட்டுவிட்டு வீட்டில் நின்றிருந்தாள். அப்போதுதான ரதனிடமிருந்து கடிதம் வந்தது. தபால்காரனிடமிருந்த கடிதத்தை வாசித்து முடித்தவள் "அம்மா அண்ணா கடிதம் போட்டிருக்கிறான். என்னண்டு தான் எங்கட நினைவு வந்ததோ தெரியல" என்ற வானதியை அப்பிடியெல்லாம் சொல்லாத பிள்ளை என்ன எழுதியிருக்கிறான் எண்டு முதல் சொல்லு என அவள் சினந்தாள். "தன்னட்ட ஒருகாசும் கையில இல்லையாம் தான் இப்ப வைத்திருக்கிற ஒரே ஒரு சொத்து நோய்தானாம். ஊருக்கு வரப்போறானாம் வேலைசெய்யவும் சரியான் கஸ்ரமாய் இருக்காம்உயிரோட இருக்கக்கூட பிடிக்கலையாம் மாத இறுதிக்கு வாறானாம். இனியும் கோபம் என்றால் தான் இங்கேயே இறந்து போகிறானாம்."என்று மதுவுக்கு அடிமையாகி தெருவிலே நிற்கும் நிலையை மறைத்து தாய்க்கு சுருக்கமாக சொல்லி முடித்தாள்.

சூரியனைக்கண்டு முகமலர்ந்த தாமரையைப்போல பாக்கியத்தின் முகம் மலர்ந்தது. பாக்கியம் தற்பொழுது பணத்தையோ பாசத்தையோ எதிர்பார்க்கவில்லை "தனது மகன் எப்போது வருவான் நான் செத்தால் கொள்ளி வைக்கக்கூட மகனில்லையே. வானதி தனிமையாகிப்போகிறாளே." என்று ஏங்கிய தாயுள்ளம் ரதன் எவ்வளவு துன்பம் செய்தும் அதனைப் பொருட்படுத்தாமல் சந்தோசமடைகிறாள். அவனின் வரவை எண்ணி "காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞசல்லவா." இனம் புரியாத ஒரு சந்தோசம் வீட்டில் நிழலாடியது.

மாத முடிவில் மதுபோதைக்கு இலக்காகி வாழ்க்கையை தொலைத்த வெறுப்போடு நோய்களைச்சுமந்தவாறு எலும்பும் தோலுமாக காட்சி தரும் ரதனை வரவேற்பதற்காக பாக்கியமும் வானதியும் வாசலில் நிற்கின்றார்கள். "இலையுதிர் காலம் முடிவுறும் வேளையில் வசந்தகாலத்திற்காக காத்திருக்கும் வண்ணாத்துப்பூச்சிகள் போல."

டாயனா

**A/L(2011) Arts.**

# நன்றியுரை

"காலத்தால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தில் மாணப் பெரிது"

மு/மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழா மிகச்சிறப்பான முறையில் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம். கல்லூரியின் தோற்றம் தொடக்கம் இன்று வரைஇ எத்தனையோ நல்லுள்ளங்கள் காலத்தின் தேவைகளை அறிந்து பல சேவைகளை ஆற்றியுள்ளனர். பயனேதும் கருதாது மேற்கொள்ளபட்ட உதவிகள் ஒவ்வொன்றையும் இந்த இனிய நாளில் நினைவு கூறவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இப் பொன்விழா நிகழ்வில் அர்ப்பணிப்போடு தன்னலம் அற்ற பணிகள் பல ஆற்றிய அனைத்து அன்புள்ளங்களுக்கு நன்றி கூறுவது எமது தலையாய கடமையாகும். பொன்விழா சிறப்புற நடைபெற்றமைக்கும் பொன்விழா மலர் வெளியிடுவதற்கும் இறையருள் கிடைத்தமைக்கு எல்லாம் வல்ல இறைவனுக்கு முதற்கண் நன்றி கூறிக்கொள்கிறோம்.

மேலும் விழா சிறப்புற மனமுவந்து நிதி வழங்கிய அனைவருக்கும் விளம்பரங்களை தந்துதவிய வர்த்தகர்களுக்கும், பல்வேறு வழிகளிலும் உதவி ஒத்தாசை வழங்கிய பழையமாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவருக்கும் பொன்விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

புகைப்படங்களை சிறப்பாக எடுத்து வழங்கிய ''ஐயப்பன்'' படப்பிடிப்பாளர்களுக்கும் சகல வழிகளிலும் ஒத்தாசை புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் விழாவும் விழாமலரும் சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கிய துணுக்காய் உதவி அரச அதிபர் திரு.சி.குணபாலன் அவர்களுக்கும் உளங்கனிந்த நன்றிகள்.

விழாக்குழு.




பொன் விழாக்காணும் மல்லாவி மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்
ஊர்மிளா
மல்ரி சென்ரர்
Urmila Multy Centere
நவநாகரிக உலகிற்கேற்ப
ஆண்களுக்கான சேட்டிங் சூட்டிங்
பெண்களுக்கான சாறி வகைகள், சல்வார்கள்
சிறுவர் சிறுமியர்களுக்கான றெடிமெயர் ஆடைகள்
திருமண வைபவங்களுக்கு ஏற்ற கூறைச்சாறிகள், பட்டு வேட்டிகள்
அழகுசாதனப் பொருட்கள்
போன்றவற்றுடன்
மாறிவரும் உலகிற்கேற்ப கட்டட நிர்மாணப்பணிக்கான
சீமெந்து
கூரைத்தகடுகள்
பெயின்ற் வகைகள்
இலத்திரனியல் உபகரணங்கள்
மற்றும் இரும்புப்பொருட்கள்
போன்றவற்றை பெற்றுக்கொள்ள மல்லாவி நகரில் நாடவேண்டிய ஒரே இடம்.
TOKYO SUPER
ORDINARY PORTLAND CEMENT
Dulux
TRADE
ecosure
Dulux
DIAMOND
துணுக்காய் வீதி மல்லாவி
T.P:- 0213208603





புவனேஸ்வரி புத்தகசாலை & அச்சகம்
பிரதானவீதி, மல்லாவி